# ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்

## சமூக – அரசியல் நோக்கு

நவரட்ணம் குகபரன்

JPL
C12329

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்

சமூக - அரசியல் நோக்கு

KO
JF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்

## சமூக – அரசியல் நோக்கு

KOHA JPL

19399 CC

நவரட்ணம் குகபரன்

பொது சன நூலகம்
16 AUG 2017
மாநகர சபை
யாழ்ப்பாணம்

258185

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு · சென்னை
2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

258185 CC

2
94.811

ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்: சமூக - அரசியல் நோக்கு
எழுதியது ந. குகபரன்

பதிப்புரிமை © 2017

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: *kumbhlk@gmail.com*
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை -600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Elaththil Ollaanthar Kaala Tamil Ilakkiyankal: Samuka - Arasiyal Nokku
by N. Kugaparan

© 2017

*Published by* Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 011 2364550, E-mail: *kumbhlk@gmail.com*
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd
39, 36th Lane, Colombo - 6

வெளியீட்டு எண்: 732

ISBN 978-955-659-544-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

என் உயிரில் கலந்து வழிகாட்டும்

தாய்க்கும் தந்தைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
16 AUG 2017
யாழ்ப்பாணம்

# அணிந்துரை

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒல்லாந்தர் காலம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. ஒல்லாந்தர் காலத்தைப்பற்றிய புலமைத்துவ நுண்ணாய்வொன்றினை எமது மாணவர் திரு. ந. குகபரன் அவர்கள் செய்தார்கள். அந்த ஆய்வுக்கு வழிகாட்டியாக அமையும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சிறப்பான முறையிலே செய்த இந்த ஆய்விற்காக அவருக்குத் தமிழில் முதுதத்துவமாணிப் பட்டம் வழங்கப்பட்டது. ஓயாத உழைப்பும் உறங்காத தேடலும் உடைய குகபரன் படிப்பு மாத்திரம் அல்ல பண்பாலும் உயர்ந்தவர். நல்லமாணவர். சிறந்த ஆசிரியர்.

தாம் முதுதத்துவமாணிப் பட்டத்திற்கெனச் செய்த ஆய்வினைத் திருத்தியும் புதுக்கியும் ஒழுங்குபடுத்தியும் இப்போது 'ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்: சமூக - அரசியல் நோக்கு' எனும் தலைப்பில் நூலாக வெளியிடுகின்றார். ஆய்வாளர்களையும் இளமாணக்கர்களையும் மனங்கொண்டு இதனைச் செப்பமுற நூலாக்கியுள்ளார். இந்த ஆய்வு தேர்வாளர்களால் உயர்நிலையில் பரிந்துரைக்கப்பட்டது என்பதும் குறிப் பிடத்தக்கது,

ஈழத்து இலக்கிய வரலாறு மிக அண்மைக்காலம்வரை 'களிம்பேறிய' நிலையிலேயே இருந்தது. இந்தக் களிம்பினை அகற்றி 'மினுக்கி' எடுக்க பல அறிஞர்கள் முயன்றுள்ளனர்; முயன்றுகொண்டிருக்கின்றனர்.எனினும் இந்தக் 'களிம்பு' முற்றாக நீங்கிய பாடில்லை. ஒவ்வொரு காலப் பகுதியையும் தனித்தனியே எடுத்து நுண்ணாய்வுக்கு உட்படுத்தி ஈழத்து இலக்கிய வரலாற்றை முழுமையாகக் கட்டமைக்க வேண்டுமென்று பேராசிரியர் கைலாசபதி எண்ணியிருந்தார். அதற்கான ஆரம்ப முயற்சி களையும் மேற்கொண்டிருந்தார். ஆங்கிலேயர் காலத்தைக் குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டை ஆய்வுக்குட்படுத்துவதிலே தீவிரமாக ஈடுபட்டுழைத்தார். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறொன்றை எழுத வேண்டுமென்ற எண்ணம் அவரிடமிருந்ததை நான் நன்கு அறிவேன். தன்னோடிணைந்து ஈழத்திலக்கிய வரலாற்றைச் செய்ய வேண்டுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 AUG 2011

கூறியிருந்தார். அவரின் மறைவுக்குப் பின் எனது சிறப்பாய்வுத் துறையாக ஈழத்து இலக்கிய வரலாற்றை நான் வரித்துக்கொண்டேன்.

இதன் தொடர்ச்சியாகவே எமது மாணவர்களை ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிய ஆய்வுகளைச் செய்யும்படி தூண்டிவந்தேன். அத் தூண்டுதலை ஏற்று ஈழத்து இலக்கியம் பற்றிய ஆய்வுமுயற்சியில் ஈடுபட்டவர்களிலே குகபரன் அவர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர். எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றல் கொண்ட குகபரன் போன்றோருக்கு ஆய்வுமேற்பார்வை செய்வது சுகமானதும் சுவையானதும் ஆகும்.

யாழ்ப்பாண மன்னர்கள் காலம் வரை தவழ்ந்துவந்த ஈழத்து இலக்கிய வரலாற்று ஆய்வு முயற்சிகள் ஒல்லாந்தர் காலத்திலேதான் மெல்ல மெல்ல எழுந்து நடக்க முயற்சிக்கிறது.இந்த முயற்சிக்கு 'நடைவண்டி' கொடுத்து உதவுவதாகக் குகபரனின் நூல் உதவுகிறது.

ஒல்லாந்தர் கால அரசியற் பின்னணியை நன்கு விளங்கிக்கொண்ட இந் நூலாசிரியர், அக்காலத் தமிழ்மக்களின் கல்வி, கலை, பண்பாடு, தொழில்முயற்சிகள், குடியேற்றங்கள், சமூக அடுக்கமைவு, புலமைத்துவத் தொடர்புகள் முதலான பல்வேறு விடயங்களையும் நுணுக்கமாக ஆய்வு செய்துள்ளார். ஈழத்து இலக்கிய வரலாற்றைத் துலக்க முயலும் ஆய்வாளர் களுக்கு இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகிறோம்.

ஆய்வு முயற்சிகளிலே குகபரன் ஈடுபட்டு இன்னும் இன்னும் பல ஆய்வு நூல்களைத் தர வேண்டும் என்று கேட்டு, அவரை வாழ்த்திப் பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கி.பி 15ஆம் நூற்றாண்டுக்குப் பின் மூன்று ஐரோப்பியர்களது ஆளுகையின் கீழ் ஈழத்தீவு உட்பட்டிருந்தது. அவர்களில் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் முக்கியமானது. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களில் பெரும்பாலானவை சமயச்சார்புடையனவாக இருந்தன. அக்கால இலக்கியங்களில் தமிழர்களின் முற்பட்ட கால வரலாற்றுத் தொடர்ச்சியினையும் சமூக வளர்ச்சியினையும் சமூகக் குழுக்களுக்கிடையே நிகழ்ந்த இடைவினைகளையும் இனங்காணமுடிகிறது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் சமய ரீதியாக நெருக்கடிகள் நிறைந்தது. தமது வணிக நலன்களை முதன்மைப்படுத்திச் செயற்பட்ட ஒல்லாந்தர், சமயங்கள் குறித்துத் தனித்தனியான நடைமுறைகளைப் பின்பற்றினர். அக்காலத்தில் வெளிவந்த சமயம் சார்ந்த இலக்கியங்கள் மக்கள் மத்தியில் சமயக் கருத்துக்களை நிலைநிறுத்துவதற்கான பல்வேறு அம்சங்களைக் கொண்டிருந்தன. அக்கால இலக்கியங்களில் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் குறித்த விடயங்களும் முக்கியமானவையாக இருந்தன. இவ்வகையில் இலக்கியங்களின் ஊடான அக்கால சமூக அரசியல் குறித்த நோக்கே இவ்வாய்வில் பிரதானமாக அமைகிறது.

இலக்கியங்கள் மனித வாழ்வின் பல்வேறு அனுபவங்களைப் பிரதிபலிக்கின்றன. அவை, தாம் எழும் காலகட்ட சமூக வரலாற்றை, அதன் கூறுகளை, அரசியலை, பொருளியலை வெளிப்படுத்தும் தன்மை கொண்டமைவது இயல்பானது. அவ்வகையில் ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் ஊடாக அக்கால சமூக அரசியல் அம்சங்களை இனங்காணக்கூடியதாக உள்ளது.

ஈழத்தமிழர்களின் ஆரம்பகால இலக்கிய வரலாறு தெளிவற்றதாக உள்ளது. ஈழத்துப் பூதன்தேவனாரை முதல்வராகக் கொண்டு ஈழத் தமிழிலக்கிய வரலாற்றை எழுதும் மரபானது இருந்துவருகின்றபோதும் 'சரசோதிமாலை' எனும் சோதிட நூலே இன்று கிடைக்கப்பெறும் நூல்களில் ஆதாரபூர்வமான முதல் தமிழ் நூலாக உள்ளது. யாழ்ப்பாண மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் சமயம், மருத்துவம், சோதிடம், வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த பன்முக அம்சங்ளைக் கொண்ட இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன.

அடுத்து வந்த போர்த்துக்கேயர் ஆட்சியில் சுதேசிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டனர். கத்தோலிக்க மதம் அதிகார ஆதரவோடு பரப்பப்பட்டது. இலக்கிய ரீதியாகக் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த சில இலக்கியங்கள் மட்டுமே அக்காலத்தில் தோற்றம் பெற்றன.

போர்த்துக்கேயரை வெற்றிகொண்ட ஒல்லாந்தர் ஆரம்பத்தில் தமது வியாபாரச் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையிலே நாடுகளைக் கைப்பற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அவர்கள் புரட்டஸ்தாந்து சமயத்தைச் சமூக மட்டத்தில் கொண்டு சென்றனர். அதேநேரம் அன்று ஈழத்தில் பிரதான சமயங்களாக இருந்த சைவ, பௌத்த மதங்களைத் தமது நலன்களை மையப்படுத்தி ஓரளவு நெகிழ்ச்சிப் போக்குடன் அணுகினர். அதேவேளை கத்தோலிக்க சமயம் மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்தனர். தமிழ்ப் பகுதிகளில் இவர்களின் ஆட்சி 138 ஆண்டுகள் நீடித்தது.

ஒல்லாந்தர், தமது ஆட்சிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் பொருத்தமான மாற்றங்கள் பலவற்றையும் புகுத்தினர். நீதித்துறையில் தேசவழமை, தோம்புகள், றோமன் டச்சுச்சட்டம் முதலியவற்றை அறிமுகப்படுத்தியதோடு தமிழர் சமூகத்தில் நிலவிய சாதியமைப்பினையும் தமது நலன்களுக்கு இயைந்த வகையில் கையாண்டனர். பொருளாதார, இராணுவ ரீதியாகவும் நிர்வாகக் கட்டமைப்பு முறையிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தினர்.

சைவ, கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயம் சார்ந்த இலக்கியங்கள் ஒல்லாந்தர் காலத்தில் அதிக அளவில் தோற்றம் பெற்றிருந்தாலும் அவை அக்கால சமூக அரசியலைப் பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை அக்காலத்தில் அறிவியல், வரலாறு, கலைகள் சார்ந்த இலக்கியங்களும் வெளிப்பட்டுள்ளமையினைக் காணமுடிகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் ஊடாகத் தமிழர்களின் முற்பட்ட கால வரலாற்றுத் தொடர்ச்சியினையும், சமூக வளர்ச்சியினையும், சமூகக் குழுக்களுக்கிடையே நிகழ்ந்த இடைவினைகளையும், பண்பாட்டம்சங்களையும், அக்கால அரசியலின் நுண்மையான போக்குகளையும் இனங்காணல் இந்நூலின் முக்கிய அம்சமாகும். தமிழகம் புவியியல் ரீதியாக ஈழத்திற்கு அண்மையில் அமைந்துள்ளதால் இருபகுதிகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையேயும் காலத்துக்குக் காலம் அரசியல், சமூக, பண்பாட்டு, கலை இலக்கிய சமயம் சார்ந்த தொடர்புகள் நெருக்கமாக இருந்துள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய இவ் உறவின் தன்மை குறித்தும் அக்கால இலக்கியங்கள் ஊடாக இந்நூல் ஆராய்கின்றது.

அன்றைய சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சக்திகள் பல தமது இருப்பைத் தக்கவைக்கவென மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும், ஒல்லாந்த அதிகாரபீடம் முதல் சாதாரண மக்கள் வரை அரசியல் அதிகாரம் தொழிற்பட்ட விதம் குறித்தும் பல்வேறு விடயங்கள் இந் நூலில் கவனிப்புப் பெறுகின்றன. மேலும் ஈழத்தின் தேசிய அரசியல் சூழல் குறித்து தமிழ் இலக்கியங்கள் முன்வைத்துள்ள விடயங்களையும் இந்நூல் ஆராய்கின்றது.

இடர்களை எதிர்கொண்ட மக்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து பெரு மளவான இலக்கியங்கள் வெளிக்கிழம்பியுள்ளன. ஒல்லாந்தர் காலப் பகுதியில் தோற்றம் பெற்று இன்று கிடைக்கக்கூடியதாக உள்ள தமிழ் இலக்கியங்களைக் குறித்த விரிவான விளக்கம் இங்கு விரிவஞ்சி தவிர்க்கப்படுகிறது. அதேவேளை இலக்கியங்களின் பெயர்கள் மட்டும் இணைக்கப்படுகின்றன.

வரதபண்டிதரின் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், பிள்ளையார் கதை, அமுதாகரம், நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி, கரவைவேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு, மாதகல் மயில்வாகனப் புலவரின் புலியூர் அந்தாதி, யாழ்ப்பாண வைபவமாலை, இணுவில் சின்னத்தம்பிப் புலவரியற்றிய சிவகாமி யம்மை துதி, சிவகாமியம்மை ஊஞ்சல், சுப்பிரமணியர் ஊஞ்சல், கைலாயநாதன் திரு ஊஞ்சல், சிறைநீங்கிய பதிகம், பஞ்சவன்னத்தூது, அநுருத்திரன் நாடகம். வட்டுக்கோட்டை கணபதி ஐயரின் வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளியம்மை ஊஞ்சல், வாளபிமன் நாடகம், அலங்காரரூபன் நாடகம், வீரக்கோன் முதலியாரின் வெருகல் சித்திர வேலாயுதர் காதல், இராமலிங்க முனிவரின் சந்தானதீபிகை, மாவை சின்னக்குட்டிப் புலவரின் தண்டிகைக் கனகராயன்பள்ளு, லோறன்ஸ் புலவரின் மூவிராசாக்கள் நாடகம், பூலோகசிங்க முதலியாரின், திருச் செல்வர்காவியம், திருச்செல்வர் அம்மானை, கூழங்கைத்தம்பிரானின் நன்னூல்உரை, அனந்தசுப்பையரின் தையல்நாயகி திருஊஞ்சல், தையல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகி வெண்பா, முத்துக்குமாரசுவாமி திருஊஞ்சல், கொன்சால்வெஸின் வியாகுலப்பிரசங்கம், சுவிசேஷ விரித்துரை, ஞானவுணர்ச்சி, ஞான அப்பம், கிறிஸ்தியானி ஆலயம், தர்ம உத்தியானம், அற்புத வரலாறு, சுகிர்த தற்பணம், சுகிர்தகுறள், வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக் கொண்ட தர்க்கம், சத்திய வேதாகம சங்ஷேபம், கபிரியேல் பச்சேக்குவின் யோசேவாஸ் சரித்திரம், தேவபிரசையின் திருக்கதை, மட்டக்களப்பு பூர்வசரித்திரம், பிலிப் டீ மெல்லோவின் படைப்பு முயற்சிகள் முதலான நூல்கள் முதன்மைச் சான்றுகளாக உள்ளன.

மேலே குறிப்பிட்ட இலக்கியங்களைத் தவிர ஒல்லாந்தர் காலப் பகுதியில் தோற்றம் பெற்று இன்று, பகுதியளவிலும், முழுமையாகவும் கைக்கெட்டாமல் போன இலக்கியங்கள் பலவாகும். உரிய பேணுகை இன்மை, சமய முரண்பாடுகளின் விளைவுகள், புலமை சார்ந்த படைப்புக் களைக் கையளிக்கும் மனப்பாங்கின்மை, இயற்கையான செயற்கையான அழிவுகள், மக்களின் விழிப்புணர்வற்ற செயற்பாடுகள் என பல்வேறான விடயங்களை இலக்கியங்கள் பல கிடைக்கப்பெறாமைக்கான காரணங் களாகக் குறிப்பிடமுடியும்.

சங்கீதச் சுப்பையரின் நல்லை நாயகர் நான்மணிமாலை, காரைக் குறவஞ்சி, பிலிப் டீ மெல்லோ இராசாவால் முதலியாராகிய மருதப்ப பிள்ளையின் பேரில் பாடிய மருதப்பர் குறவஞ்சி, தாவீதின் சங்கீதங்கள், சத்தியத்தின் ஜெயம், ஒல்லாந்து இறப்பிறமாது சபையின் சரித்திரம், சூடாமணி நிகண்டில் உவமைப்பாட்டுக்கள், இராமலிங்க முனிவரின் பழமொழிப் பிரபந்தம், கூழங்கைத் தம்பிரானின் யோசேப்புப் புராணம், நல்லைக்கலி வெண்பா, கூழங்கையர் வண்ணம், அரியாலை சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை, வட்டுக்கோட்டை கணபதி ஐயரின் மலைய கந்தினி நாடகம், அதிரூபவதி நாடகம், வைத்திலிங்கக் குறவஞ்சி, மாதகல் மயில்வாகனப் புலவரின் ஞான அலங்காரரூபன் நாடகம், காசியாத்திரை விளக்கம், பிரான்சுப்பிள்ளையின் இரட்சப்பதிகம், பச்சாதாபப்பதிகம், கீர்த்தனைத் திரட்டு, திருவாசகம், தசவாக்கிய விளக்கப் பதிகம், பிள்ளைக் கவி, இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் நொண்டி நாடகம், கோவலன் நாடகம், வசந்தன் நாடகம், இளந்தாரி புராணம், வட்டுக்கோட்டை முத்துக்குமாரரின் கஞ்சன் காவியம், வலைவீசுபுராணம், நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படும் நாலு மந்திரிக் கும்மி, யாக்கோமே கொன்சால்வெஸின் முசல்மன்வேதம், கடவுள் நிர்ணயம், நாலுவேதம், சிந்துப் பிரார்த்தனை முதலான பல இலக்கியங்கள் ஒல்லாந்தர் காலப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றில் ஒருசில இலக்கியங்களில் சில பாடல்கள் மட்டும் எஞ்சியுள்ளன. அதேவேளை ஏனைய இலக்கியங்கள் முழுமையாக மறைந்துள்ளன.

* * * * *

யாழ். பல்லைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டத்துக்காகச் சமர்ப்பிக் கப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது இன்று பல மாற்றங்களோடு நூலுருப் பெறுகிறது, இத்தருணத்தில் குறித்த ஆய்வுத் தலைப்பை நான் தெரிவு செய்து ஆய்வை மேற்கொள்வதற்கு வழிகாட்டி, மேற்பார்வை செய்து, ஆக்கமும் ஊக்கமும் அளித்து நூலுக்கான அணிந்துரையையும் வழங்கிய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையேன்.

என்றும் அன்புரிமையோடு உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கும் எனது பேராசிரியர்களான தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் அவர்களுக்கும் பேராசிரியர் கி. விசாகரூபன் அவர்களுக்கும் நான் நன்றியுடையவனாவேன்.

ஆய்வினை மேற்கொள்வதற்குத் துணைபுரிந்த தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். நூலாக்கத்துக்குரிய தூண்டலை வழங்கி உற்சாகப்படுத்தும் திரு. இ. ஆனந்தநடராஜா அவர்களுக்கும் நண்பன் சி. ரமேஸிற்கும், கி.செல்மர் எமிலுக்கும் என் நன்றி உரியதாகும்.

எனது கல்விசார் செயற்பாடுகளுக்கு உற்சாகமூட்டும் கலாநிதி. பொ. இரகுபதி அவர்களுக்கும் ஆய்வுக்குப் பேருதவியாக அமைந்த நூலகர்களுக்கும் ஆய்வு காலத்தில் பல்வேறு வழிகளிலும் துணைநின்ற மனைவி அனுராதாவுக்கும் என் நன்றிகள். பிரதானமாக ஆய்வேட்டை நூலாக்கம் செய்ய முன்வந்த குமரன் புத்தக இல்லத்தினருக்கும் என் நன்றியினைக் கூறுவதில் மகிழ்வடைகிறேன்.

மாதர்சங்க வீதி
சித்தன்கேணி

**ந. குகபரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | vii |
| முன்னுரை | ix |
| 1. ஈழத்தமிழரின் வரலாற்றுப்பின்னணி | 1 |
| 2. சமயமும் சமூக அரசியலும் | 26 |
| 3. மரபுகளும் வழக்காறுகளும் | 68 |
| 4. கலைகள் | 101 |
| 5. அதிகார அடுக்கமைவு | 125 |
| 6. ஈழமும் இந்தியத் தொடர்பும் | 149 |
| 7. மதிப்பீடு | 173 |
| நூல்விபரப்பட்டியல் | 179 |
| பின்னிணைப்பு | 186 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I. ஈழத்தமிழரின் வரலாற்றுப் பின்னணி

ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தரின் ஆளுகைக் காலத்தில் எழுச்சி பெற்ற தமிழ் இலக்கியங்களின் ஊடாக அக்கால சமூக - அரசியல் கூறுகளை இனங்காண்பதற்கு ஈழத்தமிழரின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமான வகையில் நோக்குதல் அவசியமாகும்.

## 1. கி.பி. 1638ற்கு முன்பதான ஈழத்தமிழரின் வரலாற்றுப் பின்னணி

ஈழத்தமிழர்களின் வரலாறானது வரலாற்று உதய காலத்திலிருந்து அடையாளப்படுத்தக் கூடியதாகவுள்ளது. பொதுவாக ஈழத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலம் பற்றிய தரவுகள் தெளிவற்றதாக உள்ள புறநிலையில் கற்காலத்திற்கும், வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்டதான வரலாற்று உதய காலம் குறித்த தரவுகள் பிரதான கவனிப்பைப் பெறுகின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை (கற்காலத்தை) மூன்று பிரிவுகளாக நோக்க முடியும். பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதிய கற்காலம் என்பன அவையாகும். இங்கு பழைய கற்காலமானது கீழைப் பழங்கற் காலம், மத்திய பழங்கற்காலம், மேலைப் பழங்கற்காலம் ஆகிய மூன்று உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

''ஈழத்தில் மேலைப் பழங்கற்காலத்திற்குரிய தடயங்கள் இன்றுவரை வெளிக்கொணரப்படவில்லை. கிடைத்த தடயங்களும் பெரும்பாலும் கீழை, மத்திய பழங்கற்காலத்திற்குரியன எனக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய தடயங்கள் ஈழத்தின் தென்பகுதியில் மட்டுமன்றி வடமேற்குப் பகுதியிலுள்ள புவிச்சரிதவியற் படைகளிலும் காணப்படுகின்றன. இப் புவிச் சரிதவியற் படையை இரணைமடுப் புவிச்சரிதவியற் படையென ஆராய்ச்சியாளர் அழைத்துள்ளனர்[1]'' எனச் சி.க. சிற்றம்பலம் குறிப் பிட்டுள்ளார்.

கி.மு. 500 காலப்பகுதியில் விஜயனும் அவனது எழுநூறு தோழர் களும் ஈழத்தில் குடியேறியமை தொடர்பாகக் கூறப்படும் கதையில் விஜயனும் அவனைச் சார்ந்தோரும் ஆரியர்களாகவே அடையாளப் படுத்தப் பட்டுள்ளனர். ஆனால் இவ்வாறு வட இந்தியாவுடன் ஈழத்து ஆதிக் குடியேற்றவாசிகளைப் பாளி நூலோர் இணைப்பதற்குக் காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயன் கதை, பண்டுகாபயன் கதை ஆகியவற்றுக்கான கருப்பொருள் இவர்களுக்குப் பரீட்சயமாக இருந்த ஜாதகக் கதைகளிலிருந்து பெறப் பட்டமையேயாகும்.[2]

ஈழத்தில் பெருங் கற்கால கலாசாரமானது காத்திரமான அம்சங் களைக் கொண்டிருந்தது. இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு பெருங் கற்களால் ஆன ஈமச் சின்னங்களை இவர்கள் அமைத்தனர். இக்கலாசார காலத்தை இரும்புக் கலாசாரம் என்று குறிப்பிடுவோரும் உளர். மந்தை வளர்ப்பு, நீர்ப்பாசன விவசாயம், நெல் உற்பத்தி, மட்பாண்டத் தொழில், பிற அலங்காரத் தொழில்கள் ஆகியவற்றை வளர்த்தெடுத்தவர்களும் இவர்களாவர்.[3]

இப்பெருங்கற்காலக் கலாசாரம் தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஒத்திசைவான அம்சங்களைக் கொண்டு திகழ்ந்துள்ளமையை ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாய்வுகள் மெய்ப் பித்துள்ளன. ''இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் பொதுமையான இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் குணாதிசயங்கள் தனித்துவம் வாய்ந் தவையாகும். சவ அடக்கமுறையும், ஈமச் சின்னங்களும் பலதரப்பட்ட வையாக உள்ளன. அவையாவன டொல்பன், கற்குவியல்கள், கற்சதுக்கம், ஈழத் தாழிகள் என்பன குறிப்பிடத்தக்கன. இச்சவ அடக்க முறைக்குரிய பண்பாட்டு மக்கள் இரும்பு உலோகப் பாவனைக்குரியவர் களாகவும் கறுப்பு - சிவப்பு மட்பாண்ட உபயோகத்திற்குரியவர்களாகவும் காணப்பட்டனர். இம்மக்களுடைய வாழ்வில் நான்கு பிரதான அலகுகள் இடம்பெற்றிருந்தன. வதிவிடப்பகுதி, இடுகாடு, குளம், வயற்பரப்பு என்பனவே அவையாகும்.[4] எனச் செ. கிருஷ்ணராசா சுட்டிக்காட்டுகிறார்.

சுதர்சன் செனிவரட்ன, ஈழத்து அரச உருவாக்கம் தமிழகத்தைப் போல பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தோன்றியதாகக் கூறுகிறார். எல்மென் என்ற அறிஞர் இதை இனக்குழு நிலையில் இருந்து அரசு உருவாகுவதற்கு இடைக்கட்டமாகத் தோன்றிய அரசுகள் எனக் குறிப்பிடுகிறார். இலங்கையில் கிடைத்த 21 பிராமிக் கல்வெட்டுக்கள் சங்ககாலத்தைப் போல் ''வேள்'' என்ற பட்டத்திற்குரியவர்களின் ஆட்சி இருந்ததைக் கூறுகின்றன.[5] வடபுலத்தில் கந்தரோடையில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வில் பெருங்கற்காலக் கலாசாரத்தினைப் பிரதிபலிக்கும் கூறுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பெருங்கற்காலக் கலாசாரத் திற்குரிய இரும்பு வெண்கலம் ஆகிய மூலப்பொருட்களிலான பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான கருவிகள் மணிவகைகள் உரோம நாணயங்கள், உரோம மட்பாண்டங்கள் இலட்சுமி நாணயங்கள் கிடைத்துள்ளன.[6]

ஆனைக்கோட்டையில் உள்ள கரையாம்பிட்டியில் மேற்கொள்ளப் பட்ட ஆய்விலிருந்து இப்பகுதியானது வரலாற்றுதய காலத்திலிருந்து வரலாற்றுக் காலத்திலும் இவ்விடம் சிறப்புப் பெற்றிருந்தது என்பது தெளிவாகிறது.[7] காரைநகரில் சத்திராந்தை, வேலணையில் கும்புறுப்பிட்டி, சாட்டி, பூநகரியில் உள்ள மண்ணித்தலை, பரமன்கிராய், வெட்டுக்காடு, நாகர்கோயில், மன்னாரில் மாந்தை, புத்தளத்தில் பொன்பரிப்பு, வவுனியா வில் மாமடு, திருகோணமலையில் குச்சவெளி, மட்டக்களப்பில் கதிரவெளி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் ஈழத் தமிழர்தம் பண்பாட்டு மரபின் நீட்சியை உணர்த்தும் வகையிலான சான்றுகள் பல வெளிப்பட்டுள்ளன.

சிங்கள வரலாற்று நூலான மகாவம்சம் பௌத்த மதத்தை முன்னிறுத் தியதாய், வரலாற்றுக் குறிப்புக்களையும், புனைவுகளையும் அடிப்படை யாகக் கொண்டு எழுந்துள்ளது. விஜயனுக்கு முற்பட்ட கால விடயங்கள் பற்றிய குறிப்புக்களையும் இம் மகாவம்சத்தில் காணமுடிகிறது.[8] புத்தர் இந்நாட்டிற்கு மேற்கொண்ட மூன்று விஜயங்கள் இவற்றில் குறிப் பிடத்தக்கதாகும். மகியங்கனை, நாகதீபம், களனி ஆகிய அம்மூன்று இடங்களில் நாகதீபம் தனித்த தன்மை கொண்டது.

நாகர்களை அமானுஜர் எனப் பாளி நூல்கள் குறிப்பிட்டுள்ளன. அடிப்படையில் இவர்கள் நாக வழிபாட்டை உடைய மக்கள் கூட்டமாக வாழ்ந்தனர். நாகர்கள் ஈழத்தில் ஆட்சி புரிந்தமைக்கு கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. பெரிய புளியங்குளம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப் பட்ட கி.பி. 1ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நான்கு பிராமிக் கல்வெட்டுக் கள் வட இலங்கையில் நாக சிற்றரசர்களது ஆட்சியிருந்ததாகக் கூறுவதைக் காணலாம்.[9]

பண்டைய இலங்கையில் ஆட்சிபுரிந்த மன்னர்களில் பெரும்பாலான வர்களின் பின்னொட்டுச் சொல்லாக நாக என்ற பெயர் இருந்துள்ளது. நாக வழிபாட்டு மரபு வெறுமனே ஈழத்தோடு மட்டுமன்றி உலகளாவிய பழம்பெரும் மரபுகளில் நிலைபெற்றிருந்தமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. நாக வழிபாடு யூபிரட்டீஸ் - தைக்கிரிஸ் நதி தீரத்தில் ஆரம்பித்து உலகின் பல பாகங்களுக்கும் பரவியது என்ற Ferguson கருத்து இங்கு கவனிப் பிற்குரியது.[10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ வரலாற்றின் ஆரம்ப காலங்களில் இந்தியாவோடு சிங்களவர் களும் நெருக்கமான உறவைப் பேணியுள்ளனர். விஜயன் பாண்டிய இளவரசியைத் திருமணம் செய்தமை முதற்கொண்டு தேவநம்பியதீசன் வரையான மன்னர்களின் பெயர்களில் ''பண்டு'' என்ற அடைமொழிப் பிரயோகம் காணப்பட்டமை ஈறான விடயங்கள் சிங்களவருக்கும் பாண்டி யருக்கும் இடையிலான உறவைச் சுட்டுவனவாய் உள்ளன. விஜயனுக்குப் பின்னர் ஆட்சி அதிகாரமானது பந்துவாசன், அபயன், பந்துகாபயன் ஆகியோரிடம் சென்றது. இம்மன்னர்களில் பந்துகாபயன் அநுராதபுர இராச்சியத்தை விரிவான வகையில் நிறுவப்பாடுபட்ட வனாவான்.

ஈழத்து அரசியலில் தமிழர்களின் செல்வாக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அப்பாலும் பரவியிருந்தது. ஆரம்பகாலங்களில் தமிழகத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் ஆட்சிக் கைமாற்றங்களையும் ஏற்படுத்தின. எல்லாளன் என்பான் சோழ நாட்டுத் தமிழனாவான். பண்டைய நாட்களில் சோழ நாட்டின் தலைநகர் உறையூராகும். எல்லாளன் இலங்கை மீது படையெடுத்து அசேலனைக் கொன்றான். அவன் இந்துவாயிருந்தும் அவனின் நீதியை சிங்களக் குடிமக்கள் போற்றினர்.[11] ஈழ வரலாற்றில் துட்டகாமினியின் வீர ஆற்றலை மிகைப்படுத்திக்காட்ட எல்லாளன் பெரிதும் பயன்பட்டுள்ளான். சேனன், குத்திகன், எல்லாளன் ஆகிய மன்னர்களை விட வேறு தமிழ் மன்னர்களும், துட்டகாமினியின் ஆட்சியின் பின்னர் வருகின்ற மூன்று நூற்றாண்டு காலப்பகுதியில் அநுராதபுரத்தில் ஆட்சி செய்துள்ளனர்.[12]

வடபுலத்தில் அநுராதபுர காலப்பகுதியில் நிலவிய நாக அரசர்கள் தொடர்பான கல்வெட்டுக்கள் பல்வேறு தரவுகளைத் தந்துள்ளன. அபி, பருமகன், உதி, வேள், பரத போன்ற பெயர்களை அக்காலக் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. இவ்வகையில் ஈழத்தில் தமிழர் செறிவாக வாழ்ந்த பகுதிகள் ஏனைய பகுதிகளைப் போன்று நாகரிகத்தில் வளர்ச்சி கண்டிருந்ததை இலக்கியங்கள் மட்டுமன்றி இப்பகுதியிற் கிடைத்துள்ள முத்திரைகள், பிராமிக் கல்வெட்டுக்கள், மட்பாண்ட ஓட்டுச் சாசனங்கள், வல்லிபுரப் பொன்னேடு ஆகியன எடுத்துரைக் கின்றன.[13]

ஈழத்து அரசியலில் அநுராதபுரத்தில் தேவநம்பியதீச மன்னனால் ஆரம்பிக்கப்பட்ட மௌரிய வம்ச ஆட்சி கி.பி. முதலாம் நூற்றாண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

மறைய, வசப மன்னனுடன் வம்பகண்ண வம்சத்தின் ஆட்சி ஏற்பட்டது. இவ்வம்சத்தின் கடைசி மன்னன் மகாநாமவாவான். கி.பி. 10ம் நூற்றாண்டு வரை அநுராதபுர அரசின் இருப்பு தொடர்ந்தது. இக்காலப் பகுதியில் தமிழகத் தொடர்புகளூடாகத் தமது அரசியல் இருப்பினைத் தக்கவைக்க அநுராதபுர மன்னர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முயன்றனர்.

தமிழக அரசியலில் பல்லவர் காலம் ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் சாதகமாக இருந்தமையை இங்கு குறிப்பிடல் அவசியமாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் எழுச்சிபெற்ற இப் பேரரசு இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் அரசியலிலும் பார்க்க மதம், மொழி, கலை வர்த்தகம், நீர்ப்பாசனம் தொடர்பான விடயங்களில் பலமான தாக்கங்களையும் செல்வாக்கினையும் ஏற்படுத்தியிருக்கின்றது.[14] கி.பி. 7ம் நூற்றாண்டில் மட்டும் ஐந்து தடவைகள் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் தமிழகஞ் சென்று படையுடன் திரும்பிவந்த நிகழ்ச்சி கள் கூறப்படுகின்றன.[15] இங்கு வடபகுதித் துறைமுகமே தமிழகம் நோக்கிய பயணத்திற்குப் பயன்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சோழர்களின் எழுச்சியானது ஈழத்தில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியது. அநுராதபுரத்திலிருந்த சிங்கள அரசு பொலநறுவைக்கு நகர்ந்ததோடு சோழர்களின் நிர்வாகத்தில் 77 ஆண்டு கள் ஈழம் ஆட்சிசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இக் காலத்தில் சைவ சமயத்தில் பிராமணர்களின் செல்வாக்கு அதிகரித்ததோடு மொழி, கலை சார் விடயங்களிலும் பரவலான மாற்றங்கள் ஏற்பட்டன. அதேவேளை சோழர்களின் அதிகாரப் பிரவேசம் சிங்களவருக்கு பலவழிகளிலும் நெருக்கடியை ஏற்படுத்தியது. சோழர்கள் மீது தென் கிழக்குத் திசையிலிருந்து சிங்களவர் தாக்குதல்களை நடாத்தினர். ஈற்றில் சோழர்கள் ஈழத்தை விட்டு விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. விஜயபாகுவின் படை நடவடிக்கைகளே சோழருக்கு நெருக்கடியாக அமைந்தன.

சிங்கள அரசியலில் விஜயபாகுவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பராக்கிரமபாகு குறிப்பிடத்தக்கவனாகத் திகழ்ந்துள்ளான். ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குறிப்பிட்ட சில காலத்திற்காவது இவனது ஆட்சி இருந்திருக்கும் என்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. பராக்கிரமபாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற தேசங்கள் மீதான படையெடுப்பிற்கு வடபகுதித்துறைமுகங்களையும் பயன்படுத்தியுள்ளான்.

பராக்கிரமபாகுவின் மரணத்திற்குப் பின்னர் ஈழத்தின் மீதான தமிழக, கலிங்கப் படையெடுப்புக்கள் நிகழ்ந்துள்ளன. அதில் கி.பி. 1215இல் நிகழ்ந்த மாகனின் படையெடுப்பு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவன் சைவத்தை மட்டும் ஆதரித்த ஒரு மன்னனாகவும் பௌத்த மதத்திற்கு எதிராகச் செயற்பட்டவனாகவும் இருந்துள்ளமையை பாளி மற்றும் சிங்கள ஏடுகளிலிருந்து அறியமுடிகிறது.[16] மாகனின் வருகையானது பொலநறுவை அரசின் அஸ்தமனத்திற்கு வழிவகுத்தது. அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பிரதேசங்கள் காடடர்ந்த பகுதிகளாக, வடக்கே தமிழரசும், தெற்கே சிங்கள அரசும் செயற்படும் சூழல் ஏற்பட்டமை ஈழ அரசியலில் பிரதான விடயமாகும். மாகன் 1255இல் இரண்டாம் பராக்கிரமபாகுவால் பொலநறுவையிலிருந்து வெளியேற்றப் பட்ட சூழலில் அவன் வடக்கு நோக்கி நகர்ந்துள்ளான். பூநகரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையுஞ், சூளவம்சத்தில் குறிப் பிட்டுள்ள படி மாகனது படைகள் நிலைகொண்டிருந்த இடங்களையுங் கொண்டு இவனின் அரசியல் மையபீடம் பூநகரிப் பகுதியில் அமைந் திருக்கலாம் என்ற கருத்து புஸ்பரத்தினத்தால் முன்வைக்கப்பட்டுள்ளது.[17]

மாகனின் ஆட்சியைத் தொடர்ந்து 1215 - 1284 வரையான காலப் பகுதியில் சாவகன், சாவகன்மைந்தன், பாண்டியர் என்போரது ஆட்சி நடைபெற்றது. இவர்களைத் தொடர்ந்தே 1284இல் பாண்டியத்தள பதியான ஆரியச் சக்கரவர்த்தியின் படையெடுப்பு நிகழ்ந்தது. ஆரியச் சக்கரவர்த்தியின் படையெடுப்பானது தமிழகப் பிரதானியான பாண்டிய மழவன் அழைத்ததன் பேரிலேயே ஏற்பட்டதென யாழ்ப்பாண வைபவ மாலை ஆசிரியர் குறிப்பிடுவர்.[18] ஆரியச் சக்கரவர்த்தி அந்தண குலத்தைச் சேர்ந்தவன் ஆகையால் மறையவரைக் குறிக்கும் ஆரிய என்ற பெயருடன் சக்கரவர்த்தி என்ற விருதுப் பெயரையும் இணைத்தே ஆரியச்சக்கரவர்த்தி என அழைக்கப்பட்டான்.

யாழ்ப்பாண இராச்சியமானது மேற்கே மன்னார்க் குடாவிலிருந்து கிழக்கே திருகோணமலை வரைக்கும் பரந்திருந்தது. கூழங்கைச்சக்கர வர்த்தி, குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், மார்த் தாண்ட சிங்கையாரியன் முதல் பரராசசேகரன், சங்கிலி, செகராசசேகரன், சங்கிலிகுமாரன் என யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களின் பட்டியலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டதாயுள்ளது. யாழ்ப்பாணத்தின் நிர்வாகமானது வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதோடு வன்னியில் பனங்காமம், முள்ளியவளை, கருநாவல்பற்று, கரிக்கட்டுமூலை, செட்டிக்குளம்பற்று, தென்னமரவாடி முதலான பகுதிகளிலும் ஆதிக்கம் உடையதாய் இருந்தது. வன்னிப் பெருநிலப்பரப்பில் யாழ்ப்பாண மன்னர் நேரடியான நிர்வாக முயற்சிகளில் ஈடுபடமுனைந்தார்கள் எனினும் அம்முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. யாழ்ப்பாண அரசின் தோற்றத்தோடு ஒப்பிடுகையில் வன்னிச் சிற்றரசுகள் பழமையானவை. இவ்வன்னிபங்கள் தமது நிர்வாகத்தில் முதலியார், கண்காணி, பண்டாரப் பிள்ளை, தலையாரி, அடப்பனார் முதலான அதிகாரப் பிரிவினரை நியமித்து வந்துள்ளதோடு குடை, கொடி, கவசம், படைக்கலம் முதலான சின்னங்களைப் பெற்று தீர்வை அறவிடும் வல்லமையையும் பெற்றிருந்தனர். இக்காலத்தில் வன்னியரோடு அதிகார ரீதியான உறவைக் கொண்டிருந்த யாழ்ப்பாண மன்னர் தென்னிலங்கை அரசியலிலும் தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

பொருளீட்டலையும், மதப் பரப்புகையையும் மையமாகக் கொண்டு செயற்பட்ட போரத்துக்கேயர் 1505இல் ஈழத்தை அடைந்தனர். இவர்கள் பல தடவைகள் யாழ்ப்பாண அரசு மீது படையெடுத்துள்ளனர். ஆனால் ஆரம்பகால முயற்சிகள் சங்கிலி மன்னனின் தந்திரமான செயற்பாடுகளால் முழுமையடையவில்லை. 1591இல் படையெடுத்த போர்த்துக்கேயர் யாழ்ப்பாண மன்னனான புவிராச மன்னனைக் கொன்று எதிர் மன்னசிங்கனை அரசனாக்கி அவனோடு உடன்படிக்கை செய்தனர். இவ் உடன்படிக்கை யாழ்ப்பாண அரசில் போர்த்துக்கேயரின் மேலாதிக்கத்திற்கு வழிசமைத்தது. ஈற்றில் 1619இல் ஒலிவேறாவின் தலைமையிலான படையெடுப்போடு யாழ்ப்பாண அரசு வீழ்ச்சி கண்டது. தொடர்ந்து தமிழர் பகுதிகள் பலவும் போர்த்துக்கேயரின் பிடியில் சிக்கின.

போர்த்துக்கேயர் உள்ளூர்ப் படையணிகளைத் தமது படையணியில் இடம்பெறச் செய்தனர். பிற சக்திகள் தமது அதிகார பிரதேசங்களில் நுழைவதற்கு எடுத்த முயற்சிகளைக் கண்காணித்தனர். ஆனால் கண்டி மன்னனான இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரின் செயற்பாடுகள் மீது வெறுப்படைந்து ஒல்லாந்தரின் உதவியை நாடியமை ஈழத்தில் ஐரோப்பிய சக்திகள் இரண்டு தமது நலன்களைத் தக்கவைக்க மோதிக் கொண்ட சூழலை ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கி.பி. 1638 – கி.பி. 1796ற்கு இடைப்பட்ட காலத்தில் ஈழத்தமிழரின் வரலாற்றுப் பின்னணி

ஈழத்தில் கி.பி. 1638 - கி.பி.1796 வரையான ஒல்லாந்தரது ஆட்சிக் காலம் குறித்த வரலாற்றுப் பார்வையில், தமிழர்கள் செறிந்து வாழ்ந்த வடக்கு, கிழக்கு பகுதியில் ஒல்லாந்தரது ஆட்சிக்காலச் செயற்பாடுகள் தொடர்பான நோக்கு பிரதானமாக அமைகிறது. அதேவேளை கண்டி உள்ளிட்ட ஈழத்தின் மைய அரசியல் வரலாறானது வடக்கு கிழக்கோடு குறிப்பிடத்தக்க அளவில் தொடர்புபட்டிருந்த புறநிலையில் பொருத்தமான இடங்களில் வடக்குகிழக்குக்கு அப்பாலான அரசியல் வரலாற்று விடயங்கள் சுருக்கமான வகையில் நோக்கப்படுகிறது. மேலும் அக்காலப் பகுதியில் எழுந்த தமிழ் இலக்கியங்களின் ஊடான சமூக, அரசியல் பார்வையிலும் ஒல்லாந்தர் ஆட்சிக்கால அரசியல் வரலாற்று விடயங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

### i. ஒல்லாந்தரின் ஈழம் நோக்கிய வருகைக்கான பின்னணி

ஒல்லாந்தரின் ஈழம் நோக்கிய நகர்வானது நாடுகாண் பயணங்களை மையப்படுத்திய போர்த்துக்கேயர், ஸ்பானியரின் முன்னெடுப்புக்களினது தொடர்ச்சியாக நிகழ்ந்தது. அக்காலத்தில் ஒல்லாந்து தவிர புதிதாக எழுச்சியடைந்த இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் தமது நலன் களை விரிவுபடுத்தும் வகையில் நாடுகாண் பயணங்களை மேற் கொண்டன. கம்பனிகளை அமைத்து வர்த்தக நலன்களை முதன்மைப் படுத்தின. அதனைப் பின்பற்றி 1602இல் ஒல்லாந்தரும் தமது ஐக்கிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை அமைத்தனர். Vereenigde Oost-Indische Compagnie (VOC) எனப்பெயர் பெற்ற அக்கம்பனி ஒல்லாந்தரின் கீழைத்தேய செயற்பாடுகளின் பிரதான மையமாகத் திகழ்ந்தது.

ஒல்லாந்தரது நடவடிக்கைகளுக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளில் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியிருந்தனர். தமக்குப் போட்டியாக இருந்த முஸ்லிம்களோடு போரிட்டு தமது இருப்பைத் தக்கவைத்தனர். ஆனால் பிற்பட்ட காலத்தில் தம் படை வலுவை மேம்படுத்துவதில் அவர்கள் அதிகளவு அக்கறை காட்டவில்லை. இந்நிலையில் போர்த்துக்கேயர் பலம் குன்றியிருந்த இடங்களை முதலில் இலக்குவைத்து தமது நடவடிக்கைகளை முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னெடுப்பது உசிதமானது என்பதன் அடிப்படையில் ஒல்லாந்தரின் ஆசியா நோக்கிய வியூகம் அமைந்திருந்தது.

ஆரம்பத்தில் ஒல்லாந்தரின் கடற்படைத் தலைவனே அரசியல் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்தான். ஆனால் கி.பி. 1609இல் சிதறிக் கிடந்த ஒல்லாந்தரின் ஆளுகைப் பகுதிகளை நிர்வகிக்க தேசாதிபதி ஒருவரும், ஆலோசனை வழங்க சங்கமும் ஏற்படுத்தப்பட்டன. கி.பி. 1619இல் இரண்டாவது தேசாதிபதியாக நியமிக்கப்பட்ட ஜோன் பீட்டர்ஸ் கோவன் என்பவன் ஜாவாவிலுள்ள ஜகத்ரா என்ற இடத்தைக் கைப்பற்றி பட்டேலியா நகரத்தை நிறுவினான். அந்த இடமே ஒல்லாந்தரின் கீழ்த் திசை நாடுகளின் தலைமைத் தளமாக விளங்கியது. தமக்குக் கிடைத்த சாதகமான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கீழைத்தேச நாடுகளில் பிரவேசிக்க ஒல்லாந்தர் அதிகளவு ஆர்வம் காட்டினர். ஈழத்தில் போர்த்துக்கேயரின் நெருக்கடியை எதிர்கொள்வதற்குப் படைவலிமை மிக்க இன்னொரு அதிகாரத் தரப்பைக் கண்டியை ஆண்ட இரண்டாம் இராஜசிங்கன் (கி.பி. 1635 - கி.பி. 1687) எதிர்பார்த்திருந்த சூழலிலேயே ஒல்லாந்தரின் பிரசன்னம் ஈழத்தில் நிகழ்ந்தது.

கடற்படை வலிமை கொண்ட ஒல்லாந்தர், இரண்டாம் இராஜ சிங்கனின் தொடர்பினை அடுத்து ஈழத்தில் இருந்து போர்த்துக்கேயரை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட உடன்பட்டனர். போர்த்துக்கல் நாடு ஸ்பானியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையும், கத்தோலிக்க மதத்தை மையப்படுத்திய போர்த்துக்கல் மத ரீதியாக மட்டுமன்றி தமது வணிகச் செயற்பாடுகளுக்குப் போட்டியாகத் திகழ்ந்தமையும் ஒல்லாந்தர் போர்த்துக் கல்லோடு முரண்பாடுகொள்ள காரணங்களாயிருந்தன. கண்டியரசனின் வேண்டுகோளின்படி கி.பி. 1638இல் மட்டக்களப் பினையும், 1639இல் திருகோணமலையையும் போர்த்துக்கேயரிட மிருந்து ஒல்லாந்தர் கைப் பற்றியமை ஒல்லாந்தர் தமது ஆற்றலை வெளிப்படுத்திய சம்பவமாக மட்டுமன்றி ஈழத்தில் தம் இருப்பை ஏற்படுத்த நடந்த பிரதான நிகழ்ச்சியாகவும் அமைந்தது.

### ii. தமிழர் பகுதிகளில் ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பு

தமிழர் பகுதிகளில் ஒல்லாந்தரின் பிரவேசமானது நன்கு திட்டமிடப்பட்ட பின்னணியிலேயே நிகழ்ந்தது. கண்டியை ஆண்ட இரண்டாம் இராஜ சிங்கனை மையப்படுத்தியே ஒல்லாந்தர் தமது போர்ச் செயற்பாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டனர். கூடவே ஈழத்திற்கு வெளியேயான அரசியல் நிகழ்வு களையும் கணிக்க அவர்கள் தவறவில்லை.

கி.பி.1640இல் போர்த்துக்கல் ஸ்பானியாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது. இதனைத் தொடர்ந்து போர்த்துக்கல்லும், ஒல்லாந்தும் ஐரோப்பாவில் பத்து வருடங்கள் சமாதானமாக இருக்க உடன்படிக்கை செய்தன. இதன் விளைவால் ஈழத்தில் போர்த்துக்கேயரை வெளியேற்றும் ஒல்லாந்தரின் செயற்பாட்டில் தளர்வு ஏற்பட்டது. இது இரண்டாம் இராஜ சிங்கனுக்கு சீற்றத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது. நிலைமைகளை ஒருவாறு சமாளித்த ஒல்லாந்தர் பத்து வருட காலத்தின் பின்பே 1656இல் கொழும்பையும், 1658இல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினர்.

இரண்டாம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே ஒப்பந் தங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. அதில் 1645இல் கையெழுத்தான ஒப்பந்தத்தின் விளைவாக இலங்கைத் தீவில் ஒல்லாந்தரது ஆட்சியுரிமைக் குரிய அடித்தளம் மிகவும் வலுவான முறையில் இடப்பட்டது. இராஜ சிங்கன் போர்த்துக்கேயரை அகற்ற ஒல்லாந்தரோடு உறவுபூண்ட செயற் பாடு அவனுக்குப் பல வழிகளிலும் நெருக்கடியையே ஏற்படுத்தியது. இராஜசிங்கனின் அரசியல் தளும்பல் மிக்கதாகும். ''மிளகாயைக் கொடுத்து இஞ்சியைப் பெற்றுக்கொண்ட மாதிரி[19] என ஒல்லாந்தருடனான அவனது உறவு, மதிப்பிடப்பட்டமை மிகப் பொருத்தமாகும்.

ஒல்லாந்தர் 1658இல் ஈழத்தின் வடக்கு நோக்கி மேற்கொண்ட படை நடவடிக்கையானது நன்கு திட்டமிடப்பட்டதாகவும், கரையோரப் பகுதிகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து கடல்சார் வணிகச் செயற்பாடுகளை முன்னகர்த்தவும் முழு இலங்கையையும் கைப்பற்றும் நோக்கிற்கான பிரதான நகர்வாகவும் கணிக்கப்பட்டது. 1658இல் 12 கப்பல்களிலும், 30 படகுகளிலும் 1100 ஒல்லாந்துப் போர் வீரர்களுடனும் 2000க்கு மேற்பட்ட கூலிப்படையினருடனும் ஒல்லாந்தர் மன்னாரில் தரையிறங்கினர்.[20] மன்னார் பிரதேசம் முத்துவளம் நிறைந்ததாக இருந் தமையும், கிறிஸ்தவம் பற்றிய அறிமுகம் அப்பகுதியில் ஏலவே ஏற் பட்டிருந்தமையும் ஒல்லாந்தர் இப்பகுதியில் ஈர்ப்புக் கொள்வதற்குப் பிரதான காரணங்களாக இருந்திருக்கும்.

ஒல்லாந்தர் யாழ்ப்பாண பட்டினம் மீதான தமது படையெடுப்பை வன்னிப் பெருநிலப்பரப்பினூடாகவும், கடல் வழியினூடாகவும் மேற் கொண்டனர். போர்த்துக்கேயரின் வசமிருந்த யாழ் கோட்டை உள்ளிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கு முன்னர் ஊர்காவற்றுறைக் கோட்டையை ஒல்லாந்துப் படை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது. யாழ். கோட்டை மீதான படை நடவடிக்கையானது மூன்று மாத முற்றுகையின் பின்பே முடிவுக்கு வந்தது. யாழ் கோட்டையில் நிகழ்ந்த போரில் போர்த்துக்கேயப் போர்வீரர்கள், கூலிப் படையினர், பாதிரிமார், அடிமைகள் உள்ளிட்ட 2170 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.[21]

யாழ்ப்பாணப் பட்டினம் நோக்கிய படை நடவடிக்கையில் குடா நாடும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளும் ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. யாழ்ப்பாணத்தை அண்டிய வன்னிப் பகுதி வன்னி பங்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. ஒல்லாந்தர் வன்னி மீதான இராணுவ நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளவில்லை. அதேவேளை அப்பகுதிகளின் நிர்வாகத்தை வன்னிபங்களின் ஊடாக மேற்கொள்ளும் வகையில் தமது செயற்பாட்டினை அமைத்தனர்.

யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரிடமிருந்து முழுமையாகக் கைப்பற்றப் பட்ட பின்பு புத்தளம், கற்பிட்டி முதலான தமிழர் வாழ்ந்த பிரதேசங் களும் 1659இல் ஒல்லாந்தரது கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. வடக்கே தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்ட ஒல்லாந்தர் கிழக்கில் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்த முயன்றனர். 1638, 1639இல் தாம் கைப்பற்றிய மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் கண்டி மன்னனின் உறவின் பொருட்டு உரிமை கொண்டாடாத ஒல்லாந்தர், இடைப்பட்ட காலங்களில் இராஜசிங்கனுடனான உறவில் விரிசல் ஏற்பட்டமையைத் தொடர்ந்து 1665இல் திருகோணமலைத் துறை முகத்தையும், 1668 மட்டக் களப்புத் துறைமுகத்தையும் கைப்பற்றினர். ஒல்லாந்தர் தமது ஒவ்வொரு நடவடிக்கையிலும் வணிக நலனுக்கே முன்னுரிமை வழங்கினர். அதே வேளை அவர்கள் வடக்கே உறுதி பெற்றது போல் கிழக்கே உறுதி பெற முடியவில்லை என்பதே வரலாறாகும்.

### iii. ஒல்லாந்தரின் ஆட்சிக் கட்டமைப்பு

வடக்கு, கிழக்கில் தமது செயற்பாடுகளை ஒழுங்கமைக்க முனைந்த ஒல்லாந்தர் பிராந்திய ரீதியிலான நிர்வாகத்தை ஏற்படுத்தினர். இங்கு வடக்கு, கிழக்கின் அரசியல் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தரால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு பற்றிய விளக்கம் அவசியமாகும்.

ஈழத்தில் கண்டி இராச்சியம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் செல்வாக்கோடு திகழ்ந்த ஒல்லாந்தர் தமது நிர்வாகத்தின் தலைமையான தேசாதிபதியின் கீழ் செயற்பட்டனர். இத்தேசாதிபதி பற்றேவியாவின் கட்டளைப் பீடத்தினால் வழிநடத்தப்பட்டார். தேசாதிபதிக்கு உதவியாக ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனி அதிகாரிகளும் பற்றேவியாவினால் நியமிக்கப்பட்டனர்.[22] ஒல்லாந்தர் ஆட்சியில் வில்லியம் சே.கோசுதர் முதல் அங்கிள் பீக்கு ஈறாக 31 தேசாதிபதிகள் செயற்பட்டுள்ளனர். இவர்களில் வான்கோன்ஸ் (1658 - 1663), லோறன்ஸ் பில் (1680 - 1692), யன் சுருடர் (1757 - 1763) முதலானோர் தமது ஆளுகைக் காலத்தில் தற்றுணிவுடன் முடிவுகளை எடுத்து செயற்பட்டமையை ஒல்லாந்து அறிக்கைகள் மூலம் அறியமுடிகிறது.[23]

ஈழத்தின் நிர்வாகமானது கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. கொழும்பு கைப்பற்றப்படும்வரை காலியில் தேசாதிபதியின் தலைமை அலுவலகம் இயங்கியது. ஆனால் 1656இல் கொழும்பு கைப்பற்றப்பட்டதன் பின்னர் 1796 வரை கொழும்பே ஒல்லாந்தரின் தலைமையகமாகத் திகழ்ந்தது. காலி, யாழ்ப்பாணம் ஆகியன ஒவ்வொரு தளபதியின் கீழும் நிர்வகிக்கப் பட்டன. தளபதியின் கீழ் திசாவைமாரும், அதிகாரிகளும் இயங்கினர். வியாபார மையப்பகுதிகள் உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு ஓவர்கூத் (Opperhoofd) எனும் அதிகாரி செயற்பட்டார்.

**a. தமிழர் பகுதிகளில் ஒல்லாந்தரின் ஆட்சி நிர்வாக பொருளாதாரச் செயற் பாடுகள்:** ஒல்லாந்தரது ஆட்சியில் வடக்கு, கிழக்கு சார்ந்து தமிழர் வாழ்ந்த பகுதிகள் யாழ்ப்பாண நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டன. இங்கு குறித்த சில பகுதிகளில் நேரடியான நிர்வாகமும் சில பகுதிகளில் மறைமுகமான நிர்வாகமும் ஒல்லாந்தரால் முன்னெடுக்கப்பட்டன. புவியியல் ரீதியாக பரந்துபட்ட ஆள்புலத்தை யாழ்ப்பாண நிர்வாகம் கொண்டிருந்தமை கவனிக்கத்தக்கது. யாழ்ப்பாண நீதி நிர்வாகக் கொமாண்டரியின் பரப்பானது புத்தளத்தின் வடக்கிலிருந்து, வடமேற்கே வளைந்து சென்று, வடகிழக்கு இலங்கையின் கடற்கரைப் பரப்புக்களையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளடக்கிய வண்ணம் சென்று, மட்டக்களப்புக் கோட்டையின் தெற்குவரை அதன் பரப்பு விரிவடைந்திருந்தது.[24]

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் அரசியல் வரலாற்றுச் சூழலையும் அக்கால நிர்வாக பொருளாதாரக் கட்டமைப்பையும் இலகுவாகப் புரிந்து கொள்வதற்கு அமைய நிர்வாகப் பிரிவுகளில் அடங்கியிருந்த பகுதிகளைப் பின்வரும் ஐந்து பிரிவுகளாகப் பகுத்து நோக்கமுடியும்:

1) யாழ்ப்பாணப் பட்டினமும் அதை அண்டிய தீவுகளும்
2) வன்னிப் பிரதேசம்
3) திருகோணமலை
4) மட்டக்களப்பு
5) புத்தளம், கற்பிட்டி

258185

123997

**b. யாழ்ப்பாணப் பட்டினமும் அதை அண்டிய தீவுகளும்:** தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் ஒல்லாந்தர்களது அதிகாரத்தின் மையப்பகுதியாக யாழ்ப் பாணம் திகழ்ந்தது. யாழ்ப்பாணப்பட்டினம் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. குடாநாட்டைச் சுற்றியிருந்த பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாணத்திற்குள்ளே அடங்கியிருந்தன. தமிழர் பிரதேசங்களில் யாழ்ப்பாணமே ஒல்லாந்தரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அதன் புவியியல் அமைவு இதற்குப் பிரதான காரணமாகும்.

யாழ்ப்பாணத்தின் தலைமையைக் கொமாந்தர் நிர்வகித்துள்ளார். தேசாதிபதிக்கு அடுத்த நிலையைக் கொண்டவராக கொமாந்தரின் அதிகாரம் இருந்துள்ளது. கொமாந்தருக்கு உதவியாகத் திசாவை என்ற பதவி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அப்பதவியில் இருப்பவர் ஒல்லாந்தராக இருப்பது வழமையாகும். திசாவை 10 பர்தாக்கள் அல்லது 25 சில்டர் பெறுமதிக்குக் குறைவானவை தொடர்பான சகலமான குடியியல் வழக்கு களிலும் தீர்ப்பளிப்பதற்கு அதிகாரமுண்டு. தேவைப்படும் காலங்களில் முதலியார், பட்டங்கட்டிமார், பண்டாரப் பிள்ளைகள், தலையாரிகள், வன்னியர் முதலானோரைத் தனக்கு முன்னே சமுகமளிக்குமாறு கட்டளை பண்ணுவதற்கும் குற்றம் இளைக்குமிடத்து அவர்களைத் தண்டிப்பதற்கும் கூட திசாவை அதிகாரம் பெற்றிருந்தார்.[25]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அதிகார எல்லையானது பரந்திருந்தமையால் அதன் அரசியல், பொருளாதார, நீதி, நிர்வாக, சமய, கலாசார விடயங்கள் அனைத்துக்கும் பொறுப்புக்கூற வேண்டியவராகவும், செயற்பாடுகள் பற்றி அறிக்கையிடல், ஆலோசனைகள் வழங்கல் சார்ந்து செயற்படுப வராகவும் நேரடியான உத்தியோக நிமித்தம் பயணங்களை மேற்கொள்ளல், உள்ளூர்த் தலைவர்களை நியமித்தல், கண்காணித்தல் சார்ந்து பணியாற்ற வேண்டியவராகவும் கொமாந்தர் இருந்துள்ளார். 1697 காலத்தில் யாழ்ப்பாணக் கொமாந்தராக இருந்த சுவார்திகுறுனின் அறிக்கையின் மூலம் கொமாந்தரின் செயற்பாடுகள் பற்றிய பல்வேறு குறிப்புக்களை அறியமுடிகிறது. பதவி நிலையில் திசாவை செல்வாக்குடையவராவார். இன ரீதியாக அவரும் ஒல்லாந்தராக இருந்தார். இதனால் கொமாந் தருக்கும் திசாவைக்கும் இடையே நிர்வாகச் செயற்பாடுகளில் சில சந்தர்ப்பங்களில் புரிந்துணர்வு அற்ற தன்மை நிலவியுள்ளது. சுவார்தி குறுன் இத்தகைய முரண் நிலை பற்றி தனது குறிப்பில் வெளிப்படுத்தி யுள்ளார்.[26]

ஒல்லாந்தரின் அதிகார நிலைப்பட்ட பதவியில் அதிகாரி நியமனம் குறிப்பிடத்தக்கதாகும். அதிகாரிகள் இருவகையினர். அவர்களில் ஒரு வகையினர் பிரதேச வாரியான நிர்வாகத்தில் தலைமைப் பதவியினையும் பொறுப்புக்களையும் கொண்டிருந்தனர். மற்றொரு பிரிவினர் சமூகப் பிரிவுகள் சிலவற்றோடு தொடர்பான பொறுப்புக்களைப் பெற்றிருந்தனர்.[27]

தமிழ் மக்களிடையே நிலவிய சமூக அடுக்கமைவுசார் வேறுபாடுகள் அரசியல் நிர்வாக பதவிகளிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. உள்ளூர் நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்கு வசதியாக முதலியார்கள் பலரை ஒல்லாந்தர் நியமித்துள்ளனர். "வலிகாமம் பற்று, தீவுப்பற்றுக்கு இராச காரிய முதலியும், வேரவிலோன் தொஞ்சனும் வடமராட்சிக்கு கனகராய முதலியும், தென்மராட்சிக்கு குஞ்சியகுமார முதலியாரும், பச்சிலைப் பள்ளிக்கு சேதுராய முதலியாரும் நியமிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.[28] மேற்குறிப்பிடப்பட்ட முதலிமாரில் சிலர் இறைசுவாந் தோராகவும் இயங்கியுள்ளனர். அரசாங்க வரிகளைச் சேர்த்தல் இறைசு வாந்தோரின் பணியாகும்.

யாழ்ப்பாணப் பட்டினத்தில் உடையார் எனும் அதிகாரப் பதவியும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. உடையார் எனும் பதவியைப் பெற்றவர்கள் இறைசுவாந்தரின் கீழ்ப் பணிபுரிந்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கடமைகளிற் சில இறைவரிகள் சம்பந்தமானவையாக இருந்துள்ளன.

உள்ளூர் அதிகாரத்தைத் துணைக்கொண்ட ஒல்லாந்தர், அவர்களைத் தமது நலன்களுக்கு இயைந்த வகையில் பயன்படுத்த முனைந்தனர். அதேவேளை முதலியார்களும் தமது நலன்களை முன்னெடுப்பதில் சிரத்தையோடு இயங்கியுள்ளனர்.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணப் பட்டினத்தை அண்டிய தீவுகளிலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளனர். அத்தீவுகளின் தரைத்தோற்ற அம்சத்தினைக் கருத்திற் கொண்டு தமது நாட்டின் பிரதேசப் பெயர்கள் பலவற்றை அவற்றுக்குச் சூட்டியுள்ளனர். வேலணை - வெய்டென், காரைநகர் - அமஸ்ரர்டம், புங்குடுதீவு - மிடில்பேர்க், அனலைதீவு - றொட்டர்டம், நெடுந்தீவு - டெல்வ்ற் என்பன ஒல்லாந்துப் பெயர்களைத் தாங்கியுள்ளமை இதற்கு ஆதாரமாகும்.

போர்த்துக்கேயர் காலத்தில் நெடுந்தீவில் குதிரைகள் வளர்க்கப் பட்டுள்ளன. ஒல்லாந்தரும் தமது ஆட்சிக் காலத்தில் குதிரை வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தின் இயற்கை வளம் ஒல்லாந்தரால் திட்டமிட்டு சுரண்டப்பட்டுள்ளது. கரையோரப் பகுதிகளில் செறிந்திருந்த முருகைக்கற்கள், சுண்ணாம்பு என்பன சுதேசிகளைப் பயன்படுத்தி ஏற்றுமதி செய்யப்பட்டன. பனை மரங்களைத் தறித்து நாகபட்டினம், கொழும்பு முதலான பகுதிகளுக்கு விற்பனை செய்து அதிகளவான வருமானம் ஈட்டப்பட்டது. தமது இலாபத்தில் சிறிதளவேனும் குறைவு ஏற்படாதவாறு ஒல்லாந்தர் யாவற்றையும் கண்காணித்தனர். இரும்பு இறக்குமதி செய்யப்பட்ட போதும் யாழ்ப்பாணத்தில் அதற்கான கேள்வி பெரியளவிற்கு இருக்கவில்லை என்பதை யாழ்ப்பாணத்திற்கு தளபதியாக விருந்த சுவார்திகுறூன் தனது குறிப்பில் எழுதியுள்ளார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.[29]

யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் நீதிச் செயற்பாடுகளை மையப் படுத்திய 'றட்வன்யஸ்றிஸ்' எனும் சுப்பிரீன்கோட் இயங்கியுள்ளது. இதில் கொம்மாந்தர் பிரதானமானவராவர். அதேவேளை கீழ் கோட்டிற்கு திசாவை நீதிபதியாய் இருந்துள்ளார். அக்காலத்தில் கொழும்பிலிருந்த சீமோன் என்னும் தேசாதிபதியின் கட்டளைப்படி யாழ்ப்பாணத்தில் திசாவை உத்தியோகத்திலிருந்த கிளாஸ் ஐசாக்ஸ் என்னும் ஒல்லாந்தனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுக்கப்பட்ட தேசவழமை என்னும் சட்டத் தொகுப்பு பன்னிரண்டு முதலிமாரால் ஆராயப்பட்டு பின்பு ஆவணமாக வெளிவந்தது.

யாழ்ப்பாணப் பட்டினத்தையும் அதைச் சூழவுள்ள தீவுகளையும் தமது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒல்லாந்தர் பாதுகாப்புக்காக 264 ஒல்லாந்து வீரர்களை யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் நிறுத்தி யிருந்தனர். மேலும் உள்ளூர் படைகளையும், கூலிப் படையினரையும் பாதுகாப்புத் தேவைகளுக்குப் பயன்படுத்தியிருந்தனர். மேலும் யாழ்ப் பாணம், ஊர்காவற்றுறை ஆகியவற்றில் பெரிய கோட்டைகளை நிறுவினர். உள்ளூரில் வெடியரசன் கோட்டை, துலுக்கன் கோட்டை, இயற்றாலைக் கோட்டை போன்றன ஒல்லாந்தரின் பாதுகாப்புசார் செயற்பாடுகளுக்குச் சான்றாக உள்ளன. இவ்வகையில் யாழ்ப்பாண பட்டினத்திலும் அதனை அண்டிய தீவுகளிலும் கி.பி.1796 வரை ஒல்லாந்தரின் ஆட்சி தொடர்ந்துள்ளமையை நோக்க முடிகிறது.

**c. வன்னி:** ஒல்லாந்தரின் ஆளுகையில் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாக வன்னியின் ஆட்சி நிர்வாகம் ஒல்லாந்தரால் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் வன்னிபங்கள் உள்ளூர் அதிகார மையங்களாகத் தொழிற் பட்டு வந்துள்ளன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் பெரு நிலப்பரப்பை வன்னிபங்களின் ஊடாக நிர்வகிக்க முனைந்தமையினைக் காணமுடிகிறது.

வன்னியில் ஆறுவன்னிபங்கள் இருந்துள்ளன. இப்பகுதியானது கடலோரத்திலிருந்து மூன்று அல்லது நான்கு மைல்களுக்கு உட்புறமாகச் செட்டிகுளத்திலே தொடங்கி கொழும்புத்துறைக்கெதிராகவுள்ள கல்முனை வரை நீடித்து அங்கிருந்து கிழக்கு நோக்கித் திருகோணமலை வரை பரந்து பின் அப்பகுதியிலிருந்து மேற்குப் புறமாக கற்பிட்டி, மாதோட்டம், மன்னார் ஆகிய இடங்கள் வரை செல்கின்றன என ஒல்லாந்து தேசாதிபதி பான்கூன்ஸ் குறிப்பிட்டுள்ளமை வன்னியின் பரந்த எல்லையைச் சுட்டு வதாக உள்ளது.[30]

தென்னமரவடி, பனங்காமம், மேல்பத்து, முள்ளியவளை, கரிக்கட்டு மூலை, கருநாவல்பற்று ஆகிய வன்னிப் பிரிவுகளில் பனங்காமம் பற்று வன்னிபமே பரப்பளவில் பெரியதாகத் திகழ்ந்துள்ளது. அடங்காப் பற்றிலே அரைவாசியைக் கொண்டதாக இருந்த பனங்காமப்பற்றைக் கைலாய வன்னியன் ஆட்சிபுரிந்த காலம் யாழ்ப்பாணத்து வன்னியரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி மிக்க காலமாகக் கொள்ளப்படுகிறது. கைலாயவன்னியனை அரசன் என்று ஐரோப்பிய அதிகாரிகளும் வரலாற்றாசிரியர்களும் வர்ணித்துள்ளனர்.[31]

ஒல்லாந்தர் அடங்காப்பற்றைக் கைப்பற்ற முனையாமைக்குப் பல்வேறு காரணங்கள் பின்னணியாக இருந்திருக்க வேண்டும். வணிக நலனை முதன்மைப்படுத்திய ஒல்லாந்தருக்குப் பெருநிலப்பரப்பைக் கைப்பற்றுவதும். பேணுவதும் தக்கவைப்பதும் நெருக்கீடு மிக்கதாய் அமைந்திருக்கும். மேலும் அடங்காப்பற்று வன்னிபங்கள் கண்டி மன்னனோடு தொடர்புகளைக் கொண்டிருந்தன. எனவே வன்னிபங்கள் கண்டியரசோடு இணைந்து தொழிற்படும் நிலையைத் தோற்றுவிப்பது உசிதமானதன்று என ஒல்லாந்தர் கருதியிருப்பர். தமக்கு வேண்டிய விடயங்களை வன்னிபங்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதே ஒல்லாந் தரின் பிரதான நோக்கமாக இருந்தது.

வன்னிபங்களிடமிருந்து திறையைப் பெற்றுக்கொள்வதில் ஆரம்ப காலங்களில் ஒல்லாந்தர் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர். இருப்பினும் 1671இல் பான்கூன்ஸ் மேற்கொண்ட படை நடவடிக்கை மூலம் வன்னிபங்களின் அதிகாரப் போக்கில் தளர்ச்சிநிலை ஏற்பட்டமை யைக் காண முடிகிறது. கி.பி. 1671இல் யாழ்ப்பாணத்தில், வன்னிபங்களின் தலைவர்களான டொன்கஸ்பார் சிதம்பரப்பிள்ளை, டொன்பிலிப்பு நல்லமாப்பாணர், புண்ணியபிள்ளை உடையார், திரினகல உடையார் ஆகியோர் கலந்துகொண்டு உடன்படிக்கை செய்தமை ஒல்லாந்தரின் அதிகார செயற்பாடுகளுக்கு ஊக்கமாக அமைந்தது. 1678இல் கைலாய வன்னியனின் மறைவு ஒல்லாந்தர், வன்னிபங்களின் மேல் தமது அதிகாரப் பிடியை அதிகரிக்க வாய்ப்பாக அமைந்தது.

வன்னிபங்களின் ஆட்சி அதிகாரம் பரம்பரையாகக் கைமாறியுள்ளது. அதேவேளை அவர்களுக்கான நியமனங்களை யாழ்ப்பாணத்திலுள்ள ஒல்லாந்தர் உறுதிப்படுத்தும் செயல்முறையும் நடந்துள்ளது. வருடத் திற்கு ஒருமுறை வன்னிபங்களின் தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்றுவரல் கட்டாயமாகக் கருதப்பட்டது. வன்னியின் மீதான தமது மேலாண்மையை நிறுவ ஒல்லாந்தர் இந்த வழமையைத் தொடர்ந்து பேண விரும்பினர்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வன்னிபங்களின் உறுதி பாதிக்கப்பட்டு வந்துள்ளமை வெளிப்படையாகும். ஒல்லாந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிபங்களுடன் தமக்குச் சாதகமான வழிகளில் ஒப்பந்தங்களை மேற் கொண்டனர். தமது நலன்களைப் பேணும் பொருட்டு ஒல்லாந்தரோடு நல்லுறவைப் பேணுவதில் வன்னிபங்கள் ஆர்வம் காட்டின. ஆரம்ப காலங்களில் வன்னிபங்களுக்கிடையே இருந்த ஒற்றுமை பிற்பட்ட காலங்களில் தொடரவில்லை. இருந்தும் வன்னிபங்கள் தமது ஆட்சி யைத் தக்கவைப்பதில் உறுதி காட்டியமை கவனிப்பிற்குரியதாகும். வன்னியர்கள் யாழ்ப்பாண மன்னர் காலத்திலும் அம்மன்னர்களோடு நெருங்கிச் செயற்பட்டவர்களாவர். ''கைலாய வன்னியனார் மட தர்மசாதனப் பட்டயம்'' வன்னியில் நிலைபெற்றிருந்த வன்னிபங்களின் செல்வாக்கிற்குச் சான்றாகும்.[32]

வன்னிபங்கள் தமது அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளின் நிர்வாகச் செயற்பாடுகளைக் கட்டமைத்து மேற்கொண்டமைக்குச் சான்றுகள் உண்டு. முதலியார் வன்னிபத்தின் தலைவனால் நியமனம் செய்யப் பட்டுள்ளார். நீதிச் செயற்பாடுகளில் முதலியாரின் வகிபங்கு பிரதான மாகும். பல்லக்கு, பாவாடை, ஒட்டுவிளக்கு, கொடி, குடை, தாரை, நாதஸ்வரம், மேளம் ஆகிய சிறப்புரிமைகள் வைபவ சமயங்களில் முதலியாருக்கு உரியனவாகும்.[33]

யாழ்ப்பாணத்தில் வன்னிப் பிரிவுகளில் செயற்பட்ட வன்னிபங்கள் ஆரம்பத்தில் குறுநில மன்னர்கள் போல இயங்கியுள்ளனர். ஆனால் ஒல்லாந்தர்கள் அவர்களோடு தொடர்புகளைப் பேணி அதிகாரங்களை அதிகளவு பிரயோகித்த நிலையில் அவர்கள் தமது பதவியைத் தக்கவைப் பதற்கே சிரமப்பட்டனர்.

d. **திருகோணமலை:** ஈழத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் திருகோணமலை பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. வரலாற்று ரீதியாக அதிகார வர்க்கங்களின் அரசியல், பொருளாதார பிரதேச தொடர்புகளுக்கு வாய்ப்பான பகுதியாகவும், ஒல்லாந்தரதும், கண்டி மன்னரதும் அதிகாரப் பிரயோகங்களை எதிர்கொண்டு வன்னிபங்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகவும் திகழ்ந்தமை திருகோணமலையின் முக்கியத்துவத்திற்கு ஆதாரமாகும்.

திருகோணமலையில் வன்னிபங்களின் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும் யாழ்ப்பாண வைபவமாலை கோணேசர் கோவிலுக்கான நிபந்தங்கள் தொடர்பாகக் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை வன்னிபத்தின் பொறுப்பில் கோணேசர் கோவிலில் சமயச் செயற்பாடுகளைச் சிறப்பாகச் செய்விப்பது இருந்துள்ளது. திருகோணமலை வன்னிபங்கள் பூபாலக்கட்டு என்னுமிடத்திலுள்ள மாளிகையிலே வாழ்ந்தனர் என்பதைக் கோணேசர் கல்வெட்டால் அறிய முடிகிறது.[34]

திருகோணமலையில் ஒல்லாந்தர் ஆட்சியில் கட்டுக்குளம்பற்று, தம்பலகாமம் பற்று, கொட்டியாரப்பற்று ஆகிய வன்னிபப் பிரிவுகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இவர்கள் தமது அதிகாரத்தை நிலைப் படுத்தவும், பாதுகாக்கவும் ஒல்லாந்தர், கண்டி அரசர் ஆகிய இரு பகுதியின ரோடும் தொடர்புகளைப் பேணியுள்ளனர். இரண்டாம் இராஜசிங்கன் காலத்திலே கொட்டியாரப்பற்றுக்கு குமாரசிங்கன் வன்னிபமாய் விளங்கினான்.

இரண்டாம் இராஜசிங்கன் ஒல்லாந்தரைத் துணைக்கொண்டு போர்த்துக்கேயரை அகற்ற முனைந்தபோது திருகோணமலை வன்னி பங்கள் ஒல்லாந் தருக்கு உதவின. ஒல்லாந்தர் 1639இல் திருகோண மலையைக் கைப்பற்றி அதனை இராஜசிங்கனிடம் ஒப்படைத்தனர். ஆனால் இடைப்பட்ட காலத்தில் இராஜசிங்கனுடன் மோத வேண்டிய சூழல் ஒல்லாந்தருக்கு ஏற்பட்டது. ஒருபுறம் உள்நாட்டு முரண்பாடுகள் கூர்மையடைய மறுபுறம் பிற ஐரோப்பிய சக்திகள் திருகோணமலையில் கால்பதிக்க முனைப்புக் காட்டின. 1672இல் பிரெஞ்சுக் கடற்படையின் கொட்டியாரக்குடா பகுதியிலான பிரவேசம் இவ்வகையைச் சார்ந்த தாகும். ஏலவே 1670இல் இராஜசிங்கன் திருகோணமலை நோக்கி மேற்கொண்ட படை நடவடிக்கை ஒல்லாந்தரது வலுவைப் பாதித்திருந்த புறநிலையில் 1782இல் பிரித்தானியர் திருகோணமலையைக் கைப்பற்றிய நிகழ்வும் நடந்தது. பிரித்தானியரின் செயற்பாட்டைப் பிரெஞ்சுப் படை முறியடித்து திருகோணமலைத் துறைமுகத்தை மீளவும் ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தாலும் 1795இல் பிரித்தானியர் தமது கடல் வலுவைப் பயன்படுத்தி திருகோணமலையைக் கைப்பற்றினர். திருகோணமலையின் வீழ்ச்சி என்பது ஈழத்தில் ஒல்லாந்தரின் ஆளுகையின் முடிவாகவும் அமைந்தது.

திருகோணமலையில் ஒல்லாந்தர் பொருளாதார ரீதியாக அதிகளவான வருமானத்தைப் பெற்றனர். மக்களைச் சுரண்டி பல்வேறு வரிகளை விதித்தனர். கொட்டியாரம், தம்பலகாமம், கட்டுக்குளம் ஆகியவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த மக்கள் செலுத்திய வரிகள் பற்றி ஆவணங்களில் குறிப்புக்கள் உள்ளன. தம்பலகாமத்தில் வேளாளரும் ஏனையோரும் ஒவ்வொரு வருடமும் ஒரு கொம்பன் யானையை அல்லது இரண்டு கொம்பில்லா யானைகளைப் பிடிப்பதோடு தம் விளைபொருளில் பத்திலொன்றையும் செலுத்தினர்.[35] கட்டுக்குளம், தம்பலகாமம், கொட்டியாரம் ஆகிய இடங் களுக்குரிய இரு வன்னியர் யானைகளைத் திறையாகக் கொடுத்தன ரென்றும் ஒவ்வொரு யானைக்கும் பதிலாக 1000 பறை நெல்கொடுக் கலாமென்று 1767 ஆண்டு வெளிவந்த ஒல்லாந்த அதிகாரியின் நினைவேட்டில் கூறப்பட்டுள்ளது.[36]

பிரதான துறைமுகத்தைக் கொண்டிருந்ததால் அதிகளவான வர்த்தகச் செயற்பாடுகள் திருகோணமலையில் நடைபெற்றன. அக்காலத்தில் அடிமை வர்த்தகத்திற்கும் திருகோணமலை பிரதான மையமாக இருந் துள்ளது. 1676 - 1677 காலப்பகுதியில் 262 அடிமைகள் டச்சுக்காரரின் வேலைகளுக்கு அமர்த்தப்பட்டனர்.[37]

ஒல்லாந்தர், வன்னியர், கண்டி அரசர் ஆகிய மூன்று அதிகாரப் பிரிவுகளின் பிடியிலும் சிக்கியிருந்த திருகோணமலை ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றில் அனைத்துத் துறைசார்ந்த நோக்கிலும் முக்கியத் துவம் பெற்ற பகுதியாக வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது.

**e. மட்டக்களப்பு:** தமிழர்கள் செறிந்து வாழ்ந்த மட்டக்களப்பானது மத்திய கால வரலாற்று நிகழ்வுகளாலும் மக்களின் சமூக, கலாசார பண்பாட்டம் சங்களாலும் தனித்துவம் பெற்ற பகுதியாய்த் திகழ்ந்துள்ளது. கண்டி இராச்சியத்திற்கு அருகே அமைந்திருந்தமையால் அரசியல் ரீதியாக அனைத்து அதிகாரத் தரப்பினர்களாலும் உன்னிப்பாக நோக்கப்பட்ட பகுதி என்ற முக்கியத்துவமும் மட்டக்களப்புக்கு உண்டு.

இலங்கையின் சிறப்பைக் கேள்வியுற்று வட இந்தியாவிலிருந்து திரண்டு வந்த முற்குகர் கூட்டத்தினர் ஈழத்தின் கிழக்குக் கடல் வழியாக வந்து உப்புநீர் ஏரி ஒன்றின் ஊடே நாட்டினுட் புகுந்து தம் ஓடங்களைச் செலுத்திச் சென்றனரென்றும் தெற்கு நோக்கி நீண்டதூரம் சென்ற அவரது ஓடங்கள் தரைதட்டியதும் அவ்வேரியின் எல்லைக்கு மட்டக்களப்பு (களப்பு மட்டம் - வாவியின் எல்லை) என்று பெயர் நிறுவினர்[38] என மட்டக்களப்பின் பெயர்க்காரணம் தொடர்பாக வீ.சி.கந்தையா குறிப் பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பின் பழைமையான வரலாறு தெளிவற்றதாகவே உள்ளது. ஒல்லாந்தர் 1638இல் மட்டக்களப்பைக் கைப்பற்றியபோதும் அங்கு தமது செயற்பாடுகளை வரையறுத்த நிலையிலேயே முன்னெடுத்தனர். ஆரம்பத்தில் கண்டி மன்னரிடத்து நல்லபிப்பிராயத்தைப் பெறும் வகையில் நடந்துகொண்ட ஒல்லாந்தர் முரண்பாடுகள் வலுத்தபோது தமது பொருளாதார நலன்களை முதன்மைப்படுத்திச் செயற்பட்டனர்.

மட்டக்களப்புப் பகுதியில் ஆரம்பத்தில் எட்டுப்பற்றுக்கள் காணப்பட்டன. அங்கு பரம்பரை உரிமையாக ஆதிக்கம் பெற்ற வன்னியரின் ஆட்சியின் கீழமைந்த ஆறுக்குங் குறையாத சிற்றரசுகள் இருந்தன. மட்டக்களப்பு, பழுகாமம், சம்மாந்துறை, ஏறாவூர் பானமை ஆகியவற்றிலுள்ள வன்னியரைப் பற்றி ஐரோப்பியர் எழுதிய வரலாற்று நூல்களிலே குறிப்புக்கள் உள்ளன.[39] ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பானது அரச அமைப்போடு இயங்கியது என்ற மரபுவழிச் செய்தி உண்டு. கலிங்கமாகோன் அரனூழியம் வகுத்த கல்வெட்டில் அக்காலத்தில் நிலவிய சமூக அடுக்கமைவுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் கடமைகளை அவன் வகுத்துரைத்துள்ளமையைக் காணமுடிகிறது. இப்பிரதேசத்தில் வன்னிமைகளின் அதிகாரமானது கண்டி மன்னர்களாலும், ஒல்லாந்தராலும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளன.

ஆரம்பத்தில் ஒல்லாந்தரது யாழ்ப்பாண ஆள்பதியினூடாகவே மட்டக் களப்பின் அரசியல் செயற்பாடுகள் நிர்வகிக்கப்பட்டன. ஆனால் 1671இல் மட்டக்களப்பையும் திருகோணமலையையும் நிர்வகிக்கத் தனியான தளபதி நியமிக்கப்பட்டார். இது, ஒல்லாந்தர் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் மட்டக்களப்புப் பகுதியில் எதிர்கொண்ட பிரச்சினைகளைக் குறிப்புணர்த்துகின்றது.

ஆரம்ப காலங்களில் வன்னிபங்களிடையே சில முரண்பாடுகள் தோன்றியதையும் அதன் விளைவாகப் போர் நடைபெற்றமை பற்றியும் குறிப்புக்கள் உள்ளன. போர்த்துக்கேயரை அகற்றும் படை நடவடிக்கையை ஒல்லாந்தர் முன்னெடுத்தபோதும் வன்னிபங்கள் ஒல்லாந்தருக்கு உதவி செய்துள்ளமையைக் காணமுடிகிறது. திருகோணமலையிலுள்ள போர்த்துக்கேயரின் கோட்டையை ஒல்லாந்தரின் கடற்படைத் தலைவனான வெஸ்றர்வோல்ட் (Westerword) 12 கப்பல்கள் அடங்கிய படையுடன் 1639இல் முற்றுகையிட்டான். அவனுக்கு உதவியாகக் கொட்டியாரம், மட்டக்களப்பு, சம்மாந்துறை எனும் பகுதிகளிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுப் படைகள் சென்றன. மட்டக்களப்பு வன்னிபம் 500 போர் வீரர்களை அனுப்பியிருந்தான்.[40]

வன்னிபங்களின் செயற்பாடு ஒருபுறம் அமைய மேலும் கண்டிய மன்னர், ஒல்லாந்தர் ஆகிய அதிகார மையங்களின் செயற்பாடுகளும், அவற்றின் விளைவால் எழுந்த நெருக்கடி நிலைகளும் மட்டக்களப்பு வரலாற்றின் சிக்கல் நிறைந்த நிலையினை இனங்காட்டுவதாய் உள்ளமை வெளிப்படை. அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்துவது தொடர்பாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் தரும் மேல்வரும் தகவல் கவனிப்பிற்குரியது.

''ஒல்லாந்தர் மட்டக்களப்பை இருபாகஞ் செய்து தெற்குப்பாகத்திக்குக் கந்தப்போடி என்பவனையும் வடக்கு பாகத்திற்கு அறுமக்குட்டி யையும் நிலைமைப் போடியாய் தெரிவுசெய்து கண்டிக்குச் சென்று கீர்த்தி ஸ்ரீ இராஜனைக் கண்டு அவனால் நிலைமைப் பத்திரம் பெற்று ஒல்லாந்த சக்கரவர்த்தி கலி பிறந்து 4766 ஆம் வருஷம் அறுமக்குட்டிப் போடி யையும், கந்தப்போடியையும் நிலைமைப் போடியாய் மட்டக்களப்பிற்கு நியமனம் செய்தனர்''[41]. இங்கு மட்டக்களப்பின் அதிகாரத்தில் கண்டிய மன்னர் தொடர்ச்சியாகச் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளனர் என்பது வெளிப்படுகிறது. திருகோணமலை, வன்னி ஆகிய பகுதிகளின் வன்னி யரைப்போல் மட்டக்களப்பு வன்னியரும் கண்டியரோடு நட்புறவைக் கொண்டிருந்தனர். கண்டியில் நடைபெற்ற அரச சபையின் கூட்டங்களிற் கலந்துகொள்வதற்கு மட்டக்களப்பு வன்னியர் பலமுறை போனார்கள் என்று வோல்டே குறிப்பிட்டுள்ளமையும், நாட்டு வழமைகளை ஆதாரமாகக் கொண்டு வன்னியர் நீதி பரிபாலனம் செய்தமையும் மட்டக்களப்பு அரசியலில் வன்னிபங்களின் வகிபங்கைச் சுட்டுகிறது.

மட்டக்களப்பின் அதிகாரத்தை கையகப்படுத்துவதில் ஒல்லாந்தர் பலவாறு முனைந்துள்ளனர். கிடைத்த சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பின் பாதுகாப்பை உறுதிசெய்யக் கோட்டைகளை அமைத்தனர். 1669இல் மட்டக்களப்பு ஒல்லாந்தரால் மீண்டும் கைப்பற்றப்பட்டமையும் அதனைத் தொடர்ந்து இராஜசிங்கன் மேற்கொண்ட படை நடவடிக்கையும் மட்டக் களப்பில் நிலவிய அதிகாரப் போட்டியைக் காட்டுகிறது. பரந்த வயல்கள், யானைகள் முதல் பலவற்றையும் கையகப்படுத்தும் பொருளாதார நோக்கும் இந்த ஆக்கிரமிப்புகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**f. புத்தளம் - கற்பிட்டி:** தெதுறுஓயா தொடக்கம் மோதரகம் ஆறு வரையுள்ள பகுதி புத்தளம் - கற்பிட்டி ஆட்சிப் பகுதியாக ஒல்லாந்தர் காலத்தில் திகழ்ந்தது. புத்தளம் என்ற பெயர் உப்பளங்கள் அமைந்திருந்தமையின் காரணமாக ஏற்பட்ட தென்பர். ஒல்லாந்தர் 1658இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் பின்னர், 1659இல் எவ்வித இரத்தக்களரியுமின்றி புத்தளம் - கற்பிட்டிப் பிரதேசங்களையும் கைப்பற்றினர்.

ஆரம்ப காலங்களில் தமிழர்கள் செறிவாக வாழ்ந்த பகுதியாக புத்தளம் திகழ்ந்தது. ஆனைமடு, தோணிக்கல், கல்லடி, மாம்புரி, பொன் பரப்பி, மறிச்சுக்கட்டி முதலான தமிழ் பெயர்களைத் தாங்கிய ஊர்கள் மேற்குறிப்பிட்ட கருத்திற்குச் சான்று. இப்பிரதேசம் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வன்னிமையின் ஆதிக்கம் மிக்க பகுதியாக இருந்தது. ஆனாலும் ஆறாம் பராக்கிரமபாகுவின் படையெடுப்போடு புத்தள வன்னிமையும் பாதிப்பிற்குள்ளானது. கண்டியர் மற்றும் ஒல்லாந்தரும் இப்பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்த முனைந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

கண்டி இராச்சியம் நிலவிய காலத்தில் ராஜவன்னி, குமாரவன்னி என்னும் பற்றுகளில் வன்னியர் இருவர் இருந்தனர். அவர்களில் ஒருவர் முஸ்லிமாகவும் மற்றவர் கிறிஸ்தவராகவும் காணப்பட்டனர். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு யானையைத் திறையாக இராச தானிக்கு அனுப்பவேண்டியிருந்தது. அரசியல், பொருளாதார ரீதியாக மட்டுமன்றி இன ரீதியாகவும் பன்மைத் தன்மை கொண்ட பிரதேசமாகத் திகழ்ந்த இப்பகுதி ஒல்லாந்தர் ஆளுகையில் வன்னிபங்களதும் கண்டி யரசரதும் செல்வாக்கு மிக்க பிரதேசமாகத் திகழ்ந்தது.

### அடிக்குறிப்பு

01. சிற்றம்பலம், சி.க., 1993, *யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு*, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளியீடு. ப. 04.

02. மேலது, ப. 05.

03. மேலது, ப. 09

04. கிருஷ்ணராசா, செ., 2005, *இலங்கை வரலாறு, பாகம்* II, பிறைநிலா வெளியீடு, ப. 89.

05. புஸ்பரட்ணம், ப., ''தமிழ் இலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாண தொடக்ககால மன்னர்கள்'', *தினக்குரல்* - 13.04.2010. கட்டுரை, ப. 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சிற்றம்பலம், சி.க., 1993, ப. 11.

07. மேலது, ப. 16.

08. பத்மநாதன், சி., *இளங்கதிர்*, 1971 - 1972, பேராதனைப் பல்கலைக்கழகம், ப.13.

09. பரமு புஸ்பரட்ணம், 2006, *இலங்கைத் தமிழரும் நாகநாட்டு அரச மரபும்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், ப. 01.

10. ஏகவல்லி சிவராசசிங்கம், 2003, *ஈழ வரலாற்றுப் பதிவுகள்*, Arrowweb Publishers, Toronto, Canada, ப. 61.

11. கொட்றிங்ரன், எச்.டபிள்யூ, 1939, *இலங்கையின் சுருக்க வரலாறு*, அரச கருமமொழி, வெளியீட்டுத் திணைக்களம், ப. 15.

12. முருகர் குணசிங்கம், 2008, *இலங்கையில் தமிழர்*, M.Vவெளியீடு, ப. 03.

13. சிற்றம்பலம், சி.க., 1993, ப. 82.

14. முருகர் குணசிங்கம், 2008, ப. 17.

15. சிற்றம்பலம்,சி.க., 1993, ப. 191.

16. முருகர் குணசிங்கம், 2008, *மு.கு.நூ*, ப. 12.

17. சிற்றம்பலம், சி.க., 1993, *மு.கு.நூ*, ப. 351.

18. நகுலசிகாமணி, வல்வை. ந., பதிப்பாசிரியர், 2004, *யாழ்ப்பாண வைபவமாலை*, வல்வை ஆவணக் காப்பகம், பக். 25, 26.

19. பேக்மன், எஸ்.எ., மென்டிஸ், ஜி.ஸி. *எமது முன்னோரளித்த அருஞ்செல்வம்*, கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பனி வெளியீடு, 1938, ப. 200

20. முருகர் குணசிங்கம், 2008, *மு.கு.நூ*, ப. 217.

21. மேலது, ப. 257.

22. மேலது, ப. 25.

23. மேலது, ப. 257.

24. கிருஷ்ணராஜா, செ. 2005, *மு.கு.நூ*, ப. 280.

25. பத்மநாதன், சி. 2002, *மு.கு.நூ*, ப. 51.

26. Hendrick Zwaardecroon, 1911, *Memoir of Hendrick Zweerdecroon*, p. 24.

27. பத்மநாதன், சி., 2002, *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்*, குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப. 53.

28. மேலது, ப - 55.

29. Hendrick Zwaardecroon, 1911, *Memoir of Hendrick Zweerdecroon*, p. 24.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. பத்மநாதன், சி., 2003, *மு.கு.நூ*, ப. 103.
31. மேலது, ப. 104.
32. பத்மநாதன், சி., 1970, ***வன்னியர்***, ஆசிரியர் வெளியீடு, பேராதனை, ப. 55.
33. மேலது, ப. 87
34. பத்மநாதன், சி., 2003, ***இலங்கையில் வன்னியர்***, குமரன் புத்தக இல்லம், ப. 35.
35. கொட்றிங்ரன், எச்.டபிள்யூ., ***இலங்கையின் பண்டைய நிலவாட்சியும் அரசிறையும்***, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், ப. 128.
36. மேலது, ப. 128
37. முருகர் குணசிங்கம், 2008, *மு.கு.நூ*, ப. 233.
38. கந்தையா, வீ.சி. 1964, *மட்டக்களப்புத் தமிழகம்*, ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீடு.
39. பத்மநாதன், சி., 2003, *மு.கு.நூ*, ப. 88.
40. மேலது, ப. 222.
41. கமலநாதன், சா. இ., கமலா கமலநாதன், 2005, *மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்*, குமரன் புத்தகம் இல்ல வெளியீடு, ப. 30.

258185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II. சமயமும் சமூக அரசியலும்

ஈழத்தில் நிலைபெற்றுள்ள சமயங்களுக்கு வரலாற்றுப் பின்னணி உண்டு. சைவம், கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்களில் தமிழர்கள் மத்தியில் சைவம், கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து ஆகிய மதங்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

சமுதாய அமைப்பானது மாற்றங்களை எதிர்நோக்க வேண்டிய நெருக்கடியில் உள்ளபோது அவற்றின் கட்டுக்கோப்பு சிதறாமல் இருக்க சமயம் துணை செய்கிறது. நாகரிக வளர்ச்சியில் சமயங்களின் கருத்தியல், வழிபாட்டு மரபுகள் எனப் பல்வேறு விடயங்கள் மாற்றங்கண்டு வருதல் இயல்பாகும். குறித்த ஒரு பண்பாட்டுக் குழுமத்தில் வேறு பண்பாட்டு அம்சங்கள் கொண்ட மதம் பிரவேசிக்கும் போது தாக்கம் நிகழ வாய்ப்பு அதிகம். ஈழத்தில் பிரவேசித்த ஒல்லாந்தர், புரட்டஸ்தாந்து மதப்பின்னணி யைக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னர் அதிகாரத்திலிருந்த போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றியவர்களாவர். அதேவேளை வரலாற்று ரீதியாக சைவசமயமானது தமிழர்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றிருந்தமை கவனிப்பிற்குரியது. இவற்றின் பின்னணி யில் ஐரோப்பியரான ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் மதங்களின் சமூக, அரசியல் பின்னணியைக் குறித்த நோக்கு முக்கியம் பெறுகிறது.

### 1. சமூகப் புலத்தில் சைவசமயம்

தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் சமயநிலையினை அடையாளங் காண ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் முக்கியமான தரவுகளைத் தந்துள்ளன. போர்த்துக்கேயர் அதிகாரம் செலுத்திய காலத்தில் சைவ சமயம் அதிகளவான பாதிப்புக்களை எதிர்கொண்டது. ஒல்லாந்தரது ஆட்சியின் ஆரம்ப காலங்களில் நெருக்கடி நிலை தொடர்ந்த போதும் பிற்பகுதியில் சைவசமயம் தன்னை நிலைப்படுத்துவதற்கான உறுதியான முயற்சிகளை மேற்கொண்டதெனலாம்.

அதிகார நிலைப்பட்டுப் பரவிய சமயங்களின் செயற்பாடுகள் சமூகப் புலத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இதன் விளைவால் சமயப் பேணுகையிலும், பரப்புகையிலும் நிறுவனமயப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டும், தனிநபர் சார்ந்தும் சைவசமயம் தனது நகர்வுகளை முன்கொண்டு செல்ல முயன்றுள்ளது. இவ்வாறு மக்களை சைவ சமயத்தின் பால் தக்கவைக்க மேற்கொண்ட நடைமுறைகளில் ஆலயங்கள் குறித்தான நோக்கு முக்கியத்துவம் உடையதாக உள்ளது.

### i. சைவ வழிபாட்டு மையங்கள்

போர்த்துக்கேயரின் அதிகாரப்பிரவேசத்துக்கு முன்பு பல நூற்றுக்கணக்கான ஆலயங்கள் இருந்தபோதும் அவற்றில் பெரும்பாலானவை போர்த்துக் கேயராலும் குறித்த சில ஆலயங்கள் ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் இலங்கையின் கரையோர மாகாணங்களைப் பொறுத்த மட்டில் போர்த்துக்கீசரதும் ஒல்லாந்தரதும் ''கலையழிவுக்'' கொள்கைக்கு இந்துப் பண்பாட்டு மூலங்கள் அகப்பட்டுக் கொண்டமையால் அவை எமக்குக் கிடைப்பது மிக அரிதாகவே உள்ளது.[1]

''1658ஆம் ஆண்டு விளம்பி வருஷம் சித்திரை மாதம் ஊர்காவற் றுறையைப் பிடித்தனர். ஊர்காவற்றுறை பிடிபட்ட ஒரு மாதத்துக்குள் அநேக சைவசமயக் கோவில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்க வந்தபோது நாலுபேர் கண்தெரியாதவர்களாயும், இரண்டுபேர் நடக்கமாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்சக் காலத்தின் பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர் அவர்கள் போன பிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்து இரகசியமாய்ப் பூசை செய்து வரும் போது ஒருநாள் வந்து கோவிலையும் இடித்துக் கடலுக்குள்ளே ஓர் கோட்டையும் கட்டினார்கள்''[2] எனக்குறிப் பிடும் மங்களாசன ஏடானது ஒல்லாந்தரது தல அழிப்புத் தொடர்பான விபரத்தைத் தந்துள்ளது. நெருக்கடிகளைத் தாண்டி நிலைபெற்றிருந்த ஆலயங்கள் குறித்து ஒல்லாந்தர் காலத் தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ள செய்திகள் சைவ சமயப் பண்பாட்டு மரபில் ஆலயங்கள் பெற்றிருந்த சமூக சமய முக்கியத்துவத்தை வெளிப்படுத்த உதவுகிறது.

**a. கல்வளைப் பிள்ளையார் கோவில்:** ஈழத்தில் சமய ரீதியாக மட்டுமன்றி அரசியலிலும் முக்கியத்துவம் பெற்ற கோவில்களில் கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்குத் தனித்த இடமுண்டு. இவ்வாலயத்தின் தோற்றத்தினை மாருதப்புரவல்லியோடு தொடர்புபடுத்தி நோக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபை ஆலயத் தலவரலாறு குறிப்பிடுகிறது. ஈழத்தின் வட புலத்தில் முக்கியத்துவம் நிறைந்த வழுக்கையாறு செல்லும் வழியில் சண்டிலிப் பாயின் மையப் பிரதேசத்தில் அமைந்திருந்த ஆலயம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட போதும் பின்னர் அக்காலத்தில் பரராசசேகர முதலியின் மகன்மாரில் ஒருவரான வெற்றி வேலாயுத முதலியார் கல்வளை பரமானந்தப் பிள்ளையாரை உருவாக்கி வழிபாடு செய்தமைக்கு கல்வளை திருவூஞ்சல் சான்றாக உள்ளது.

வெற்றிவேலாயுத முதலியைக்காண அண்ணனான அழகாண்மை வல்லப முதலி சண்டிலிப்பாய்க்கு வருமிடத்து விநாயகரை வணங்கிச் சென்றதாகவும் விநாயகர் மீது திரு ஊஞ்சல் பாடியதாகவும் குறிப்பு உள்ளது.

*''ஊர்வாழி யழகாண்மை வல்லவன் சொல்*
*உசிதமுறு தமிழூஞ்ச லுலகில் வாழி*
*கார்வாழி சண்டிருப்பாய் வாழி வாழி*
*கல்வளை கற்பகமும் வாழி தானே''*[3]

எனும் திரு ஊஞ்சல் பாடல் மேற்குறித்த கருத்துக்கு சான்றாகும். ஒல்லாந்தர் ஆட்சியிலும் கல்வளை விநாயகர் ஆலயம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அன்று செல்வாக்குப் பெற்றிருந்த வில்வராய முதலியார் விநாயகர் மீது தனது பக்தி அனுபவத்தை வெளிப்படுத்தும் வகையில் அந்தாதி பாடமுனைந்தமைக்கு,

*''தார்கொண்ட பூமல்லிகைச் சேக்கையில் தும்பி சாலப்பம்பும்*
*சீர்கொண்ட கல்வளை அந்தாதி பாடத் திரைகள் சூழ்''*[4]

எனத் தொடங்கிய அவரது பாடல் சான்றாகும். முதலியாரின் மகனான செயதுங்க மாப்பாண முதலியாரென்னும் இயற்பெயர் கொண்ட நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் குறித்த பாடலைப் பூர்த்தி செய்ததன் பின்னர் தந்தையின் வேண்டுகோளின்படி கல்வளை அந்தாதியைப் பாடியமையும் குறிப்பிடத்தக்கது. 1883 புரட்டாதி மாதம் யாழ்ப்பாணம் கச்சேரியால் தயாரிக்கப்பட்ட கோவில்களின் பதிவு இடாப்பில் இக்கோவில் கி.பி. 1770 இல் கட்டப்பட்டதாகக் குறிப்புள்ளது.[5]

**b. சுழிபுரம் பறாளை விநாயகர்:** சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயமானது வரலாற்றுப் பெருமைமிக்க விநாயகர் ஆலயங்களில் ஒன்றாகும். சுழிபுரத்திற்கு சோழியபுரம் என்ற பெயரும் உண்டு. பறாளை விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளைப் பாடிய நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் ஈழமண்டலப்பள்ளி, சோழமண்டலப்பள்ளி ஆகிய பாத்திரங்களை உருவாக்கி பாடியுள்ளமை இத்தலத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. திருவடிநிலை, சம்புத் துறை, கோட்டைத்திக்கு முதலான பிரதேசங்கள் இவ்வாலயத்தைச் சூழ அமைந்துள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

யாழ்ப்பாண மன்னர் காலத்தில் உருப்பெற்றதாக நம்பப்படும் இவ் வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் சமய அழிப்பு நடவடிக்கையில் இருந்து தப்பியது என்றும், கோவிலை அழிக்கவந்த அதிகாரியைக் காகமொன்று கண்ணைக் கொத்தி இடிக்கவிடாது தடுத்தமையால் அப் பிள்ளையாருக்குக் கண்ணைக்கொத்திக் காக்கைப் பிள்ளையார் என்ற பெயர் வழங்கப்படுகின்றமையும் இக்கோவில் தொடர்பான தல வரலாற்றுத் தகவலாகும். விவசாயச் சூழலைக் கொண்டமைந்த இத் தலமானது அன்று செல்வாக்குப் பெற்றிருந்த நல்லூர் சின்னத்தம்பிப் புலவரையும் ஈர்த்துள்ளது.

*''நந்து தவழ நதிதனி லாம்ப னனிமலருஞ்*
*சுந்தரஞ் சேரும் பழனப் பறாளை''*[6]

என பறாளை சூழலைப் புலவர் விபரித்துள்ளார். ஈழத்தில் விநாயக வழிபாடானது பிரதானமானதாக இருந்துள்ளது. அம்மரபின் தொடர்ச்சி யாகப் பறாளை விநாயகர் ஆலயத்தை நோக்க முடியும்.

**c. பரராசசேகரப் பிள்ளையார்:** ஈழத்தில் நிலவிய பிள்ளையார் வழிபாட்டு மரபில் இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரும் ஒல்லாந்தர் கால இலக்கி யங்களில் போற்றப்பட்டுள்ளமையினைக் காணமுடிகிறது. யாழ்ப்பாண மன்னர்களில் ஒருவனான பரராசசேகரனது பெயர் பிள்ளையாரின் பெயரோடு இணைந்துள்ளது.

*''பரன்மங்கை யுடனுதவு வரதன்கை மலைவதனப்*
*பரராச சேகரன்பொற் பாதமலர் துணையாமே''*[7]

என இணுவில் சின்னத்தம்பிப் புலவர் பஞ்சவன்னத் தூதின் விநாயகர் காப்பில் வேண்டியுள்ளார்.

யாழ்ப்பாண மன்னர் காலத்தில் உருப்பெற்றதான இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தில் அழிவடையாமல் இருந்துள்ளது என்பதற்கு இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் போற்றுதல் ஆதாரமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

d. **இணுவில் சிவகாமியம்மன் கோவில்:** போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்ட இணுவில் சிவகாமியம்மன் தலம் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வழிபாடுகள் தொடங்கப்பெற்று பிற்பட்ட காலங்களில் மீண்டும் தனித்த அடையாளத்தைப் பெற்றுள்ளது. இணுவில் பகுதிக்குத் தலைவனாயிருந்த பேராயிரவன் காலத்தில் உருப்பெற்ற தலம் அவனது வழித்தோன்றல்களால் தொடர்ந்து பேணப்பட்டு வந்துள்ளது. இத் தலத்தின் புகழுக்கு இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் சிவகாமியம்மை துதி, சிவகாமியம்மை சிறைநீங்கு பதிகம், திருவூஞ்சல் முதலானவை சான்றுகளாகும். புலவர் சிறைநீங்கு பதிகத்தில் ''சாலப்பார் சேயனவன் மனமிரங்கான்''[8] எனக் குறிப்பிட்டு சிவகாமியம்மையை வேண்டுவது கவனிப்பிற்குரியது.

*''காரணி சோலையும் மணிமண்டபமுங் கஞ்ச மலர்த்தடமும்*
*காவிச் செடியுங் கழுநீர்த் தொகையுங் கதிர்நித்திலங்களுந்*
*தேரணி வீதிகளு மெங்கும் நெருங்குஞ் செல்வந் தழைக்கின்ற*
*திருவள ரிணுவைப் பதிதனி லுறையுஞ் சிவகாமித்தாயே''*[9]

எனும் விபரிப்பிலும் தலம் பற்றிய விபரம் தெளிவான வகையில் வெளிப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.

e. **பொன்னாலை கிருஷ்ணன் கோவில்:** ஒல்லாந்தர் கால இலக்கியங்களில் கிருஷ்ணன் கோவில் பற்றிய விபரிப்பு குறிப்பிடத்தக்கதாய் அமைந் துள்ளது. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகரைப் போற்றும் போது பொன்னாலை கிருஷ்ணனையும் போற்றியுள்ளார்.

*''தண்ட நேமி தனுவொடு வாள்சங்கந்*
*தாங்கி வேலை யறிதுயில் செய்யுங்*
*கொண்டல் வண்ணப்பொன் னாலைப் பதியுறை*
*கோல நீல நெடுமான் மருகன்''*[10]

எனப் பொன்னாலை கிருஸ்ணன் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் போற்றி உரைக்கப்பட்டுள்ளமையானது ஈழத்தில் சைவ - வைஷ்ணவ பேதமற்ற நோக்கு அன்று நிலவியிருந்தமையைக் குறிப்புணர்த்துகிறது.

f. **நீலாப்பளை கண்ணகி அம்மன் கோவில்:** ஈழத்தில் கண்ணகி வழி பாடானது பிரசித்தி பெற்று விளங்கியமையை அக்கால இலக்கியங்கள் ஊடாக அறியமுடிகிறது. வெருகல் சித்திர வேலாயுதர் காதல் இலக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOH JPL



யத்தில் நீலாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பற்றிய குறிப்புள்ளது. கண்ணகி வழிபாட்டு மரபானது கிழக்கில் ஆரம்ப காலம் முதல் நிலவி வந்துள்ளது.

*''மங்கு றவழ் சோலைசெறி மாண்புறு நீலாப்பளை வாழ்*
*திங்கணுதலம்மையிரு சேவடியைப் போற்றி செய்வாம்''*[12]

என சோலைகள் சூழப்பெற்ற கண்ணகி தலம் பற்றி வீரக்கோன் முதலியினது சித்திரிப்பானது பெருந்தெய்வ வழிபாட்டு, மரபுக்குச் சமதையாகப் பத்தினித் தெய்வ வழிபாடு மக்கள் மத்தியில் நிலைபெற் றிருந்தமையைக் காட்டுகிறது.

g. **கதிர்காமம்:** ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் பலவற்றில் குறிப்பிடப் பட்டுள்ள முருகன் தலமாகக் கதிர்காமம் திகழ்ந்துள்ளது. பண்டைய காலந்தொட்டு ஈழத் தமிழர்களால் இத்தலம் பெரிதும் மதிக்கப்பட்டு வந்துள்ளது.

*''காந்தி சேர்கண் ணிலாதவர்க் குக்கண்ணுங்*
*காட்சி யுந்தந்து சூர்ப்பகைச் செவ்வே*
*லேந்தல் சேர்கதி ராபுரி சேர்ந்திடு*
*மீழ மண்டல நாடெங்க ணாடே''*[13]

எனப் பறாளை விநாயகர் பள்ளில் சின்னத்தம்பிப் புலவரும்

*''ஏருறை திரு வந்தபொற்கமலப் பாரதனி*
*லருவிகள் சிந்து விற்கதிரைக் கீசன்*
*துணையடி யன்பு வைத் தனுதின''*[14]

எனத் தண்டிகை கனகராயன் பள்ளில் மாவைச் சின்னக்குட்டிப் புலவரும் கதிர்காமத் தலத்தை வியந்து பாடியுள்ளனர். தமிழர்கள் ஈழத்தின் பல பகுதிகளிலும் செறிந்து வாழ்ந்தமைக்கும், சைவ வழிபாட்டு மையங்களில் ஒன்றாகக் கதிர்காமம் திகழ்ந்துள்ளமைக்குமான சான்றாக மேற்குறித்த விபரிப்புக்களைக் கொள்ள முடியும்.

h. **வெருகல் சித்திர வேலாயுதர் கோவில்:** ஈழத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்த இறை தலங்களில் வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம் முக்கியத்துவமுடையது. அத்தலம் உருப் பெற்றமை பற்றிக் கர்ண பரம்பரைக் கதை உண்டு. தொழுநோயைத் தீர்க்கும் பொருட்டு கதிர்காமம் சென்ற முருக பக்தரான நல்லைநாதச் செட்டியார் தான் செல்லும் வழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL



வேடரை எதிர்கொண்டு முருகனின் அருள்பெற்று நோய் நீங்கியதாகக் கூறப்படுகிறது. முருகனின் வேண்டுதல் படியே அவ்வழியில் ஆலயத்தை அமைத்தார் என்பது அக்கதை கூறும் செய்தியாகும்.

''சித்திரஞ் சேராலயமுஞ் செம்பொற்சினகரமும்
திட்டமுடன் முன்னாளிற் செய்த நல்லநாதன்''[15]

என்று வீரக்கோன் முதலியார் பாடிய வெருகல் சித்திர வேலாயுதர் காதல் பாடலடி மேற்குறித்த கருத்திற்குச் சான்றாக உள்ளது. வன்னிபத்தின் செல்வாக்கும், இராஜசிங்கனின் தொடர்பும் ஆலயச் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

வீரக்கோன் முதலியார் ஒல்லாந்தர் ஆளுகைக் காலத்தில் வாழ்ந் துள்ளார். வெருகலில் கிடைத்துள்ள சாசனம்

''ஸ்ரீ சுப்பிரமண்ய நம. தெற்குமதில்
கயில வன்னியனார் உபயம் திமரசர்
மகன் பழையிற் சிதம்பரப்பிள்ளை
மேற்குப் பிறமதில் மட்டக்களப்பூரவர்
நீகொம்புக் கரையூரவர்
வடபுறம் செட்டியள் உபயம்''[16]

என காலத்துக்குக் காலம் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளைச் சுட்டுகிறது. திமரசா என்பதை திமர்சா எனப் பொருள்கொண்ட சி. பத்மநாதன் இந்தியாவின் கிழக்குக் கரையில் இருந்து வந்த வணிகர் களாலும் வெருகல் ஆலயம் முக்கியத்துவம் பெற்றுள்ளமையைக் குறிப்பிட்டுள்ளார்.[17]

i. **காங்கேசன்துறை கண்ணியவளை குருநாத சுவாமி:** ஈழத்தின் வட புலத்தில் முருகன் ஆலயங்களில் கண்ணியவளைப் பகுதியில் உள்ள முருகன் ஆலயமும் குறிப்பிடத்தக்கதாகும். ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக்காலப்பகுதியில் புனரமைக்கப்பட்டு உருப்பெற்ற ஆலயங்களில் முருகன் ஆலயங்களுக்கும் முக்கிய இடமுண்டு. மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில் (1782) நல்லூர் கந்தசுவாமி கோவில் (1793) என்பன அக் காலத்தில் செம்மையடைந்தன. அவ்வகையில் வலிகாமம் வடக்கில் அமைந்த கண்ணியவளையிலுள்ள முருகன் தலமும் முக்கியத்துவம் பெற்றதாக இருந்துள்ளது. வரதபண்டிதர் இத்தலத்திலுள்ள இறைவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையப்படுத்தியே கிள்ளைவிடு தூது எனும் இலக்கியத்தைப் படைத் துள்ளார்.

**j. இளந்தாரி கோவில்:** ஈழத்து சிறுதெய்வ வழிபாட்டு மரபில் மனிதராக வாழ்ந்த சிலரை அவர்தம் தகுதியின் பொருட்டும் இறையம்சங்கள் சார்ந்தும் தெய்வமாக நிலைப்படுத்தி வழிபடும் மரபு இருந்துள்ளது. இவ்வகையில் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் மன்னனாகத் திகழ்ந்த கைலாயநாதன் என்பவன் தெய்வமாகக் கொள்ளப்பட்டு இளந்தாரி என வழிபடப்பெற்றமையைக் காண முடிகிறது. பேராண்மை, ஆளுமை, அருளாற்றல் என்பன கைலாயநாதனைத் தெய்வமாகக் கொள்ளக் காரணங்களாயின. வீர வழிபாட்டு மரபையும் இறையருள் வேண்டலையும் இணைத்ததான இளந்தாரி வழிபாடு குறித்து இணுவில் சின்னத்தம்பிப் புலவர் பஞ்சவன்னத் தூதில் விளக்கியுள்ளார்.

இளந்தாரி உருக்கரந்து விண்ணுலகு சென்றார் எனவும் அதனை அறிந்த மக்கள் அன்றுதொட்டு இளந்தாரியைத் தெய்வமாக வழிபட்டு வந்துள்ளனர் என்பதும் ஆலய வழிபாட்டு மரபின் தொடக்கம் தொடர்பான செவிவழிச் செய்தியாகும். இவ்வழிபாட்டு மரபு யாழ்ப் பாண மன்னர் காலத்திலிருந்து தொடங்கியிருக்க வேண்டும்.

> *"நதிக்குலத்தி னுதித்திடுகா லிங்க மன்னன்*
> *நற்றவத்தாற் பெற்றசுதன் நவகண் டங்கள்*
> *துதிக்குமிளந் தாரிகயி லாயநாத*
> *துரைமீது பஞ்சவன்னத் தூது பாட......"*[18]

என்ற பஞ்சவன்னத் தூதுப் பாடல் கைலாயநாதனின் பரம்பரையைக் குறித்தும், அக்கால சமய சமூக சூழல் குறித்தும் விளக்கியுள்ளமை இளந்தாரி வழிபாட்டு மரபின் பன்முகத் தன்மையைச் சுட்டுவதாய் உள்ளது.

**k. வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில்:** வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கோபாலச் செட்டியாரின் மகனான வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் கி.பி. 1790ம் ஆண்டு கட்டுவிக்கப்பட்டதாகும்.[19] 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பிற சமயங்கள் தமது சமயம்சார் செயற்பாடுகளை ஓரளவுக்கேனும் முன்னெடுக்க முடிந்தது. அக்காலப் பகுதியிலேயே வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலின் தோற்றமும் நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL


கூழங்கைத்தம்பிரானின் வேண்டுகோளின்படியே வைத்திலிங்கச் செட்டியார் வைத்திய நாதனுக்கும் தையல் நாயகிக்கும் கோவில் அமைக்க முடிவுசெய்தார் என்பதைத் தல வரலாறு குறிப்பிடுகின்றது. 1787இல் ஆரம்பமாகி 1791இல் பூர்த்திசெய்யப்பட்டதான இவ்வாலயம் வைத்திலிங்கச் செட்டியாரின் தனிப்பட்ட செல்வாக்கினால் உருப் பெற்றுள்ளது. செட்டியார் ஒல்லாந்தரோடு நெருங்கிய உறவு கொண்டி ருந்தார். வர்த்தக நோக்கங்களை முதன்மைப்படுத்திய ஒல்லாந்தர் வர்த்தகத்தை, தொழிலாகக் கொண்டியங்கிய வைத்திலிங்கச் செட்டியா ரோடு உறவு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

*''தெய்வகம் மாளர்தமைச் செம்மைபெறவழைத்து*
*இவ்விடையிலீசற் கியற்றுமின் - செவ்விபெற*
*உத்தரத்தி னின்றுவரு முண்மைபோ லித்தலத்தில்*
*வித்தகனார் புள்ளிருக்கு வேளூராம் - அத்தலத்தின்*
*வானாருங் கோபுரமு மாமதிலு மாலிங்கம்....''[20]*

எனத் தொடரும் தையல்நாயகி வெண்பா, ஆலய அமைப்பின் தன்மையைச் சுட்டுகிறது.

கொச்சிக்கணேசையர், அனந்த சுப்பையர், கூழங்கைத்தம்பிரான், கணபதி ஐயர் முதலானோர் ஆலயத்தின் பெருமைகளை இலக்கியங் களில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

1. **திருக்கோணேச்சரம்:** பாடல்பெற்ற திருத்தலங்கள் என ஈழத்தில் கூறப் படும் சிவத்தலங்களில் கோணேசர் கோவில் முக்கியமானதாகும். ஒல்லாந்தர் காலத்தில் கோணேசர் கோவிலின் செயற்பாடுகள் மீளவும் செம்மைபெறத் தொடங்கிய சூழலில் அக்காலப் புலவர்கள் கோணேசர் கோவிலைப் போற்றிப் பாடியுள்ளனர். போர்த்துக்கேயரின் ஆலய அழிப்புச் செயற்பாட்டின் பின்னரான காலப்பகுதியில் திருக்கோணேஸ் வரம் தொடர்பான புலவர்களது கருத்துக்கள் கவனிப்பிற்குரியனவாகும்.

*''கோவிலின்னதி காரமன்றென வீசனின்புறு மாதோ டொன்றிய*
*கோணயங்கிரி வாழவே''[21]*

என நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் கோணேஸ்வரர் ஆலயத்தைப் போற்றி யுள்ள அதேவேளை வீரக்கோன் முதலியார் கோணேஸ்வரத்தின் தோற்றம் பற்றிய பின்னணியையும் கோணேசரது தனித் தன்மையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ள பாங்கு அக்காலத்தில் கோணேசர் கோவில் பெற்றிருந்த முக்கியத்துவத்திற்குச் சான்றுகளாகும்.

''தென்கயிலை யென்னத் திருநாமம் பெற்ற மலை''[22]

எனவும்

''அண்டர்நிதம் போற்றுமலை
யாரணங்க ளேத்துமலை''[23]

எனும் வீரக்கோன் முதலியாரின் விபரிப்பும் ஈழத்து சைவத் திருத் தலங்களில் திருக்கோணேஸ்வரம் பிரதான தலமாக அமைந்திருந்த தன்மையைக் காட்டுகின்றது.

**m. வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளியம்மை கோவில்:** வட்டுக் கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி கோவிலானது வயல் சூழ்ந்த மருத நிலப்பகுதியில் அமைந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் வட்டுக்கோட்டை யில் புகழ்பெற்றுத் திகழ்ந்த இவ்வாலயம் மீது கணபதி ஐயர் பத்திரகாளி அம்மை ஊஞ்சலெனும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார். இறைவியின் வேண்டுகோளின்படியே இந்த ஆலயம் உருப்பெற்றதான கர்ண பரம்பரைச் செய்தி தல வரலாற்றில் உண்டு. அம்மன் வழிபாட்டு மரபின் தொடர்ச்சியாக அமைந்துள்ள இவ்வாலயம் தனித்துவமான சிறப் புடையதாகும்.

**n. வரலாற்றுப் பழமை மிக்க ஆலயங்கள்:** ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் எழுதப்பெற்ற யாழ்ப்பாண வைபவ மாலை அக்காலப்பகுதி வரை அறியப்பெற்ற ஆலயங்கள் பலவற்றின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. விஜயன் காலத்தில் தம்பலகாமத்து கோணேஸ்வரம் திருக்கேதீஸ்வரம்[24], சந்திரசேகரேச்சுரன்[25], திருத்தம்பலேசுவரன் திருத்தம்பலேஸ்வரி[26] ஆகியன ஒவ்வொரு பகுதியிலும் செல்வாக்குப் பெற்று விளங்கியதாகக் குறிப்பிடப் படுகிறது. வடக்கில் சட்டநாதேஸ்வரர்[27], தையல்நாயகி அம்மன்[28], சாலை விநாயகர்[29], நல்லூர் கந்தசுவாமி கோவில்[30], வீரமாகாளி கோவில்[31] தொடர்பான குறிப்புகளும் கீழ்த்திசையில் வெயிலுகந்த பிள்ளையார் கோவிலும்[32] சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

o. **இந்தியாவில் உள்ள சைவ ஆலயங்கள்:** இந்தியாவின் பல்வேறு பகுதி களில் விரவியுள்ள சைவ ஆலயங்களின் பெருமைகளை ஈழத்து ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள் போற்றி உரைத்துள்ளன. அத்தகைய தலங்களில் வேதாரணியப் பகுதியிலுள்ள சிவனின் பெருமை கள் இலக்கியங்கள் பலவற்றில் கூறப்பட்டுள்ளன. வரத பண்டிதர் சிவராத்திரி புராணத்தில் திருமறைக்காடு தலத்தின் சூழலையும் ஏனைய தலங்களோடு ஒப்பிடுகையில் அத்தலத்தின் தனித் தன்மையையும் எடுத்துரைத்துள்ளார்.

''அத்தல மாரூர் காசி யம்பலமற் றெவற்றினுக்கு மதிக மென்றே
முத்தலமும் புகழவரு முனிவரனை வருமொழிந்தார்''[11]

எனும் வரதபண்டிதரது கூற்று முக்கியத்துவமுடையதாகும். நல்லூர் சின்னத்தம்பிப் புலவரும் தனது மறைசை அந்தாதியில் ஆலயத்தின் சூழல், வழிபாடு செய்வதனால் ஏற்படும் பலன் முதலானவற்றைத் தனது அனுபவத்தின் மூலம் பதிவுசெய்துள்ளார். இந்தியத் தலங்கள் மீதான ஈழத்தவர்களின் ஈடுபாட்டிற்குச் சான்றாக வேதாரணிய ஈஸ்வரர் குறித்தான போற்றுதல் அமைந்துள்ளது. மாதகல் மயில்வாகனப் புலவர் சிதம்பரத்து சிவனை தனது புலியூர் அந்தாதியில் போற்றியுள்ளமையும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

## 2. சமயப் பரப்புரை

ஈழத்தில் சமய நம்பிக்கையை மக்கள் மத்தியில் செறியச் செய்து சமய உணர்வை வளர்த்தெடுப்பதில் ஒவ்வொரு சமயமும் விழிப்புடன் இயங்கியுள்ளமையைக் காணமுடிகிறது. இவ்வாறு வளர்ச்சிபெற்று வந்த சமயங்களின் வரலாற்று இயங்கியலை அதிகார நிலைப்பட்ட சமயங்களின் வரலாறாக மட்டும் மட்டுப்படுத்திவிட முடியாது.

''பல்வேறு காலகட்டங்களிலும் எவ்வெப்பிரிவு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பது பற்றிய கணிப்பீட்டில் அரசியலில் எப்பிரிவினர் மேலாண்மை உடையவர்களாக விளங்கினர் என்பதை ஆதாரமாகக் கொண்டு அப்பிரிவினரின் ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி விட்டு மறுபிரிவினர் பற்றி ஆழமான கவனம் செலுத்தாது விட்டுள்ளனர். இதனால் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கமும் ஒல்லாந்தர் காலத்தில் இறப்பிறமாதுப் பிரிவுக்கும் ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைக்கும் அமெரிக்க மிஷனரிமாருக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்''[33]

என அரசியல், சமயங்களில் வகித்த செல்வாக்கையும் அதனைத் தாண்டிய நோக்கின் அவசியத்தையும் கா.சிவத்தம்பி விளக்கியுள்ளார்.

காலத்துக்குக்காலம் அரசியலில் ஏற்படும் மாற்றங்களை மையமாகக் கொண்டு தமது இருப்பைப் பேணிக்கொள்வதிலும் முன்னகர்த்துவதிலும் சமயங்கள் புதிய வழிமுறைகளைத் தெரிவுசெய்து தொழிற்பட்டுள்ளன. இவ்வகையில் அதிகார மையத்துக்கு மத்தியில் மதங்களின் செயற்பாடு தொடர்பான போக்கினை ஒல்லாந்தர் காலச் சூழலை அடிப்படையாக வைத்து அக்கால இலக்கியங்களின் துணைக்கொண்டு நோக்க முடியும்.

**i. சைவ சமயமும் அதன் செயற்பாடுகளும்**

சமயச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சமயம் சார் நடைமுறைகளை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லல், நம்பிக்கையூட்டல் முதலான விடயங்கள் பிரதானமானவையாக அமைந்திருந்தன. ஈழத்தில் நிலை பெற்றிருந்த சைவ வழிபாட்டு மரபானது உறுதிமிக்கதாய் இருந்தது. யாழ்ப்பாண மன்னர் காலம் வரை அரச ஆதரவு கிடைக்கப்பெற்றதால் வளர்ச்சிபெற்றுவந்த சைவ சமயம் போர்த்துக்கேயரின் காலத்தில் பெரும் நெருக் கடிகளை எதிர்கொண்டது. தமிழர் பகுதிகளில் உருப்பெற்றிருந்த சைவ வழிபாட்டு நிறுவனங்கள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்ட தோடு சமய நடைமுறைகளைப் பேணுவதற்கும் முன்னெடுப்பதற்குமான அனைத்து சுதந்திரங்களும் அக்காலத்தில் முடக்கப்பட்டிருந்தன. இந் நிலையில் ஈழத்தில் பிரவேசித்த ஒல்லாந்தரது ஆளுகையானது போர்த்துக்கேயரோடு ஒப்பிடுகையில் ஓரளவு நெகிழ்வுடையதாகவும் சைவசமயச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏது நிலையைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. இதற்கு அக்காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களே சான்றுகளாக உள்ளன.

சைவசமயம் சார்ந்த இலக்கியங்களைப் படைத்தோர் சமூகச் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்துள்ளனர்.இவர்கள் பிற சமயங்கள் மீதான வெளிப் படையான விமர்சனங்களைத் தவிர்த்தும் சைவ சமய நடைமுறைகளைப் பெரிதும் முன்னிறுத்தியும் இயங்கியுள்ளமை புலனாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a. **தலங்களின் பங்கு:** பிரதேச ரீதியாக சமயத் தலங்களுக்கு உயர்ந்த மதிப்பீட்டை ஏற்படுத்தச் செய்வதன் மூலம் சமய ரீதியில் மக்களை ஒருங்கிணைத்து பிரதேச உணர்வின் ஊடாக சமய நம்பிக்கையை ஊட்டு வதைப் புலவர்கள் பிரதான உபாயமாகக் கைக்கொண்டுள்ளனர். தமிழர்கள் செறிந்துவாழ்ந்த பகுதிகளில் உள்ள ஆலயங்கள் இவ் வகையில் புலவர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

*''அருள் அத்தன் நந்தவனம் சூழுங் கல்வளை அண்ணல் அடியார்*
*உள்ளத்து அனந்தரம் வாழ்வான் என்றால் வினை அஞ்சிடிமே...''*[34]

என நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் கல்வளை விநாயகரை ஏற்றி உரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். புலவர்கள் ஈழத்தலங்களை மட்டுமல்லாது இந்தியத் தலங்களையும் போற்றியுள்ளனர்.

*''ஏற்றுக் கொடியர் திருமறைக் கானத்த ரேழுலகப்*
*பேற்றுக் கொடியத்தர் திக்காடை நாதரைப் பேணிக் கொண்டே...''*[35]

என நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் மறைசை அந்தாதியில் வாழ்த்தி யுள்ளார். சின்னத்தப்பிப் புலவரைப் போலவே வரத பண்டிதரும் மாதகல் மயில்வாகனப் புலவரும் ஈழ இந்தியத் தலங்கள் குறித்துப்பாடி சைவ வழிபாட்டு மரபைத் தெளிவுற வெளிப்படுத்தியுள்ளனர்.

b. **பலகடவுளர் வணக்கமுறை:** சைவ சமயத்தில் பிரதான கடவுளாகச் சிவபெருமான் சித்திரிக்கப்பட்டுள்ள போதும் பிள்ளையார், முருகன் முதல் கண்ணகி ஈறாக பல்வேறான தெய்வங்களும் அக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மக்களின் மனவிருப்புக்களுக்கும் சமூக அடுக்கமைவுகளுக்கும் ஏற்ப வழிபடும் கடவுளரும் வேறுபட்டுள்ளனர். மேலும் அக்காலத்தில் ஆலயங்கள் ஒவ்வொன்றையும் இணைத்துப் போற்றும் மரபு ஊக்குவிக்கப்பட்டுள்ளமையையும் இனங்காண முடிகிறது. பிரதேச ரீதியாக அருகருகே இருந்த ஆலயங்கள் இவ்வாறு இணைத்துக் கூறப்பட்டுள்ளதோடு பாடல்பெற்ற திருத்தலங்களும் யாத்திரைக்குரிய தலங்களும் தொடர்புபடுத்திப் போற்றப்பட்டுள்ளன. சைவ சமயத்தைப் பின்பற்றும் மக்கள் மத்தியில் சமூக உறவைப் பலப் படுத்தும் முயற்சியாக இதனை நோக்க முடியும். வெருகல் சித்திர வேலாயுதர் காதல் இலக்கியத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நீருலவு வாவிதிகழ் நீலாப்பளை உறையும்
பாருலவு பத்தினி..."*[36]

என நீலாப்பளை கண்ணகி அம்மன் கோவில் குறிப்பிடப்பட்டுள்ளமையும் பறாளை விநாயகர் பள்ளில் பொன்னாலை கிருஸ்ணன் போற்றப் பட்டுள்ளமையும் கவனிப்பிற்குரிய விடயங்களாகும்.

c. **விரத நடைமுறை:** மக்கள் மத்தியில் சமயத்தின் மீதான நம்பிக்கையை ஊட்டுவதற்கு விரதங்கள் பிரதானமானவையாக வலியுறுத்தப்பட்டுள்ளன. சமய நடைமுறைகளைத் தொடர்வதில் போர்த்துக்கேயர் காலத்தில் இருந்த அழுத்தங்களின் விளைவாகச் சமய அனுட்டானங்கள் குறித்த விளக்கம் சமூக மட்டத்தில் மறக்கப்பட்டிருந்த சூழலில் மக்களுக்கான விழிப்புணர்வை ஊட்டும் வகையில் சைவசமயம் சார்ந்து வெளிப்பட்ட ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் விரதங்களை வலியுறுத்திக் கூறியுள்ளன. விரதங்களை அனுட்டிக்கும் முறை, விரதத்தால் ஏற்படும் நன்மைகள் முதலானவற்றை நேரடியாகவும் தலங்களின் சிறப்புகள் ஊடாகவும் கதைகள் வாயிலாகவும் புலவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

*"ஆதியிலம் பிகைநோற்ற விரதமிதன் பெருமையெவ ரளக்க வல்லார்
சாதிமுறை நெறிதவறுஞ் சண்டாளர் நோற்றிடினுந் தக்கோராகி
மோதிவருங் கடல்புடைஞ் ழுலகில்விரும் பியபோகமுற்றிப் பின்னர்ப்
பூதிதரும் பெரும்பாவக் கடல் கடந்து முக்தி நெறி பொருந்து வாரால்"*[37]

எனும் சிவராத்திரிப் புராணச் செய்யுள் கதைகளின் ஊடாக விரதத்தை மேற்கொள்ளத் தூண்டியுள்ளமைக்கு ஆதாரமாகும். விரதத்தை அனுட்டிக்கும் போது கிடைக்கும் நன்மைகள் மிகுதியானவை என்பதைப் புலவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். வடமொழியில் கூறப்பட்ட கருத்துக் களைத் தழுவியதாக விரத நூல்கள் எழுந்துள்ள போதும் மக்களிடம் தெளிவான புரிதலை ஏற்படுத்தும் நோக்கில் நேரடியாகவும் எளிமை யாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

*"ஐயமின்றிப் பாரணமிப் படியே
பன்மூன் றாந்திதியி னாற்றினசு வமேத நூறு
செய்தபல னுண்டாகும்"*[38]

என்ற சிவராத்திரி புராணப் பாடலடி அன்று வலியுறுத்தப்பட்ட விரதத்தின் தன்மையைச் சுட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் உயிர்கள் மீது இரக்கம் உடையவன், உயிர்களின் நிலையறிந்து அருள் புரிபவன் என்பதையும் சைவ பக்தி இலக்கியங்கள் பல சுட்டிக்காட்டியுள்ளன.

*''கல்லுள் பற்றல் அத்தேரைக்குமே*
*படி எப்படி அளந்தான்''*[39]

என நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் குறிப்பிட்டுள்ளமை இங்கு முக்கியத்துவமுடையதாகும்.

d. **பண்பாட்டு நெருக்கம்:** தமிழ்ப் பண்பாட்டு மரபோடு சைவ சமயத்தை இணைத்து நோக்கும் மரபையும் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்களில் காணலாம்.

*''பொதிய அறக் கும்பர் உந்து தமிழ்*
*மறைக்காட''*[40]

எனும் மறைசை அந்தாதிச் செய்யுள் தமிழோடு இணைத்து இறைவனைப் போற்றுகிறது.

e. **மறுமை பற்றிய நோக்கு:** சைவ சமயத்தில் மறுமை பற்றிய நம்பிக்கை அழுத்தமான வகையில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வுலகில் நெறிப்படி வாழ்ந்து இறைவனை வழிபட்ட ஒருவரே இறப்பின் பின் நிம்மதி பெற முடியும், அவ்வாறு அல்லாதவர் இறுதிக் காலத்தில் நடுங்கவேண்டி வரும் என்பதைச் சைவ இலக்கியங்கள் எச்சரிக்கையாகச் சுட்டிக் காட்டியுள்ளன.

*''முத்திரு மாதங்க வார்முலை பாகர் முதுமறைசை*
*மெய்த்திரு மாதங்க மாற்கரி யானை விளம்புகிலீர்*
*பத்திரு மாதங் கருவயி னூறிய பாழுடம்பை*
*வைத்திரு மாதங்க தென்றிசைக் கூற்று வருங்கடைக்கே''*[41]

எனும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

f. **நிலையாமை:** மறைசை அந்தாதிச் செய்யுளானது இறைவழிபாடு புரியாத உடம்பைப் ''பாழுடம்பு''[42] எனச் சுட்டுகிறதோடு இறுதிக் காலத்தில் யமன் வரும்போது வருந்த வேண்டும் என்பதையும் குறிப் பிடுகிறது. வாழ்க்கையானது நிலையற்றது என்பதை வலியுறுத்தியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கள் யமன் பற்றிய அச்சத்தை வெளிப்படுத்துவதன் மூலம் வாழ்க்கையை இறைவன்பால் வழிபடுத்துவதற்கு முயன்றுள்ளனர்.

*''தென்காலன் என் ஆவியைச் சிங்க முருக்குவன்''*[43]

எனவும்

*''கவி நாய் அகன்றிடு வாய்க்கு இரைப்பண்டம் கறை இரத்தம்*
*கவின் ஆய கன்மக் குடம்பை''*[44]

என்றும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பாடியுள்ளார்.

அதேவேளை

*''பகர்தருமே காதசியில் யாவரேனும் பசிபொறுத்தே யுபவாசம்*
*பண்ணி டாதோர்*
*மிகவிருள்சே ரிரௌரவமா நரகிற் சேர்வர்''*[45]

என இவ்விரதத்தைப் புரியாதோர் நரகை அடைவர் என வரதபண்டிதர் குறிப்பிட்டுள்ளமையும் கவனிப்பிற்குரியனவாகும்.

**ஐ. அற்புதங்கள்:** செயற்கரிய செயல்கள் தொடர்பான எடுத்துரைப்புகளும் பக்தி வெளிப்பாட்டில் பிரதான விடயமாகும். பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் நாயன் மார்களும் ஆழ்வார்களும் அற்புதங்களின் ஊடாக பக்தி உணர்வை வெளிப்படுத்தினர். அம்மரபு ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்திலும் நிகழ்ந்துள்ளது என்பதற்கு இணுவில் சின்னத்தம்பிப் புலவர் பாடியுள்ள பாடல்களில் சான்றுகள் உண்டு.

*''துப்பூட்டு மென்றனது துன்னார்தாம் சிறைப்படுத்தும்*
*அப்பூட்டுந் தீயவர்தம் அரியசிறை வீட்டிருக்கும்*
*இப்பூட்டும் நிர்ப்பூட்டா யென்சிறையை நீக்கியருள்*
*செப்பூட்டுந் திருப்பொற்றாட் சிவகாம சுந்தரியே''*[46]

என்றவுடன் சிறைக்கதவு திறந்ததாக இப்பாடல் விபரிக்கிறது.

ஒருபுறம் சமயம் சார்ந்த விடயங்களை நேரடியாக வெளிப்படுத்திய புலவர்கள் சமூகத்தில் நிலவிய வைத்திய சோதிட செயற்பாடுகள் ஊடாகவும் சைவ சமயக் கருத்துக்களை இணைத்துக் கூறியுள்ளனர். ஆயுர்வேதம், சித்தவைத்தியம் முதலானவற்றில் சைவசமயப் பின்னணி உள்ளவர்களே முக்கியத்துவம் மிக்கவராய்த் திகழ்ந்ததனாலும் அவர்களே சுதேசியப் புலத்தில் செல்வாக்கு உடையோராகவும் இருந்தமையினாலும் அவர்களின் கருத்துக்களுக்கு சமூக மதிப்பு இருந்திருக்கும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் காலத்தில் செல்வாக்கு மிக்கவராக விளங்கிய வரதபண்டிதர் அமுதாகரம் என்ற விஷக்கடி வைத்திய நூலில்

''கார்த்திகேயற் றொழுமடியார் வினைபோற் கெடுமே கடுவிடமே''[47]

என விஷ முறிவின் தன்மையைக் குறிப்பிடுவதற்கு முருகனைத் தொழும் அடியாரது வினை நீங்குவதை உவமானமாகச் சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு கவனிப்பிற்குரியதாகும்.

h. **வழிபாட்டு மரபில் சுதந்திரம்:** சைவசமயம் சார் வழிபாட்டு மரபானது நெகிழ்வுப் போக்குடையதாக இருந்துள்ளது. ஆகம முறையமைந்த கிரியை நெறிகள் பற்றிய கருத்துக்கள் சைவ சமயத்தில் முன்வைக்கப் பட்டுள்ள அதேவேளை சிறுதெய்வ வழிபாட்டு மரபில் பலியிடல், படையல் முதலான விடயங்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதனடிப்படையில் வழிபடுவோரது விருப்பம் சார்ந்தும் அவர் சார்ந்த சமூகப் பின்னணியை மையமாகக் கொண்டும் வழிபாட்டு மரபானது இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

i. **இலக்கிய வெளிப்பாடுகள்:** சமயக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குப் புலமைத் திறனை மையப்படுத்தி இலக்கிய வெளிப்பாட்டு முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. புராணம், அந்தாதி, தூது முதலான வடிவங்கள் ஊடாகவும் சமயக் கருத்துக்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அகப்பொருள் மரபை பக்தி இலக்கியங்களூடு வெளிப் படுத்திச் சென்றமையும், சாதாரண மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் நாட்டார் இலக்கிய வடிவங்கள் மூலம் சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கனவாகும்.

### ii. கிறிஸ்தவ சமயம்

''தமது கருத்துக்களைப் பரப்பவும் பக்தியுணர்வைப் புலப்படுத்தவும் சமயிகள் இலக்கியத்தைச் சிறப்பானதோர் ஊடகமாகக் கொள்வது வழக்காறாகும். புதிய பண்பாட்டுச் சூழலிலே தமது கருத்துக்களைப் பதிக்க விரும்பிய கிறிஸ்தவம் சமூகத்தின் சகல தளங்களையும் உள்வாங்க வேண்டிய நிலைக்கு உட்பட்டது''[48] என்ற சிவலிங்கராஜாவின் கருத்து தமிழில் கிறிஸ்தவத்தின் பரவல் பற்றிய பதிவைக் காட்டுகிறது. ஈழத்தில் போர்த்துக்கேயரின் வருகையோடு தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பகுதி களில் கிறிஸ்தவ மதத்தின் பரவலானது அதிகார வீச்சுடன் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயருக்குப் பின்னர் ஒல்லாந்தர் ஆட்சியில் கிறிஸ்தவத்தின் விரிவாக்கம் முரண்பாடுகளுக்குள் வளர்ந்தது. ஒல்லாந்தர் கத்தோலிக்க மதத்திலிருந்து பிரிந்த புரட்டஸ்தாந்துப் பிரிவினர் ஆகையால் அவர்கள் தமது அதிகாரத்தில் கத்தோலிக்கம் உள்ளிட்ட ஏனைய மதங்களைக் கட்டுப்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டுள்ளனர்.

மக்கள் மத்தியில் சமயத்தைப் பரப்புவதற்கும் ஏலவே சமயத்தைத் தழுவிக்கொண்ட மக்களின் நலன்களைப் பேணுவதிலும் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயங்கள் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளன. வைதீகப் பண்பாட்டுப் புலத்தில் மரபு ரீதியான நீட்சியைக் கொண்ட சைவ சமயத்தை எதிர்கொள்ள வேண்டிய தேவை கிறிஸ்தவப் பிரிவுகளுக்கு இருந்துள்ளது. அதேவேளை கத்தோலிக்கமும் புரட்டஸ்தாந்தும் தமக்குரிய இருப்பைத் தக்கவைக்கவும் வளர்ப்பதற்கும் உரிய வகையில் நகர்வுகளை முன்னெடுத்தமை அக்காலத்தில் சமயங்கள் நுண் அரசியல் சார்ந்து தொழிற்பட்டுள்ளமையைக் காட்டுகிறது.

a. **புரட்டஸ்தாந்து சமயமும் சமூகத் தொடர்புகளும்:** அதிகாரநிலையில் இருந்த புரட்டஸ்தாந்து சமயமானது சுதேசியப் புலத்தில் தனது இருப்பினை உறுதிப்படுத்துவதற்கும் மதப் பரப்புகை மூலம் மக்களை தம்வசப்படுத்துவதற்கும் தனித்துவமான முன்னெடுப்புக்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளது. இவ்வகையில் கல்வியைப் பிரதான மார்க்கமாகக் கொண்டு இயங்கியுள்ளமையைக் காணலாம். ஏலவே போர்த்துக்கேயரால் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டிருந்த ஆலயங்களைத் தம்வசப்படுத்தி ஆலயத்தோடு பாடசாலையையும் நிறுவி, கல்வியூடாக மதப்பரப்புகை முன்னெடுக்கப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது. ஒல்லாந்தர் காலத்தில் பாதிரியாராக இருந்த போல்டியஸ் தனது பயண அனுபவத்தில் தமிழர் பகுதிகளில் விரவியிருந்த கிறிஸ்தவ ஆலயங்களையும் பாடசாலைகளையும் குறித்துத் தெளிவான குறிப்புகளைத் தந்துள்ளார்.

> "The Church of Mayletti lies full one and a quarter hours march from the principal church Telipole, here there is a very respectable school comprising 750 children far advanced in knowledge"[49]

எனும் தரவு மயிலிட்டியில் அமைந்த ஆலயத்தையும் அதனோடு இயங்கிய பாடசாலையைக் குறித்தும் விபரிக்கிறது. ஆலயங்கள், கல்வி நிலையங்கள் ஊடாகப் புரட்டஸ்தாந்து சமயத்தைப் போதிப்பதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி நடைபெற்றுள்ளது. வாசிப்பு, எழுத்து, கிறிஸ்தவமத வினா விடை, பத்துக் கட்டளைகள், விசுவாசிகளின் விதிகள், ஆண்டவனின் செபங்கள் முதலான விடயங்கள் பற்றிய புரிதலை மாணவர் மனதில் பதிக்கும் வண்ணமாக ஆரம்ப கல்விச் செயற்பாடுகள் நடந்துள்ளன. விடுமுறை நாட்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவும், கட்டாயமாகக் கல்வி நிலையத்திற்கு செல்லவேண்டும் என்ற நடைமுறையும் இருந்தன. கி.பி. 1745ஆம் ஆண்டளவில் அபராதம் மூலம் சேர்ந்த பணம் மிக அளவுக்கு மிஞ்சி அதிகரித்து விட்டமையால் வத்தாவில் (பத்தேவியாவில்) இருந்த மகா தேசாதிபதியும், ஆட்சிச் சபையும் அந்த அபராதம் விதிக்கும் முறைமை வெட்கப்படக்கூடிய கொடிய முறை என்று அதனைக் கண்டித்ததோடு மேல் உத்தரவு வரும்வரையிலும் அதனைத் தற்காலிக மாக நிறுத்தி வைக்கும் படியும் உத்தரவிட்டனர்''[50]. எல்லாவகையிலும் வணிகத்தை முதன்மைப்படுத்திய ஒல்லாந்தர் மதப் பரப்புகையை திட்டமிட்ட வகையில் முன்னெடுத்துள்ளனர்.

சுதேசியப் புலத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் இலக்கிய ரீதியான பங்களிப்பு அவசியம் என உணரப்பட்ட புறநிலையிலேயே டி மெல்லோப் பாதிரியாரின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன. கிறிஸ்தவம் பற்றிய சரியான புரிதலை ஏற்படுத்துவதற்குப் புனித நூல்கள் தமிழ்மொழியில் அமைதல் சிறப்புடையதாகும் என்ற கண்ணோட்டம் புரட்டஸ்தாந்தவரிடம் இருந்துள்ளது.

> ''பிலிப் டி மெல்லோ ஒரு சுதேசி. இவர் 1723இல் பிறந்தவர். இவரது தந்தை பெயர் சீமோன் டீ மெல்லோ. அக்காலத்திலிருந்த வேதசாஸ்திரியங் களுக்குப் பாஷை அறிந்தவர்களுக்கும் முன்னணியில் நின்றாரென்றும் இவரை Falk என்னும் தேசாதிபதி மெல்லோரபி என்றழைத்தாரென்றும் காசிச்செட்டி சொல்லுகிறார். இவர் கொழும்பிலிருந்த இறையியற் கழகத்திற் பயின்று எபிரேய, கிரேக்க லத்தின் ஒல்லாந்த போர்த்துக்கேய தமிழ்ப் பாஷைகளையும் வேத சாஸ்திரத்தையுங் கற்று அரங்கேறினார்.''[51]

பிலிப் மெல்லோவைப் பற்றி எழுதும் காசிச்செட்டி 1750இல் புதிய ஏற்பாடு முழுவதையும் டீ மெல்லோ முடித்துவிட்டாரென்றும், அம் மொழிபெயர்ப்பைக் குறித்து அதிக விவாதம் ஏற்பட்டபடியால் மகா தேசாதிபதியின் தலைநகரத்துக்கு (ஜாக்காட்டா) அனுப்பப்பட்டு அங்கே அது அங்கீகரிக்கப்பட்டதென்றும் அதனாலேயே புதிய ஏற்பாடு வெளி வரக் கால தாமதமாயிற்று என்றும் கூறுகிறார்.[52]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லோ பாதிரியார் 1753இல் யாழ்ப்பாணத்து புறப்போனந்து (உதவிக்குரு)வாக நியமிக்கபட்டார்.[53] சுதேசியான இவருக்கு ஒல்லாந்தர் வழங்கிய அங்கீகாரமானது அவர் சுதேச மக்கள் மத்தியில் மதப்பணியை வீச்சுடன் செய்துவந்தமையால் ஏற்பட்டதெனலாம்.

மெல்லோவின் புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதி மக்களைக் கிறிஸ்தவ மதம் நோக்கித் திருப்புவது தொடர்பான விடயத்தை எளிமையான வகையில் விளக்குகிறது.

> ''ஆகிலும் இந்த பொத்தகம் இந்தப் பட்டணத்திலேயே பிரவேகிற பிறகாரமாக உனது பாஷையிலே நோகப் பாவிக்கப்படுகிறதற்கு இயன்ற தாயிருக்கும் படிக்கு அநேகங் காரணங்களுக்காகப் பாராட்டி கொடுக்கப் பட வேண்டியதாயிருக்குது. அதேனென்றாற் நீங்கள் அதிசயங்களின் கட்டுக் கதைகளையும் திருச்சபைக் கட்டளைகளென்று சொல்லப் படுகிறதுகளையும் விட்டு இந்தத் திவ்விய வெளிப்படுத்தலினுடைய சுபாவமான இலக்கு இந்த போதகத்தினால் தானே புத்தி சொல்லப் படுகிறீர்கள் என்றதையும் நீங்கள் அது அறிவிக்கப்படுகிறதைக் கேட்டு கொள்ளுகிறதினாலேயே ஒரு புதிய படிப்பினையை யொத்துக்கொள்ளு கிறதல்ல. ஆனால் நித்திய சுவிஷேத்தை யுங்களுடைய ஈடேற்றத்துக்கு விசுவாசித்துக் கொள்ளுகிறீர்கள் என்றதையும் உங்களுக்குச் சொல்ல வேண்டியதுமல்லாமல் இவ்விடத்திலே நாங்கள் உங்கள் விசாரிப்புக்கு மட்டுக்கட்டிக் கொடுக்கிறதாவது இந்த சுகிர்தமான பொருத்தம் இப்போ பத்தொன்பது வருஷங்களுக்கு முன்னதானே எங்கள் உத்தம பிறபுத்துவ மானவர்களுடைய தயவுள்ள பராமரிப்பினாலே யுன்னுடைய திருச் சபைக்கு அச்சுப்பதிப்பிக்கப்பட்டு கையளிக்கப்படவுந்துடங்கின தென்பதுதான்''[54]

எனும் விளக்கம் ஏனைய சமயத்தவர் கட்டுக்கதைகளுக்குள்ளும், திருச் சபைக் கட்டளைகளுக்குள்ளும் கட்டுப்பட்டிருப்பதாகவும் அவர்களை விடுவிப்பதற்குப் புதிய ஏற்பாடு உதவியாய் அமையும் என்பதும் புரட்டஸ்தாந்து சமயத்தவரின் நோக்காக இருந்துள்ளது. ஒல்லாந்தர் ஏனைய சமயத்தவர்களின் விழாக்களுக்குப் பல்வேறு தடைகளை விதித்தனர் எனினும் தமது சமயத்தை வளர்ப்பதற்கு பரந்த அளவான திட்டங்களை முன்னெடுத்தனர் எனக் கொள்ள முடியாது.

ஈழத்தமிழர் மத்தியில் மெல்லோவின் செயற்பாடே சற்று வீச்சுடன் அமைந்திருந்தது. அனைவருக்கும் எளிமையான வகையில் சமயச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளை வெளிப்படுத்தல் இவரது மொழிநடையின் தனிப்பண்பாகும். பேச்சுவழக்குச் சொற்களைக் கையாண்டு தனது கருத்துக்களை மெல்லோ எடுத்துரைத்துள்ளார்.

> ''அது அடாததை செய்குதில்லை. அது தன்னுடையதுகளைத் தேடுகுதில்லை. அது வெகுளுதில்லை. அது பொல்லாப்பை நினைக்குதில்லை''[55]

என்ற புதிய ஏற்பாட்டுப் பகுதி இங்கு கவனிப்பிற்குரியது.

மேலைத்தேய ஸ்வரவரிசையின் ஊடாகத் தனது கல்விப் புலமையைப் பயன்படுத்தி மெல்லோ பாதிரியார் எழுதிய ''இராசா தீர்க்கதரிசியாகிய தாவீதினுடைய சில சங்கீதங்களும் வேறுசில பாட்டுக்களும்'' என்ற நூல் இசை வடிவத்தின் ஊடாகப் புரட்டஸ்தாந்து மதக் கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

> ''என்பாரே என்பானே யென்னை கைவிடுவானென....''[56]

எனத் தொடரும் பாடல் இங்கு கவனிப்பிற்குரியது.

### iii. கத்தோலிக்கம்

கத்தோலிக்க மதமானது போர்த்துக்கேயரின் வருகையோடு ஈழத்துப் புலத்தில் பரவத் தொடங்கியது. சைவசமயம் தமிழர் பகுதிகளில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த காலத்தில் நிறுவனமயப்பட்ட கத்தோலிக்க சமயத்தின் பரவலானது அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கூறுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்திய புறநிலையில், ஒல்லாந்தரின் அதிகாரப் பிரவேசம் புரட்டஸ்தாந்து சமயத்தை மைய மாகக் கொண்டு அமைந்தமை ஈழத்தில் சமயம் சார் முரண்பாடுகள் கூர்மையடைவதற்கு வழிவகுத்தது.

> ''போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் கிறிஸ்தவம் இருந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகள் முன்வைக்கப்பட்டு இதன் செயல்நிலைச் சாத்தியத்திற்கான காரணிகள் ஆராயப்படுகின்றன. தோமாவின் இந்தியா வருகை, இலங்கையில் இதன் பிரதிபலிப்பு, கொஸ்மஸ் இன்டிகொப் பிலிஸ்ரஸ் எழுதிய ஆவணச் சான்று, சிகிரியின் கதை என்னும் இலக்கியத்தில் காணப்படும் குறிப்புக்கள், அனுராதபுரத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சின்னங்கள், யாழ்ப்பாணத்தில் அகழப்பட்ட வெள்ளி நாணயம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது''[57]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் கா.குகபாலனின் கருத்தினூடு சுதேசியப் புலத்தில் கிறிஸ்தவம் பற்றிய புரிதல் ஏலவே இருந்திருக்கக்கூடும் என்று கொண்டாலும் கத்தோலிக்க மதம் வைதீகப் புலத்தில் எவ்வாறு நிலைபெற்றிருந்தது என்பதை ஆய்வுசெய்தல் பிரதானமாகும். போர்த்துக்கேயர் ஆட்சியில் தமிழருக்குக் கணிசமான பாதிப்புகள் ஏற்பட்டன. அதேவேளை ஒல்லாந்தர் சைவ சமயத்தை நசுக்கியதைக் காட்டிலும் கத்தோலிக்கத்தை ஒடுக்கு வதிலேயே அதிகளவான ஆர்வம் காட்டினர்.

1658 - 1659இல் ஒல்லாந்தரால் இயற்றப்பட்ட பிரகடனங்கள் மூலம் கத்தோலிக்க சமயம் அனுட்டிக்கப்படுவதற்கு தடைவிதிக்கப் பட்டது. கத்தோலிக்க குருமார்கள் கரையோர மாகாணங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். கத்தோலிக்க குருமார்களை மறைத்து வைப்பவர் களுக்கும் புகலிடம் கொடுப்பவர்களுக்கும் மரணதண்டனை விதிக்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.[58] இத்தகைய புறநிலையிலேயே கத்தோலிக்க மதத்தினது செயற்பாடு ஈழத்தில் முன்னெடுக்கப்பட்டது என்பது பிரதான விடயமாகும்.

போர்த்துக்கேயர் காலத்தில் அதிகாரவடிவில் பரவத் தொடங்கிய கத்தோலிக்க மதம் ஒல்லாந்தரது வருகையால் அதிகாரக் கைமாறல் நிகழ்ந்த போது கருத்தியல் சார் அரசியலை முதன்மைப்படுத்தி சமூகக் களத்தில் நெருக்கடிகள் பலவற்றை எதிர்கொண்டு நிலைபெறத் தொடங் கியது. கபிரியேல் பச்சேக்குவின் ''யோசேவாஸ் முனிவர் சரித்திரம்'' எனும் உரைநடை இலக்கியம் ஈழத்தின் ஆரம்பகாலப் பகுதியில் கத்தோலிக்க சமயத்தின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை விபரித்துள்ளது. ஒல்லாந்த அதிகாரத்திற்குப் புலப்படாத வகையில் மதச் செயற்பாடுகளை நகர்த்திச் சென்றமை கத்தோலிக்க சமயத்தைத் தழுவியோருக்கு நம்பிக்கை தருவதாக இருந்துள்ளது.

> ''வருஷந் தோறும் மட்டக்களப்புத்துவக்கம் மாத்தறை மட்டுஞ் சுற்றி வளைத்து கிறிஸ்தவர்கள் வசிக்கிற சகல ஊர், கிராமஞ் சேரிகளுக்கும் நடந்து சமஸ்தரையும் பராமரித்து அந்தந்த ஸ்தலத்திற் தேவையாயிருக்கிற மட்டும் தாமதப்படுவார். யாதொரு ஸ்தலத்தில் ஒரேயொரு கிறிஸ்தவன் மட்டும் இருக்கிறதானாலும் போகாதிரார். யாதொரு சேரியில் வேறொரு குருவானவர் வசிக்கிற படியாற் தாம் விலகவும் மாட்டார். ஆனால் வேகு பேராற்படுகிற வருத்தத்தை ஒருவனுக்காகவும் பட்டு மற்றக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களுடைய பிரயாசத்தைத் தம்மோடு பகிர்ந்து சகல குருக்களையுங் கிறிஸ்தவர்களையும் ஆதரிப்பார்''[59]

என மக்களுடன் நெருங்கிப் பழகும் இயல்பு நிறைந்தவராக யோசேவாஸ் இருந்துள்ளமை கத்தோலிக்க மதத்தின் நிலைபேற்றிற்கு துணை நின்றுள்ளது.

**a. செயற்கரிய செயல்கள்:** மதத்தின் ஆற்றலை நிறுவுவதற்குக் கத்தோலிக்க பாதிரிமார் செயற்கரிய செயல்களைச் செய்ததாகக் கத்தோலிக்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. யோசேவாஸ், கொன்சால்வெஸ் முதலானோர் இவ்வாறு அற்புதங்களைப் புரிந்தவர்களாக இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

''வன்னியில் ஒரு அஞ்ஞானிக்கு நாகபாம்பு கடித்து அவன் ஊரிலே வழக்கமான குட்டுப்பத்திதோடு கூடிய மருந்தெல்லாம் செய்வித்தும் தப்பமாட்டாமற் கிடந்தான்''[60] என்றும் அவனை கொன்சால்வெஸ்ஸிடம் அழைத்துவந்து அவர் பாதத்தடியில் வைத்து ''அவனைப் பிழைக்கச் செய்தால் அவனும் அவனது குடும்பமும் சத்திய வேதத்திற் சேர ஆயத்தமாயிருப்பதாக வாக்குக் கொடுத்தார்கள். அவர் அவனுக்காக வெகு செபம் பண்ணி ஆசிநீர் தெளிக்கவே இறந்தவன் போல கிடந்தவன் முழுவதும் குணப்பட்டு எழும்பினான்''[61] என சாங்கோபாங்க சுவாமிகள் சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

**b. மதமாற்றச் செயற்பாடுகள்:** கத்தோலிக்கருக்குப் பின்வந்த புரட்டஸ் தாந்திகள் தனிமனிதர்களை மத மாற்றம் செய்வதிலே அதிக ஈடுபாடு காட்டினர். ஆனால் முன்வந்த கத்தோலிக்கரோ முழுக் குடும்பங்களையே தமது மத மாற்றத்திற்கான தெரிவாகக் கொண்டனர். ''குழுமம்'' பிரதேச அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் அமைந்தது.[62]

எனச் சிவத்தம்பி கத்தோலிக்க சமயத்தின் மதமாற்றத்திற்கான பின்னணியைக் குறிப்பிட்டுள்ளார். அரசியல் ரீதியாக இருந்த ஆதரவும், ஏலவே சைவசமயக் கட்டமைவில் நிலவிய வேறுபாடுகளின் விளைவு களும், தம்மை மைய நிலையில் முன்கொண்டு செல்வதற்கு மதமாற்றம் ஒரு வழியாக அமையும் என்ற ஒருபகுதி மக்களின் நம்பிக்கையும், மாற்றுக் கருத்துக்களுக்கான வரவேற்பும் எனப் பல காரணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க சமயம் ஈழத்தில் தமிழர் மத்தியில் உறுதி பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தன.

சைவ சமயத்தின் வழிபாட்டு மையங்களாகத் திகழ்ந்த ஆலயங்கள் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்ட புறநிலையில் சைவ சமயச் செயற்பாடுகளை முன்நகர்த்துவதில் நெருக்கடிகள் தோன்றியிருக்கும் என்பது யதார்த்தமானதே. இச்சூழலிலேயே கத்தோலிக்க சமயம் தன்னை நிலைப்படுத்திக்கொண்டதெனலாம். ஒல்லாந்தர் காலப்பகுதியில் கத்தோலிக்க மதச்செயற்பாட்டை முன்னெடுத்தோர் மதத்தை மேலும் பரப்புதல் என்பதைக் காட்டிலும் ஏலவே கத்தோலிக்க மதத்தைத் தழுவி யோரைத் தொடர்ந்தும் அம்மதத்தைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்தல், மதத்தைச் சார்ந்தோரை ஒருங்கிணைத்தல், சமயம்சார் நியமங்களை கொண்டுசெல்லல் போன்ற விடயங்களைப் பிரதானமாகக் கொண்டு இயங்கினர்.

போர்த்துக்கேயர் சுதேசியப் பண்பாட்டுத் தளத்தைத் தக்கபடி கணித்துச் செயற்பட்டுள்ளனர். இங்கு கத்தோலிக்கரின் செயற்பாடு தமிழரின் சமூக வேறுபாடுகளை மையப்படுத்தி ஒடுக்கப்பட்டோர் சார்பாக இயங்குவதில் ஆர்வம் காட்டினாலும் அவர்கள் மதமாற்றத்துக்கான சாத்தியப்பாட்டை பொது நிலையில் முன்கொணர்ந்து செல்லும் விருப்புக் கொண்டிருந்தனர் என்பதை இனங்காண முடிகிறது.

> ''சமூக அமைப்பை முதலில் மாற்ற முற்பட்டிருந்தால் கிறிஸ்தவம் சமூகத்தில் தாழ்ந்த சமூகத்தினருக்கு உரிய மதமாக மட்டும் மாறியிருக்கும். இதனால் சாதிச் சின்னங்களையும், பாகுபாடுகளையும் அகற்ற வேண்டு மென்பதை அவர் முக்கியமாகக் கருதவில்லை. மாறாக உயர் குலத்தவர் களையும் கிறிஸ்தவத்தில் உள்வாங்கும் வழிவகைகளை ஆராய்ந்து கையாள்வதே அவரது சமயப் பணியின் இலட்சியமாயிருந்தது. இதற்குப் பொருத்தமான கொள்கைகளையும், சமயப் பரப்பு முறைமைகளையும் கடும் எதிர்ப்புக்கள் மத்தியிலும் கையாண்டார்.''[63]

என றொபேட் டீ நொபிலி பற்றிய பிலேந்திரனின் கருத்து ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் மதப்பணியை முன்னெடுத்த கத்தோலிக்க குருவான வர்களின் மனநிலையோடு தொடர்புடையதாகும்.

**e. இலக்கிய வெளிப்பாடுகள்:** ஈழத்தில் பெரும்பாலான தமிழர்கள் ஓரளவாயினும் எழுத்தறிவு உடையவர்களாக இருந்துள்ளனர். சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தைச் சார்ந்தவர்கள் மதத்தின் பெருமையை மரபுசார்ந்த இலக்கிய வடிவங்களை மையப்படுத்தி மக்கள் மத்தியில் கொண்டுசென்றனர். அதேவேளை, மக்கள் அனைவருக்கும் புரியும் வகையில் கத்தோலிக்க சமயக் கருத்துக்களைச் சாதாரண பேச்சு வழக்கு நடையில் வெளியிடு தலைக் கத்தோலிக்க சமயம் சார்ந்தோர் முன்னெடுத்துள்ளனர்.

> ''ஒரே மொழிப் பண்பாட்டிலுள்ள ஒரு மதக் கூட்டத்தினருள் ஒருசிலர் தொல்சீர் இலக்கிய மரபையும், மற்றோர் வாய்மொழிப் பாரம்பரிய இலக்கிய மரபையும் பேண முனையும் பொழுது அச்சமூகத்தில் நிலவும் சமனற்ற வளர்ச்சி நன்கு தெரியவரும்''[64]

என்பது கா.சிவத்தம்பியின் கருத்தாகும். கத்தோலிக்க சமயம் சுதேசியப் புலத்தை நன்கு கணித்தே பேச்சு வழக்கில் அமைந்த உரைநடைசார் இலக்கியத்தை சமூக களத்திற்கு கொண்டுவந்துள்ளது. பிரசங்கம், தர்க்கம் முதலான கருத்து வெளிப்பாட்டு, கருத்து உருவாக்க வழிமுறைகள் இலக்கிய வடிவங்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை பிரதான அம்சமாகும்.

> ''பெருந்தொகையான ஆடவர்களும் பெண்களும் குலத்திலே பிறந்த உயர்ந்தோர் மட்டுமல்ல நடபடியான ஆட்கள் தாமேயும் எழுத வாசிக்க கூடியவர்கள். இதனாலேதான் அநேக விசுவாசிகள் கொன்சால்வெஸ் சுவாமியாருடைய நூல்களிலே தங்கள் மனந்திரும்புதலுக்கு ஏற்ற பல காரியங்களைப் படித்துக் கொள்கிறார்கள்.''[65]

என 1742ஆம் ஆண்டில் இலங்கை மிஷனுக்கு சுற்று விசாரணையாளராய் வந்த மடுத்தீனு சுவியோ சுவாமிகள் குறிப்பிட்டுள்ளமை சமயப்பரப்பு கையில் உரைநடை இலக்கியங்களின் பங்கைக் குறிப்புணர்த்துகிறது.

கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர்கள் தமது சமயக் கருத்துக்களையும் சமூகத்தோடு கொள்ள முனைந்த உறவினையும் வெளிப்படுத்த இலக்கி யத்தைப் பிரதான வடிவமாகப் கையாண்டுள்ளனர். ஏலவே இருந்த செய்யுள் இலக்கிய வடிவங்களை உரைநடையில் அமைத்தல் (உ-ம்: தேவ அருள்வேத புராணம்) மக்களது வாழ்க்கையில் நிலவிய விலகலான நடத்தைகளை உரையாடல் பாங்கில் எடுத்துரைத்தல் என அக்கால இலக்கியங்கள் தனித்துவமுடையனவாய் அமைந்தன. எழுதப்பட்ட கத்தோலிக்க இலக்கியங்கள் கையெழுத்துப் பிரதியாகவே கையளிக்கப் பட்டும், பரவலாக்கப்பட்டும் உள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ''சுவாமியார் அஞ்ஞானச் செய்யுள்களிற் தேர்ந்த பிற சமயிகளும் பிராமணரும் உள்ள இடங்களுக்குப் போய் அவர்களுக்குத் தமது புராணத்தைப் படித்துக் காட்டினால் அவர்களும் வேதத்திற் சேருவார்கள்''[66]

எனச் சாங்கோபாங்க சுவாமிகள் வரலாற்றில் குறிப்புள்ளது. இதனூடு இலக்கியத்தை வாசித்துக்காட்டும் மரபினையும் இனங்காணமுடியும்.

d. **கதைகூறும் தன்மை:** கத்தோலிக்க சமயத்தை மக்கள் மத்தியில் பரவச் செய்வதற்குக் ''கதைகள்'' பிரதான இடத்தை வகித்துள்ளன. கத்தோலிக்க மதம் பரவியிருந்த பிற நாடுகளில் நடந்ததாகக் கூறப்படும் சமய வரலாற்றுச் சம்பவங்கள் எளிமையான பேச்சுவழக்குக் கலந்த மொழி நடையில் உரைநடை இலக்கியங்களாக வெளிப்பட்டுள்ளன. சைவ சமயத்தின் வெளிப்பாட்டிலும் புராண இதிகாசக் கதைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கு கத்தோலிக்க சமயத்தவரால் கூறப்பட்டுள்ள கதைகள் அடுத்தது என்ன எனும் ஆர்வத்தைத் தூண்டு வதாகவும் அவை பிற பிரதேசங்களில் நடந்த உண்மைச் சம்பவங்களாக விபரிக்கப்பட்டுள்ளமையும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

> ''ஆகாசத்தி லுதிக்கிற அருணன் உதயத்திலும், மத்தியானத்திலும், அபரானத்திலும் பிரகாசித்தலும் நடுவுச்சியில் வரங்காரம் காட்டுமே, முட்செடியிற் பூக்கிற சரோசும் முகிழ்மாகிற போதும் மலருகிறபோதும் வாடுகிறபோதும் வாசங்கொடுக்கிலும் இதழ் விரித்தலர்ந்த முகங் காண்பிக்கும் போது அதிகமாய்ப் பரிமளிக்குமே...''[67]

எனும் தேவபிரைசையின் திருக்கதை என்ற இலக்கியப்பகுதியானது மக்கள் மத்தியில் கதைகளின் ஊடாகச் சமயக் கருத்துக்களைக் கொண்டு செல்லும் முயற்சிக்கு ஆதாரமாக உள்ளது.

e. **மோட்சம் - நரகம்:** கத்தோலிக்க சமயத்தின் கருத்தியல்சார் வெளிப்பாடு களில் சில சைவ சமயத்தோடு தொடர்பு பெற்றனவாய் இருந்துள்ளன. மோட்சம், நரகம் தொடர்பான கத்தோலிக்க சமயக் கண்ணோட்டம் இங்கு பிரதானமாகும். மோட்சமானது அளவிடற்கரிய இன்பத்தின் திரட்சியாகக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மோச்ஷ ராட்சியத்துக்குக் கொண்டு போறபோது அவனுக்குள்ள சந்தோஷமெப்படியென்றால் ஒரு எழியவளரசகுமாரனோடே கலியாணம் பண்ண அழைக்கப்பட்டு மணவறையிலே யுட்படுகிற போது எம்மாத்திர மகங்களிப்பாளோ.....''[68] அத்தகைய இன்பம் மோட்சத்தில் கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. அதேவேளை நரகம் தொடர்பான அச்சமூட்ட லையும் கத்தோலிக்க இலக்கியங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

''செல்வமிகுந்து சரீரம் பெருத்திருக்கிறவர்களுக்கு அக்கினிக் குறடுகளால் மாங்கிஷம் பிடுங்கவும் கொதி வெறியிலே பிஞ்சினவர் களுக்கு உருகின பஞ்சலோகத்தண்ணீ ருட்டவுஞ......''[69] என பூலோகத் தில் செய்யும் தீய செயல்களுக்கு நரகலோகத்தில் விளையும் தண்ட னைகள் முன் வைக்கப்பட்டுள்ளமை கவனிப்பிற்குரியனவாகும்.

**f. உலக நடைமுறை:** உலக இன்பங்கள் தொடர்பாகவும் கத்தோலிக்க சமயத்தவர் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். சமூகத்தில் அறம் பேணப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளதோடு மனப் போக்கிற்கு ஏற்ப அலையும் மனிதர் தொடர்பான கண்ணோட்டமும் இங்கு பிரதானமாக எடுத்துக் காட்டப்படுகிறது.

> ''கலியாணச் சிறப்புக்களுக்கும் வீண் உச்சாயங்களுக்கு முள்ள உடமை போதாமற் கடன்வாங்கிச் செலவழிக்கிறாய். தேவ கோவிற் பெருநாள் திருநாள் சிறப்புக்குத் தன்கையாலே தாகிலுஞ் சிலவழியாத படிக்கு ஊரிலே தண்டித்திரிகிறாய். வீண் தியாகங்களுக்குஞ் சூதுக்குங் குடிக்கும் பல ஸ்திரிகளுக்குந் தன்னியல் வைப்பாராம லுதாரமாய்ச் சிலவழித்துக் காணிக்கைக்கும் பிட்சைக்கு முள்ள தையுமில்லை யென்று வஞ்சித்து வொரு கால்க்காசு மாத்திரம் போடுகிறாய்''[70]

என்ற ஞான உணர்ச்சிப் பகுதி ஆடம்பரத்தோடு கூடிய வாழ்வின் இருண்ட நிலையை விமர்சிக்கிறது.

**g. நிலையாமை:** வாழ்க்கை மதிப்பீடுகள் குறித்தான தமது கருத்துக்களை கத்தோலிக்க சமயத்தவர் எடுத்துக்காட்டுக்கள் ஊடாக முன்வைத் துள்ளனர். உலகியலின் உண்மையை உணர்த்தும் வகையில் நிலையற்ற பொருட்களை நிலையானவை என நம்பாது தெளிவுடன் வாழ்வை அணுகவேண்டியதன் அவசியம் முன்வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்போ உன்மடியிலே யிருந்த பணமுடனே வடக்கே தெற்கே போ பலடத்தால் மறு தேசங்களுக்குப் போய்ப் பலதுறைமுகங்களைச் சுத்தி மறுபடியுமுன்கையில் வருகிறதாயிருக்கும்''[71]

''பொன்னாசை பெண்ணாசை மண்ணாசையென மூன்றவ குணங் களுன்னை நரகக்குளியிலே புதைக்க கொண்டுபோற தூதர்களாகும்''[72]

என்ற கருத்துக்கள் உரையாடல் பாங்கில் எளிமையான வகையில் வாழ்வின் நிலையாமையை வெளிப்படுத்தி உள்ளன.

h. **சகிப்புத்தன்மை:** கத்தோலிக்கச் சமய செயற்பாடுகளை முன்னெடுப் பதில் ஒல்லாந்தரது அடக்குமுறை பெருந்தடையாக இருந்தமையால் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றும் மக்களுக்கு வேண்டியஆறுதலையும் நம்பிக்கையையும் வழங்க வேண்டிய தேவை உணரப்பட்டது. இதனால் இயேசு எதிர்க்கொண்ட துன்பங்களைச் சாட்சியாக்கி முன்வைக்கும் முயற்சி கத்தோலிக்கரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரசங்க வடிவில் இசையோடு கூடியதாக அமைந்த வியாகுலப் பிரசங்கம் இதற்கு தக்க ஆதாரமாகும். இவ்விலக்கியம் கத்தோலிக்க மக்களுக்கு ஆறுதலையும் மன உரத்தையும் வழங்கும் வகையில் அமைந்துள்ளது. தமக்குத் தீங்குபுரிய வந்த சேவகர்களை எதிர்க்கத் துணிந்த பேதுரு என்ற சீடன் மார்க்கு சேவகனின் காதை வெட்டத்துணிந்த போது அதைக் கண்ட இயேசு

''உன்னுடைய வாளை யுறையிலே போடு. வாளால் வெட்டினவன் வாளாலே சாகிறதாயிருப்பானே. நமக்கு வேணுமாகில் தேவ தூதர்களுடைய வாயிரஞ் சேனைகளை மழைக்கப் போகாதோ? என்பிதா நிரூபித்ததை நானுமனுபவிக்க வேண்டாமோ?''[73]

என்ற மொழி வன்முறையை அமைதியாக எதிர்க்கொள்ளும் நிலையைக் காட்டுகிறது.

''அந்தப் பாவத்துக்கனேக நரகங்களுடைய வாக்கினை போதாமலிருக்க வவர்களுக்கதைப் பொறுக்க வேணு மென்றும் மன்றாடுகிறாரே, ஐயோ என்னாதனே! தேவ குருவே! இப்படிப்பட்ட தயாபரமான சித்தமெங் களுக்கு முண்டா யெங்கள் சத்துராதிகளுக்கு நாங்களும் நன்மை செய்யத்தக்கதாகக் கிருபை பண்ணியருளும்''[74]

என வேண்டுகின்ற கூற்றும் மேற்குறித்த விடயத்தோடு தொடர்பு பட்டதாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**i. தர்க்க வெளிப்பாடு:** கருத்துசார் வாதங்களின் ஊடாகக் கத்தோலிக்க மதக் கருத்துக்களை நிறுவும் வகையில் ''தர்க்கங்கள்'' பல கத்தோலிக்க மத குருமாரால் நிகழ்த்தப்பட்டன. சமயம் பற்றிய புரிதலை ஏற்படுத்து வதும் மொழியின் ஊடாக அதிகாரத்தை நிறுவி மதக் கருத்தை எடுத்துச் செல்வதும் பிரதான விடயங்களாக உணரப்பட்டுள்ளன. கொன்சால் வெஸின் வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக்கொண்ட தர்க்கம் எனும் இலக்கியம் மதம் சார்ந்த கருத்து சமூக மட்டத்தில் பரப்பப்பட்டதன் தன்மையை வெளிப்படுத்துகிறது. கொன்சால்வெஸ் 1712இல் கல்வின் மதத்தைச் சார்ந்த ஒருவனோடு தர்க்கம் புரிந்தமைபற்றி 1712ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ம் திகதி கோவைக்கு அவர் எழுதிய கடிதம் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

> *''முதன்முதன் நீ அனுசரிக்கிற மார்க்கம் என்ன*
> *என்று நான் அந்தப் பதிதனைக் கேட்க, அவன்*
> *இறப்பிறமாது மார்க்கம் என்றான்''[75]*

எனத் தொடரும் பகுதியில் இறப்பிறமாது சபையைச் சார்ந்தவனுடைய கருத்தை மறுத்து சாங்கோபாங்க சுவாமிகள் வெல்வதாகக் கூறப் பட்டுள்ளது. வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக்கொண்ட தர்க்கம் எனும் இலக்கியம் குடியானவனுக்கும் வாத்தியாருக்கும் இடையில் சமயத்தை மையப்படுத்தி நிகழ்ந்த தர்க்க வெளிப்பாட்டிற்கு ஆதாரமாக உள்ளது.

குடி : வாத்தியாரே யொருவார்த்தை கேட்கிறேன். தங்கள் ராசாவுடைய கட்டளையின்படியே யொரு ராசாவை மாத்திரம் வணங்க வேணுமென்றிருக்கையிலே அவருடைய மந்திரிமாரைக் கண்டால் காலாலுதைக்கலாமோ?

வாத் : அப்படிச் சொல்லுவானேன். ராசாவுக்கடுத்ததெண்ட நம்ஸ்காரம் வர ஒருவருக்கு மாத்திரம் செய்ய வேணுமென்கிற மெய்யானால் வருடைய மந்திரி மாருக்கு....[76] எனும் மேற்குறித்த இலக்கியப் பகுதி இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

**j. மதத்தைப் பின்பற்றுவோர் தொடர்பான விமர்சனம்:** கத்தோலிக்க சமயத்தைத் தழுவியோரைத் தமது மார்க்கநெறியில் வழிப்படுத்துவதில் கத்தோலிக்க குருமார் அக்கறையோடு செயற்பட்டுள்ளனர். மக்களிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் வெளிப்பட்ட கத்தோலிக்க சமயத்திற்குப் பொருந்தாத நடைமுறைகள் எனத் தாம் கருதியதைக் குறித்துக் கடுமையானதும் வெளிப்படையானதுமான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். இவ்வாறான விமர்சனங்களும் கத்தோலிக்க சமயம் நிலைபெறுவதற்கு ஆதாரமாக அமைந்திருக்கும் எனலாம்.

> ''சறுவேஸ்வரனை யறிந்து மறியாத வக்கி யானிகளிலு மதிக கேடாய் நடந்தாய். அவர்கள் பசாசுக்குப் பயப்பட்டு வொடுங்குவதுபோலேயு மதுக்குப் பூசை நெய்வேந்தியங் கோவிலாசாரங்கள் செய்கிற பக்திமுக்தி போலேயு நீ சறுவேஸ்வரனை யாசரிக்கவு மந்தப் பயபக்தியோடே நடக்கவுமில்லை யெப்படி கணக்குக் கொடுக்கப்போகிறாய்''[77]

என்ற ஞானவுணர்ச்சிப் பகுதி கடவுளுக்கு விசுவாசமில்லாத மக்களின் நிலையைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

**k. அரசியல் சார் உறவு:** சுதேசிகள் மத்தியில் கத்தோலிக்க மதத்தைக் கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகளைக் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் நன்கு திட்டமிட்ட வகையில் மேற்கொண்டுள்ளனர். கண்டியைத் தமது செயற்பாடுகளுக்கான தளமாகக் கொண்டியங்கிய கத்தோலிக்கக் குருமார் மக்கள் மத்தியில் சமயக் கருத்துக்களைப் பல்வேறு வழிமுறைகள் ஊடாகவும் முன்னெடுத்துள்ளனர்.

கண்டிய அதிகார வர்க்கத்தோடு நெருக்கமான உறவுகளைப் பேண விரும்பிய கத்தோலிக்க குருமார் அதற்கான வழிமுறைகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்தியுள்ளனர். நரேந்திரசிங்கன் 1739இல் இறக்கும் போதும் கத்தோலிக்கம் கண்டியுடன் நெருங்கியே இருந்தது. அல்மேயிதா முதலான கத்தோலிக்கக் குருவானவர் அரச ஆதரவைப் பெறுவதில் தெளிவுடன் இயங்கியுள்ளனர். ஸ்ரீவிஜயராஜசிங்கனுக்காக ''புத்துமூல'' எனும் நூலைக் கொன்சால்வெஸ் அர்ப்பணம் செய்தமையும் ''பலவிதமான நூதன பொருட்களும் கொழும்பிலே வெகு கவனத்தோடு பெருஞ் செலவுடன் பக்குவமாய் அடுக்குப்பண்ணிய பலகாரங்களும் சந்திப்பாக அனுப்பினார்''[78] என்பதும் சமயத்தை நிலைப்படுத்துவதற்கு அரசியல் ஆதரவுத் தளத்தை ஏற்படுத்திக்கொள்ளும் குருமார்களின் முயற்சியாகவே நோக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. **கருத்து வெளிப்பாட்டில் எளிமை:** மக்களது புரிதலை மையப்படுத்தி சுருக்கமாகவும், தெளிவாகவும் கருத்துக்களை முன்வைக்கும் இயல்பு கத்தோலிக்க ஆக்க கர்த்தாக்களிடம் இருந்துள்ளது. பழந்தமிழ் இலக்கியக் கருத்துக்களுடன் கத்தோலிக்க சமயம் சார் விடயங்களை இணைத்து கத்தோலிக்க இலக்கியங்கள் வெளிவந்துள்ளன.

> ''தென்னை யடியிலே வார்த்த தண்ணீர் தென்னையுச்சியிலே பலன் காணுமே. பூலோகத்திலே செய்த நன்றிக்குப் பரலோகத்திலே காண்கிற பலன்படியாம்''[79]
>
> ''சமையமறிந்து பேசுவதும், முகமறிந்து ஆசரிப்பதும் தன் பெலனறிந்து கோபி கிறதும் புத்திமானுக்கு லக்ஷணந்தானே''[80]

எனும் சுகிர்த குறள் பகுதியும்

> *''ஐந்தினிலடங்கார்பின்னு மைம்பதிலடங்காரென்னு*
> *முந்தையோர் சொற்கள் பொய்யா''*[81]

எனும் திருச்செல்வர் காவிய செய்யுளடியும் குறிப்பிடத்தக்கனவாகும்.

### iv. பௌத்தம்

ஈழத்தில் பௌத்த மதமானது தமிழர்கள் செறிந்து வாழ்ந்த வடக்கு, கிழக்கு பகுதிகளில் மிகச்சிறிய அளவிலேயே செல்வாக்குப் பெற்றிருந்தது. தமிழர்களில் பெரும்பாலானோர் சைவ சமயத்தைத் தழுவியவர்களாக இருந்த அதேவேளை, முற்காலத்தில் அவர்களில் சிறு பகுதியினர் பௌத்த சமயத்தையும் பின்பற்றியிருந்தனர் என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. யாழ்ப்பாண வைபவமாலை யாழ்ப்பாணத்தில் இருந்த சிங்களக் குடிகள் குறித்துக் கூறுமிடத்து யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் இருந்த புத்த சமயக் கோவில்களையெல்லாம் இடிப்பித்துச் சிங்களக் குடிகளை முழுதாகத் துரத்திவிட்டான். அந்தச் சிங்களக் குடிகள் ஒன்றாகினும் இருந்ததில்லை[82] எனச் சங்கிலி மன்னன் தொடர்பான குறிப்பைத் தருகிறது.

வடக்கே நாகர்கோவில், கந்தரோடை, மல்லாகம், தெல்லிப்பளை, வீமன்காமம், ஊர்காவற்றுறை, நயினாதீவு முதலான இடங்களில் பௌத்த சமயம் நிலவியது என சிங்கள பாகவத இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அதேவேளை வடக்கில் கந்தரோடைக்கும். நாகபட்டினத்துக்கும் இடையே நாவாய்ப் போக்குவரத்து வழுக்கியாற்றுப் போக்கினூடாக இடம்பெற்றிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமைக்கான தொல்லியற் சான்றுகளும் கிடைத்துள்ளன. இதனடிப்படையில் இலங்கையில் சிங்கள பௌத்தத்தில் பெருமளவு செல்வாக்குப் பெறாத தேராவாத, மகாயன, வஜ்கிரயான பள்ளிகள் தமிழ்ப் புலத்தோடு தொடர்புகளைக் கொண்டிருந்தமை தொடர்பான ஏதுக்களும் கவனிப்பிற் குரியனவாகின்றன.

பௌத்தமதமானது ஈழத்தில் பரவிய பொழுது வடபகுதியூடான செயற்பாடுகள் முக்கியம் மிக்கதாக இருந்ததென்பதும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கிழக்குப் பகுதியில் குறிப்பிட்ட அளவில் பௌத்த மதம் சார்ந்த பரவல் இருந்துள்ளது என்பதையும் இனங்காண முடிகிறது.

**v. இஸ்லாம்**

ஈழத்தில் முஸ்லிம்களின் வருகையானது வணிக நோக்கத்தை முதன்மைப் படுத்தி நிகழ்ந்தது. இந்தியாவில் அரசியல் ரீதியாக முஸ்லிம்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் அங்கிருந்தும் ஈழம் நோக்கி முஸ்லிம்கள் நகர்ந்துள்ளனர்.

அக்காலத்திலே கந்தச்சாய்பு என்பவனால் மகம்மது மார்க்கத்தவர் களாக்கப்பட்ட தமிழ் வம்சத்தவர்களான சில சோனகக்குடிகள் காயல் பட்டினம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரிலே குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள் முதலான இடங்களில் குடியேறியமை பற்றி யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது.[83]

இலங்கைக்கு போர்த்துக்கேயர் வரும்வரை முஸ்லிம்கள் வணிக ரீதியாகத் தமது மேலாதிக்கத்தைச் செலுத்தி வந்துள்ளனர். அவர்கள் தம்மை சமூகக் களத்தில் நிலைப்படுத்தவும் வலுப்படுத்தவுமான செயற் பாடுகளை பிற்பட்ட காலங்களில் மேற்கொண்டுள்ளனர் எனலாம். ஒல்லாந்தர் ஆட்சியில் முஸ்லிம்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டே வாழ்ந்துள்ளனர். சுதேசிகளான சைவ சமயத்தவரோடும் இவர்களுக்கு சில முரண்பாடுகள் ஏற்பட்டதனை யாழ்ப்பாண வைபவ மாலை விபரிக்கிறது. நல்லூரில் குடியிருந்த முஸ்லிம்களுக்கு நெருக்கடி ஏற்பட்டபோது ஒல்லாந்தர் அதனை முக்கியத்துவப்படுத்தாது நடந்து கொண்டமை பற்றிய செய்தி யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டஸ்தாந்து சமயத்தவரைப் போல உருவ வணக்கத்துக்கு முஸ்லிம்களும் எதிரானவர்கள் எனினும் முஸ்லிம்களின் வணிக மேலாண்மை குறித்த அச்சம் ஒல்லாந்தருக்கு இருந்திருக்க வேண்டும். எவ்வாறெனினும் ஒல்லாந்தர் முஸ்லிம்களைத் தமது நலன்களை மையப் படுத்தியே கையாண்டுள்ளனர்.

> ''கப்பல்களின் சொந்தக்காரரான முஸ்லிம்கள் சிலரைப் பற்றிய குறிப்புக்கள் ஒல்லாந்தரின் ஆவணங்களில் உள்ளன. சேகுமீறா வெவ்வை, பகீர்தம்பி என்பவருக்குச் சொந்தமான கப்பலொன்றிலே 1791இல் ஒல்லாந்தர் கொழும்பிலிருந்து மன்னாருக்குச் சாராயத்தை அனுப்பி வைத்தார்கள். அதே வருடத்திலே சின்னப்பிள்ளை மரிக்கார் என்பவருடைய கப்பல் ஒல்லாந்தருடைய ஆவணங்கள் சிலவற்றை ஏற்றிச் சென்றது''[84]

எனும் குறிப்பு இங்கு கவனிப்பிற்குரியதாகும்.

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் சிலவற்றிலும் இஸ்லாம் பற்றிய விடயங்கள் வெளிப்பட்டுள்ளன. திருச்செல்வர் காவியத்தில் நபிகள் தொடர்பான விபரிப்பானது இடம்பெற்றுள்ளது.

*''நாஞ்சொலுஞ்சிட்டர் தம்மை நபிகளென்றுரைப்பர் நாதன்''*[85]

எனத் திருச்செல்வர்காவியம் குறிப்பிட்டுள்ளது.மேலும் சாங்கோபாங்க சுவாமிகள் எழுதிய நாலுவேதம் எனும் இலக்கியமும் இஸ்லாம் சமயம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும் இவ்வகையில் கவனிப்பிற்குரியது.

## 3. சமய விமர்சனம்

ஒல்லாந்தர் காலத்தில் சுதேசியப் புலத்தில் நிலைபெற்றிருந்த சைவ சமயத்தோடு புதிதாக இணைந்துகொண்ட கத்தோலிக்க புரட்டஸ்தாந்து இஸ்லாமிய சமயங்களின் வருகையானது மதங்களுக்கிடையிலான போட்டியையும் விமர்சனங்களை முன்வைக்கும் சூழலையும் ஏற்படுத்தியது.

### i. சைவசமயம் மீதான கத்தோலிக்க சமயத்தின் விமர்சனம்

சைவ சமயம் குறித்து கத்தோலிக்க சமயம் தனது விமர்சனரீதியான பார்வையை வெளிப்படுத்தியுள்ளது. சைவ சமயத்தவராய் ஈழத்துப் புலத்தில் வாழ்ந்த புலமையாளரில் குறித்த சிலர் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்துள்ளனர். இவர்கள் சைவ சமயம் குறித்தான கருத்துசார் விடயங் களை அறிந்தவர்கள் ஆகையால் அவர்களது விமர்சனங்கள் சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தின் கருத்தியல் தொடர்பான கூறுகளை மையப்படுத்தி எழுந்துள்ளன.

பதினெண் புராணங்களில் கடவுளுக்கு ஏற்காத குற்றங்கள் உள்ளன என கத்தோலிக்க சமயம் சார்ந்த இலக்கியங்கள் சில சுட்டிக்காட்டியுள்ளன. நால்வேதங்கள் வடமொழியில் இருப்பதால் தமிழர் அதனை வாசித் தறிய முடியாது. புனித நீரில் நீராடினால் பாவம் போய்விடுமா[86] இந்திரனின் செயற்பாடுகள் மீதான சாடல்[87], கண்ணனின் பெண்கள் தொடர்பான லீலைகள்[88] அகத்தியர் பிரம்மதேவர் சிந்திய விந்தால் உற்பத்தியானமை[89], பிரம்மனின் தலையை சிவன் கொய்தமை[90] முதலான விடயங்கள் திருச் செல்வர் காவியத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

''ஒருநான்கு வேதமுள தென்பீர்வேதிய ரோதியுரைப்பதல்லா
*லிருநான் குதிக்குலத்தியாவரதினிசைப்பலனை யெய்தியுற்றார்''*[91]

என்பது வேதம் பற்றிய திருச்செல்வர் காவியச் செய்யுளடியாகும்.

இறப்புப் பற்றியும் வீட்டின்பம் தொடர்பாகவும் கத்தோலிக்க சமயம் சைவ சமயம் மீது தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளது. சைவ சமயம் மீதான விமர்சனம் ஒல்லாந்தரது கத்தோலிக்க சமயம் மீதான நெருக்கடிகள் தளர்த்தப்பட்டதன் புறநிலையில் தீவிரப்பட்டிருக்க வேண்டும். சைவ சமய நடைமுறைகளை முன்னிலைப்படுத்திக் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் கத்தோலிக்க சமயம் வழிபடுவதற்கும் இயல்பாக வாழ்வதற்கும் எளிமை யானது எனும் கருத்தை விதைக்கும் நோக்கிலாகும். சைவ சமயத்தவரது வழிபாட்டு முறைகள் மக்களின் பொருளாதாரத்தைச் சுரண்டுவனவாக உள்ளன. அவர்கள் தமது உழைப்பில் ஒரு பகுதியை இறைவனுக்கு வழங்காவிடில் தண்டனை களை எதிர்கொள்ள நேரிடும். ஆனால் கத்தோலிக்க சமயத்தைத் தழுவின் எவ்வித பொருட்செலவும் ஏற்படாது என்ற கருத்தை வலியுறுத்தி கத்தோலிக்க சமய குருமார் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்துள்ளனர்.

''சருவேசுரனுடைய நேசந் தேட வடக்கே தெற்கே போகவுங் கடல் காடு மலைகளேறவுங் காசுபணங்கள் செலவழிக்கவும் வேணுமோ. அதொன்றுந் தேழ்வையில்லைத் தன்வீட்டிலே தன் படுக்கையிலே யிருக்க கைகால சைக்கத் தெண்டியாமற் சறுவேசுரன் பேரிலே மனந்தயவு வைக்கலாம். இந்தக் கற்பினையை மீறிப் பசாசை வணங்க வேணுமானாலது கேட்கிறதைக் கொடுக்கவுங் கொடாதிருந்தாற் படவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும். முறைக்கு முறை மடை படைக்கவும் வெள்ளாண்மையிலே நெல்லும் பட்டியிலே மாடுந் தோட்டத்திலே மாங்கனி காய்கனி கேட்டாலுங் கேழாவிட்டாலுங் கொடுக்க வேணும். அதிலொருமுறை தப்பினாற் சரீர வருத்தங்களும் விளைவிற்பாடுகளுமனுபவிக்க வேணும்''[92]

எனும் ஞானவுணர்ச்சிப் பகுதி கத்தோலிக்க சமயத்தின் நுண்மையான சமய அரசியல் சார் அணுகுமுறையைக் காட்டுகிறது.

**ii. புரட்டஸ்தாந்து சமயம் மீதான கத்தோலிக்க சமய விமர்சனம்**

கத்தோலிக்க சமயம், புரட்டஸ்தாந்து சமய நடைமுறைகள் மீது தெளிவான விமர்சனங்களை முன்வைத்துள்ளது. புரட்டஸ்தாந்து சமயத்தவர் முன்னெடுத்த செயற்பாடுகளில் உள்ள வழுக்கள் எனத் தாம் இனங்கண்ட பல்வேறான விடயங்களை இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்துவதில் கத்தோலிக்க குருமார்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளனர்.

''குடியானவன்: வாத்தியாரே எங்கள் குருமார் தங்களுக்கு அப்பத்தையும் முந்திரிகை வாசத்தையும் கொள்ளுகிறதுமில்லை, எங்களுக்குக் கொடுக்கிறதுமில்லை''[93]

என வாத்தியாரை நோக்கிக் குறிப்பிடும் ''வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக்கொண்ட தர்க்கம்'' என்ற இலக்கியப்பகுதி, கத்தோலிக்க குருமார் தமது சமயத்தைப் பின்பற்றுபவர்களுக்காக ஒல்லாந்தரது இறுக்கத்தின் மத்தியில் தம்மை வருத்தி உண்மையை மக்களுக்குப் போதித்தனர் என்றும் புரட்டஸ்தாந்து சமயத்தைப் பின்பற்றுவதாகப் படைக்கப்பட்ட வாத்தியாரை விமர்சிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

சுவிசேஷ விரித்துரையிலும் மத விமர்சனங்களை இனங்காண முடிகிறது.

''கள்ளத்தீர்க்கதரிசியாவது, பொய் மதங்களைப் போதிக்கிற அந்நிய வேதாந்திகளும், அபகட போதங்களைப் போதிக்கும் கோட்காரரும் தங்கள் அக்கிருத்தயத்தால் மற்றவர்களைப் பாவத்திலே விழுத்துகிற சங்கதோஷவாதிகளும் ஆகிய இவர்கள் பொய்யாங்க தெரிசிகள் என்றும் கள்ளஞான தேசிகர் என்றும் சொல்லப்படும். இப்படிப்பட்டவர்கள் ஓநாய்களுடைய கொடிய நெஞ்சுடையவர்களாய் இருப்பார்கள்...''[94]

எனும் சுவிசேஷ விரித்துரைப் பகுதி இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### iii. கத்தோலிக்க மதம் மீதான ஒல்லாந்தரின் ஒடுக்குமுறைகள்

ஒல்லாந்தர் ஈழத்தில் தமது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் மதரீதியான நெருக்கடிகளைத் தீவிரப்படுத்தினர். குறிப்பாகக் கத்தோலிக்க சமயம் மீதான ஒல்லாந்தரின் நடவடிக்கைகள் தாக்கம் மிக்கனவாய் அமைந்தன. தமது புரட்டடஸ்தாந்து சமயமே மெய்யானது என்ற கருத் தோடு ஒல்லாந்தர் தொழிற்பட்டமையால் சமூக மட்டத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றியோரின் நிலை நெருக்கடிக்குள்ளாகியது.

> "East India company of 1642, the Dutch Reformed Church was the official Religion of all the territories coming under the administration of the company. Consequently, no other religion was permitted to be practised there in. Although in other countries this piece of legislation was not strictly adhered to, in Ceylon it was ruthlessly enforced. Thus all Catholic churches and chapels were seized and priests banished from the place under pain of death. Catholic worship was forbidden and all the Catholics were compelled to send their children to the Dutch proselytizing schools, and forced to baptize, marry and bury their dead according to the Dutch Reformed Religious rite only."[95]

எனும் தரவு ஒல்லாந்தரது அடக்குமுறையின் விகாரத்தைக் காட்டுகிறது. கத்தோலிக்கரின் சமயம்சார் நடைமுறைகளை முடக்க எண்ணிய ஒல்லாந்தர் கத்தோலிக்க தேவாலயங்களையும் தமது அதிகாரப் பலத்தால் அழிக்கவும், அவற்றைக் கையகப்படுத்தவும் முனைந்தனர்.

> ''ஒல்லாந்தர் அக்கோவிலையும் அங்கிருந்த சுருவங்களையும் அழித் தொழித்தனர். எப்படியோ அக் கொடூரத்தினின்றும் தப்பியது. இன்று மாசி இரண்டாந்திகதி தோறும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் சுருவம் அதுவேயாகும். ஒல்லாந்தரால் இடித்தழிக்கப்பெற்ற அக்கோவில் பின்னர் கண்டி மன்னரின் அனுமதியுடன் 1660இல் புதுப்பிக்கப்பட்டது.''[96]

என வீ.சி.கந்தையா குறிப்பிட்டுள்ளமை ஒல்லாந்தரின் சமய அடக்கு முறைசார் செயற்பாட்டை விளக்கி நிற்கிறது. இவ்வாறு இறுக்கமான நடைமுறைகளைக் கத்தோலிக்கர் மீது ஒல்லாந்தர் திணித்தனர் எனினும் ஈழத்தில் அவர்களது இருப்பு தொடர்ந்து அச்சத்திற்குள்ளானதாகவே அமைந்தது. ஒல்லாந்தர் கண்டியினைக் கைப்பற்ற முடியாமற் போனமை யால் கண்டி மன்னன் தனது பாதுகாப்பை மையப்படுத்தி ஒல்லாந்தருக் கெதிராகப் பல வழிகளில் தொழிற்பட முனைந்தான். குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயருடன் மன்னன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பானது ஒல்லாந்தரது செயற்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கியது.

ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் மதம் தொடர்பான அணுகுமுறையில் ஓரளவு நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். 1752.08.21 திகதியிடப்பட்ட ஒல்லாந்தரின் கீழைத்தேயத் தலைமையகமான பதவியாவிலிருந்து ஈழத்து அதிகாரப் புலத்திற்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில்

> "The private and peaceful exercise of their religion should be over looked and tolerated. You should very strongly recommend moderation to the predikants in this respect. In everything let them act with moderation and equity and let them in a special way restrain any undue zeal on the part of the village school masters or any other native church official and remove all cause of complaint and improper harassment"[97]

எனும் குறிப்பு ஒல்லாந்த அதிகாரத்தின் நெகிழ்வான போக்குக்கு ஆதார மாகும்.

### iv. பிறசமயங்கள் குறித்தான சைவ சமயத்தின் நோக்கு

சைவ சமயத்தைச் சார்ந்த புலவர்கள் சமூக உணர்வோடு தாம்சார்ந்த சமயக் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் பிற சமயங்கள் குறித்தான விமர்சனங்களை வெளிப்படையாக முன்வைக்கவில்லை. போர்த்துக்கேயரது ஆட்சியில் நிலவிய நெருக்கடிகளிலிருந்து விலகி ஒல்லாந்தர் ஆட்சியில் ஓரளவு மதச் சுதந்திரம் ஏற்பட்டமையால் அவர்கள் புரட்டஸ்தாந்து, மற்றும் கத்தோலிக்க சமயங்கள் குறித்து அதிகளவு விமர்சனங்களை முன்வைப்பது அன்றைய சூழலில் பொருத்தமற்றது எனக் கருதியிருக்கக் கூடும். இருப்பினும் சைவ சமயம் குறித்த பெருமையை வெளிப்படுத்தும் இடங்களில் தனித்து எந்தச் சமயத்தையும் குறிப்பிடாத அதேவேளை பொதுமையான வகையில் பிற சமயங்கள் குறித்து விமர்சித்துள்ளமையைக் காணமுடிகிறது.

> ''விரைக்குழல்சேர்
> *செம்பாதி யந்தண் சமயமல் லாது திரிநெஞ்சமே*
> *நம்பாதி யந்தகர் பொல்லாச் சமயங்க ணன்றெனவே''*[98]

என நல்லூர் சின்னத்தம்பிப் புலவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புறநெ றிச்சம யங்கண் முற்படு புன்மை போய்விட நன்மைசா
றிறநெ றிச்சிவ சமய நீதிகள் செகத லந்தனின் வளரவே''[99]

என வரத பண்டிதரும்,

''பூதலத்தி லுண்டான பொய்ச் சமயம் யாவுமொளிர்
ஆதபனைக் கண்ட பனியாமெனவே போய்மறைய''[100]

என வீரக்கோன் முதலியாரும் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் இங்கு கவனிப்பிற்குரியனவாகும். பொதுவாக சைவசமயத்தவர் செறிந்து வாழ்ந்த, கிராமங்களில் மதச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் பெரியளவிலான தடைகளை ஒல்லாந்தர் விதிக்கவில்லை. அதேநேரம் அவர்களது கவனம் நகரங்களைப் பிரதானப்படுத்தியதாயிருந்தது. அதே வேளை சுதேசிகளில் குறிப்பிட்ட தொகையினர் தமது நலன்களை மையப்படுத்தி தம்மை புரட்டஸ்தாந்து சமயத்தைச் சார்ந்தவர்களாகக் காட்டிக்கொள்ள முனைந்தனர். ஒல்லாந்த அதிகாரத்தால் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சம் ஒருபுறமும், சைவ சமயச் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய சூழல் ஒல்லாந்தர் ஆட்சியில் ஓரளவு நிலவிய மையும் இதற்கு மற்றுமோர் காரணமெனலாம். இவற்றின் விளைவால் புரட்டஸ்தாந்து மதத்தின் மீதான விமர்சனம் முன்னெடுக்கப்படாத நிலையை அடைந்திருக்கும்.

தொகுத்து நோக்கின் சமயங்கள் ஊடான சமூக அரசியலானது வலுவான நிலையில் தொழிற்பட்டுள்ளமையை இனங்காண முடிகிறது. சுதேசியத் தளத்தில் சைவத்தின் நிலைபேறுக்கான நகர்வுகள் முன்னெடுக் கப்பட்டுள்ள அதேவேளை சுதேசிய பண்பாட்டுக் களத்தில் தம்மை இணைக்கும் வகையில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயக் கருத்துக் களை மக்கள் மத்தியில் செறியச் செய்வதற்குக் கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப் பட்ட எத்தனங்களும் தனிக் கவனிப்பைப் பெற்றுள்ளன. இங்கு மதங்களுக் கிடையிலான இடைவினையானது சமூகக் களத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை கவனிப்பிற்குரியது.

### அடிக்குறிப்புகள்

01. கிறிஸ்ணராஜா, செ., தொகுப்பு, 2008, *இலங்கையில் இந்து வெண்கலப் படிமக் கலை மரபுகள்*, குமரன் புத்தக வெளியீடு, ப. 15.

02. *மங்களேஸ்வரம்*, சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள், 2002, நினைவு வெளியீடு, ப. 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. நித்தியானந்தம், செ., பதிப்பாசிரியர், 2004, *கல்வளை அந்தாதி*, கல்வளைப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சபை, ப. 146.

04. மேலது, பக். 15, 39.

05. மேலது, ப. 17.

06. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 242.

07. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *பஞ்சவன்னத்தூது*, சைவசித்தாந்தக் கழகம், ப. 90.

08. தமிழ்வேள், பதிப்பாசிரியர், 1991, *இணுவைச் சிவகாமியம்மை தமிழ்*, குமரன் புத்தக இல்லம், ப. 18.

09. மேலது, ப. 19.

10. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ*, ப. 261.

11. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *வரதபண்டிதம்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 163.

12. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *வெருகல் சித்திர வேலாயுதர் காதல்*, இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 33.

13. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ*, ப. 254.

14. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், 1932, *தண்டிகைக் கனகராயன் பள்ளு*, சென்னை சாது அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. ரு.

15. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ*, ப. 142.

16. பத்மநாதன், சி., 2004, *ஈழத்து இலக்கியமும் வரலாறும்*, குமரன் புத்தக நிலைய வெளியீடு, ப. 161.

17. மேலது. ப. 161.

18. கந்தசாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ*, ப. 87.

19. சுபதினி ரமேஸ், தொகுப்பு, 2002, *வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மஹா கும்பாபிஷேக மலர்*, வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம், ப. 1.

20. மேலது, ப. 12.

21. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ*, ப. 267.

22. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ*, ப. 80.

23. மேலது, ப. 80.

24. நகுலசிகாமணி.வல்வை, ந., பதிப்பாசிரியர், 2004, *யாழ்ப்பாண வைபவமாலை*, வல்வை ஆவணக் காப்பகம், ப. 06.

25. மேலது, ப. 06.

26. மேலது, ப. 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்
16 AUG 2017

27. மேலது, ப. 26.
28. மேலது, ப. 26.
29. மேலது, ப. 26.
30. மேலது, ப. 31.
31. மேலது, ப. 26.
32. மேலது, ப. 26.
33. இந்திரபாலா, கா., பதிப்பாசிரியர், 1981, *சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும்*, ஞானப்பிரகாசர் நினைவு விழா அமைப்புக்குழு, ப. 21.
34. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 05.
35. மேலது, ப. 98.
36. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப - 120.
37. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப - 74.
38. மேலது, ப. 176.
39. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, 1998, *மு.கு.நூ.*, ப. 178.
40. மேலது, ப. 132.
41. மேலது, ப. 93.
42. மேலது, ப. 110.
43. மேலது, ப. 110.
44. மேலது, ப. 55.
45. இரகுபரன், க., பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*
46. தமிழ்வேள், பதிப்பாசிரியர், 1991, **இணுவைச் சிவகாமியம்மை தமிழ்,** குமரன் புத்தக இல்லம், ப. 18.
47. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 72.
48. சிவலிங்கராஜா, எஸ்., 2001, *ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி*, தனலக்குமி புத்தகசாலை வெளியீடு, ப - 96.
49. Phillipus Baldaeus, 1960, T*rue and exact description of the Great Island of Ceylon*, Published in co-operation with the Ceylon Branch of the Royal Asiatic Society, p. 320.
50. இலங்கையிற் கல்வி, 1969, நூற்றாண்டு விழா மலர், இலங்கை கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் வெளியீடு, ப. 360.
51. சபாபதி குலேந்திரன், 1966, கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, ப - 76.
52. மேலது, ப. 78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. மேலது, ப. 78.
54. மேலது, ப. 82.
55. மேலது, ப. 83.
56. மேலது, ப. 79.
57. குகபாலன், கா., நவம்பர் 2004, *சிந்தனை*, இதழ் 3, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம், ப. 13.
58. இந்திரபாலா, கா., தொகுப்பு, ஏப்ரல் 1967, *சிந்தனை*, இதழ் 1, ப. 34.
59. ஞானப்பிரகாசர், சா., பதிப்பாசிரியர், 1910, *யோசேவாஸ் முனிவர் சரித்திரம்*, சென்யோசப் கத்தோலிக்க பதிப்பகம், ப - 138.
60. மேலது, ப. 194.
61. மேலது, ப. 195.
62. சிவத்தம்பி, கா., 2001, *தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்*, மக்கள் வெளியீடு, ப. 58.
63. ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன், 2009, *தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள்*, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம், பக். 33,34.
64. இந்திரபாலா, பதிப்பாசிரியர், 1981, *சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும்*, ஞானப்பிரகாசர் நினைவுவிழா அமைப்புக்குழு, ப. 25.
65. ஞானப்பிரகாசர்.சா., பதிப்பாசிரியர், 1942, *யாக்கோமே கொன்சால்வெஸ் எனும் சாங்கோபாங்கர்*, அர்ச்சசூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, ப. 25.
66. மேலது, ப. 94.
67. கபிரியேல் பச்சேக்கு, *தேவப்பிரசையின் திருக்கதை*, ஐந்தாம் யுகம்.
68. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *ஞானவுணர்ச்சி*, வியாகுலப் பிரசங்கம், சுகிர்தகுறள் ஆகியவற்றின் இணைந்த நூல், புன்னை மாநகர் யக்கோவு றேச்சலேனு முன்னின்று அச்சிற் பதிப்பிக்கப்பட்டது, ப. ரூங.
69. மேலது, ப. ருயி.
70. மேலது, ப. சங.
71. மேலது, ப. உரு.
72. மேலது, ப. ஙங.
73. யாங்கோமே கொன்சால்வேஸ், 1994, *வியாகுல பிரசங்கம்*, யாழ்ப்பாணம் புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், ப - 19
74. மேலது, ப. 74.
75. ஞானப்பிரகாசர், சா., 1942, *மு.கு.நூ.*, ப. 41.
76. யாக்கோமே கொன்சால்வேஸ், வாத்தியாருக்கும் குடியானவருக்கும் இடையிலான தர்க்கம், கையெழுத்துப் பிரதியாகப் பார்வையிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. நஎ.
78. ஞானப்பிரகாசர், பதிப்பாசிரியர், 1942, *மு.கு.நூ.*, பக். 104, 105
79. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. எஙய.
80. மேலது, ப. எஙகூ.
81. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, *திருச்செல்வர் காவியம்*, திருமறைக் கலாமன்ற வெளியீடு, ப - 55.
82. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *யாழ்ப்பாண வைபவமாலை*, வல்வை ஆவணக்காப்பகம், ப - 59.
83. மேலது, ப. 91.
84. பத்மநாதன், சி., 2002, *இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்*, குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப - 299.
85. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, *மு.கு.நூ.*, ப. 169.
86. மேலது, ப. 144.
87. மேலது, ப. 155.
88. மேலது, ப. 156.
89. மேலது, ப. 156.
90. மேலது, ப. 157.
91. மேலது, ப. 143.
92. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. சகூ.
93. யாக்கோமே கொன்சால்வெஸ், ''வாத்தியாருக்கும் குடியானவனுக்கும் இடையிலான தர்க்கம்'', கையெழுத்துப் பிரதியாகப் பார்வையிடப்பட்டது.
94. யாக்கோமே கொன்சால்வேஸ், 1949, சுவிஷேச விரித்துரை, சூசைமாமுனிவரது கத்தோலிக்க அச்சியந்திரசாலை, ப. 112.
95. Dominic Saminathan, 1998, *Lay Ministries in the Diocese of Trincomalee – Batticaloa with specific reference to catechists in pastoral care roma*, p. 06.
96. கந்தையா, வீ.வி., 1964, *மட்டக்களப்பு தமிழகம்*, சாகித்திய மண்டல வெளியீடு, ப. 452.
97. Dominic Saminathan, 1998, *மு.கு.நூ.*, p. 11.
98. இரகுபரன்.க., பதிப்பாசிரியர், 2005, *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ப.113.
99. இரகுபரன். க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 191.
100. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஐ., 2000, *மு.கு.நூ.*, ப. 58.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III. மரபுகளும் வழக்காறுகளும்

## 1. சடங்கும் சமூக அரசியலும்

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி, அல்லது நம்பிக்கையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்ற முறையான, நிலைநாட்டப்பட்ட தொடர்ச்சியான நடவடிக்கையாகச் சடங்கு அமைகிறது. ஒவ்வொரு சமூகத்திற்கு உரிய தாகவும் வழிவழியாகப் பேணப்பட்டு, பின்பற்றப்படும் சடங்கானது காலனிய ஆதிக்க காலத்தில் நெருக்கடிகளையும் மாறுதல்களையும் எதிர்கொண்டுள்ளது.

அதிகார ரீதியாகப் பிரவேசித்து, தமது நோக்கங்களை நிறைவேற்ற முனைந்த விதேசியர் தமிழ்ப் புலத்தில் தம்மை நிலைப்படுத்த மேற்கொண்ட உத்திகளில் தமிழர் சடங்குகள் பெரிதும் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் ஒல்லாந்தர், தமது ஆட்சி அதிகாரத்தைப் பிரயோகித்து சடங்குகள் பலவற்றை நிறுத்தியும், மட்டுப்படுத்தியும் வந்துள்ளனர். அதேவேளை கத்தோலிக்க சமயத்தைப் போதித்தோர் தமிழ்ப் பண்பாட்டுப் புலத்தில் நிகழ்ந்து வந்த சடங்குகள் சிலவற்றை உள்வாங்கி இயங்க முனைந்தனர். மறுபுறம் சைவப்பின்னணியுடைய மரபுரீதியான பண்பாடு தொடர்ந்த வண்ணமே இருந்தது. இவ்வகையில் ஒல்லாந்தர் கால சமூகக் களத்தில் நிலவி வந்த சடங்குகளையும் அவற்றின் சமூக அரசியலையும் குறித்து நோக்குதல் பிரதானமாகிறது.

### i. சமயச் சடங்குகள்

ஒல்லாந்தர் காலத்தில் சமயச் சடங்குகள் சைவ, கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயங்கள் சார்ந்த விடயங்களை மையப்படுத்தியதாய் வெளிப்பட்டுள்ளன. மக்களுடைய வாழ்க்கையில் சமயத்தின் வகிபங்கானது முக்கியத்துவம் மிக்கதாக இருந்த புறநிலையில் சமய நியமங்களில் ஒன்றான சடங்கு களின் பயன்பாடு முக்கியத்துவம் மிக்கதாகவும் பல்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைந்துள்ளது.

a. **விரதங்கள்:** சடங்குகளில் விரதங்கள் முக்கியத்துவம் உடையனவாக உள்ளன. விரத அனுட்டானம் என்பது சமய ஒழுங்கில் பிரதானமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தப்படுகிறது. விரதத்தினைக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள், விரதத்தின் போது தவிர்க்க வேண்டியவை, விரதத்தில் இடையீடுகள் வரின் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள், விரதத்தினை நோற்றுப் பேறுபெற்றோர் தொடர்பாகவும் ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் விரிவான தரவுகளைத் தந்துள்ளன. இங்கு குறிப்பாக சிவராத்திரி, ஏகாதசி, விநாயக விரதங்கள் தொடர்பான விடயங்கள் முக்கியமானவையாகும்.

*''தீதகலே காதசிதான் றசமியுடன் கூடிவரிற் றிரைநீர் வேலிப்*
*பூதலத்தோ ராங்கதனை யநுட்டித்தா லப்பலனைப் புரைதீர்''*[1]

என ஏகாதசி விரதத்தைப் புரியும் தன்மையை ஏகாதசிப் புராணம் விளக்குகிறது.

*''அத்திதியிற் பிதிர்திவசம் வந்த தென்றா லன்றுவிட்டு*
*மறுநாட் செய்திடலாம்''*[2]

என விரதத்தில் வரும் இடையீடுகள் தொடர்பானவற்றையும், அவற்றுக்கான மாற்று வழியையும் ஏகாதசி புராணம் குறிப்பிட்டுள்ளது. மக்கள் மத்தியில் விரதம் குறித்த ஈடுபாட்டைத் தூண்டவேண்டிய சூழல் அன்று இருந்துள்ள மையால் குறித்த விரதத்தை மேற்கொள்வதனால் ஏற்படக்கூடிய நன்மை களையும் விரதம் பற்றிய விளக்கத்தில் அடக்கியுள்ளனர்.

*''ஐயமின்றிப் பாரணமிப் படியே பன்மூன் றாந்திதியி*
*னாற்றினசு வமேத நூறு செய்த பல னுண்டாகும்''*[3]

எனும் செய்யுள் விரதத்தை மேற்கொள்வதானது நூறு அசுவமேத யாகங்களைச் செய்தமைக்கு ஒப்பாகும் எனச் சுட்டுகிறது.

*''சூலிலார் நோற்கின் சுதரை மிகப்பெறுவார்''*[4]

என பிள்ளையார் கதை இலக்கியம் விநாயக விரதத்தின் சிறப்பைக் குறிப்பிடுகிறது.

விரதத்தை ஒழுங்குறப் பின்பற்றச் செய்வதற்கு உபாயமாகப் புலவர்கள் பல்வேறு எச்சரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர். உதாரணமாக சிவராத்திரி விரதத்தை மேற்கொண்ட ஒருவர் அடுத்தநாள் பகற்பொழுதில் சோம்பி நித்திரை செய்தால்

*''லாரணங்கள் பயின்றகுல வந்தணரைம் பதிற்றிரட்டி யாயி னோரைக்*
*காரணங்க ளொன்றுமின்றிக் கொன்றகடும் பழியடைவர்''*[5]

எனச் சிவராத்திரி புராணம் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOH JPL



தொடர்ச்சியான அந்நியத் தலையீடுகளால் நலிவடைந்திருந்த சமயச் சடங்குகளை மீளவும் நிலைப்படுத்துவதற்கான முன் முயற்சியாகவே விரதங்கள் தொடர்பான சமய நடைமுறைகள் குறித்த விளக்கங்கள் முக்கியம் பெறுகின்றன.

**b. யாகம் செய்தல்:** ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் பலவற்றில் யாகம் செய்தல் தொடர்பான நடைமுறைகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. ஏலவே சமய வரலாற்றுக் கதைகளிலும் ஆலய வழிபாட்டு கிரியைகளிலும் யாகம் செய்தல் தொடர்பான செய்திகள் உள்ளமை இங்கு கவனிப்பிற்குரியது. ஓமகுண்டத்தில் யாகம் வளர்த்து இறைவனை அர்ச்சித்தல் பற்றி வெருகல் சித்திர வேலாயுதர் இலக்கியம் விபரிக்கிறது.

*''புந்திமகிழ்ந் தந்தணனும் பூவிலிசைசேர் குமர*
*தந்திர விதியின் படியே தான் சடங்கு செய்யலுற்றான்''*[6]

என்பதில் குமாரதந்திர விதிப்படி இறைவன் வீதியுலாவிற்கு முன்னர் மேற்கொண்ட சடங்கு குறிப்பிடப்படுகிறது. இங்கு அறுகோண வடிவமாக ஓமகுண்டம் அமைத்து யாகசாலையின் நாற்புறமும் கும்பங்களை வைத்து அக்கினி வளர்த்து நெய் சொரிந்து ஆகுதி முடித்து அபிஷேகம் செய்தமை பற்றிய விபரிப்பானது யாகம் நடைபெற்ற முறையைக் குறிப்பதாய் உள்ளது.

**c. நேர்த்திக்கடன்:** இறை வழிபாட்டு மரபில் யாதேனும் ஒரு நோக்கம் கருதி நேர்த்தி வைத்தல், தேங்காய் உடைத்தல், பாற் பொங்கலிடல், காணிக்கை செலுத்துதல், அபிஷேகம் செய்தல் முதலான சமயம் சார் வழிபாட்டு நியமங்கள் அக்கால வழக்கில் இருந்துள்ளன.

*''ஐங்கரற்குத் தேங்கா யறுநூறு தானுடைத்து*
*இங்கிதப்பொற் பொங்கலிடுவமென நேர்ந்திடுவார்''*[7]

என்ற வெருகல் சித்திரவேலாயுதர் காதல் செய்யுள், நேர்த்தி பற்றிக் குறிப்பிடுகிறது. மக்கள் தமக்கு வந்த நெருக்கடியைத் தீர்க்க வழியறியாத சூழலிலேயே இறைவனிடம் சரணடையும் நிலை தோன்றுகிறது. இங்கு மக்கள் தமது வேண்டுதல்களை இறைவனே தீர்க்க வேண்டும் என வேண்டித் தமது நேர்த்திகளை முன்வைத்துள்ளனர்.

**d. பலியிடல்:** சிறுதெய்வ வழிபாட்டு மரபில் பலியிடல் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமைக்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காட்டிலுறு மாடனோடு காடன் கறுப்பன் முன்னோர்க்கு
காட்டுக் கிடாயறுநூ றன்பாக வெட்டு மென்பார்''[8]

என்ற வெருகல் சித்திர வேலாயுதர் காதல் செய்யுள் மாடன், காடன், கறுப்பன் முதலான தேவதைகளுக்கு அறுநூறு கிடாய் வெட்டிப் பலியிட்டமை பற்றிய தரவைச் சுட்டியுள்ளது. தமிழர் வழிபாட்டு மரபில் நிலவிவந்த இவ்வாறான பலியிடல் நிகழ்வுகள் ஒல்லாந்தர் காலத்தில் பரவலாக நிகழ்ந்து வந்துள்ளமை கவனிப்பிற்குரியதாகும். மேற்குறிப் பிடப்பட்ட பலியிடல் தொடர்பான தரவானது கிழக்கு மாகாணத்தின் கொட்டியாரப்பற்றுப் பகுதியில் நிகழ்ந்துள்ளது. அதேவேளை வடக்கிலும் இவ்வாறான பலியிடல் செயற்பாடுகள் நிகழ்ந்துள்ளன. அக்காலப் பகுதியில் நவாலிப் பகுதியில் உள்ள தூக்கிணி வைரவர் கோவிலிலும் வருடந்தோறும் ஆடுகள் வெட்டப்பட்டமை தொடர்பான செய்தியை மருதடி விநாயகர் ஆலய வரலாறு குறிப்பிடுகிறது.[9] ஆலயங்களை மையப்படுத்தி இவ்வாறான பலியிடல் செயற்பாடுகள் அக்காலத்தில் வேறுபல இடங்களிலும் நிகழ்ந்துள்ளன எனக் கூறப்படுகின்ற போதிலும் அதற்கான இலக்கிய ஆதாரங்களைப் பெறமுடியாதுள்ளது.

கிராமங்கள் தோறும் நிலவிய சிறு தெய்வ வழிபாடானது சமூகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு மக்களோடு நெருங்கியதாகவும், மக்களாலேயே வழிபாட்டுச் சடங்குகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் இருந்துள்ளமை கவனிப்பிற்குரியது. பேச்சியம்மன், நாச்சியார், வல்லியக்கன், அண்ணமார், கண்ணகி, வீரபத்திரர், இளந்தாரி, வயிரவர் எனச் சிறு தெய்வங்களின் முக்கியத்துவம் சமூகத்தில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கினைப் பெற்றுத் திகழ்ந்துள்ளமை வெளிப்படையாகும். இம்மரபு பிற்பட்ட காலத்தில் சமஸ்கிருத மயமாக்கலின் பாதிப்பால் மாற்றங்காணத் தொடங்கியமை சிறு தெய்வ வழிபாட்டு மரபில் தாக்கத் தினை ஏற்படுத்தியுள்ளது.

**e. உலாவருதல்:** இறைவன் வீதியுலாவரும் நிகழ்வானது பெரும் சடங்காக நிகழ்ந்துள்ளது. இறைவன் உலாவரும் பகுதியெங்கும் தூய்மைப் படுத்தப்பட்டு பந்தல் அமைத்துத் தோரணங்கள் கட்டி நிறைகுடம் வைத்து, பூங்கொத்துக்களைப் பரப்பி, வாசனைப் பொடிகளைத் தூவி, வாத்தியங்கள் ஒலிக்க ஆலவட்டம், கொடி, குடை, பாட்டு, வசந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து முதலான வற்றுடன் உலாவருதல் நிகழ்ந்தமை பற்றி வெருகல் சித்திரவேலாயுதர் காதல் இலக்கியம் விபரிக்கிறது.

இறைவன் உலாவருவதால் உலகில் நன்மை விளையும் என்ற நம்பிக்கை இருந்துள்ளது. வயல் வளம் பெருக, அறம் வளர, சமய அடையாளங்கள் பேணப்பட இறைவனின் ஆசி கிட்டும் என மக்கள் தம்மை நோக்கி வரும் இறைவனை வேண்டி வழிபாடியற்றியமையை இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

*''சீருடைய தென்வெருகற் சித்திர வேலாயுதவேள்*
*பாருலகோர் காணப் பவனிவந்தார் வீதிதனில்''[10]*

என முருகன் உலா வந்தமையை வெருகல் சித்திர வேலாயுதர் காதல் இலக்கியம் வெளிப்படுத்தியுள்ளது.

இறைவன் மட்டுமன்றி சமூகத்தில் செல்வாக்கு மிக்க அதிகாரத் தரப்பினர், மன்னர் முதலானோரும் உலா வந்துள்ளமை தொடர்பான விடயங்கள் இலக்கியங்களில் உள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் தெய்வமாக வழிபடப்பெற்ற யாழ்ப்பாண மன்னர் கால அரசனான கைலாயநாதன் உலாவருதல் தொடர்பான விபரிப்பு பஞ்சவன்னத் தூதில் இடம்பெற்றுள்ளது. வன்னியர், முதலியர், அண்ணமார் முதலான பலர் புடைசூழ இளந்தாரி உலா வந்ததாகவும் அவ்வுலாவில் அலங்காரங்கள், இசை, ஆடல் முதலான அனைத்து சீர்களும் நிகழ்ந்ததாகவும் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

*''மாக்கயத்துத் தடந்தாமரைத் தாளிணையை மகிழ்ந்து*
*பரவுநின் னடியார்தம் வறுமையை*
*நீக்கியருந் துயரெதுவு மின்றிநின்னடி நேசித்து*
*அன்பர்கள் வாழவருள் செய்குவாய்''[11]*

என மக்கள் பலவாறு வேண்டிக் கொண்டமையையும் பஞ்சவன்னத்தூது நூல் குறிப்பிட்டுள்ளது.

f. **ஞானஸ்நானச் சடங்கு:** கிறிஸ்தவ சமய நடைமுறைகளில் ஞானஸ்நானச் சடங்கு பிரதான இடத்தைப் பெறுகிறது. சமய ரீதியாகக் கிறிஸ்தவன் என்ற அடையாளத்தையும், அங்கீகாரத்தையும் தருவதாக இச்சடங்கு அமைகிறது. திருச்செல்வர் காவியத்தில் ஞானஸ்நானம் தொடர்பான செயற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ii. சமூகச் சடங்குகள்**

a. **திருமணச் சடங்கு:** மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும்.[12] தமிழ்ப் பண்பாட்டு மரபில் இத்திருமணமானது காலனிய ஆதிக்கத்தின் பிடியிலும் தொடர்ந்தமைக்கு ஒல்லாந்தர் ஆட்சியில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் சான்றுகளாகும்.

பெண்கள் கல்வி கற்பதற்கான சூழல் பெரிதும் ஊக்குவிக்கப்படாத நிலையில் அவர்களை இள வயதிலேயே திருமண பந்தத்தில் இணைக்கும் வழக்கம் இருந்துள்ளது.

*''கொங்கை யுரந்தடியாக் குழன்முடியாக் காலத்தே*
*மங்கலநா ணெனக்கணிந்து வரைந்ததுவு மறந்தனையோ''*[13]

என்ற பறாளை விநாயகர் பள்ளுச் செய்யுள் இளவயதுத் திருமணத்தின் விளைவுகளைக் குறிப்புணர்த்துகிறது. சிறுவர் திருமணங்கள் தொடர்பாக போல்டியஸ் சுட்டிக்காட்டியுள்ள விடயங்களும் கவனிக்கத்தக்கவை.

"Their females marry whilst very young, in their 10th or 11th year of age, and frequently become a mother in their 13th and 14th year"[14] எனப் பெண்ணின் திருமண வயதையும் தாயாகும் வயதையும் சுட்டிக் காட்டிய போல்டியஸ்

> "I have repeatedly declined this interference, with the sole view of discouraging such proceedings, seeing that these children on arriving to mature years might not only easily change their minds, but as also paving the way to create feelings of inconstancy and disgust hereafter in the married couple".[15]

என்பதன் மூலம் இளவயது மணத்தால் அன்று ஏற்பட்ட உளம்சார் நெருக்கடிகளை வெளிப்படுத்தியுள்ளமை பிரதானமாகும்.

திருமணத்தில் பேச்சுத் திருமணம், காதல் திருமணம் என இருநிலைகள் நிலவியுள்ளன. பேச்சுத் திருமணத்தில் ஆண் வீட்டார் தமது தகுதிக்குப் பொருத்தமான இடத்தில் பெண்ணை எடுக்க விரும்பி மகட் பேசுதலை மேற்கொள்ளுதல் மரபாகும்.

*''அங்கலப நாபனுக்கே அங்கே எங்கள் அலங்காரரூபனுக்கு அந்த*
*அரிவைசிகா மணியைத் தரணியிற் புகழ்பெறப் பிறவருன்னி*
*மணம் பேசி வைப்போமே''*[16]

என்று அலங்காரரூபனுக்கு மகட்பேசும் விடயம் அலங்காரரூபன் நாடகத்தில் இடம்பெற்றுள்ளது. திருமணம் புரிதல் என்பது உறுதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் திருமண நாட்குறித்தல், ஆடையணிகளை ஏற்பாடு செய்தல் என திருமண முன்னாயத்தங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. வன்னிப் பகுதியில் திருமணம் செய்ய முன் அதனைப் பற்றி முதலில் வன்னியருக்குத் தெரிவிக்கும் வழக்கம் இருந்துள்ளது. திருகோண மலையில் மணம் முடிக்கும் தம்பதியர் வன்னியர் முன்னிலையில் ஒப்பந்தம் செய்ததன் பின்பு அவரவர் சமயாசாரப்படி திருமணம் செய்துகொண்டனர்[17].

காதல் திருமணமானது அகம் கலந்த உறவாக இருந்தாலும் கூட உறவினரால் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்தே பிரச்சினையற்றதாக அமையும். பல்வேறு சோதனைகளைத் தாண்டி காதல் திருமணம் நிகழ்ந்தமைக்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

காதலை முதலில் ஆண் வெளிப்படுத்துதலே மரபாக இருந்துள்ளது. மனதில் விருப்பம் இருந்தாலும் பெண் அதனை வெளிப்படையாகக் கூறுதல் நாணத்துக்கு மாறானது எனும் கண்ணோட்டம் அக்கால சமூகத் திலும் நிலவியுள்ளது. இதற்கு மாறாகப் பெண்கள் காதலை வெளிப் படுத்திய நிகழ்வுகள் அருந்தலாக நிகழ்ந்துள்ளன. அனுவுருத்திரன் நாடகத்தில்

*''அம்புவியில் மாந்தர் அரிவையரைத்தான் துரந்து*
*வெம்பிவிரக விதனமதைச் சொல்வதல்லாற்*
*கொம்பனையார் தாமாகக் கூறா ரென்னாசையினால்*
*நம்பி உரைத்தேன் நகைக்கிடமாய்ப் பண்ணாதே''*[18]

எனும் வசந்தசுந்தரியின் கூற்று அவளது உள்ளார்ந்த மனவிருப்பை வெளிப்படையாய் முன்வைக்கிறது,

- **சைவ - கிறிஸ்தவ திருமண நடைமுறைகள்**

தமிழர்களின் திருமண நடைமுறையானது ஆரம்பகாலத்தில் இயல்பான வகையில் இயற்கையோடு ஒன்றியதாக இருந்தது. ஆரியக்கலப்பு தமிழ் நாட்டைப் போல ஈழத்திலும் செல்வாக்குப் பெறத் தொடங்கிய நிலையில் பிராமணர்கள் முன்னிலையிலேயே திருமணச் சடங்குகள் நிகழ்ந்தன. அலங்காரம் நிறைந்த பந்தலில் பறை உள்ளிட்ட வாத்தியங்களின் ஒலியோடு திருமணச் சடங்கு நிகழ்ந்துள்ளமையை திருச்செல்வர் காவியம் குறிப்பிடுகிறது.

*''காசினியோர் பூத்தெளிக்க - இளம் கன்னியர்கள் சூழ்ந்து வாழ்த்திவர*
*மேலாய் ஆலாத்தியெடுக்க - நல்ல விவாகம் முடித்தனரே''*[19]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அலங்காரரூபன் நாடகம் திருமணத்தில் பூச்சொரிதல், கன்னியர் சூழவரல், ஆலாத்தியெடுத்தல் முதலான நடைமுறைகளைப் பதிவு செய்துள்ளது.

மங்கலநாண் கட்டுதலே சடங்கின் பிரதான அம்சமாகும். திருமணம் முடித்தமைக்கான அடையாளமாகவும், திருமணத்தின் ஒரு குறியீடாகவும் தாலி முக்கியம் பெறுகிறது. தாலி கட்டியதனைத் தொடர்ந்து திருமணச் சடங்கில் கூடியிருந்த பெரியோர் மணமக்களை வாழ்த்துதல் நிகழ்வும் பிரதான இடத்தைப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

*''சங்கொலி மறையொலி தழைக்கத்தையறன்*
*செங்கையங்குலிபிடித் தெழுந்து செல்வனு*
*மங்கியைமும்முறை வலம்வந்தம்மிகாற்*
*பங்கயம்பட வடமீனும் பார்த்தனர்''*[20]

எனும் திருச்செல்வர் காவியச் செய்யுள் அக்கினியை மூன்று முறை சுற்றிவரல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் ஆகிய சடங்கினை மணமக்கள் மேற்கொண்டமை பற்றிக் குறிப்பிடுகிறது.

கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயங்களுக்கிடையே திருமணச் சடங்கு சார்ந்து நுண்மையான வேறுபாடுகள் உள்ளன. கத்தோலிக்க சமயத்தவர் தமது திருமணச் சடங்கைப் புரட்டஸ்தாந்து முறைப்படியே நிகழ்த்த வேண்டும் என ஒல்லாந்தர் பணித்தனர். இவ்வாறான அழுத்தம் ஒல்லாந்தரால் ஏற்படுத்தப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன.

''அக்கோவில்களிலே தங்கள் சமயக் குருவானவரை நியமித்து அனைவரும் அந்தக் கோவில்களிற் போய் அறிவு கேட்கவும் கலியாணம் கைபிடிக்கவும் மற்றச் சடங்குகள் எவைகளையுந் தங்கள் சமய விதிப் படிதான் செய்ய வேண்டுமென்று அவ்வுலாந்தே சாட்சியார் பலவந்தம் பண்ணி வந்தார்கள்''[21]

என்ற யாழ்ப்பாண வைபவ மாலை உரைப்பகுதியானது ஆலயத்தை மையப்படுத்தி நிகழ்ந்த திருமணச் சடங்கைச் சுட்டுகிறது.

"In later years we notice still further relaxations. For instance, in the political council meeting of the Dutch Government in Ceylon, held on the 31st, July 1762. Decision was made to accommodate the request of Roman Catholics that they be not obliged to solemnize their marriages in the Dutch Reformed church."[22]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் தரவு ஆரம்பத்தில் ஒல்லாந்தரது அதிகார நெருக்கடிகளையும் பிற்பட்ட நிலையில் ஏற்பட்ட தளர்வுகளையும் திருமண நடைமுறையோடு தொடர்புபடுத்தி விளக்கியுள்ளது.

b. **மரணச் சடங்கு:** மரணம் என்பதை இயற்கையின் நிகழ்வாகச் சித்திரிப்பதோடு இறப்பிற்குப் பின்னரான மறுமையின் நிலை பற்றியும் சிந்திக்கும் நோக்கை ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த சைவ, கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயம் சார்ந்த இலக்கியங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இறந்தவர் குறித்து இரங்குதல், ஒப்பாரி வைத்தல், உரிய சமயச் சடங்குகளை நிறைவுசெய்தபின் பாடை கட்டி சுடலை நோக்கி உடலைக் காவிச் செல்லல் முதலான நடைமுறைகள் குறித்துப் பல்வேறு குறிப்புக் களை ஒல்லாந்தர் கால இலக்கியங்களில் இனங்காண முடிகிறது.

*''கொள்ளி வைக்க முன்னம் குடமுடைத்தமடா''*[23]

எனக் கொள்ளிக்குடம் பற்றிய செய்தி வாளபிமன் நாடகத்தில் உள்ளது.

''தந்தோழாற் சுமக்கிற பாடைகளையு தன் காலால் மிதிக்கிற வடக்கற் பிணங்களையுங் கண்டு சற்றுந் தெரியவில்லையே...''[24]

எனத் தொடரும் ஞான உணர்ச்சி இலக்கியப் பகுதி பாடை கட்டுதல் தொடர்பான தரவினைத் தந்துள்ளது.

காலனிய ஆதிக்கத்தின் விளைவானது ஈழத்தில் ஏலவே இருந்துவந்த நடைமுறைகளில் மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளது. கிறிஸ்தவத்தின் மார்க்க நெறியை மையப்படுத்தி பல்வேறு சடங்குசார் செயற்பாடுகள் தமிழ்ப் புலத்தோடு கலந்துவழங்கிவந்துள்ளமை இங்கு பிரதானமான விடயமாகும். அக்காலத்தில் இவை நேரடியான போதனையின் ஊடாகவும், நூல்கள் வாயிலாகவும் பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள் பாதிரிமாரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை அக்கால இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது.

ஒருவரின் உயிர் பிரிந்த வேளையில் மேற்கொள்ள வேண்டிய சமய நடைமுறைகளைக் கிறிஸ்தியானி ஆலயம் எனும் இலக்கியம் தெளிவாக விபரிக்கிறது. எடுத்துக்காட்டாக,

*''வருவீர்களாக தேவ தூதர்களே முன்னுக்கு வருவீர்களாக*
*இவனுடைய ஆத்துமத்தைக் கையேற்றுக்கொண்டு*
*பராபரனுடைய சன்னிதானத்திலே யொப்புக் கொடுப்பீர்களாக''*[25]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வேண்டுதலானது பிரிந்த உயிரைப் பராபரனிடத்தில் கொண்டு செல்வதற்கான விண்ணப்பமாக உள்ளது.

யோசேவாஸ் முனிவர் சரித்திரத்தில் யோசேவாஸ் முனிவரின் இறப்புத் தொடர்பாக எடுத்துக்காட்டியுள்ள பச்சேக்கு ''தேவ முனிவர்களே வாருங்கள்''[26] எனக் கிறிஸ்தவக் குருக்கள் ஓதியமை பற்றிக் குறிப் பிட்டுள்ளார். இறந்தவர்களுக்காக ஒப்பீசு பாடுதல், பூசை வைத்தல் முதலானவையும் குறிப்பிடத்தக்க சமய நடைமுறைகளாக இருந்துள்ளன.

வியாகுலப்பிரசங்கம் ஒப்பாரி வைத்தல் தொடர்பான விளக்கத் தினைத் தந்துள்ளது.

> ''அழுகையோ டொப்பாரி புலம்பல் சொல்லி மழைபொழிகிற மேரையாய் வழிநீளங் கண்ணீர் தெளித்துக் கல்லறை மட்டா யெழுந்தேற்றம் பண்ணிப் பூமியை யுண்ணடாக்கின ஆண்டவரைப் பூமியிலடக்கம் பண்ணினார்கள்''[27]

என இயேசுபிரானின் கல்லறை அடக்கம் விபரிக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பண்பாட்டு மரபுடன் கத்தோலிக்க சமய நடைமுறையை இணைத்துச் செல்லும் செயற்பாட்டில் ஒப்பாரி வைத்தல் தொடர்பான விளக்கம் கவனிப்பிற்குரியதாகும்.

இறந்தவரது உடலை ஆலயத்திற்கு எடுத்துச்செல்லும் வழக்கம் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயங்களில் உள்ளது.

> ''ஒரு கெற்பாரத்தை உண்டாக்கி கோமளப் பட்டினால் மூடி அதிலே அந்தத் திவ்விய பிரேதத்தை வைத்தார்கள். கோவிலின் நடுவே மகிமையான ஓராசந்தியைக் கட்டி விவித வேலைகளால் அலங்கரித்து மிகுந்த மெழுகுதிரிகளைக் கொழுத்தி அதன்மேலே மூன்று நாள் மட்டும் கெற்பாரத்தை ஸ்தாபித்து வைத்தார்கள்''[28]

என்ற யோசேவாஸின் மரணச்சடங்கு தொடர்பான செய்தியானது பிரேதம் வைக்கப்பட்ட தன்மையையும் மக்கள் அஞ்சலி செய்தமை பற்றியும் குறிப்பிடுகிறது.

உடலை அடக்கத்துக்கு எடுத்துச்செல்லும் வேளை

''சுவாமி கிருபையாயிரும் கிறிஸ்துவே கிருபையாயிரும்''[29] எனும் பாடல் இசைக்கப்பட்டமை பற்றி கிறிஸ்தியானி ஆலயத்தில் குறிப்புள்ளது. உடலை அடக்க தலத்தில் சேர்த்தவுடன் ஓதுதல்[30], இறந்தவர் பெயரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராதனை செய்தல்[31] தொடர்பான விடயங்கள் பற்றியும் கிறிஸ்தியானி ஆலயம் உள்ளிட்ட கிறிஸ்தவ இலக்கியங்கள் விபரித்துள்ளன.

- திவசம்

இறந்தவரை வருடந்தோறும் நினைவுகூரும் வகையில் மேற்கொள்ளப் படும் திவசம் முக்கியமான சடங்காகப் பேணப்பட்டுள்ளது. பஞ்சாங்கத்தை அடிப்படையாகக் கொண்டு திவச நாள் குறிக்கப்பட்டு அந்நாளில் உரிய சடங்குகளை மேற்கொள்ளும் நடைமுறை இருந்துள்ளது. குறித்த திவச நாளில் விரத பூர்த்தி வருமாயின் அவ்விரதத்தை மறுநாள் பூர்த்திசெய்ய வேண்டும் என ஏகாதசி புராணம் குறிப்பிடுகிறது. இக்குறிப்பானது பிதிர் திவசத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

**2. நம்பிக்கைகள்**

நம்பிக்கைகள் பிரித்தறிய முடியா வண்ணம் வாழ்வின் ஒவ்வொரு நிலையோடும் இணைந்துள்ளன. காரணகாரியத் தொடர்புகளோடு நிறுவக்கூடியனவாகவும், அவ்வாறு நிறுவ முடியாதனவுமாக அவை வேறுபட்ட நிலையினைக் கொண்டுள்ளன.

''நம்பிக்கையானது மக்களுடைய உள் உணர்ச்சியின் வெளிப் பாடாகும். இது ஒரு செயலின் காரணம் அல்லது சூழ்நிலைக்குரிய பின் விளைவுகளைக் கொண்டதாகவும் மரபுவழிச் சந்ததி, பின் சந்ததியினரால் கடைப்பிடிக்கும் வழக்கமாகவும் உள்ளது''[32] இந்நம்பிக்கைகள் சகுன நம்பிக்கைகள், சகுனப் பரிகார நம்பிக்கைகள், தந்திர நம்பிக்கைகள் எனப் பலவாறு பகுத்து நோக்கப்படுகின்றன.

**i. சோதிடம்**

மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் சோதிடத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். நாட்கருமங்களைத் தொடங்குதல், ஏற்படுகின்ற பாதிப்புக்கள் முதலானவற்றைத் தீர்த்தல் முதலானவற்றுக்கு சோதிடத்தைத் துணைக்கொண்டுள்ளனர். குழந்தை பிறப்பு, தாய் - சேய் நலம், ஆயுள் என்பன பற்றியும் சோதிடத்தின் ஊடாக ஆராய்ந்துள்ளமை கவனிப்பிற்குரியது.

*''வழுவாக்கலைப் புலவோன் மிக வலிகுன்றிடப் பிறந்தோன்*
*முழுநோயினி லமிழ்ந்துற்றுயிர் முடிவானிது திடனே''*[33]

எனும் சந்தானதீபிகைச் செய்யுளானது புத்திர இறப்புப் பற்றி விபரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிட நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் அக்கால சமூகத்தில் நிலவியிருந்த பிரச்சினைகளை மையப்படுத்தி அவற்றுக்கு சோதிட ரீதியான விளக்கத்தினை முன்வைப்பதாக உள்ளன. குறிப்பாக கயரோகம், வசூரி, இரணரோகம், குட்டரோகம், குய்யரோகம் முதலாக பல நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களைக் குழந்தையின் பிறப்புப் பலனை அடிப்படையாகக் கொண்டு விபரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை மக்களை ஒழுங்குபடுத்துவதற்கான விடயங்கள் பலவும் சோதிட நம்பிக்கையோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளன.

*''பாவையர் பூப்புற் றிருபுன லாடு*
*நாண்முதற் பன்னிரு நாளுந்*
*தாழ்விலாக் கெர்ப்போற் பத்தியா...''*[34]

எனும் செய்யுள் கர்ப்பம் உற்பத்தியாகும் காலத்தைக் குறிப்பிடுகிறது. மேலும் எக்காலங்களில் உடல் உறவு கொள்ளல் ஆகா, தவறான உறவால் ஏற்படும் விளைவுகள் எனப் பல எச்சரிக்கைகளையும் நம்பிக்கையோடு இணைத்து சோதிடம் வெளிப்படுத்தியுள்ளது.

**ii. செய்வினை - சூனியம்**

ஒருவர் தமக்கு வேண்டாதவர் மீது தீங்கினை ஏற்படுத்தும் நோக்கோடு செய்வினை - சூனியம் போன்றவற்றை மேற்கொள்ள முடியும் என மக்கள் நம்பினர். வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், இழப்புகள், நெருக்கடிகள் போன்றவற்றுக்கும் செய்வினை சூனியம் முதலான வற்றுக்கும் தொடர்பு உண்டு எனும் நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவியமையை ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் பல எடுத்துரைத்துள்ளன.

*''தீமைகள் சூனியம் தீரவும்''*[35]

என்ற பஞ்சவன்னத்தூது செய்யுளடியும்

*''வீறி லக்கின மருவினும் பிறர்புரி*
*வினையத் தான்மெலி வானே''*[36]

என்ற சந்தானதீபிகை செய்யுளும் பில்லி சூனியம் பற்றிக் குறிப்பிடுகின்றது. நோய்கள் பற்றிய சரியான புரிதலற்ற நிலையும், மனப்பயமும் இவ்வாறான நம்பிக்கைகளுக்குக் காரணமாக இருந்திருக்குமெனலாம்.

பில்லி சூனியம் முதலான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் பாவம் செய்தவர்களாகக் கருதப்படுவர் என்ற கருத்தை திருச்செல்வர் காவியம் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நிலையமே தெனிலிறந்த காலத்தினீ நிகழ்த்துங்
கொலைபயின்றிடு பில்லி சூனியமுதற் கொடிய
தலைமையாம் பவமனைத்தயுந் தனித்தனி நினைப்புற்
றுலையின் பெய்திடுமெழுகெனவுள்ளத்தையுருக்கி''[37]

இங்கு பில்லி சூனியம் வதைக்கும் தன்மை கொண்டதாகப் புலவரால் இனங்காட்டப்பட்டுள்ளது.

**iii. பேய், பூதம், பிசாசு**

பேய், பூதம், பிசாசு என பலவாறு கூறப்படுகின்ற அமானுஷய சக்திகள் மனிதர்களைப் பாதிக்கும் எனும் நம்பிக்கை மக்கள் மத்தியில் ஆழமாக இருந்துள்ளது. சமய ரீதியாகவும், சமுதாயக் களத்திலும் இவை தொடர்பான அச்சம் அக்காலத்தில் பெருமளவான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. புலமை மிக்கோர் முதல் சாதாரண மக்கள் ஈறாக அனைவரிடத்திலும் இது குறித்தான பயம் நிலவியிருந்தமைக்கு கணபதி ஐயரின் வாளபிமன் நாடக விநாயகர் காப்புப் பாடல் சான்றாகும்.

''வஞ்சன பில்லி பிசாசு குட்டிச் சாத்தான்
வருகூளி அணுகாமல் விட்டோடவும்
அந்தியிற் பேயனும் சந்தியிற் பேயனும்
அச்சுறுத்தும் பேயனும் வந்தணுகாமல் விட்டோடவும்
அக்கரும துட்சணம் இரண்டும் செய்யாமலே
அஞ்ச லென்றெனை யாளுவாய் ஆளுவாயே''[38]

என கணபதி ஐயர் தனது வேண்டுதலை முன்வைத்துள்ளார்.

மனநிலை சார்ந்த பாதிப்புக்கள் ஏற்படும் போதும் அதற்குப் பேய் பற்றியதான விடயமே காரணமாக இருக்கக்கூடும் என உணரப்பட்டுள்ளது. ''பொங்கு கூளி பிடித்தவள்''[39] என்ற பறாளை விநாயகர் பள்ளுப் பாடலடி இதனைக் குறித்து நிற்கிறது.

பேய், பிசாசு எனக் கூறப்பட்டுள்ளவற்றை ஒருவர் மீது ஏவிவிட முடியும் என்பதும் அக்கால நம்பிக்கையாகும். சமய ரீதியாகச் சைவ சமயத்திலும், கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயங்களிலும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆதாரங்கள் இருப்பதனை அக்கால இலக்கியங் களினூடு அறியமுடிகிறது. கத்தோலிக்க சமயத்தவர் தமது சமயம் தவிர்ந்த ஏனைய சமயங்களைப் பசாசின் சமயங்கள் என்றே குறிப்பிட்டுள்ளனர்.[40]

சோதிட ரீதியாகவும் பேய் பற்றிய நம்பிக்கை ஊட்டப்பட்டுள்ளது. ஒருவனது பிறப்பு ஜாதகத்தை அடிப்படையாகக் கொண்டு எவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

பேய் அணுகும் எனும் பலன் விபரிக்கப்படுகிறது. இதனைச் சந்தான தீபிகையில் காணமுடியும்.

''அடுக்க நீள்சர மோரையாய்ச் சேயுற
வோரைக் காதிபன் கூட''[41]

எனும் சந்தான தீபிகைச் செய்யுள் பிறப்புப் பலனில் உள்ள நிலைகளின்படி துஷ்ட தேவதை, பசாசு என்பவற்றால் இறத்தல் உறுதி என குறிப்பிட்டுள்ளது. சமூக மன நிலையில் பேய் தொடர்பான அச்சம் மிகுந்திருந்தமையை சாதாரண மக்களது உரையாடற் கூற்றுக்களின் ஊடாகவும் அறியக் கூடியதாக உள்ளது.

நீ அடித்திடவோ - உனக்கென்ன
பேய் பிடித்ததடா...[42]

எனும் அலங்காரரூபன் நாடக செய்யுளில் வரும் பாத்திரக்கூற்றும் இங்கு பொருத்தமானதாகும்.

**iv. காப்புக் கட்டுதல்**

யாதேனும் தீங்கு நேராதபடி இறைவனிடம் வேண்டிக் காப்பு நூலைக் கட்டும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது. குறிப்பிட்ட நெருக்கடிக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என நேர்த்தி வைத்தும் காப்புக் கட்டுவர். விரத நடைமுறைகளிலும் நூல் அணியும் வழக்கம் இருந்துள்ளது.

''செய்யசம்பூர் மேவுகின்ற தேவி பத்திரகாளிதனக்
கையமற நேர்ந்திழையை யாயிழை கைக் கட்டுமென்பார்''[43]

எனப் பத்திரகாளியை வேண்டிக் காப்புக் கட்டுதல் பற்றி வெருகல் சித்திர வேலாயுதர் இலக்கியம் எடுத்துக்காட்டியுள்ளது.

**v. கர்ப்பம் தரித்தல்**

குழந்தையின் பிறப்பானது பெருந்தவப் பயனாக நோக்கப்படும் மரபு தமிழர் மத்தியில் உண்டு. திருமணம் முடித்து குறிப்பிட்ட காலத்துக்குள் பெண் கருவுறாவிடில் அது பெரும் கவலையைத் தோற்றுவித்துவிடும். குழந்தைப் பேறை வேண்டி விரதம் இருத்தல், அறங்களைப் புரிதல், தவத்தைப் பேணுவோர் துயர்களைதல் என இறைவனை மகிழ்விக்கும் செயல்களைப் புரியும் போது இறையருள் மூலம் குழந்தைப் பேறு சாத்தியமாகும் என திருச்செல்வர் காவியம் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்னவன் றருமச்செய்கை யதுகொடு மடவிதோறுந்
துன்னிய தவத்தர் தங்கள் துயர்களைந் திடவுந் தொன்மை
மன்னுசத்திய வேதத்தின் மகிமையைச் சிந்து நாட்டி
னன்னர் வித்திடவுநாதன் கிருபை நண்ணுற்றதன்றே''[44]

கருவுற்ற காலத்தில் பெண்ணில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தனித் தன்மை யானவை. உடல் ரீதியாக வெளித்தெரியும் மாற்றங்கள் கர்ப்பமுற்றதனைப் பிறருக்கு உணர்த்திடும் தன்மையனவாகும். இடைபுடைத்தல், வதனம் வெண்கோலங்காட்டல், உடல் பெருத்த என ஏற்படும் மாற்றங்கள் பலவற்றைப் பூலோகசிங்க முதலியார் திருச்செல்வர் காவியத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.[45]

**vi. முகூர்த்தம் பார்த்தல்**

அன்றாட செயற்பாடுகளில் நாள் நேரத்தைக் கணித்து சுப வேளைகளில் நல்ல கருமங்களை மேற்கொள்ளல் முகூர்த்தம் பார்த்தலாக அமைகிறது. விவசாய செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது முகூர்த்தம் பார்த்துத் தொடங்கும் வழக்கம் இருந்துள்ளது.

''செம்பருதி வாரமதிற் பூரணை யென்றார்
தேட்கடை யென்றார் சித்த யோகமு மென்றார்
கும்ப முகூர்த்தமென்றார் செம்பொ னோரையென்றார்...''[46]

என பறாளை விநாயகர் பள்ளு விதையிடலுக்கான முகூர்த்தம் பற்றிக் கூறுகிறது.

கடவுள் உலாவரும் போதும், போருக்குப் போகும் வேளையிலும், திருமணத்திலும் முகூர்த்தம் பிரதான இடத்தைப் பெற்றுள்ளது.

''முடித்துப் போட வேணும் - முடிமன்னா
இந்த முகூர்த்த வேளையில் மணம்''[47]

''தனுமுகூர்த்தத்தையாங்கே அன்னவர் மணத்துக்கேயுத் தமமென''[48]

எனும் இலக்கியச் செய்யுள்கள் திருமண முகூர்த்தம் பற்றியதாயுள்ளன. மேற்கொள்ளும் விடயம் நம்பிக்கை தரத் தக்கதாக அமைய முகூர்த்தம் பார்த்தல் உதவியுள்ளது.

மகவு புதுமனையில் புகுவதற்கும் நல் முகூர்த்தம் கணிக்கப்படுதல் மரபாகும்.

''மகவை மனையுய்க்கச் சேருமுகூர்த்தந் தெரிவீரால்''[49]

என்பது திருச்செல்வர் காவியச் செய்யுளடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**vii. சகுனம்**

சூழலில் நடைபெறும் குறித்த சில நிகழ்வுகளுக்கு விசேட காரணங்கள் கொடுத்து அவற்றுக்கு அர்த்தம் கொள்ளும் தன்மை சகுனத்தில் முக்கியம் பெறுகிறது. விடயங்களை மையப்படுத்தி நல்ல சகுனம், தீய சகுனம் என வேறுபடுத்தி நோக்குதல் உண்டு.

''அருக்கனிலே பல்லி இருக்கவுஞ் சொல்லுதடா - அடா
ஆர்களோ எங்கள் ஊருள்ளே கள்வர்
அடுத்துக் கொண்டே''[50]

எனத் துர்நிமித்தத்தை உணர்த்த பல்லி சொல்லல் நிமித்தமாகக் கொள்ளப் படுகின்றது.

மன நெருக்கடியான வேளைகளில் சகுனம் பற்றிய விடயங்கள் பெரிதும் முக்கியம் பெற்றுள்ளன. புறச் செயற்பாடுகள் மட்டுமன்றி உடல் ரீதியாக ஏற்படும் முரணான வெளிப்பாடுகளின் போது நெருக்கீட்டை உணர்த்தும் குறியாகவும் சகுனம் நோக்கப்பட்டுள்ளது.

''துக்கத்தா லழிவுறு பக்கத்தா லொளிபெறு விழியது துடிக்குதே
என் நெஞ்சமிடிக்குதே''[51]

என்ற அலங்காரரூபன் செய்யுள், கண் துடித்தல் பற்றிக் குறிப்பிடுகிறது.

இடது பக்கத்தில் பல்லி சொன்னால் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையும் இலக்கியங்களில் வெளிப்பட்டுள்ளது.

**viii. சாபம் கொடுத்தல்**

மனதில் ஏற்பட்ட பாதிப்பின் விளைவால் அப்பாதிப்பிற்குக் காரணமானவர் ''இவ்வாறு ஆகக்கடவது'' என வெளிப்படுத்தும் மொழியைச் சாபம் எனக் கருதியுள்ளனர். பொதுவாகச் சைவசமயப் புராணக் கதைகளில் சாபம் தொடர்பான விடயங்கள் பல உள்ளன. கத்தோலிக்க சமயத்திலும் சாபமிடும் வழக்கு இருந்துள்ளது. நன்நெறியைப் பேணி நடப்போரின் மனதைப் பாதிக்கும் வண்ணம் எவரேனும் தீமை புரியின் அந்நன்நெறியாளர் உளம் நொந்து கூறிய மொழி பலிக்கும் என்பது சமூக நம்பிக்கையாக இருந்துள்ளது. தீய காரியங்களைப் புரியாமல் அதனைத் தடுப்பதற்கான வழியாகவும் சாபம் தொடர்பான அச்சம் ஊட்டப்பட்டுள்ளது.

யோசேவாஸ் முனிவர் சரித்திரம் என்ற இலக்கியத்தில் சாபம் பற்றிய சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. திருச்சபையின் கடன்களை நிறைவேற்றாமலும் நேரான வழியில் நடவாமலும் இருந்தோரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தமுயன்றும் இயலாத சூழலில் ''தாம் செய்கிற வகையெல்லாம் புறக்கணிக்கிறதைக் கண்டு ராசகுருப்பிரசாதியுடைய ஸ்தானியின் தத்துவத்தினால் அவர்களைச் சபித்துத் திருச்சபைக்குப் புறப்படுத்தினார்''[52] எனும் குறிப்பு சபித்தல் பற்றிய விடயத்தை விளக்குகிறது.

பாதிக்கப்பட்டவர் சாபமிடில் அது பலிக்கும் எனும் அச்சம் சமூகத்தில் இருந்துள்ளமைக்கு அலங்காரரூபன் நாடகத்திலும் சான்றுகள் உண்டு. ''மண்பறிக்க நாக்கிழுத்து பெண்பழி நானிடுவேன்''[53] எனும் அழகவல்லியின் கூற்று கையறு நிலையில் வெளிப்படுவதாகும். இங்கு அழகவல்லியின் சாபத்திற்கு அஞ்சி அரசன் தன் முடிவை மாற்றிக் கொண்டதாக நாடகம் நகர்கிறது. இக்கதையை அன்றைய சமூக மக்களினது மன அலைவரிசையின் வெளிப்பாடாகவே நோக்க முடியும்.

**ix. கனவு**

உறக்கத்தில் காணும் கனவுகளுக்கு அர்த்தம் காணும் இயல்பு வழக்கிலிருந்துள்ளது. நடைபெற இருக்கும் விடயங்களைக் கனவானது முன்னறிவிப்புச் செய்யும் என்பது நம்பிக்கையாகும்.

*''உத்தமமாம் முத்ததனாலே செய்த*
*பெரியமனை தனிலிருக்கும் கிளிப்பேட்டை''*[54]

எனத் தொடரும் அலங்கார ரூபன் நாடகப் பாடல் கனவு பற்றிக் குறிப்பிடுகிறது. துர்நிமித்தங்களைக் கனவில் இனங்காண முடியும் என்ற நம்பிக்கையும் அன்று இருந்துள்ளது. ''பல்லொன்று விழக்கண்டேன்''[55] என அழகவல்லி அலங்காரரூபன் நாடகத்தில் குறிப்பிடுதல் இதனோடு தொடர்புடையதாகும்.

**x. வசியம்**

கிராமிய வழக்கில் ஆட்களைக் கவர்வதற்கு வசியம் செய்தல் பற்றிய விடயம் கூறப்படுகிறது. தான் விரும்பிய ஒருவரை அடைவதற்கு வசியம் செய்ய முடியும் என மக்கள் நம்பியுள்ளனர்.

*''மருந்துக்கு விருந்தா கிக்கொண்டிருந்துட்கிக் கரைந்தான்''*[56]

எனப் பறாளை விநாயகர் பள்ளு வசியம் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆண் - பெண் உறவு நிலையிலேயே வசியம் பற்றிய விடயம் முக்கியத்துவமுடையதாக இருந்துள்ளது. இதனை மேற்குறித்த எடுத்துக்காட்டும் விபரிக்கிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**xi. சத்தியம் பண்ணல்**

ஒரு விடயம் தொடர்பான வாக்குறுதியைத் தருமாறு கோரி ஆலயங்களின் முன்னிலையிலோ, பிள்ளைகள் அல்லது உறுதி வழங்குபவரின் தலையில் கை வைத்தோ சத்தியம் செய்தல் முடிவுகளை மேற்கொள்ளுதலில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

*''தேசார் வலக்கரத்தைச் சென்னிமிசையாக வைத்து*
*ஆசாரங்கள்ளா னிட்ட ஆணைதனை நம்பிவிட்டேன்''*[57]

என்ற வெருகல் சித்திர வேலாயுதர் காதல் செய்யுளில் தலையில் கை வைத்துச் சத்தியம் செய்தல் பற்றிய செய்தி உள்ளது. கத்தோலிக்க இலக்கியங்கள் பலவற்றிலும் சத்தியம் பேணலின் முக்கியமும், பொய்ச் சத்தியத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளும் எடுத்துக்காட்டுகள் ஊடாக விபரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அற்புத வரலாறு எனும் இலக்கியத்தில் ஐம்பத்தி ரெண்டு அற்புதங்கள் கூறப்பட்டுள்ள அதேவேளை 14, 15, 16, 17 ஆம் அற்புதங்கள் பொய்ச் சத்தியம் பண்ணியமையால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக்காட்டியுள்ளன.[58]

''ஞான அப்பம்''[59] என்ற இலக்கியத்திலும் பொய்ச் சத்தியத்தின் தீமை உணர்த்தப்பட்டுள்ளது.

''மகா நெருக்கடியான வேளையிலே சறுவேதானை கொண்டு பொய்ச் சத்தியம் பண்ணினாலும் பாவமுண்டோ''[60]

எனும் வினாவுக்கு ''நிச்சயமாய் பாவம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை''[61] எனும் பதில் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் எத்தகைய வேளையிலும் பொய்ச்சத்தியம் பண்ணாது உண்மையைப் பேணலின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் பொய்ச் சத்தியம் செய்தல் பரவலாக இருந்துள்ளமையை இவ் விடயம் மூலம் அநுமானிக்க முடியும்.

**xii. முழுவியளம்**

வெளியே புறப்படும் பொழுது முழுவியளம் பார்க்கும் மரபு அக்காலத்தில் இருந்துள்ளது. நல்ல முழுவியளத்திற்கு உரியன, தீய முழுவியளத்திற்கு உரியன என அடையாளப்படுத்தும் தன்மை முழுவியளம் பற்றிய விடயத்தில் முக்கியமாகும்.

*''முந்த முந்த உனைவரச் செய்தே*
*அயலார்கள் முகத்தில் விழித்த விதியோ...''*[62]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தண்டிகைக் கனகராயன் பள்ளுச் செய்யுள் தவறான முழுவியளம் பற்றிச் சுட்டியுள்ளது. முழுவியளத்தின் அடிப்படையில் செய்ய முனையும் செயலின் முடிவும் அமையும் என்பது நம்பிக்கை சார்ந்ததாகும்.

**xiii. கண்ணேறு கொள்ளல்**

ஒருவரது பார்வையானது அவா, எரிச்சல் முதலான தீய மனநிலையில் பிறர்மீது படின் அப்பார்வையினால் பாதிப்பு நேரிடும் என மக்கள் நம்பியுள்ளனர். மனவிகாரமானவர்களின் பார்வை ஆபத்தைத் தரும் என்பதே இங்கு பிரதான விடயமாகும்.

> "கோலமுறு முந்தனழ கைப் பள்ளியர்கள்
> கூடியே கண்ணேறு கொண்டனரே"[63]

எனும் தண்டிகைக் கனகராயன் பள்ளுச் செய்யுள் தலைவனுக்கு ஏற்பட்ட துன்பத்திற்கான காரணத்தைக் கண்ணேறோடு தொடர்புபடுத்துவதாய் உள்ளது.

## 3. சட்டமும் சமூக விழுமியங்களும்

ஒல்லாந்தர் காலச் சமூகம் அந்நிய அதிகாரத்தின் நெருக்கடியின் கீழும், சுதேசிய மட்டத்தில் நிலவிய சிக்கலான சூழலின் புறநிலையிலும் முக்கிய மான சமூக அரசியல் சார் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. இதன் விளைவால் சமூகத்தில் மக்களை ஒழுங்குபடுத்துவதற்கும், வாழ்க்கையின் போக்கைத் தெளிவுற ஆற்றுப்படுத்துவதற்குமான தேவைப்பாடு ஏற்பட்ட தன் பின்னணியிலேயே விழுமியக் கருத்துக்கள் இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டன. ஒல்லாந்த அதிகார வர்க்கமும் சுதேசியப் புலத்தில் தமது நிர்வாகக் கட்டமைப்பை இலகுவாக முன்னெடுத்துச் செல்வதற்கு தமது ஆட்சிப் பகுதியில் நிலவிய சமூக வழக்காறுகளைத் தொகுத்துச் சட்டரீதியான ஆவணமாக மாற்ற எடுத்த முயற்சியாகத் தேச வழமைச் சட்டத்தின் தொகுப்பைக் கொள்ள முடிகிறது.

தேசவழமைச் சட்டமானது 1707ஆம் வருடத்திலே ஒல்லாந்த அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்டது.[64] இது ஈழத்தின் வடக்குப் பகுதியை மையப்படுத்தியதாகவே அமைந்தது. கிழக்குப் பகுதியில் மருமக்கள் தாய முறைமை நிலவியதென்பது கவனத்திற்குரியது. தேசவழமைச் சட்டத்தைப் போல மருமக்கள் தாயமுறையை உலாந்தாக் காரர் கோவைப்படுத்திச் சட்டமாக்கவில்லை. ஆனால் உலாந்தாக்காரரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியில் அமைந்திருந்த நீதிமன்றங்களிலே ஆதனங்கள் சம்பந்தமான வழக்குகளைப் பாரம்பரியமான வழமைகளின் அடிப்படையில் விசாரணை செய்து தீர்ப்புகளை வழங்கியுள்ளார்கள்.[65]

சீதனம், ஆதனம், வியாபாரம், கடன், சடங்குகள் முதலான விடயங்கள் குறித்த விரிவான விளக்கங்களும் பிரதேச, சமூக ரீதியிலான வேறுபாடுகள் ஊழியம் தொடர்பான தரவுகளும் தேச வழமைத் தொகுப்பில் முக்கியத் துவம் பெற்றுள்ளன. மேலும் அக்கால சமுதாயத்தில் நிலவிய சாதியப் பிரிவுகளும் தொழில்சார் கடமைகள் குறித்தும் அடிமைகள் தொடர்பாகவும் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் அக்கால சட்டரீதியான அணுகு முறையில் சமூகப் பிரிவுகள், வழக்காறுகள் பெற்ற இடத்தைக் கணிக்க உதவுகிறது.

"There are also many native customs according to which civil matters have to be settled as the inhabitants would consider themselves wronged if the European laws he applied to them, and it would be the cause of disturbances in the country."[66] என்ற சுவார்டிகோனின் கருத்து அன்றைய சட்ட ஆட்சியின் தன்மையை அறியத் துணை நிற்கிறது. சட்டத்தின் அடிப்படையில் 'கோடு' பற்றிய புரிதல் சமூக மட்டத்தில் நிலவியுள்ளது.

*''என்னை ஆட்டி அலைத்திப்போ - கோட்டுக் இழுக்கிறார் என் செய்வேன்''*[67]

என்ற அலங்காரரூபன் நாடகச் செய்யுள் கோடு பற்றிய விடயத்தைத் தந்துள்ளது.

மக்கள் மத்தியில் இறைவனை முன்னிலைப்படுத்திய விழுமியக் கருத்துக்கள் இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இறை வனைத் துதிப்பதன் ஊடாக அனைத்துச் சிறப்பினையும் அடையலாம் என்பதையும் இப்பிறவியில் நல்ல வகையில் வாழ்வதன் ஊடாக மோட்சம் கிடைக்கும் என்பதனையும் சிவராத்திரி புராணம் உள்ளிட்ட இலக்கியங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

*''பத்திரு மாதங் கருவயி னூறிய பாழுடம்பை*
*வைத்திரு மாதங்க தென்றிசைக் கூற்று வருங்கடைக்கே''*[68]

எனும் மறைசை அந்தாதிச் செய்யுள் இவ்வுலக வாழ்வின் நிலையற்ற தன்மையை வலியுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிறப்புக்குப் பின் சாவு சாவுக்குப்பின் நடு என்று சருவேஸ்வரனால் நிருபிக்கப்பட்டதே''[69] என வாழ்வை ஒழுங்குபடுத்தும் வகையிலான சிந்தனைகள் அன்றைய சமூகத்தில் நிலவியுள்ளன.

## 4. வழக்காறுகள்

### i. பெயரிடல்

தமிழ்ச் சமூகத்தின் அடையாளம் சார் குறியீடுகளில் பெயரிடல் பிரதானமான இடத்தைப் பெற்றுள்ளது. பொதுநிலையில் மொழியால் தமிழர்கள் என்ற நோக்கு தமிழர்களைக் குறித்து இருந்தாலும் அவர்களது மனநிலையில் குழும உணர்வுகள் மறைமுகமாகவும், வெளிப்பட்டும் இருந்துள்ளமைக்கு அவர்தம் பெயர்சார் விளக்கம் தகுந்த புரிதலைத் தருவதாயுள்ளது.

**a. அதிகார வர்க்கப் பெயர்கள்:** பெயர் சார்ந்த நோக்கில் ஒருவரது இயற்பெயர் மட்டுமல்லாது மதம், தொழில், பட்டம், அதிகாரம் சார்ந்து இணைத்துக்கொள்ளப்படும் இணைப் பெயர்களும் முக்கியமானவை யாகும். சமூகப் புலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பிரபுக்கள் தமது சமூக இருப்பை மையப்படுத்தி அமையும் வண்ணம் அடையாளப் பெயர்களையும் வைத்திருந்தனர். தமது பரம்பரையின் தனித் தன்மையை எடுத்துக்காட்டும் வகையிலும் பெயர்கள் அமைந்துள்ளன. இதற்குக் கரவெட்டி வேலாயுதப்பிள்ளையின் தந்தையாரான சேதுநிலைப்பட்ட மாப்பாண முதலியாரின் பெயர் சான்றாகும். இவரது பெயரில் சேது, முதலி ஆகியன தனித்தனியான சிறப்பினைக் கொண்டுள்ளன. முதலியார் என்பது சமூகத்தில் அவர் பெற்றிருந்த செல்வாக்கினை எடுத்துக் காட்டுகிறது.

அரச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சிறப்பினைக் குறிக்கும் பெயர்களைத் தமது பெயர்களின் முன்னொட்டாகச் சேர்த்திருக்கும் வழக்கமும் முற்பட்டகாலத்தில் இருந்துள்ளது. தண்டிகைக் கனகராயன் எனும் பெயர் இதற்கு ஆதாரமாகும். இங்கு தண்டிகையைப் பயன்படுத்துவதற்கான உரிமையைக் குறிக்கும் தகுதி முதலிக்கு இருந்தமையால் அதனைச் சமூக மதிப்புசார் அடையாளமாக்கி தனது பெயரோடு தண்டிகையை இணைத்து தண்டிகைக் கனகராய முதலி எனும் பெயர் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**b. பெயரிடலில் அதிகார அரசியல்:** தமது சமூக இருப்பையும், அரசியல் செல்வாக்கையும் தக்கவைக்கவும், ஒல்லாந்தரை விரோதிக்காது ஒல்லாந்தரது நல்லிணக்கத்தைப் பெறும் பொருட்டும் சைவ சமயிகளாகத் திகழ்ந்த பலர் தம்மை புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவியவர்களாகக் காட்டிக்கொண்டனர். இதற்கு அடையாளமாக அவர்கள் தமது பெயர் களுக்கு முன்பு தொன்பிலிப், தொன்ஜுவான் முதலான பெயர்களைத் தாங்கினர். பொது அரசியல் சார் செயற்பாடுகளில் தம்மைக் கிறிஸ்தவப் பெயர்களோடு இனங்காட்டிய முதலிமார் சிலர் தமிழ் இலக்கியங்களில் தம்மை அடையாளப்படுத்தும் போது அப்பெயர்களைத் தவிர்த்துள்ள மையைக் காணமுடிகிறது.

*''வாளினன் றடக்கைச் சந்திர சேகர*
*மானாமுதலி வாழவே''*[70]

என்றே வில்வராய முதலியின் மகனான சின்னத்தம்பிப் புலவர் சந்திரசேகர முதலியை வாழ்த்தியுள்ளார். இங்கு சந்திரசேகர முதலியோடு தொன் ஜுவான் எனும் சமயப் பெயரை அவர் சேர்க்கவில்லை என்பது கவனிக் கத்தக்கது. இதன்மூலம் சுய அடையாளத்தின் ஊடாகத் தாம் இனங்காட்டப் படுவதையே இவ்வாறு மதம் மாறிய முதலிமாரும் விரும்பியுள்ளனர் என்பது வெளிப்படுகிறது. இங்கு முதலிமாருக்கு மட்டுமன்றி சமூகத்தில் இருந்த பலருக்கும் நெருக்கடிகள் இருந்துள்ளன.

சமூகத்தில் பிராமணர்கள் தமது பெயர்களோடு ஈற்றில் ஐயர், குருக்கள் ஆகிய தகுதிசார் பெயர்களை இணைத்தலை மரபாகக் கொண்டி ருந்தனர். பிராமணர்கள் தமது ஆசாரப்படி பெயர்களை வைப்பதற்கு ஒல்லாந்தர் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தினர். குருக்கள் என்ற பெயரைப் பிராமணர் வைப்பதை ஒல்லாந்தர் விரும்பவில்லை. இதன் ஒரு படியாக தமது அதிகாரத்தைப் பிரயோகித்து அவர்தம் சுய அடையாளத்தைப் பாதிக்கச் செய்யும் வகையில் செயற்பட்டுள்ளனர் என்பதற்குப் பரம்பரை ஏடுகளை மையமாகக் கொண்டு தொகுக்கப்பட்ட மங்களேஸ்வரம் நூலில் சான்றுகள் உள்ளன.

''இப்படி இருக்கும் காலத்தில் எனக்குப் பிள்ளை பிறந்தது. அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய கட்டளைச் சட்டமிருப்பதால் அவர்களுக்கு அறிவித்தேன், அவர்கள் வந்து தண்ணீர் தெளித்து ''தாமன்'' என்னும் பெயர் வைத்துப் போய்விட்டார்கள். குருக்கள் என்று வைக்கப்படா தெனவும் சொன்னார்கள்''[71]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒல்லாந்தரது நெருக்கடியானது மக்களின் சமூக அடையாளத்தை பாதிப்பதாய் இருந்துள்ளமை கவனிப்பிற்குரியதாகும்.

**c. ஒடுக்கப்பட்டோர் பெயர்கள்:** தொழில் சார்ந்த நிலையில் உயர் வர்க்கத் தினரின் கூலிகளாக இருந்த ஒடுக்கப்பட்டோரது பெயர்கள் சாதாரண மக்கட் பெயர்களிலிருந்து எளிதில் வேறு பிரித்தறியக்கூடிய வகையில் இருந்துள்ளன. இலக்கியங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பெயர்களில் பல அளவில் குறுகியதாகவும் ஒத்த ஓசையுடையனவாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

*''சின்னி வன்னி நாகி யேகி*
*திருவி யுருவி குருவியுஞ்*
*சேவி யாவி பூவி யேவி*
*செல்வி தன்னுடன் வல்லியும்*
*பொன்னி கன்னி வேலி பாலி*
*புளுகி சிவப்பி கறுப்பியும்...''*[72]

எனத் தொடரும் பறாளை விநாயகர் பள்ளு செய்யுளில் விவசாயக் களத்தில் தொழில்புரியும் பள்ளியர்களைக் குறிப்பதான பெயர்கள் உள்ளன. இவை இயற் பெயர்களாகவும், சில பட்டப் பெயர்களாகவும் இருக்கக்கூடும். அதிகாரவர்க்கம் தமக்குக் கீழ் தொழில் புரிவோரைத் தொடர்ந்து தொழில் நிலையில் வைத்திருப்பதற்கும், அவர் தம் உள்ளத்தில் தாம் தாழ்ந்தவர்கள் எனும் உணர்வை விதைப்பதற்கும், குழும ரீதியாக அவர்களை அடையாளப்படுத்துவதற்கும் தமது பெயர்களிலிருந்து ஒடுக்கப்பட்டோரது பெயர்கள் வேறுபட்டிருப்பதை விரும்பியிருப்பர் என்பது பிற்பட்ட காலச் சமூக வரலாற்றைத் தொடர்புபடுத்திச் சிந்திப்பின் புரியும். அடிநிலை மக்கள் தமது பெயர்சார் அடையாளப்படுத்தல் பற்றி எத்தகைய விழிப்புணர்வைக் கொண்டிருந்தனர் என்பதை அறிவது சிரமமானது. அதேவேளை பெயரிடலில் நுண் அரசியல் இயங்கியுள்ள தென்பது மட்டும் வெளிப்படை.

**d. பிற உயிரினங்கள் குறித்த பெயர்கள்:** மக்கள் தமது வாழ்வோடு இணைந் திருந்த அஃறிணை உயிர்களையும் அவை தம்மோடு கொண்டிருந்த நெருக்கத்தினையும் வெளிப்படுத்தும் வகையில் அவற்றின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பெயரிட்டு அழைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குட்டை நாம்பன் வெள்ளிக் கண்ணன் குறுங்கழுத்தன்
கூழைவாலன் வெடிவாலன்
வட்டச்செவியன் மொட்டைத்தலை
மோழைக்காளை புள்ளிக்கறுப்பன்
முறிகொம்பன் தறிகொம்பன் சுத்தக் கறுப்பன்...''[73]

ஆகிய பெயர்கள் வயற்களத்தில் உற்பத்தியை ஈட்டித்தந்த மாடுகளை அடையாளப்படுத்துவனவாக உள்ளன. இதேபோல நெல்வகை, மீன்வகை குறித்த பெயர்களும் அக்காலத்தில் வழங்கி வந்துள்ளன. இங்கு குறிப்பிடப்படும் பெயர்கள் இயல்பான தமிழில் அமைந்துள்ளமை தொழில்சார் நிலையில் தமிழர்தம் பெயர்கள் தமிழ் அடையாளத்தை பேணி நின்றுள்ளமையை உணர்த்துகிறது.

**ii. தோற்ற வெளிப்பாடு**

ஒல்லாந்தர் காலச் சமூகத்தில் தோற்ற ரீதியான அடையாளப்படுத்தல் என்பதும் பிரதானமாகும். அணிந்த ஆடைகள் முதல் உடற்தோற்ற நிலை வரை சமூகம் சார்ந்தும் தொழில் சார்ந்ததுமான வெளிப்பாடானது தனித்தன்மை கொண்டதாய் இருந்துள்ளமை கவனிப்பிற்குரியது. சமூகத்தில் உயர்ந்தவர்களாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் தமக்குக் கீழ் இருந்த மக்களை பல வழிகளிலும் சுரண்டியுள்ளனர். அதில் தோற்ற ரீதியான அடையாளமும் பிரதானமாக அமைந்துள்ளது.

"They do not wear their dress in the proper way. Do not cut their hair, and do not wear any golden rings in their ears"[74]

எனத் தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்தான உடற்தோற்றத்தை சுவார்டி கோன் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயக் களத்தில் தொழில் புரியும் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கச்சை கட்டியும் உறுமால் சோரவிட்டும் முறுக்கு மீசை உடையவர்களாகத் தோற்றமளித்துள்ளதை,

''சுற்றுகருங் கச்சைக்கட்டி மாதுளம்பூ வுறுமால்
சோரவிட்டுக் கட்டித்துள்ளூ மீசைமுறுக்கி
வெற்றியரக் குங்குடித்து நீற்றையும் பெருக்கப்பூசி
மேல்வளைய லுந்தரித்து விழிகள் சிவந்து...''[75]

எனத்தொடரும் பறாளை விநாயகர் பள்ளுப் பாடல் பதிவுசெய்துள்ளது. தண்டிகைக்கனகராயன் பள்ளிலும் பள்ளன் தொடர்பான சித்திரிப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கட்டழகாக முறுக்கி விட்ட மீசையும், விளங்கக்
கச்சுறுகாற் பச்சைவர்ணக் கச்சையுங் கட்டி
இட்டமாகவே கரத்திற் றட்டிச் சிரித்து
ஏப்பமிட்டுக் கோப்புடனே யெட்டி மிதித்து
விட்டிலங்க வேநுதலில் வெண்ணீ றணிந்து கொண்டை
வீறாகவே கோலவுறு மாலை யணிந்து...''[76]

என்ற விபரிப்பில் கச்சை கட்டுதல், வெண்ணீறு தரித்தல், கொண்டை மாலை என்பனவற்றைப் பேணியிருப்பவர்களாக அடிநிலை மக்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர். வயலில் தொழில் புரிந்த பள்ளியர் பற்றிய சித்திரிப்பும் அவர்தம் தோற்ற அழகைச் சுட்டுவதாக உள்ளது.

''வஞ்சி யவள் கொங்கைகள் பணைக்க''[77]

என அழகிய மார்புடையவர்களாகப் பெண்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

### iii. உணவுப் பயன்பாடு

உணவானது ஒரு சமூகப் பண்பாட்டின் பிரதான அம்சங்களில் ஒன்றாக அமைகிறது. காலாதி காலமாகத் தொடர்ந்து வந்த சமூக நடைமுறைகளில், பேணப்பட்டு வந்த உணவுப் பண்பாடானது சமூகப் புலத்தில் வேறுபட்ட தேவைகளை மையப்படுத்தியும், சமூக பிரிவுகளின் உள்ளார்ந்த இயங்கியலை அடிப்படையாகக் கொண்டும் நுண்ணிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. சைவசமயப் பின்னணியில் இயங்கிய தமிழ் சமூகத்தில் அன்னியத் தலையீடு நிலவிய காலப்பகுதியில் உணவு சார்ந்த நடை முறைகளில் குறித்த சில மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. அதேவேளை ஒல்லாந்தரது நெருக்கீடுகள் ஓரளவு குறைவாக இருந்தமையால் சமயத்தை மையப்படுத்தி உணவு சார்பான விடயங்களை அழுத்தியுரைக்கும் போக்கும் அதிகளவில் நிலவியிருந்தமையை அக்கால இலக்கியங்கள் எடுத்துக்காட்டியுள்ளன.

**a. விரதகால உணவு:** இறைவனை நோக்கி விரதமிருக்கும் போது உணவைச் சுருக்குதல், குறிப்பிட்ட வேளைகளில் உணவைத் தவிர்த்தல் முதலான நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. பால், பழம், மிளகு, நீர், எள் முதலியவற்றை உட்கொள்ளுதல் பற்றி ஏகாதசி புராணம் குறிப்பிடுகிறது. உட்கொள்வதற்கு உரியன, ஆகாதன தொடர்பான குறிப்புக்கள் அக்கால மக்களது உணவு பழக்கங்களை அறிவதற்கு உதவுகிறது. இறைவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ, அசைவ உணவுகளைப் படைத்து வழிபடும் மரபு அன்று இருந்துள்ளமை கவனிப்பிற்குரியது.

b. **மருத்துவத்தில் உணவு:** இயற்கை மருத்துவம் முதன்மை பெற்றுத் திகழ்ந்த காலத்தில் நோய்க்கு உணவு பிரதான மருந்தாக இருந்துள்ளது. நோயுற்ற காலத்தில் பத்தியம் பேணல் பிரதானமாகும். குறித்த சில நோய்களுக்கு உட்கொள்ள வேண்டிய உணவு வகை பற்றியும் தவிர்க்க வேண்டிய உணவு பற்றியுமான விளக்கம் அக்காலத்தில் உணவே மருந்தாகவும் இருந்துள்ளமையைக் காட்டுகிறது.

d. **சாதாரண உணவு:** மக்கள் தமது அன்றாட வாழ்வில் பல்வேறு வகையான உணவுகளை உட்கொண்டுள்ளனர். தோசை, அப்பம், பிட்டு, சோறு, மீன், கருவாடு, பொரிமா முதலானவை இங்கு குறிப்பிடத்தக்கன.[78]

*''பரிவுறு நெய்பால் பழவகையுடனே*
*அறுசுவை பொலிந்த ஐவகை உண்டி''*[79]

பற்றி பஞ்சவன்னத்தூது விபரிக்கிறது. அடிநிலை மக்கள் உணவில் கள், மாமிசம் என்பனவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன.

*''கள்ளும் நல்ல கொழுந்த மறிக்கறியுங் கூட்டி...''*[80]

உணவாகக் கொண்டமை பற்றி, பறாளை விநாயகர் பள்ளு குறிப் பிட்டுள்ளது.

தொழில்சார் கடமைகளுக்குச் சென்றோர் கட்டுச்சோறுண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.[81] உணவில் பழங்களை அதிகளவில் இணைத்து உட்கொள்ளுவதையும் அக்கால மக்கள் கைக்கொண்டனர். போர்த்துக்கேயரின் தொடர்பாலும் புதிதான பழங்கள் பல தமிழர் புலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

"The soil of Ceylon is very productive of rice and has all valuable Fruits such as pineapple coconut, jacks and the best oranges, lemons and citrons far excelling those of Spainen and Portugal, also plantains, cajou grapes, sweet potatoes, Quiavos papaw and pomegranates..."[82] என அக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த உணவு, பழங்கள் தொடர்பான பால்டியஸின் கருத்து இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### iv. அரங்கேற்றம்

நூல் ஒன்றினை வெளியிடும் இடத்து அதனை துறைசார்ந்தோர் உள்ளிட்ட அவையினர் முன்னிலையில் வெளிப்படுத்தும் வழக்கம் ஒல்லாந்தர் ஆட்சிக் காலப் பகுதியிலும் நிலவியது.

*''வன்னிமை தேசத்தார் மகாநாடுதான் கூடி*
*மின்னுமெழின் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே''*[83]
*''கோதில் புகழ்சேர் வீரக்கோன் முதலிதானியற்றுங்*
*காதலரங் கேற்றுகையிற் காதறனைச் சொல்லாதை''*[84]

எனும் வெருகல் சித்திரவேலாயுதர் காதல் இலக்கிய விபரிப்பில் ''மகாநாடு'' கூடி நூலரங்கேற்றம் நிகழ்ந்துள்ளமை வெளிப்படுகிறது.

நூலைப் பாடத் தொடங்கும் போது கடவுள் வாழ்த்துப் பாடுதல் எனும் வழக்கத்தைப் பொதுவாக எல்லா இலக்கியங்களிலும் காண முடிகிறது. குறித்த சில இலக்கியங்களில் நூலைப் படையல் செய்யும் முறையையும் நோக்க முடியும்.

*''தேவாதி தேவனும் ராசாதி ராசனுமாகிய*
*எங்கள் கரித்தாவான யேசுகிறிஸ்துவுக்குப் பாதகாணிக்கை''*[85]

என ஞான அப்பம் இலக்கியத்தை கபிரியேல் பச்சேக்கு இயேசு கிறிஸ்துவுக்குப் படையல் செய்துள்ளமையைக் காணலாம்.

### v. குழந்தை பிறப்பு

குழந்தைப் பேறானது குடும்ப ரீதியான உறவுக்கான அடையாளமாகவும், பரம்பரையை நிலைப்படுத்தும் விடயமாகவும் விளங்கியுள்ளது. குழந்தையைத் தாய் பெற்றெடுத்தவுடன் உற்றார், உறவினருக்கு அச்செய்தியைப் பரிமாறும் வழக்கம் இருந்துள்ளது. திருச்செல்வராயனின் பிறப்பை சித்திரித்துள்ள புலவர்

*''சங்கமாயிரந்தற் சூழ்ந்த வலம்புரிதரு நன்முத்திற்*
*செங்கணாள் சிறுவற்பெற்றா ளதிர்ந்ததுந்துமிகளம்மா''*[86]

என விபரிக்கிறார்.

பிறந்த குழந்தையை உறவினர்கள் வந்து பார்க்கும் நிகழ்வும் பண்பாட்டு மரபாகும். குறிப்பாகப் பெண்கள் கூடிவந்து குழந்தையின் சிறப்பைப் பார்த்து மகிழ்வர். குழந்தை பிறந்தவுடன் தம்மால் முடிந்த நல்லறன்களைப் புரியும் வழக்கமும் நிலவியுள்ளது. திருச்செல்வராயனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பால் மகிழ்ந்த தந்தை "இறஞ்சிநின்றவர்க்கரு ளீயந்துகையினான்"[87] எனப் பூலோகசிங்க முதலியார் குறிப்பிட்டுள்ளார்.

**vi. குழந்தையின் பலன் பார்த்தல்**

குழந்தை பிறந்த காலத்தைச் சரிவரக் கணித்து அதன் எதிர்காலம் எப்படி அமையும் எனச் சோதிட ரீதியாகப் பலனை அறியும் வழக்கு தமிழர் மத்தியில் உள்ளது.

*"திளங்கோ தாலமுழுதுமரசாட்சி தவிரானென்னத்தமிழ் முனிவர்*
*சீலமுறுசோதிடத்தெழுதிச் செப்பாநின்றார் தப்பாதால்"*[88]

என்பதில் சோதிடப் பலன் குறிக்கப்பட்ட விடயம் விபரிக்கப்பட்டுள்ளது. சோதிடத்தில் எதிர்வுகூறப்படும் ஆபத்துக்கள் சார்ந்த விடயங்களிலிருந்து விலகுவதற்கும், அதன் வீரியத்தைக் குறைப்பதற்கும் பரிகாரங்களை முன்வைக்கும் தன்மையையும் காணலாம். திருச்செல்வர் காவியத்தில் இதற்கு சான்று உண்டு.

*"...... கணந்தணந்திடாதுகைத் தாயர் காவல்செய்*
*சுணங்கலில்வனிதையர் தொகுதி சூழவே"*[89]

என்பதில் சோதிட ரீதியான முன்வைப்பு வெளிப்படுகிறது. மேலும் சோதிட நூலான சந்தான தீபிகை சந்தான விருத்தியை மையமாகக் கொண்டு எழுந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சோதிடம் வாழ்வின் பலனைக் கணித்துக்கூறும் அதே வேளை யாவற்றுக்கும் அப்பால் இறைவனின் உள்ளத்தின்படியே யாவும் நடக்கும் என்ற நம்பிக்கையும் இருந்துள்ளது.

**vii. வாழ்த்துப் பத்திரம் வழங்கல்**

திருமண நிகழ்வுகளில் மணமக்களை வாழ்த்தி வாழ்த்துப்பா பாடும் மரபு ஒல்லாந்தர் காலப் பகுதியில் கைக்கொள்ளப்பட்டுள்ளது. தண்டிகைக் கனகநாயக முதலியின் மகனான கந்தப்பருக்கும் குமாரசூரிய முதலியின் மகளுக்கும் நடைபெற்ற திருமணத்தில் மாவை சின்னக்குட்டிப் புலவர் வாழ்த்துப்பாவைப் பாடியுள்ளார். ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ள இவ்வாழ்த்துப்பா

*"ஏர்கொண்ட பரிதாவி வருடமா னித்திங்க*
*ளிருபதுடன் மூன்று திகதி......"*[90]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொடர்கிறது. இங்கு குறிப்பிடப்படும் காலப்பகுதி கி.பி. 1792 ஆனிமாதம் பதினொராம் திகதியாகும்.[91]

அன்றைய காலத்தில் ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்துவந்த போதும் பிரதேச ரீதியாக உடைமையாளர்களாகத் திகழ்ந்த முதலிமார் செல்வாக்குடைய வர்களாகவே இருந்தனர். இவர்களின் பெருமைகளை வியப்புடன் பதிவுசெய்வதற்கும் இவ்வாறான வாழ்த்துப்பாக்கள் உதவியுள்ளன.

viii. **சீதனம்**

திருமணம் உறவில் சீதனமானது பிரதான விடயமாகத் திகழ்ந்துள்ளது. மணமகள் வீட்டார் தனது பிள்ளையின் எதிர்கால வாழ்விற்கு உதவும் வகையில் திருமணத்தின் போது பணமாகவோ, பொருளாகவோ சீதனத்தை வழங்கும் வழக்கம் நிலவியுள்ளது. ஆரம்பத்தில் இச்சீதனம் பெண்ணுக்கான பலமாக இருந்துள்ளதென்பதை இனங்காண முடிகிற தெனினும் அது பிற்காலத்தில் திருமணத்தில் பெண்ணிற்கு பெரும் சிக்கலைத் தோற்று விப்பதாய் மாற்றங்கண்டுள்ளது.

பொருளாதார ரீதியாகப் பலமுடையோர் தமது தகுதியை வெளிப் படுத்தும் வகையில் தமது சொத்துக்களில் பெரும் பகுதியைத் தனது பிள்ளைக்குச் சீதனமாகக் கொடுத்து திருமணத்தினைப் புரிந்துள்ளனர்.

ஒல்லாந்தர் காலத்தில் அதிகாரம் பெற்றிருந்த குமாரசூரியமுதலி தனது மகளை தண்டிகைக் கனகநாயக முதலியின் மகன் கந்தப்பனுக்கு திருமணம் கொடுக்கும் வேளை பெருமளவு சீர்வரிசை செய்தமையை

''கந்தப்ப னுக்குமுயர் வெள்ளைவட் டப்பரிசை
கரடமத கொம்பன்யானை
சீர்கொண்ட பாவாடை சிவிகைமே லாப்பிவை
முதலான வரிசை யெல்லாஞ்
செய்வித்து நன்மணஞ் செய்வித் தனன் குமார
சூர்யமுதலி செகமகிழவே''[92]

என்ற மாவை சின்னக்குட்டிப் புலவரின் வாழ்த்துப்பா விபரிக்கிறது. ஏனையோர் அறியும் வகையில் சீதனம் வழங்கப்படுவது அன்று வழக்கில் இருந்துள்ளமை பிரதானமாகும். நாடக இலக்கியங்களிலும் சீதனம் பற்றிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

''இதுவரை ஓமக்கிரியை பண்ணித் திருப்பூட்டு மங்களமும் செய்தா யிற்று. இனி உமது சீதனங்களைக் கொடுப்பீராக''[93] எனும் அனுவுருத்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக வசனம் சீதனம் பற்றிக் குறிப்பிடுகிறது. தேசவழமைச் சட்டத்திலும் சீதனம் பற்றிய விளக்கம் முக்கியத்துவமுடையதாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. சீதன நன்கொடை, சீதன ஓலை பற்றிய குறிப்புக்களும் இங்கு பிரதானமானவையாகும்.

இவ்வகையில் தொகுத்து நோக்கின் மரபு ரீதியாகப் பேணப்பட்டு கையளிக்கப்பட்டு வரும் சமூக நடைமுறைகள் மக்கள் குழுமத்தின் தனித்த அடையாளத்தைச் சுட்டிநிற்கும் என்பதற்கு ஒல்லாந்தர் காலத்தில் வெளிப்பட்ட மரபுகள் வழக்காறுகள் சார்ந்த அம்சங்கள் ஆதாரங்களாக உள்ளன. மக்களது சிந்தனையில் செறிந்துள்ள பண்பாட்டுக் கூறுகள் கால மாற்றங்களை உள்வாங்கும் தன்மை கொண்டன என்பதற்கு ஒல்லாந்தர் கால அரசியல் சமூகச் சூழல் சான்றாக உள்ளது.

**அடிக்குறிப்புகள்**

01. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *வரதபண்டிதம்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 172.
02. மேலது, ப. 175.
03. மேலது, ப. 176.
04. மேலது, ப. 32.
05. மேலது, ப. 83.
06. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *வெருகல் சித்திர வேலாயுதர் காதல்*, இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு, பக். 51.
07. மேலது, ப. 119.
08. மேலது, ப. 121.
09. *மருதடி விநாயகர் மான்மியம்*, (கிடைக்கப்பெற்ற நூலின் முன் அட்டைப்பகுதி சிதைந்துள்ளது), ப. 06.
10. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப. 65.
11. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *பஞ்சவன்னத்தூது*, சைவசித்தாந்தக் கழகம், ப. 111.
12. பக்தவத்சல பாரதி, 2003, *பண்பாட்டு மானிடவியல்*, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், ப. 379.
13. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ப. 289.
14. Dhillipus Baldaeus, 1960, *True and exat Description of the Great Island of Ceylon Ceylon Branch of the Royal Asiatic*, p. 366.
15. Dhillipus Baldaeus, *மு.கு.நூ.*, p. 368.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வித்தியானந்தன், அ., பதிப்பாசிரியர், 1962, *அலங்காரரூபன் நாடகம்,* இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக் குழு வெளியீடு, ப. 28.
17. பத்மநாதன், சி., 2003, *இலங்கையில் வன்னியர்,* குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப. 81.
18. கந்தையா, வீ.சி., பதிப்பாசிரியர், 1969, *அனுவுருத்திர நாடகம்,* மட்டக்களப்பு பிரதேச கலாமன்ற வெளியீடு, ப. 67.
19. வித்தியானந்தன், பதிப்பாசிரியர், 1962, *அலங்காரரூபன் நாடகம்,* இலங்கைக் கலைக்கழக நாடகக் குழு வெளியீடு, ப. 113.
20. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, *திருச்செல்வர் காவியம்,* திருமறைக் கலாமன்ற வெளியீடு, ப. 48.
21. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *யாழ்ப்பாண வைபவமாலை,* வல்லை ஆவணக் காப்பகம், ப. 94.
22. Dominic Saminathan, 1988, *Lay Ministries in the Diocese of trincomalee – Batticaloa with speific Reference to catec hists in pastoral care,* Roma, p. 12.
23. சிவத்தம்பி, கா., பதிப்பாசிரியர், 1963, *மார்க்கண்டன் நாடகம்,* வாளபிமன் நாடகம், இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி, இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு வெளியீடு, ப. 268.
24. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *ஞானவுணர்ச்சி,* வியாகுலப் பிரசங்கம், சுகிர்தகுறள் ஆகியவற்றின் இணைந்த நூல் புன்னை மாநகர் யக்கோவு றேச்சலேனு முன்னின்று அச்சிற் பதிப்பிக்கப்பட்டது, ப. ௩௨.
25. யாக்கோமே கொன்சால்வெஸ், கிறிஸ்தியானி ஆலயம், கையெழுத்துப் பிரதியாகப் பார்க்கப்பட்டது.
26. ஞானப்பிரகாசர்.சா., பதிப்பாசிரியர், 1910, *யோசேவாஸ் முனிவர் சரித்திரம்,* St.Joseph's Catholic Press, Jaffna, p. 216.
27. யாக்கோமே கொன்சால்வேஸ், 1994, *வியாகுல பிரசங்கம் யாழ்ப்பாணம்,* புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், ப. 88.
28. ஞானப்பிரகாசர்.சா., பதிப்பாசிரியர், *மு.கு.நூ.,* ப. 218.
29. யாக்கோமே கொன்சால்வேஸ், *கிறிஸ்தியானி ஆலயம்,* கையெழுத்துப் பிரதியாகப் பார்வையிடப்பட்டது.
30. மேலது.
31. மேலது.
32. *வாழ்வியற் களஞ்சியம்,* 1995, தொகுதி II, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப. 220.
33. சிவராமலிங்கையர், பதிப்பாசிரியர், *சந்தானதீபிகை,* சோதிடப்பிரகாச யந்திர சாலையில் அச்சிடப்பட்டது, ப. கசா.
34. மேலது, ப. ருங.
35. கந்தசுவாமி, க.இ.க., 1998 பதிப்பாசிரியர், *மு.கு.நூ.,* ப. 112.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. சிவராமலிங்கையர், பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. உஅ.
37. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, *திருச்செல்வர் காவியம்*, திருமறைக் கலாமன்ற வெளியீடு, ப. 167.
38. சிவத்தம்பி, கா., பதிப்பாசிரியர், 1963, *மார்க்கண்டன் நாடகம், வாளபிமன் நாடகம்*, இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி, இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு வெளியீடு, ப. 10.
39. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 254.
40. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. ஙஉ.
41. சிவராமலிங்கையர், பதிப்பாசிரியர், *சமு.கு.நூ.*, ப. உச.
42. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, *மு.கு.நூ.*, ப. 219.
43. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப. 120.
44. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, *மு.கு.நூ.*, ப. 49.
45. மேலது, ப. 49.
46. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 287.
47. சிவத்தம்பி, கா., 1963, பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. 180.
48. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, *மு.கு.நூ.*, ப. 42.
49. மேலது, ப. 61.
50. கந்தையா, வீ.சி., பதிப்பாசிரியர், 1969, *மு.கு.நூ.*, ப. 80.
51. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, *மு.கு.நூ.*, ப. 53.
52. ஞானப்பிரகாசர், சா. பதிப்பாசிரியர், 1910, *மு.கு.நூ.*, ப. 158.
53. வித்தியானந்தன், சு. பதிப்பாசிரியர், 1962, *மு.கு.நூ.*, ப. 56.
54. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, *மு.கு.நூ.*, ப. 91.
55. மேலது, ப. 53.
56. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 282.
57. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப. 116.
58. யாக்கோமே கொன்சால்வேஸ், *அற்புத வரலாறு*, கையெழுத்துப் பிரதியாகப் பார்வையிடப்பட்டது.
59. கபிரியேல் பச்சேக்கு, *ஞான அப்பம்*, கையெழுத்துப் பிரதியாகப் பார்வையிடப் பட்டது.
60. மேலது.
61. மேலது.
62. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், *தண்டிகைக் கனகராயன் பள்ளு*, சென்னை சாது அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. லுலு
63. மேலது, ப. லுலு
64. பத்மநாதன், சி., 2002, *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமை களும்*, குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப. 06

KUC JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. மேலது, ப. 11
66. Hendrick Zwaardecroon, *1910, Memoir Introduction and Notes by the Government Archivist,* p. 49.
67. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, மு.கு.நூ., ப. 49.
68. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, மு.கு.நூ., ப. 93.
69. யாக்கோமே கொன்சால்வேஸ், அற்புத வரலாறு கையெழுத்துப் பிரதியாகப் பார்வையிடப்பட்டது, ப. நய
70. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, மு.கு.நூ., ப. 293.
71. மங்கஙேஸ்வரம், 04.01.202, சிவஸ்ரீ க.மங்களேஸ்வரக்குருக்கள் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டது.
72. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, மு.கு.நூ., ப. 291.
73. மேலது, ப. 284.
74. Hendrick zwaardecroon, 1910, மு.கு.நூ., p. 27.
75. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, மு.கு.நூ., ப. 246.
76. குமாரசுவாமி.வ., பதிப்பாசிரியர், 1932, மு.கு.நூ., ப. *ச*.
77. குமாரசுவாமி, வ, பதிப்பாசிரியர், 1992, சென்னை கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. ரு.
78. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, மு.கு.நூ., ப. 181.
79. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, மு.கு.நூ., ப. 109.
80. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, மு.கு.நூ., ப. 283.
81. மேலது, ப. 31.
82. Dhillipus Baldaeus, 1960, *True and exat Description of the Great Island of Ceylon, Ceylon Branch of the Royal Asiatic,* p. 386.
83. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, மு.கு.நூ., ப. 144.
84. மேலது, ப. 145.
85. கபிரியேல் பச்சேக்கு, ஞான அப்பம், கையெழுத்துப் பிரதியாக பார்வையிடப் பட்டது.
86. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, மு.கு.நூ., ப. 50.
87. மேலது, ப. 53.
88. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, மு.கு.நூ., ப. 53.
89. மேலது, ப. 57.
90. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், 1932, மு.கு.நூ., ப. சஅ.
91. மேலது, ப. சஅ.
92. மேலது, ப. சஅ.
93. கந்தையா, வீ.சி., பதிப்பாசிரியர், 1969, மு.கு.நூ., ப. 155.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IV. கலைகள்

## 1. ஒல்லாந்தர் காலக் கலைகள்

கலை வடிவமானது மனிதனது மன உணர்வுகளின் உந்துகையினால் தோன்றும் அழகியல் சார்ந்த வெளிப்பாடாகும். கலை என்பது ''பண்பாடு'' என்னும் தளத்திலிருந்து பிறப்பது. பண்பாட்டின் தன்மைகள் கலையின் தன்மைகளை நிர்ணயிக்கும். பண்பாட்டு வட்டத்தினுள்ளேயே கலை கருக்கொள்ளப்பட்டு, அறியப்பட்டு ரசிக்கப்பட்டு, பயிலப்பட்டு பேணப்பட்டு குறியீடாகத் தொழிற்படுவதாகும். இங்கு குறிப்பிட்ட சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் கலைகள் அச்சமூகத்தின் இயங்கியலைக் குறித்து நிற்பதாயும், அச்சமூக வாழ்வின் ஏதோவொரு பகுதியோடு நெருங்கிய பிணைப்புடையதாகவும் அமைகின்றன. இதன் விளைவாலேயே அவற்றின் தனித் தன்மைகள் கலைசார் வடிவத்தின் சமூகம் சார்ந்த பிரதிபலிப்பாய், தனித்தனி அடையாளங்களின் வெளிப் பாடாய் உள்ளன எனலாம். இக்கலை வடிவங்கள் ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் கொண்டிருந்த தனித் தன்மை தொடர்பான சமூக, அரசியல் நோக்கமானது காலனிய ஆதிக்கப் பின்னணியில் கலை வடிவங்களின் வெளிப்பாடுகள் குறித்து பன்முகத் தன்மையை அறிவதற்கு உதவுகிறது.

ஆரம்பகாலத்தில் கலை தொடர்பான வரையறையில் பெருமளவான பிரிவுகள் இடம்பெற்றிருந்தாலும் அவற்றில் குறிப்பிடத்தக்க சிலவே நுண்கலைகளாகக் கொள்ளப்படுகின்றன. இங்கு சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலானவையே நுண்கலையுள் அடங்குகின்றன. அதேவேளை பேச்சு, சோதிடம், வைத்தியம் முதலானவையும் கலைகள் எனும் வரையறையில் பிரதானமானவையாக வெளிப்பட்டுள்ளன. மக்களைத் தாம் சார்ந்த கருத்து நிலையில் வழிப்படுத்துவதற்கும், வாழ்வின் நெருக்கடியான விடயங்களில் தீர்வுகளைக் காண்பதற்கும் பொழுதுபோக்கிற்கும் மேற் குறித்த கலைகள் உதவியுள்ளன. இக் கலைகளில் தேர்ச்சிமிக்கோர் குறிப்பிட்டத்தக்க அளவில் இருந்துள்ளமை பிற்காலத்தில் இவற்றின் சமூகப் பரம்பலில் தாக்கத்தை ஏற்படுத்தக் காரணமானது. இவ்வகையில் ஒல்லாந்தர் காலத்தில் கலைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குப் பெற்றிருந்தமையால் அக்கலைகளின் சமூக அரசியல் பின்னணி பற்றிய நோக்கு கலைசார் ஆய்வில் முக்கியமானதாக அமைகின்றது.

**2. கலையும் சமூக அரசியற் பின்னணியும்**

ஈழத்தில் காலனிய ஆதிக்கம் வலுப்பெறத் தொடங்கிய சூழலில் வரலாற்று ரீதியாகத் தனித்துவமான கலை வரலாற்றைக் கொண்டிருந்த ஈழத் தமிழர்கள், தோன்றிய புதிய சூழலில் கலை வெளிப்பாடுகளை முன்னெடுத்த தன்மையையும், வெளிப்பட்ட கலை வடிவங்களின் சமூக அரசியல் பின்னணியையும் ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் பல பிரதிபலிப்பனவாக உள்ளன.

கலையானது மனிதனது திறன்வழி வரும் வெளிப்பாடாகும். பண்பாடு சார்ந்து உருப்பெறும் கலைகள் தலைமுறை தலைமுறையாகக் கையளிக் கப்பட்டு வந்துள்ளன. இக்கலைகள் கால மாற்றங்களுக்கு ஏற்ப சில மாறுதல்களை ஏற்றும், மரபைத் தூயதாகப் பேணியும் வளர்ந்துள்ளன. இந்நகர்வுகளின் வேறுபட்ட நிலைகளை ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இனங்காணக்கூடியதாக உள்ளது.

ஒல்லாந்தர் அரசியல் ரீதியாக ஓரளவு நெகிழ்வுப் போக்கைக் கைக்கொண்டமையால், கிடைத்த வெளியைப் பயன்படுத்திப் பிரதேச ரீதியாகவும், சமூகம் சார்ந்தும், ஆலயங்களை மையப்படுத்தியும் கலைசார் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கலை வளர்ச்சியில் மத நிலைப்பட்ட காரணங்களே பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. ஒருபுறம் சைவசமயம் சார்ந்தவர்கள் தமது சமய அடையாளங்களையும், பண்பாடு சார்ந்த பொழுதுபோக்கு விடயங் களையும் முன்னெடுப்பதற்கு கலை வடிவத்தை ஒரு கருவியாகக் கையாண்டுள்ளனர். அதேபோல கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயப் பிரிவு சார்ந்தவர்களும் ஏலவே சுதேசியப் புலத்தில் வழக்கிலிருந்த வடிவங்களைக் கையாண்டும், புதிய பாணிகளை அறிமுகப்படுத்தியும் தமது கருத்தியலை முன்னெடுக்கும் வகையில் தொழிற்பட்டுள்ளனர். இவ்வகையில் வெளிப்படும் கலை வடிவங்களில் அதனை வெளிப் படுத்துவோரின் அரசியல் பல இடங்களில் உள்ளீடாய் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்நாட்டத்தைத் தூண்டும் வகையிலும் சமய, சமூக, பண்பாட்டு மரபுகளின் வெளிப்பாட்டு வகையாகவும் திகழ்ந்த கலை வடிவங்கள் அக்காலகட்ட அரசியல், சமூகக் கூறுகளைப் பிரதிபலிப்பனவாக அமைந் துள்ளன. சடங்கின் வழிவரும் இக்கலை வடிவங்கள் சமூகத்தவர் மத்தியில் பெருவரவேற்பைப் பெற்றிருந்தமை கலைத் தொழிலாளர் களுக்கான சமூக அங்கீகாரத்தைக் குறிக்கிறது எனலாம். ஒல்லாந்தர் காலத்தில் விதேசியக் கலை மரபுகள் சில அறிமுகமாகிய போதிலும் அவை தமிழர்தம் கலை மரபோடு இணக்கப்படுத்திக்கொள்ளும் வகையிலேயே அமைந்தன.

மேலைத்தேயவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் தமது அடையாள அரசியலை நகர்த்துவதற்கும் புதுமைகளை அறிமுகப் படுத்திய அதேவேளை புலத்தின் கலைகளையும் பெரிதும் கையாண் டுள்ளனர். இது சுதேசியப் புலத்தில் தோன்றிய கலைகள் சமூகத்தோடு ஆழமான உறவைக் கொண்டிருந்த தன்மையைக் காட்டுகிறது.

### 3. கட்டடக்கலை மரபு

ஒல்லாந்தர் காலத்தில் தமிழர்களின் கட்டடக்கலை மரபானது புதிய நுட்பங்கள் சிலவற்றை உள்வாங்கி வளர்ந்துள்ளமையினை அக்காலத்தில் தோற்றம்பெற்ற இலக்கியங்கள் ஊடாகவும், இன்று எஞ்சி நிற்கும் கட்டடங்கள் மூலமும் அறியக்கூடியதாக உள்ளது. போர்த்துக்கேயரின் கலையழிவுச் செயற்பாடுகளால் பெருமளவான கட்டடங்கள் அழிக்கப் பட்டமையும், ஒல்லாந்தர் காலத்திலும் இச்செயற்பாடு சில பகுதிகளில் நடந்தமையும் ஈழத்தில் வடக்குகிழக்கின் கட்டடக்கலை மரபில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தின எனினும் அவற்றைத் தாண்டி அக்காலத்தில் அரசியல், சமய, சமூக நோக்கில் உருவாக்கப்பட்ட கட்டடங்கள் பல அக்கால கட்டடக்கலை மரபினைப் புரிவதற்கு ஏதுவாக உள்ளமை பிரதானமான விடயமாகும்.

#### i. கோட்டைகள்

வடக்கு, கிழக்கில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஒல்லாந் தரால் கோட்டைகள் பல நிறுவப்பட்டன. பொருளாதார, பாதுகாப்பு நோக்கங்களை முன்னிறுத்தி அமைக்கப்பட்ட இக்கோட்டைகள் கடல்வழிப் பாதுகாப்புக் குறித்த ஒல்லாந்தரது கரிசனையை விளங்கிக் கொள்ளத்தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தர் 17ஆம் நூற்றாண்டில் புதிய முறையில் விசாலமான கொத்தளங்களோடு பீரங்கிகளைச் சுலபமாக வைத்து வெடிக்கக்கூடிய மாதிரிக் கோட்டையின் முடக்குகளில் முனைப்புகளையும் அமைத்துக் கட்டப்பட்ட கோட்டைகளைப் பின்பற்றினர்.[1]

கோட்டைகளின் உருவாக்கத்துக்காகச் சைவ ஆலயங்கள் சிலவும் இடித்தழிக்கப்பட்டு அவற்றின் கற்கள் பயன்படுத்தப்பட்டன. காரைநகரில் உள்ள ஆண்டிக்கேணி ஐயனார் கோவில் ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டு அதிலிருந்து பெறப்பட்ட கற்களைக் கொண்டே ஊர்காவற்றுறையில் கடற்கோட்டை கட்டப்பட்டமை இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.[2]

**ii. சைவக் கோவில்கள்**

சைவ ஆலயங்கள் சில ஒல்லாந்தர் காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்டும் ஏலவே இருந்த ஆலயங்கள் பல புனரமைக்கப்பட்டுமுள்ளமைக்கு அக் காலத்தில் தோற்றம்பெற்ற இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

*''வானாருங் கோபுரமு மாமதிலும் மாலிங்கம்*
*தானாரு மண்டபமும் தையலெனுந் - தேனாரும்*
*கோங்கரும் பென்னக் குவிமுலையாள் கோயின்முத*
*லோங்கியசூற் றாலயங்க ளுள்ளவெலாம் பாங்கமைய...''*[3]

எனத் தொடரும் அனந்தசுப்பையரின் பாடலில் வைத்திலிங்கச் செட்டியாரால் கட்டப்பெற்ற வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் பற்றிய விவரிப்பும், ''வாகானவாலயத்தின் மாணிக்கப் பீடம்''[4] வெருகல் சித்திர வேலாயுதர் கோவிலில் அமைந்திருந்தமை பற்றி வெருகல் சித்திர வேலாயுதர் காதல் இலக்கியக் குறிப்பும் ஒல்லாந்தர்காலக் கட்டடக்கலை மரபினை எடுத்துக்காட்டுகின்றன.

ஒல்லாந்தர் தமது ஆட்சியின் பிற்பட்ட காலப்பகுதியில் சமய ரீதியில் ஓரளவு நெகிழ்வான போக்கினைக் கடைப்பிடித்தமை ஆலயங்களின் வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்தது. ஈழத்தில் ஏலவே உருப்பெற்ற கோவில்கள் தமக்கான பண்பாட்டு அமைப்பை வெளிப்படுத்தி நின்ற அதேவேளை ஒல்லாந்தரது கட்டடக்கலை மரபின் பாதிப்பு பிற்பட்ட இந்துக் கோவில்களிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. காலனியம் உள்ளூர் வெளிகளைப் புறமொதுக்கித் தன்னை நிலைநாட்டி விஸ்தரித்துக் கொண்ட உத்தியின் ஒரு நிலையாக இத்தகு கலை வடிவங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய மாற்றத்தை நோக்கும் கண்ணோட்டமும் உண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.[5]

**iii. கிறிஸ்தவ ஆலயங்கள்**

ஒல்லாந்தர் காலத்தில் தேவாலயங்களின் அமைப்பும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. போர்த்துக்கேயர் காலத்தில் உருப்பெற்ற ஆலயங்களோடு ஒல்லாந்தரும் தமது கலைத்துவத்தை வெளிப்படுத்தும் வகையிலான தேவாலயங்கள் பலவற்றையும் அமைத்தனர். ஏலவே இருந்த தேவாலயங்களின் அமைப்புக்களில் தமது பாணிக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தினர். ஒல்லாந்தர் காலத்தில் ஈழத்தின் பல பகுதிகளையும் நேரடியாகப் பார்வையிட்டு தனது அனுபவங்களைப் பதிவு செய்தவர் போல்டியஸ். அவர் தேவாலயங்கள் தொடர்பாகவும் பல குறிப்புக்களை வழங்கியுள்ளார்.

> "Half an hours walk brings you to the Church of Mallagam. Which is built of good lime and stone. With a fine house attached to it. With many arches and long staircase leading to the top of it. The church was started by the Portugezen but finished in our time"[6]

இங்கு கட்டட அமைப்பில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பான தரவுகள் உள்ளன. ஒல்லாந்தர், மக்களைப் பெருமளவில் உள்ளடக்கக் கூடிய வகையில் தேவாலயங்களை அமைத்துள்ளனர். மானிப்பாயில் இருந்த தேவாலயமானது 2000 பேரை உள்ளடக்கக்கூடியதாக இருந்துள்ளது.

> "The church house is built of clay and thatched with atap or plam leaves. Infront of the church, there is a fine tank of wather, where there stood formerly heathen pagode"[7]

எனும் போல்டியஸின் கூற்றானது அக்காலத்தில் தேவாலயத்திற்கு அருகாமையில் வீடு அமைக்கப்பட்டிருந்ததைக் குறிக்கிறது. ஆலயச் செயற்பாடுகளுக்கு உதவும் வண்ணம் இறை பணியாளர் தங்கிச் செயற்பட இவ்வாறான வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். மேலும் அக்காலத்தில் நீர்த்தாங்கி உருவாக்கமும் நிகழ்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் பெருமளவு செலவு இன்றி கட்டடங்களை உருவாக்கி யுள்ளனர். வடக்கு, கிழக்கில் யாழ்ப்பாணத்திலே கட்டட அமைப்பிற்குரிய செலவு மிகவும் குறைவாக இருந்துள்ளமையை சுவார்டிகோன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

> "Lime, stone cooly labour, and timber are obtained free, except palmyra rafters, which, however are not expensive. The chief cost consists in the wages for masonry work and the iron, so that in respect of building Jaffnapatem has an advantage over other places."[8]

ஒல்லாந்தர் தமிழர்களது வளத்தை எவ்வகையில் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர் என்பது சுவார்டிகோனின் அறிக்கை மூலம் வெளிப்படுகின்றது.

## 4. நாடகமும் சமூகத் தொடர்பும்

கலை வெளிப்பாடுகளில் நாடகக் கலையானது தனியான வரலாற்றைக் கொண்டுள்ளது. ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்திற்கு முற்பட்ட காலப் பகுதியிலிருந்தே நாடக அளிக்கைகள் நடைபெற்று வந்துள்ளதெனினும் ஆவண ரீதியாக ஒல்லாந்தர் காலத்திலிருந்தே அவற்றுக்கான எழுத் துருக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. மக்களின் பொழுதுபோக்கு வடிவமாக மட்டுமன்றி அவர்தம் பண்பாட்டு மரபின் வெளிப்பாடாகவும் கூத்துக் கலை முக்கியத்துவம் பெற்றிருந்தது.

புற உலகத் தொடர்புகள் சுருங்கியிருந்த ஒல்லாந்தர் காலத்தில் கிராமிய கலை வடிவங்கள் பெரு வரவேற்பைப் பெற்றிருந்தன எனலாம். இங்கு மதநிலைப்பட்டும், புராண இதிகாசக் கதைகளைத் தழுவியதாகவும், கற்பனைச் சித்திரிப்பிலும் நாடகக் கருப்பொருள்கள் வெளிப்பட்டுள்ளன. அலங்காரரூபன், அனுருத்திரன், வாளபிமன், மூவிராசாக்கள் முதலான கூத்துக்கள் இவற்றைத் தழுவியனவாக உள்ளன. சைவசமயப் பின்னணியை மட்டுமல்லாது கிறிஸ்தவப் புனிதர்கள் வரலாற்றையும், ஐரோப்பாவில் அதிகம் அறியப்பெற்ற அறநெறிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் கூத்துருக்கள் எழுதப்பட்டுள்ளன.

கூத்துக்களில் வடமோடி, தென்மோடி வகையைச் சார்ந்த கூத்துக்கள் ஒல்லாந்தர் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. வடமோடியானது வடநாட்டுப் புராண இதிகாசக் கதைகளை மையமாகக் கொண்டது. போர், வீரம் என்பன இங்கு பிரதான இடத்தைப் பெற்றன. கோபம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகை, வீரம் ஆகிய சுவைகள் இவற்றில் விஞ்சியுள்ளன. அதே வேளை தென்மோடி யானது காதலை மையப்படுத்தியதாகும். நகை, வியப்பு முதலான சுவைகளை இங்கு காணமுடியும். வடமோடியோடு ஒப்பிடுகையில் தென்மோடி விறுவிறுப்பானதாகவும், நுணுக்கமானதாகவும் உள்ளது.

ஈழத்தில் தமிழர் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் பரவலாகக் கூத்து நிகழ்வுகள் நடந்துள்ளன. ஒரு பிரதேசத்தில் உருப்பெற்று அளிக்கை செய்யப்பெற்ற கூத்துரு வேறு பிரதேசங்களுக்குச் செல்லும் போது அக்கூத்தின் எழுத்துருவில் மாற்றங்கள் சில ஏற்படுவதும் உண்டு. யாழ்ப் பாணத்தின் வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள அலங்காரரூபன் நாடகப் பிரதிகளிலே வேறுபாடுகள் பல உள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

**i. நாடகம் குறித்த சமூக எதிர்வினை**

மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்வையும், தமிழர்தம் பண்பாட்டு மரபையும், பொழுதுபோக்கைக் குறித்தும் வெளிப்பட்டனவாக ஒல்லாந்தர் கால நாடகக் கருக்கள் அமைந்தபோதும் அன்றைய சமூகப்புலத்தில் அவை விமர்சன ரீதியாக நோக்கப்பட்டுள்ளமைக்கும் சான்றுகள் உண்டு. அக்காலத்தில் எழுந்த கிறிஸ்தவ இலக்கியங்களில் சில நாடக அளிக்கையை சமய ரீதியான பின்னணியில் விமர்சனம் செய்துள்ளன.

''விளையாட்டுக் கூத்துக்களைப் பார்க்க நாலு சாமமும் நித்திரை மறுக்கிறாய்''[9] என்ற ஞானவுணர்ச்சிப் பகுதி, கூத்து வடிவங்கள் இரவிரவாக நடைபெற்றமையால் அவை சமூகப் பிறழ்வுகளுக்கு வாய்ப்பாக இருந்துள்ளன எனும் கருத்தைக் குறிப்பாகச் சுட்டுகிறது. ஒருபுறம் கூத்து தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றின் தேவைப் பாடுகள் பலரால் உணரப்பட்டே வந்துள்ளன.

''நாட்டுக் கூத்துக்கள், நாட்டு வளத்தின் சின்னங்களாகும். பசியும் பிணியும் நீங்கி மழையும் வளமும் சுரக்க நாட்டில் இன்ப உணர்ச்சி பெருகுகிறது. ஓய்வு நேரங்களிலே மக்கள் பாட்டிலும், கூத்திலும் பொழுது போக்கி இன்பம் காண்கிறார்கள். இதனோடு கலையும் உடன் வளர்கிறது, கலைஞர்களும் தோன்றுகின்றார்கள்''[10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஏ.பெரியதம்பிப்பிள்ளை குறிப்பிட்டுள்ள கருத்து பிற்காலத்தில் தொடர்ந்த கூத்துக்கலையின் உயிர்ப்பினைச் சுட்டுகிறது.

### ii. நாடக வெளிப்பாடு

ஒல்லாந்தர் காலத்தில் நாடக இலக்கியங்களாகக் கிடைக்கப்பெற்றன தவிர ஏனைய இலக்கியங்களிலும் கூட நாடக அம்சங்களைக் காண முடிகின்றது. பிரதேச ரீதியாகக் கூத்துக்கள் பற்றிய புரிதல் சிறப்பாக இருந்தமையாலேயே அதன் வெளிப்பாடுகள் அனைத்து நிலைகளிலும் பிரதிபலித்தன. எழுத்துக்களில் அமையாத பறைமேளக் கூத்து, மகிடிக் கூத்து முதலானவற்றின் காலத்தை வரையறுப்பது இடர்பாடாகும். இன்று எழுத்துருவில் கிடைக்கப் பெறும் வசந்தன் கூத்துப் பாடல்கள் முதலானவை ஆடப்படும் சமூக மக்களின் வாழ்வோடு கலந்தனவாகத் தலைமுறைகளைக் கடந்து கையளிக்கப்பட்டு வந்துள்ளன. குரவைக் கூத்து, கரகம், காவடி முதலான கலைகளும் சமயக் களம் சார்ந்தும் சமூகச் சடங்குகளிலும் முக்கியம் பெற்றுள்ளன. சமய விழாக்களிலும் அரச ஊர்வலங்களிலும் கூட நாடக அளிக்கைகள் நிகழ்ந்துள்ளன. ''நாடகசாலை நங்கையர் நடிக்க''[11] எனும் பஞ்சவன்னத்தூது பாடலடி இங்கே குறிப்பிடத்தக்கது.

பேரிலக்கியங்களிலிருந்தான கதைக் கருக்கள் காப்பியநயம் பொருந்தும் வகையில் எளிமையான இசை மொழியின் ஊடாக அளிக்கை செய்யப்பட்டமையும், கற்பனைக் கதைகளைப் புனைந்து அவற்றினூடாகக் கிறிஸ்தவ சமயம் சார்ந்தும் நாடக முயற்சிகள் நிகழ்ந்தமையும் மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கும். மக்களிடத்தில் போதியளவான ஓய்வு இருந்தமையும், வேறு வகையில் ஒன்றுகூடுவதற்கும், மகிழ்நாட்டத்திற்குமான வாய்ப்புக்கள் குறைந்திருந்ததுமான புறநிலையில் கூத்துக்கலை வரவேற்பைப் பெற்றுள்ளது.

## 5. கைவினைக்கலை

கைவினைப் பொருட்கள் என்பது நுணுக்கமான கலையம்சங்கள் செறிந்ததாகச் சமயம் சார்ந்தும், சாதாரண செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலும் ஒல்லாந்தர் காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு உருப்பெற்ற கைவினைப் பொருட்கள் ஈழத் தமிழர் தம் பருப்பொருள் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு மரபினை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்தன என்பதற்கு ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் சான்றுகளைத் தருகின்றன.

கலை சார் வெளிப்பாடுகளாக அமைந்த கைவினைப் பொருட்கள் தொழில்சார் நிலையில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆபரணங்கள், தேர் முதலானவற்றைச் சமூக ரீதியாகத் தட்டார், தச்சர் முதலானோர் மேற்கொண்டமைக்கு கிள்ளைவிடு தூது இலக்கியத்தில் சான்றுகள் உண்டு.

*''சிந்துதொடை மன்னவர்க்குச் செய்தமுடி பாவலர்க்குத்*
*தந்து புகழ் படைத்த தட்டாரும்''*[12]
*''வானக் கதிரவன் போல் வட்டப் படக்கடையுந்*
*தானத் தபதி குலத் தச்சர்களும்''*[13]

நுணுக்கமான கலைத் தொழில்களை மேற்கொள்வோர் சமூக ரீதியாக பரம்பரை பரம்பரையாக தமது முயற்சிகளை முன்னெடுத்துள்ளமை வெளிப்படுகின்றது. கோவில்களில் இறைவன் உலா போவதற்கான தேர்கள், பல்வேறு வகையான வாகனங்கள், பீடங்கள், தண்டிகைகள், குடை வகை தொடர்பான விடயங்களை இலக்கியங்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

''சித்திரமணித் தேர்மானு சிவிகையிலிவர் துலகோர் தேவர் சூழ''[14]

எனும் பஞ்சவன்னத் தூதுப்பாடல், தேர், சிவிகை முதலானவற்றின் பயன்பாட்டைக் குறிப்பிடுகின்றது.

ஆலயங்களில் இறைவனை மையப்படுத்தியதாக மட்டுமன்றி சமூக செல்வாக்குடைய பிரபுக்கள், வன்னியர் முதலானோரும் தண்டிகைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இங்கு குறிப்பிடப்படும் தண்டிகைகள் வெவ்வேறு பட்ட வகைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

''வன்னியர் முதலானோர்
செங்கனகத் தண்டிகை தனில்வர''[15]

எனும் விபரிப்பு தண்டிகையின் பிரயோகத்தைச் சுட்டி நிற்கின்றது.

**i. அணிகலன்கள்**

அணிகலன்களின் வடிவமைப்பில் நெற்றிச்சுட்டி, ஒட்டியாணம், சொர்ணமுடி, குண்டலங்கள், தோடு, மூக்குத்தி, பதக்கம், மேகலை, சிலம்பு, பாடகம் முதலானவை முக்கியமான கலை நுணுக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளன. மங்கல அணியாக உருவாக்கப்பட்டுள்ள தாலியின் அமைப்பில்கூட நுணுக்கமான அம்சங்கள் இருந்துள்ளமைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புலிநகத் தாலி, மருவு வண்குறப் பேதையர்''[16] எனும் பறாளை விநாயகர் பள்ளு விபரிப்பு முக்கியமான ஆதாரமாக உள்ளது.

**ii. ஆயுதங்கள்**

வீரம்சார் வெளிப்பாட்டில் ஆயுதங்களைக் கையாளல் பிரதானமாகும். போரை எதிர்கொள்வதற்கும் பாதுகாப்புக் கட்டமைப்பைப் பேணுவதற்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தல் அவசியமாக இருந்துள்ளது. யாழ்ப்பாண மன்னர் காலத்தில் வடக்கு, கிழக்கில் தனித் தன்மையான அரச நிர்வாகம் இருந்துள்ளமை தமிழர் மத்தியில் ஆயுதப் பயன்பாட்டின் நீட்சியைக் குறிப்புணர்த்துகிறது. ஒல்லாந்தர் காலத்திலும் மரபு ரீதியான ஆயுதங்கள் பற்றிய பார்வையைக் காணமுடியும்.

*''ஆல மழுக்கதை யாதிய முத்தலை*
*வேல்கள் தரித்திடு வீரர்கள் சுற்றிட...''*[17]

என பஞ்சவன்னத்தூது பாடலடி ஆயுதங்கள் பற்றி விபரிக்கிறது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தரின் வருகையால் ஆயுத வகையில் பீரங்கி குறித்த அறிதலும் முக்கியம் பெற்றிருந்தது.

''பொற்பீரங்கி யோட்டிப் பொருதக் கண்டேனே''[18] எனும் பஞ்ச வன்னத்தூது பாடல் சித்திரிப்பானது பீரங்கி குறித்த விபரிப்பைத் தருகின்றது.

ஒல்லாந்தரது கலை நுணுக்கங்களும் கைவினைக் கலையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை அறிய முடிகின்றது. பெருங்கை வண்ணமும் செதுக்கல்களும் பிற நுணுக்கமான வேலைப்பாடுகளும் அமைந்த வீட்டுத் தளபாடங்களைச் செய்யக்கூடிய தச்சுவேலைக் கலைஞர்கள் அவர்கள் மத்தியில் இருந்துள்ளனர்.[19] அக்காலத்தில் இந்தியாவுடனான தொடர்புகளும் கைவினைக் கலையில் புதிய நுட்பங்களுக்கு வழியை ஏற்படுத்தியிருக்கும் எனலாம். இவற்றின் புறநிலையில் உருப்பெற்ற பொருட்கள் அவற்றின் செய்நேர்த்தி, ஈர்க்கும் தன்மை போன்றவற்றால் கலைத்துவம் நிறைந்தனவாகத் திகழ்ந்துள்ளன.

## 6. இசைக்கலை

இசையானது வாழ்வோடு நெருங்கிய பிணைப்பைக் கொண்டுள்ளது. கிராமிய இசையாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட சங்கீத இசையாகவும் அதன் பிரிவுகள் வேறுபட்டபோதும் இவ்வடிவம் மகிழ் நாட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு மட்டுமன்றி அரசியல், சமூக, பொருளாதார, சமய அசைவியக்கத்திலும் முக்கிய பங்காற்றி வந்துள்ளது.

''வள்ளைப் பாட்டொலி பூணும்''[20], ''குரவை எழுப்பல்''[21] என கிராமிய களத்தில் இதன் பிரயோகம் அறியப்பட்டுள்ளது.

கலைசார் வெளிப்பாட்டில் நாடக அளிக்கைகளில் இசை பிரதானமாய் இருந்துள்ளது. நாடக ஆசிரியர்கள் இசையில் தேர்ச்சி மிக்கவர்களாய் திகழ்ந்துள்ளனர். அதேவேளை ஆலயங்களை மையப்படுத்தி இறைவனை இசையால் போற்றும் மரபின் தொடர்ச்சியையும் காணமுடிகின்றது.

''வித்வசனர் பாமாலை மெல்லடியிற்
சூட்டுகையிற்''[22]

என வெருகல் சித்திர வேலாயுதர் பாடல் இசையால் இறைவனைத் துதிக்கும் தன்மையைக் காட்டுகிறது.

இசையில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு உயர்வான சமூக மதிப்பும் கிடைத்துள்ளது. பிரபுக்களைப் பலவாறு போற்றியுள்ள புலவர்கள் அவர்களை இசை வல்லாளர்களாகவும் சிறப்பித்துள்ளமை இதன்பொருட்டேயாகும். ''சங்கீத லோலன்''[23] எனத் தண்டிகைக் கனகநாயகமுதலி மாவை சின்னக் குட்டிப் புலவரால் போற்றப்பட்டுள்ளமை இதனோடு தொடர்புடையது.

கத்தோலிக்க சமயத்தவரும் தமது சமய விடயங்களை முன்னெடுப்பதில் இசைக்கு முக்கியத்துவத்தை வழங்கியுள்ளனர். பெருமளவான இசைப் பாடல்கள் எழுதப்பட்டு மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இயேசுபிரானின் சிலுவைப்பாடுகளை மையப்படுத்தி எழுதப்பட்ட வியாகுலப்பிரசங்கம் எனும் இலக்கியம் கூட உரைநடையில் அமைந்த படைப்பாயினும் இசைவடிவில் பாடக்கூடியதாய் எழுந்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. நாட்டார் வடிவங்களில் ஒன்றான ஒப்பாரி பற்றியும் இவ்விலக்கியத்தில் குறிப்பு உள்ளது.

''அழுகையோ டொப்பாரி புலம்பல் சொல்லி மழைபொழிகிற மேரையாய் வழிநீளங் கண்ணீர் தெளித்து''[24]

என இயேசுவின் சிலுவைப்பாடுகளைக் கண்டு வெளிப்படும் ஒப்பாரி பற்றியதான செய்தி கத்தோலிக்க மதத்தைத் தமிழர் புலத்தில் இணைப் பதற்கான ஒரு அம்சமாகவும் கொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**i. ஐரோப்பிய இசை**

புரட்டஸ்தாந்து சமயத்தைச் சார்ந்த மெல்லோப் பாதிரியாரும் இசை வடிவத்தைக் கையாண்டுள்ளார். இவர் ''இராசா தீர்க்கதரிசியாகிய தாவீதினுடைய சில சங்கீதங்களும் வேறுசில பாட்டுக்களும்'' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். இவற்றில் இடம்பெற்றுள்ள சங்கீதங்களுக்கு ஐரோப்பிய சுரவரிசை கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு மெல்லோப் பாதிரியார் இசை வடிவத்தில் புதிய வெளிப்பாட்டை முன்வைத்துள்ளமையைக் காணலாம்.

> *''என பானெ என பானெ யெனனை கைவிடுவானென*
> *என மீட்சியினை விடடென கூககுரல வாரத்தை கடகு நீ*
> *ரதூரமாயினீர''*[25]

என்பது மெல்லோப் பாதிரியாரது 22ஆம் சங்கீதத்தின் முற்பகுதி ஆகும். எளிமையான வகையில் மக்கள் மத்தியில் கூற முனைந்த கருத்துக்களைக் கொண்டுசெல்வதற்கான சக்தி இசைக்கு உண்டு என்பதனைக் கணித்தே மெல்லோப்பாதிரியார் இசை வடிவத்தை பக்தி உணர்வை வெளிப்படுத்தக் கையாண்டுள்ளார். இங்கு ஒல்லாந்தர் காலத்தில் விதைக்கப்பட்ட ஐரோப்பியம் சார்ந்த இசைவடிவம் பிற்காலத்தில் தனக்கான அடையாளத் தைப் பெற்று வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. இவ்வளர்ச்சிக்கு ஒல்லாந்தர் காலப் பின்னணி பிரதானமாக இருந்துள்ளமையே முக்கிய மெனலாம்.

**ii. வாத்தியங்கள்**

ஈழத்தமிழர் மத்தியில் பல்வேறு இசை வாத்தியங்கள் தொடர்பான அறிதல் பண்டைய காலம் தொடக்கம் இருந்து வந்துள்ளது. ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் இவ்வாத்தியங்கள் குறித்துப் பல்வேறு தரவுகளைத் தந்துள்ளன. முரசு, தாளம், பம்பை, தடாரி, துடி, பல்லியம், பேரிகை, வீணை, யாழ் முதலான வாத்தியங்கள் பற்றி கிள்ளைவிடுதூது விளக்குகின்றது.

வாத்தியங்கள் பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றி சமயம் சார்ந்து பக்தியுணர்வைத் தூண்டுவதற்கும் மங்கல, அமங்கல நிகழ்வுகளிலும், அதிகார வர்க்கத்தவர் தமது அடையாளத்தை வெளிப்படுத்தும் வண்ணமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ''தாளங் குடமுளவு மேள''[26]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானவையும் நிகழ்வுகளில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமையைக் காணமுடிகிறது.

மக்கள் மத்தியில் செய்தியை அறிவிக்கும் செயற்பாட்டில் பறை யானது பயன்பட்டுள்ளது.

''நல்ல பெரிதான பறையையு மெடுத்துக் கொண்டு காரியத்துடன் நடந்து''[27] என அலங்காரரூபன் நாடகச் சித்திரிப்பு பறை குறித்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 7. பேச்சு

கலைசார் செயற்பாடுகளில் நாவன்மையைப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளிப்படுத்தலானது ஒரு கலையாக வழங்கி வந்துள்ளது. ஆலயங்களில் அம்மானை முதலான இலக்கியங்களுக்குப் பயன்சொல்லும் வழக்கம் முற்காலம் தொட்டே இருந்துள்ளது. கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மக்கள் மத்தியில் சமயம் சார் விடயங்களை வெளிப்படுத்த பிரசங்க வடிவத்தினைக் கையாண்டுள்ளனர்.

ஒல்லாந்தர் ஆட்சியில் சுதேசியான மெல்லோப் பாதிரியார் ஒல்லாந் தரால் பாராட்டப்பெற்ற சமய குருவாகத் திகழ்ந்தார். அன்று அவரது பிரசங்கத்தினைக் கேட்கப் பலரும் ஆர்வம் கொண்டிருந்தனர். ஒல்லாந்த சபைகளும் இவர் திறமையை அறிந்து இவரை ஆசையுடன் வரவழைக் கலாயின.[28] கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த குருமார்களும் ஒல்லாந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட நெருக்கடிகளுக்கிடையிலே தமது மதம் சார் செயற்பாடுகளை முன்னெடுக்க பிரசங்கத்தினைப் பிரதான தொடர்பு வழிமுறையாகப் பிரயோகித்தனர். மக்களைக் குழுக்களாகச் சந்தித்து தமது நாவன்மையைப் பயன்படுத்தி சமயக் கருத்துக்களை நிலைப் படுத்த முயன்றுள்ளனர்.

அன்றைய காலத்தில் தமிழ் இலக்கியம் சார்ந்து நடைபெற்ற ஒன்று கூடல்களில் பேச்சுக்கலை முக்கியம் பெற்றிருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. குறிப்பாக வண்ணார்பண்ணையில் வைத்திலிங்கச் செட்டியாரின் ஒத்துழைப்பில் நடைபெற்ற இக்கருத்தாடல்களில் ஈழத்துப் புலமையாளர்கள் மட்டுமன்றி தமிழகத்தைச் சார்ந்தவர்களும் வருகைதந்து தமது திறன்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவையினர் முன்னிலையில் தாம் இயற்றிய நூலை நயம்பட முன்வைத்தலும் கலையின் வெளிப்பாடே ஆகும். இங்கு நூலை மையப்படுத்தி கருத்தாடல்கள் பல நிகழ்ந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்னும் நூலை மிகப்பலர் முன்னிலை யில் வீரக்கோன் முதலியார் அரங்கேற்றியுள்ளார்.

*''வன்னிமை தேசத்தார் மகாநாடுதான் கூடி*
*மின்னுமெழின் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே''[29]*

என்னும் பாடல் நூல் வெளியீட்டு நிகழ்வு தொடர்பான தரவைத் தருகின்றது.

மங்கல, அமங்கல நிகழ்வுகளில் பிரசங்கம் செய்யும் முறை இருந் துள்ளது. ''யாக்கோமே கொன்சால்வேஸ் என்கிற குருவானவர் ஒரு பிரசங்கம் பண்ணி அவர் செலுத்தின தர்மங்களையும் பட்ட பிரயாசங் களையும் சமஸ்தர் பெயரிலுங் காண்பித்த தயவும் சிறந்த வாசகத்தோடு விபரித்து அவருடைய மரணத்தின் சேதம் எவ்வளவு பெரியதென்று பிரதியட்சகமாக்கின. இடத்தில் பிரசங்கியுடைய வார்த்தைகளைப் பார்க்க சனங்களுடைய அழுகைக் குரலும் புலம்புதலும் அதிகமாய் கேட்கலா யிருந்தது''[30]

என யோசேவாஸ் முனிவர் சரித்திரம் எனும் ஒல்லாந்தர் கால இலக்கியத்தில் பச்சேக்கு, யாக்கோமே கொன்சால்வெஸின் பிரசங்கம் தொடர்பான விடயத்தைப் பதிவு செய்துள்ளார்.

அறிவு நிறைந்த புலவர்கள் தமது கருத்துக்களைத் தெளிவுற வெளிப் படுத்தும் தன்மை உடையோராய் விளங்கியமையால் அத்தகையோர் ''நாவலர்'' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ''நாவலர் புகழும் நல்மர புதித்தோன்''[31] என்னும் இளந்தாரி வாழ்த்தில் இணுவில் சின்னத்தம்பிப் புலவர் சொல்லில் வல்லார்கள் பற்றிக் கூறியுள்ளமை இங்கு கவனிப் பிற்குரியது.

## 8. ஆடல்

இயல்புந்தலின் வெளிப்பாடாக வரும் ஆடல் கலையானது சாதாரண சமூக மட்டத்தில் உள்ளோராலும், நெறிமுறையாகப் பின்பற்றுவோராலும் ஆரம்பகாலம் தொட்டு நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் இக்கலையானது தொழில் நிமித்தமும், நம்பிக்கைகள் சார்ந்தும் சமய, திருமண மற்றும் ஏனைய கலை வடிவங்களோடு இணைந்தும் நிகழ்ந் துள்ளமையினைக் காண முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**i. சமூக நிகழ்வுகள்**

ஆடல் கலையானது சமூகப் புலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அதிகார நிலைப்பட்டோர் வீதியுலா வருமிடத்து ஆடலுக்கு முக்கிய இடம் இருந்துள்ளமையை அன்று ஒல்லாந்தர் காலத்தில் வெளிப்பட்ட இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

*''ஏந்துதனப் பெண்கள் சிலரின்பமுடன் கம்பெடுத்து*
*மாந்தளிர் மெய்வேர்க்க வசந்தன் விளையாடிவர''*[32]

''கந்தம ருங்குழலார் சோடுசோடாய் வந்து கூத்தாடிடுங்கோ''[33]

''கன்னியர்கள் நடமாட''[34] , ''ஆடுமடவாராட''[35]

ஆகிய பாடல்கள் ஆடற் கலையானது முக்கியத்துவம் பெற்றிருந்தமையைச் சுட்டுகின்றன. தாசியரும் ஆடல் கலையில் வல்லவர்களாக இருந்துள்ளனர்.

*''நடனமிடு தாசியர்கள்*
*நாட்டியங்கள் கேட்டிருந்தாய்''*[36]

எனும் அனுருத்திரன் நாடகச் செய்யுளானது இதனைக் குறிக்கிறது.

**ii. சமய விழாக்கள்**

ஆடற்கலையை சமய நம்பிக்கையோடு இணைத்து நோக்கும் மரபு ஒல்லாந்தர் காலத்தில் இருந்துள்ளது.

*''மடமயி லொத்த மகளிர் பணைத்தெழு*
*குடமுலை யொத்தெதிர் குமுற நடித்திட''*[37]

எனும் விபரிப்பு கலைத்திறன் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆடற் செயற்பாடுகள் சமய நிகழ்வுகளிலும் கூத்து வடிவங்களிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இக்கலை மரபைப் பிற்காலத்தில் ஆறுமுகநாவலர் போன்றோர் ஆலயங்களில் நடைபெறும் ஆடல் நிகழ்வுகளையும், கூத்துக் களையும் ஒழுக்கப் பிறழ்வை மையப்படுத்தி விமர்சித்தனர். எனினும் ஒல்லாந்தர் காலத்தில் ஆடற்கலை வடிவமானது சமூக மட்டத்தில் செல்வாக்கு பெற்றதாக இருந்துள்ளமையினை அக்காலத்தில் வெளிப் பட்ட இலக்கியங்கள் ஊடாக அறிந்துகொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. சோதிடம்

மக்களது நம்பிக்கையோடு தொடர்புபட்டதாக சோதிடக்கலை அமைகிறது. புலமைசார் கலைகளில் சோதிடத்திற்கு தனியிடம் உண்டு. தற்காலத்தில் கிடைக்கக்கூடிய சோதிட நூல்கள் ஈழத் தமிழர்களின் புலமைப் பாரம் பரியத்தின் தொன்மையின் வெளிப்பாடுகளாக உள்ளன. இச்சோதிட மரபானது ஒல்லாந்தர் கால சமூகக் களத்திலும் பிரதான இடத்தினைப் பெற்றுள்ளமையைக் காண முடிகின்றது.

மக்கள் தமது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் சோதிடம் தொடர் பான விடயத்தில் கவனத்தைச் செலுத்தி வந்துள்ளனர். சோதிடத்தை வெறுமனே வாழ்தலுக்கான தேடலை முன்வைத்து நோக்கும் வழியாக மட்டும் கொள்ளாது அதனை ஒரு கலையாகப் பார்க்கும் மரபைத் தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதற்கு அக்கால இலக்கியங்கள் சோதிடத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவமே சான்றாகும்.

இராமலிங்க முனிவர் எழுதிய சந்தான தீபிகை புத்திர பலனை மையப்படுத்தி எழுந்துள்ளது. குடும்பத்தில் ஆண், பெண் உறவு, கரு உருவாகும் காலம், நோய்கள் எனப் பல்வேறு விடயங்கள் சோதிடத்தை அடிப்படையாகக் கொண்டு நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. வாழ்வில் நடைபெறும் மங்கல, அமங்கலச் செயற்பாடுகள் அனைத்திலும் சோதிடம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. சோதிடம் முன்வைக்கும் விடயங்களை மக்கள் நம்பும் சூழல் இருந்தமையால் அதன் சமூகப் பெறுமானம் உயர்வானதாக இருந்துள்ளது. மேலும் சோதிடத்தில் தேர்ச்சிமிக்கோர் மிகச் சிறந்த புலமையாளராகத் திகழ்ந்துள்ளமையும் கவனிப்பிற்குரியது.

''அருடருந் தூய நன்மனுநீதி
சோதிடம் புரோகித மழகார்
புருடலக் கணஞ்சீர் வைத்திய முற்றுங்
கற்றிடான் புலவனின் றிடுகின்
மருடரும்...''[38]

எனத் தொடரும் சந்தான தீபிகைப் பாடல் கல்வியில் சோதிடத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றது.

சோதிட பலனுக்கு ஏற்பவே வாழ்க்கை அமையும் எனும் நம்பிக் கையை அக்காலத்தில் வெளிப்பட்ட பல்வேறு இலக்கியங்களின் ஊடாக அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட்டமத்துச் சனிதொட்ட விதிக்கு நீ ஆலோசனை யென்னம்மா"[39]

எனும் அலங்காரரூபன் செய்யுள் பகுதி வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்புக் களுக்கு சோதிட பலன் காரணமாக இருந்துள்ளமை பற்றிக் குறிப்பிடுகிறது. புலமைப் பாரம்பரியத்தின் வெளிப்பாடாய் அமையும் இத்தகு நம்பிக்கை சார்ந்த கலையானது உரிய வகையில் கையளிக்கப்படாமையால் பிற் காலத்தில் அதன் செல்வாக்கு குறைந்துள்ளது.

## 10. ஒப்பனை

அழகுபடுத்தும் செயற்பாடானது தமிழர் பண்பாட்டு மரபில் தனித் தன்மையான பண்புகளைக் கொண்டுள்ளது. பெண்கள் ஆண்கள் என அனைவரும் அழகுப்படுத்தலில் ஈடுபாடுகாட்டி வந்துள்ளனர். இந்த அழகுக் கலையில் ஒப்பனை செய்தல் தொடர்பான விபரங்களை ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இலக்கியங்களிலும் காணமுடிகிறது.

### i. பெண் அலங்காரம்

*"விழிக்கு மைதீட்டி வட்டித்த சந்திரதிலகம் நுதலிற்*
*தீட்டிச் செங்கம லக்கை காட்டி..."*[40]

எனப் பஞ்சவன்னத்தூதில் சந்திரமோகினி பற்றிய விபரிப்பில் ஒப்பனை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆடகம், சூடகம், நெற்றிச்சுட்டி, மணிமாலை, சதங்கை என அழகுபடுத்தும் அணிகலன்கள் அன்று பயன்பாட்டில் இருந்துள்ளன.

ஒப்பனையில் முக்கியம் பெறும் அணிகள் தமிழர் பண்பாட்டு மரபில் ஒருவருக்கான தகுதிப்பாட்டினைக் குறிப்புணர்த்துவதாகவும் உள்ளது.

*"தார மென்றன் கழுத்தின்முன் னாளிற்*
*சரடு கட்டிய பாரதம் வைத்தோன்"*[41]

எனும் பறாளை விநாயகர் பள்ளு விபரிப்பில் சரடு என்பது தாலியைக் குறிக்கின்றது. திருமணத்தின் போது கட்டப்படும் தாலி அணிகலனாக மட்டுமன்றி பெண்ணுக்கான அடையாளமாக நோக்கப்படும் மரபை ஒல்லாந்தர் காலத்திலும் காணமுடிகிறது. ஆண்கள் மெட்டி அணியும் வழக்கமும் இருந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"They wear seripous (leather soles under their feet) neatly fastened with leather straps which leave the feet almost bare, to prevent sweating they have in front of their waist a maddi"[42]

என அக்கால ஆண்களின் தோற்றத்தினை போல்டியஸ் விளக்கி யுள்ளார். இங்கு மெட்டி பற்றிய குறிப்பு கவனிக்கத்தக்கது.

### ii. இறை அலங்காரம்

உருவ ரீதியாகக் காட்சிப்படுத்தப்படும் இறைவனை ஒப்பனை செய்து சிறப்பிக்கும் மரபு ஒல்லாந்தர் காலத்தில் இருந்துள்ளமைக்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. பொற்சரிகைப் பட்டு, உத்தரியம் முதலானவற்றைச் சாத்தி ஒட்டியாணம், நெற்றிச்சுட்டி, சதங்கை சொர்ணமுடி, குண்டலங்கள் காப்பு, மோதிரம் மரகதம் வைடூரியத்தினாலான பதக்கம் நவரத்தின மணிமாலை முத்து முதலான அணிகளைத் தரித்து சித்தர வேலாயுதர் வீதியுலா வந்தமையினை வெருகல் சித்திர வேலாயுதர் காதல் இலக்கியம் விபரித்துள்ளது.

*''கண்ணாயிரமுடைய காவலனு நாணமுறக்*
*கண்ணாரும் வேதன் கவினாயலங்கரித்தான்''*[43]

என்னும் விபரிப்பு இந்திரன் நாணப் பிரம்மனே முருகனை அலங்கரித்தான் என்பதைக் குறிப்பிடுகின்றது.

பெண் தெய்வம் தொடர்பான விபரிப்பிலும் அணிகலன் சார் சித்திரிப்பு முக்கியம் பெற்றுள்ளது.

*''முத்துவடம் பொன்னரிய மாலை சூட்டி*
*முன்கைவளை சிந்தரக்குசுட்டி பூட்டி*
*நத்துடனே மூக்குத்தி பிலாக்கும் பூட்டி*
*நவமான பாதரந் தண்டை பூட்டி...''*[44]

எனும் தையல்நாயகி தொடர்பான அனந்த சுப்பையரின் சித்திரிப்பு இறைவனை அழகுபடுத்தி அதன் மூலம் உலகியலோடு இறைவனை இணைத்து நோக்கும் கலை மரபை உணர்த்துவதற்குச் சான்றாக உள்ளது.

## 11. மருத்துவம்

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் சுதேசிய மருத்துவமானது நெடுங்காலமாகப் பேணப்பட்டு வந்துள்ளது. யாழ்ப்பாண மன்னர் காலப் பகுதியிலே இவற்றின் வெளிப்பாட்டு வீச்சைக் காண முடிகிறது. இப்புலமைசார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய மரபு ஒல்லாந்தர் காலத்திலும் தொடர்ந்தமையை இலக்கியச் சான்றுகள் உறுதி செய்கின்றன. அலோபதி வைத்தியம் செல்வாக்குப் பெறாத அக்காலத்தில் இயற்கை மருத்துவத்தின் ஊடாக மக்களது நோய்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

அக்காலத்தில் வெளிப்படையாகவும் குறியீட்டுப் பாணியினைக் கையாண்டும் மருத்துவக் குறிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

*''ஈசுரமூலி கருடக்கொவ்வை யிறையவனிம்பமுட*
*னெட்டி யாடைகுலைத்தா னொச்சி யடம் பெழினீர்நொச்சி''*[45]

எனக் குறியீட்டுப் பிரயோகத்துடன் அமைந்த அமுதாகரச் செய்யுள் இங்கு கவனிப்பிற்குரியது.

மருத்துவ சிகிச்சையில் பத்தியம் பேணல், குடிநீர் குடித்தல் முதலான நடைமுறைகள் இருந்துள்ளன.

''உன் சரீர வியாதி சுகமாகத் தக்கதாக கசப்பான குடிநீர்களைக் குடிக்கிறாய். நேசமான தீன்களை விலக்கி யுப்பு புளிருசியை முதலாயத் தவிர்க்கிறாய். கடினமான வெட்டுச் சூடுகள் பொறுத்து வாறுமாதம் பத்தியம் காத்து வெளியிலே புறப்பட மாட்டாமலடைத்துக்கொண்டு இருக்கிறாய்''[46]

எனத் தொடரும் ஞான உணர்ச்சி இலக்கியப் பகுதியானது அன்றைய சமூகத்தில் நிலவிய மருத்துவ நடைமுறையைக் குறிப்புணர்த்துகின்றது.

மருத்துவத்தில் சமயத்தின் பாதிப்பும் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. மருத்துவக் கலையைக் கற்றறிந்த பலர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தமையால் மருத்துவக் குறிப்புகளில் சமய நம்பிக்கை சார்ந்த விடயங்கள் இணைத்துக் கூறப்பட்டுள்ளன.

''கார்த்திகேயற் றொழுமடியார் வினைபோற் கெடுமே கடுவிடமே''[47]
எனும் அமுதாகரச் செய்யுள் இதனோடு தொடர்புடையதாகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பெருமளவில் பாதிப்பினை ஏற்படுத்த வல்ல நோய்கள் பல பரவியுள்ளன. குறித்த சில நோய்களுக்கு இறைவனின் பாதிப்பே காரணமாகுமென்ற நம்பிக்கையும் இருந்துள்ளது.

''இந்த வருத்தத்திற்கு அம்மா விளையாட்டு எனப் பெயர்கொடுத்து அவ்வருத்தக்காரர் சரீரத்திற் பேய் உட்படுகிறதென்று எண்ணியிருந்த தினால் பிசாசுக்கோடி விலகிற பிரகாரம் இந்த வருத்தமுள்ளோரால் விலகி அகலிப்பார்கள். ஆனதினால் வருத்தம் கண்டவுடனே உறவுற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே சிற்பதயவுமில்லாமற் பிள்ளைகளாற் பிதாவும் புருசனால் ஸ்திரியும் அன்னபானத்திற்கும் என்கிலும் ஒருவகையும் பண்ணாமற் கைவிட்டுவிட, வைசூரியின் பெலத்தினால் சாகிறதைப் பார்க்க மூட அக்கினியின் அகோரத்தினால் அதிகம்பேர் சாவார்கள்''[48]

எனும் யோசேவாஸ் சரித்திரக் குறிப்பானது நோய்க்கூறு தொடர்பாக இருந்த சமய நம்பிக்கையையும் அதைத் தாண்டி மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளையும் விரித்துரைத்துள்ளது. கத்தோலிக்கப் பாதிரிமார் நோயால் பாதிக்கப்பட்ட மக்களை ஆதரவுடன் பராமரித்தமைக்கான சான்றுகளும் நூலில் உள்ளன.

ஒப்பீட்டு ரீதியாகக் குடிசன அடர்த்தி குறைந்திருந்த அக்காலத்தில் மக்களுக்கு விஷ ஜந்துக்களால் அச்சுறுத்தல் இருந்திருக்கும் எனலாம். இதனாலேயே விசக்கடியை முன்வைத்து அமுதாகரம் என்னும் வைத்திய நூல் அன்று தோன்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பொதுவாக மருத்துவம் சார் அறிவு குறிப்பிட்ட புலமை சார் சமூகத்தின் சொத்தாக இருந்துள்ளது என்பதை ஊகிக்க முடிகிறது. பரம்பரையாகக் கடத்தப்பட்டு, பேணப்பட்டு வந்த கலையாக மருத்துவக் கலை திகழ்ந்துள்ளது என்பதற்கு

''வந்தணர்தங் குலத்துதித்த ஜெகநாதனரு ளரங்கநாதன் றன்பால்
வந்தருளுஞ் சுதன் வரதபண்டிதன் முத்தலைமுறையுஞ் செய்துகண்டு
வந்தமருந் திருநாலு மாநாகங் கடித்திடினும் மாறுமன்றே''[49]

எனும் அமுதாகரச் செய்யுள் ஆதாரமாகும்.

## 12. சிற்பம்

சிற்பம் என்பது பிரதானமாகக் கல்லில் அல்லது மரத்தில் செதுக்கப்பட்ட தாகவோ, உலோகங்களால் வார்க்கப்பட்டதாகவோ அமையும். ஈழத்தில் சிற்பக்கலையானது மதநிலைப்பட்டதாகக் கோவில்களில் செல்வாக்குப் பெற்று வளர்ந்துள்ளது. மத வழியான நம்பிக்கையை உருவ ரீதியாக காட்சிப்படுத்தலின் ஊடாக வெளிப்படுத்த சிற்பங்கள் பெரிதும் உதவியுள்ளன. பெருமளவு விஸ்தீரணம் கொண்டமைந்த ஆலயங்களில் பல்வேறு வகையான சிற்பங்களின் பிரயோகங்களைக் காணமுடியும்.

ஒல்லாந்தர் கால புலவரான அனந்த சுப்பையர் வண்ணார்பண்ணை சிவன் கோவிலின் தேவியினது தோற்றப்பொலிவு குறித்து வெளிப் படுத்திய கருத்துக்களை அக்காலச் சிற்பக்கலையின் தனித்தன்மைக்கான ஆதாரமாக நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காதிலணி தோடுங் கருணைபொழி வேல்விழியுஞ்
சோதிமுக் குத்திமுகச் சுந்தரமும் - தாதவிழும்
முல்லை யரும்பின் முகிழ்நகையுஞ் செவ்வாயும்
நல்லதிரு மங்கல்ய நற்கழுத்தும்...''[50]

எனும் புலவரின் விபரிப்பு கவனிப்பிற்குரியது.

அக்காலத்தில் ஆலயங்களை மையப்படுத்தி அமைந்த சிற்ப உருவாக்கத்தில் தெய்வங்களுக்குரிய வாகனங்கள், தேர்கள் போன்றனவும் அமைக்கப்பட்டுள்ளன. வரலாற்று ரீதியாகப் பழமை கொண்ட இச் சிற்பக்கலை, தொழில்சார் நிலையிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று வளர்ந்துள்ளது. சமூகத்தில் குறிப்பிட்ட பிரிவினர் இக்கலையை ஆர்வத்துடன் செய்து வந்துள்ளமை வெளிப்படை. இந்தியத் தொடர்புகளும் சிற்பக்கலையின் வெளிப்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்துள்ளன.

## 13. சித்திரம்

ஓவியம் வரையப்படும் முறைமையிலே பல்வேறு பாணிகள் உள்ளன. சித்திரிக்கப்படும் பொருள், சித்திரிக்கும் முறைமையை அடியொற்றி பாணிகள் வகுக்கப்படுகின்றன.[51] ஒல்லாந்தர் காலத்தில் ஓவியக்கலை சமயம் சார்ந்த நிலையில் முக்கியம் பெற்றுத் திகழ்ந்துள்ளமையை இனங்காண முடிகிறது.

''ஆனவரு ஞ்சீக்கிரமா யம்மாளிகை முடித்தார்
ஊனமற்ற சித்திரங்கள் ஓவியரேதீட்டி வைத்தார்''[52]

எனத் திருச்செல்வர் அம்மானை இலக்கியம் சித்திரம் பற்றிக் குறிப்பிடுகிறது.

## 14. நிகழ்வுகள் சார் கலைகள்

சமய சார்ந்த விழாக்கள், மங்கல, அமங்கல நிகழ்வுகளில் பல்வேறு கலைசார் செயற்பாடுகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. வாண வெடிகளின் பயன்பாடு தனித்த கலைசார் அடையாளமாக இருந்துள்ளது.

''கக்கரிப்பூத் தாமரைப்பூக் காயாம்பூக் கொத்தலரி
பக்கமெல்லா மோடும் படைவாண - முக்கிரமாம்''[53]

எனும் கிள்ளைவிடு தூது செய்யுள் திருவிழாவில் ஏவப்பட்ட வாணங்களின் வேறுபட்ட வகைகள் குறித்து விபரிக்கிறது. திருமண நிகழ்வுகளிலும் வெடிகொளுத்தல் நடைபெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாணவெடி யார்ப்பரிக்க நல்ல மறையோர் முறையே பாடல் சொல்ல
*சீனவெடி படபடென்ன - இங்கே சிறப்பாயத் திருமணம் முடித்தனரே''*[54]

எனும் அலங்காரரூபன் நாடகச் செய்யுள் இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழர்கள் தமது மகிழ் நாட்டத்தைத் தூண்டும் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்கு அவர்கள் தயாரித்து ஏவிய வாணங்கள் சான்றுகளாக உள்ளன.

கலைகளின் வெளிப்பாட்டில் ஒல்லாந்தர்கால சமூக, அரசியல் சூழல் பிரதான செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது. மரபு ரீதியாகத் தொடர்ந்து வந்த கலைசார் அம்சங்களும், இந்தியத் தொடர்பால் ஏற்பட்ட பாதிப்புகளும், ஒல்லாந்தர்களின் ஊடாக சுதேசியப் புலத்தில் உண்டான மாற்றங் களும் கலை வெளிப்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன. அக்கால மக்களின் சமூக வாழ்வையும், சமூக அரசியலையும் உணர்த்தி நிற்கும் குறியீடுகளாகவும் இக்கலைகள் திகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புகள்**

01. கிருஷ்ணராஜா, செ., 2005, *இலங்கை வரலாறு*, பாகம் 11, பிறைநிலா வெளியீடு, ப. 257.
02. மங்களேஸ்வரம், 04.01.2002, *மங்களேஸ்வரக் குருக்கள்*, நினைவாக வெளியிடப் பட்டது, ப. 12.
03. சுபதினி ரமேஸ், தொகுப்பு, 2002, *வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மஹா கும்பாபிஷேக மலர்*, வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம், ப. 12.
04. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *வெருகல் சித்திர வேலாயுதர் காதல்*, இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 146.
05. ஆசிரியர்குழு, 2005, *பனுவல்*, மூன்றாவது இதழ், சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம்.
06. Phillipus Baldaeus, 1960, *True and exact Description of the Great Island of Ceylon*, Ceylon Branch of the Royal Asiatic, p. 320.
07. மேலது, p. 323.
08. Hendrick Zwaardecroon, 1911, *Memoir of Hendric Zwaardecroon*, Introduction and Notes by the Government Archivist, p. 59.
09. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *ஞானவுணர்ச்சி*, வியாகுலப் பிரசங்கம், சுகிர்தகுறள் ஆகியவற்றின் இணைந்த நூல் புன்னை மாநகர் யக்கோவு றேச்சலேனு முன்னின்று அச்சிற் பதிப்பிக்கப்பட்டது, ப. சரு.
10. கந்தையா, வீ.சி., பதிப்பாசிரியர், 1969, *இராமநாடகம்*, மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம், ப. 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 31.
12. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *வரதபண்டிதம்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 234.
13. மேலது, ப. 234.
14. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *பஞ்சவன்னத்தூது*, சைவசித்தாந்தக் கழகம், பக் - 91.
15. மேலது, ப. 92.
16. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங் கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பக் - 250.
17. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, பக் - 108..
18. மேலது, ப. 103.
19. கல்வி நூற்றாண்டு மலர், 1969, கல்வி கலாசார அலுவல் அமைச்சின் வெளியீடு, பக் - 403.
20. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப - 247.
21. மேலது, ப. 254.
22. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, வெருகல் சித்திர வேலாயுதர் காதல், இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 144.
23. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், 1932, *தண்டிகைக் கனகராயன் பள்ளு*, சென்னை சாது அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. ககரு.
24. யாக்கோமே கொன்சால்வேஸ், 1994, *வியாகுல பிரசங்கம்*, புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. 88.
25. சபாபதி குலேந்திரன், 1966, *கிறிஸ்தவ வேதாகமத்தின் வரலாறு*, ப. 19.
26. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 93.
27. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, *அலங்காரரூபன் நாடகம்*, இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக்குழு வெளியீடு, ப. 111.
28. சபாபதி குலேந்திரன், 1966, *மு.கு.நூ.*, ப. 77.
29. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப. 144.
30. ஞானப்பிரகாசர், சா., பதிப்பாசிரியர், *யோசேவாஸ் முனிவர் சரித்திரம்*, St.Catholic Press, Jaffna, p. 218.
31. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 108.
32. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப. 119.
33. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, *மு.கு.நூ.*, ப. 16.
34. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப - 111.
35. மேலது, ப. 111.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கந்தையா, வீ.சி., பதிப்பாசிரியர், 1969, *அனுவுருத்திர நாடகம்*, மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம், ப. 74.

37. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998,*மு.கு.நூ.*, ப. 108.

38. சிவராமலிங்கையர், பதிப்பாசிரியர், சந்தான தீபிகை சோதிடப் பிரகாச யந்திர சாலையில் அச்சிடப்பட்டது, ப. ருஅ.

39. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, *மு.கு.நூ.*, ப. 69.

40. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 94.

41. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 94

42. Phillipus baldaeus, 1960, *மு.கு.நூ.*, p. 350.

43. வீரக்கோன் முதலியார். ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப. 57.

44. சுபதினி ரமேஸ், தொகுப்பு, 2002, *வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், மஹா கும்பாபிஷேக மலர்*, வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம், ப. 46.

45. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *வமு.கு.நூ.*, ப. 245.

46. கயித்தானு அந்தோனி, *ஞானவுணர்ச்சி*, *மு.கு.நூ.*, ப. சரு.

47. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 272.

48. ஞானப்பிரகாசர், சா., 1911, பதிப்பாசிரியர், *யோசேவாஸ் முனிவர் சரித்திரம்*, St.Catholic Press, Jaffna, p. 96.

49. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 247.

50. சுபதினி ரமேஸ், தொகுப்பு, 2002, *மு.கு.நூ.*, ப. 14.

51. சிவத்தம்பி, கா., 2007, *தமிழர் கலைகள்*, அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகம், ப. 225.

52. ஞானப்பிரகாசர், சா., பதிப்பாசிரியர், 1911, *திருச்செல்வர் அம்மானை*, ஞானப்பிரகாச இயந்திரசாலை, ப. 54.

53. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 133.

54. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, *மு.கு.நூ.*, ப. 113.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V. அதிகார அடுக்கமைவு

ஈழத்திலே ஒல்லாந்தர் கால ஆட்சியில் அதிகார அடுக்கமைவானது மைய அரசியல் முதற்கொண்டு சமூகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அதன் செயல்நிலையிலும் வேறுபட்ட வடிவங்களிலும், மாறுபட்ட நிலைகளிலும் வெளிப்பட்டுள்ளது. அரசியல் கூறுகள், சமூகப் பிரிவுகள், பால்நிலை போன்றனவற்றில் அதிகாரத்தின் வடிவங்கள் ரூப, அரூப நிலைகளில் இயங்கி வந்துள்ளமையை இனங்காண முடிகிறது.

## 1. அரசியலில் அதிகார அடுக்கமைவு

அதிகாரம் என்பது அறிவு என்ற அமைப்பின் செயற்பாடுகளால் வருவது. அது சமூக ரீதியாக முறைப்படுத்தப்படும் போது சட்டமாகவும், சட்டங் களை அமுலாக்கும் நிறுவனங்களாகவும் மாறிவிடுகிறது என்றார் பூக்கோ.[1] ஈழத்தில் ஒல்லாந்தர் கால அரசியல் அடுக்கமைவிலும் அதிகார மானது பல வழிகளிலும் பல பகுதிகளினூடாக வெளிப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. ஒல்லாந்தர் தமது பலத்தின் மூலம் போர்த்துக்கேயரிட மிருந்து அதிகாரத்தைத் தமதாக்கிய போது தமிழர் பகுதிகளின் அதிகார அடுக்கமைவில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை வெளிப் படை.

### i. ஒல்லாந்தரும் சுதேச அதிகார மையங்களும்

ஒல்லாந்தர் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பிரிவினரைத் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உதவியாக்கிக் கொண்டனர். அதேவேளை சமூகச் செல்வாக்கானவர்கள் தமது இருப்பைத் தக்க வைக்கவும், சமூக மதிப்பை விரிவுபடுத்தவும் தமக்குக் கீழாக உள்ளோர் மீது தமக்கிருந்த அதிகாரங்களைச் செலுத்த முனைந்தனர். தொன்பிலிப் என்ற பெயரைத் தாங்கிய வில்வராய முதலியார், தொன் ஜுவான் எனும் பெயர் கொண்ட சந்திரசேகரமுதலி முதலானோர் ஒல்லாந்தரது சமய அடையாளத்தைத் தாங்கிச் செயற்பட்டமை இவ்வகையிலேயேயாகும். ஒல்லாந்தர் ஆரம்பத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிமார் மீது அச்சம் கொண்டிருந்த போதும் அவர்கள் மீது பெரியளவான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

> ''சமுதாயத்திலே அவர்களுக்கு மிகுந்த செல்வாக்குண்டு என்று கருதியதாலும் அரசனுக்கு விரோதமான கிளர்ச்சிகளை நடாத்தவல்ல சக்தி அவர்களிடமுண்டு என்று கருதியதாலும் போர்த்துக்கேயரும், உலாந்தாக்காரரும் அவர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் முதலியார் பதவியை ஒழித்துக்கட்ட விரும்பினார்கள். ஆயினும் அவ் வெண்ணங்களை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. முதலிமார்களின் அனுசரணையுடனும் ஆதரவுடனுமே ஐரோப்பியர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர்''[2]

என சி. பத்மநாதன் குறிப்பிட்டுள்ளமை முதலிமாரை ஒல்லாந்தர் பயன்படுத்திய முறையை மட்டுமன்றி முதலிமாரது சமூகச் செல்வாக்கையும் குறிப்புணர்த்துகிறது. ஒல்லாந்தர் முதலிமாரின் ஊடாகத் தமது நலன்களைப் பேண முயன்ற அதேவேளை தமக்கு முதலிமாரால் நெருக்கடி ஏற்பட்ட இடத்து குறித்த சில நிலைகளில் தீவிரமாகவும் செயற்பட்டுள்ளனர். பூதத்தம்பி முதலியை ஒல்லாந்தர் கையாண்டமை பற்றி யாழ்ப்பாண வைபவமாலை கூறியுள்ள விளக்கம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தமது நலன்களை மையப்படுத்தியே ஒல்லாந்தரது செயற்பாடுகள் அமைந்தன. என்பதற்கு முஸ்லிம்களுடன் அவர்கள் நடந்துகொண்ட முறை சான்றாகும். முஸ்லிம்களை ஒடுக்கிய ஒல்லாந்தர் வணிகநலன் பொருட்டு அவர்களைப் பொருத்தமான வகையில் கையாண்டனர்.

> ''யாழ்ப்பாணப் பட்டினத்தில் 1790ஆம் ஆண்டு சாயவேர் தொடர்பான குத்தகை சேகுனாப்பிள்ளை லேசக்காதியாரிடம் வழங்கப்பட்டு இருந்தது. மன்னாரில் மீன்வரி பற்றிய குத்தகை 1791 இலே காதனாவி மரிக்காருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதே வருடத்தில் யாழ்ப்பாணக் கிராமமொன்றின் நெல்வரி தொடர்பான குத்தகை வண்ணார்பண்ணையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது.''[3]

என்ற தேசவழமையில் இடம்பெற்றுள்ள குறிப்பு முக்கியமானது.

**ii. பிரபுத்துவத்தின் அதிகார இருப்பு**

தமிழ்ச் சமூகத்தில் பிரபுத்துவமானது அதிகார ரீதியாகப் பிரதான இடத்தை வகித்துள்ளது. விவசாய நிலங்களைச் சொந்தமாகவும், வணிகத் தொடர்புகளைப் பேணிய நிலையிலும் செயற்பட்ட பிரபுக்கள் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தை மற்றவர்கள் மதிக்கும் வகையில் பிரயோகித்துப் பிரபல்யம் பெற முனைந்துள்ளனர். இங்கு புலமைப் பாரம்பரியம் மிக்க புலவர்களில் பலர் பிரபுக்களையும் பெரு வணிகர்களையும் சார்ந்து அவர்களின் அதிகார இருப்புக்குத் துணை நின்றுள்ளனர்.

*''நாளுங் கலியைத் துரப்பதே யன்றி*
*நாளை வாவென் றுரைத்திடான்*
*நம்பி னோர்க்கருள் தருத யாபரன்*
*வெம்பி னோர்க்கரி யேறனான்*
*வாளினன் றடக்கை சந்திரசேகர*
*மானா முதலி வாழவே''[4]*

எனப் பறாளை விநாயகர் பள்ளில் சந்திரசேகர மானா முதலி போற்றப் பட்டுள்ளார். சந்திரசேகர முதலியார் தேசவழமைச் சட்டத்துக்கு கைச்சாத் திட்டுக் கொடுத்தவருள் ஒருவர் ஆவார். சின்னத்தம்பிப் புலவரின் தந்தையார் வில்வராய முதலியார் தேசவழமைச் சட்டத்துக்கு முதலாவதாக ஒப்பமிட்டவர். எனவே சந்திரசேகர முதலிக்கும், நல்லூர் சின்னத்தம்பிப் புலவரது குடும்பத்திற்கும் இடையே உறவுத் தொடர்பு இருந்திருக்கும் என்பது பொருத்தமானதே.

ஒல்லாந்தர் காலத்தில் சாதாரண மனிதர்கள் குறித்துப் பாடல்கள் எழுந்துள்ள போதும் அவை செல்வாக்கு மிக்கிருந்த புலவர்களால் வரவேற்கப்படவில்லை.இதனால் அவை பேணப்படாத நிலையில் கைக் கெட்டாது போயின.

*''மருக்கு ஆவி அன்னவனைப் பாடிலர் கவிவாணர் என்க*
*மருக்கு ஆவின் பால் உகுத்தால் எனப் பாடுவர் மாந்தரையே''[5]*

என நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் குறிப்பிட்டுள்ளார். நிலத்திலுள்ள பிளவிலே பசுவின் பாலை ஊற்றுவது போல மானுடர்களைப் புகழ்வது வீணானது என்று தம் அதிருப்தியை வெளிப்படுத்திய புலவர்கள் பிரபுக்களை மட்டும் பலவாறு வியந்துள்ளனர். அதிகாரமும் சமூகச் செல்வாக்கும் உடைய பிரபுக்களைச் சார்ந்து தமது நலன்களைப் பேணிக்கொண்ட புலவர்கள் பிரபுக்களின் இருப்பை நிலைப்படுத்தத் துணைநின்றுள்ளனர்.

மாவை சின்னக்குட்டிப் புலவர் தண்டிகைக் கனகராயன் பள்ளில் தண்டிகைக் கனகநாயக முதலியை மட்டும் புகழாது முதலியாரின் பரம்பரைப் பெருமையையும் சுற்றத்தவர்களையும் இணைத்துப் போற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யுள்ளமை பிரபுத்துவ இருப்பை நிலைப்படுத்துவதோடு தொடர்புபட்ட தாகும்.

> ''கனகநாயக முதலியின் இருப்பை நியாயப்படுத்தப் பெயர்பெற்ற உறவினரின் சிறப்பையும் பாடவேண்டிய தேவை சின்னக்குட்டிப் புலவருக்கு ஏற்பட்டிருக்கலாம்''[6]

எனும் எஸ்.சிவலிங்கராஜாவின் கருத்தும் இதனை உறுதிப்படுத்துவதாய் உள்ளது.

*''மிகைபெறத் தண்டிகையொடு கவரியும்*
*விளங்கு கொம்ப னானையும் மிகுகதிர்*
*விரிதரு வெண் குடைமுதல் வரிசையும்''[7]*

பெற்றவராய் தண்டிகைக் கனகநாயக முதலி சிறப்பிக்கப்பட்டுள்ளதோடு

*''................................ வேளாஞ்*
*சூரியன்றன் றவப்பிள்ளை நேரியன் சங்கரப்பிள்ளை''[8]*

எனத் தொடரும் செய்யுளில் சங்கரப்பிள்ளையின் பெருமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

''விசயன் தேரூருமாண்மைக் கரவையில் வேலன்''[9] எனவும் ''திரையாடை சுற்றுந் தேசாதிபர் மெச்சு வேலன்''[10]

எனவும் கரவை வேலன் அதிகாரத் தரப்பிற்கு நேயமானவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை அன்றைய சமூகக் களகத்தில் பிரபுக்களுக்கு இருந்த செல்வாக்கைக் காட்டுகிறது. பிரபுக்கள் சமயக் காவலர்களாகவும், தமிழ்ப் பண்பாட்டைப் பேணி வளர்ப்பவர்களாகவும், அளவிடற்கரிய ஆற்றல் பெற்றவர்களாகவும், கொடை வள்ளல்களாகவும் விளங்கினர் எனப் புலவர்கள் போற்றியுள்ளனர்.

*''பிறை சூடியைத் தொழும் வேலன்''[11]*

மொழிகண்ட முச்சங்க முத்தமிழ் நூலை முதுமதியால்

*''வழிகண்ட நீதிக் கரவையில் வேலன்''[12]*

எனும் விபரிப்பானது கரவை வேலன் குறித்த உயர்ந்த மதிப்பீட்டை மக்கள் மனதில் ஏற்படுத்தச் செய்யும் வகையில் அமைந்துள்ளது.

*''......................*
*வந்தபாவலர் வெங்கலிதீர*
*வழங்குங் கோட் டையோ ரைந்நூறு காணும்''[13]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என பொருள் வழங்குநர்களாக அதிகார வர்க்கத்தினர் இருந்தமையையும், அவர்கள் பாவலர்களுக்குப் பொருளுதவி புரிந்தமையையும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பதிவுசெய்துள்ளார். இங்கு பிரபுக்களைச் சார்ந்து புலவர்கள் செயற்பட்டமைக்குப் பொருளாதார நோக்கும் சமூக அந்தஸ்த்தும் அடிப்படைகளாக அமைந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படுகிறது.

### 2. சாதியம் சார் அதிகார அடுக்கமைவு

ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்து சமூக இயங்கியலில் சாதியத்தின் செல்வாக் கானது முக்கியமான இடத்தை வகித்துள்ளது. பிறப்பு தொழில் என்பன சார்ந்து முதன்மை பெற்ற சாதியம் தனித்த படிநிலைகளையும் கொண்டு இயங்கியுள்ளது. ஆரியத் தொடர்பின் விளைவால் வருணதர்ம கண் ணோட்டமானது சாதியப் பாகுபாட்டில் முக்கிய பங்கு வகித்துள்ளமை யைக் காணலாம்.

> ''வேலை மீதினிற் றானோர் முறையினிற்
> செய்கை யுன்ன வயன்முக மீதினில்
> செய்ய நூன்மறை யோர்புய மீதே
> வையங் காக்குமரசர் கவான் மிசை
> வாய்ந்த நாயகர் மரைமலராக''[14]

என பிரம்மனை மையமாகக் கொண்டு நான்கு வருணங்களும் தோன்றின என்பதைத் தண்டிகைக் கனகராயன் பள்ளு செய்யுள் விபரிக்கிறது.

சாதியம் என்பதில் உடைமை சார்ந்து செல்வாக்குள்ளவர்களே உயர் சாதியினராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் சொத்துக்களை மையமாகக் கொண்டு தமது மேலாண்மையை சமூகத்தில் பரப்பியுள்ளனர். ஒல்லாந்தர் காலத்தில் வடக்கு, கிழக்கில் தனித்துவமான சாதியம் சார் பிரிவுகளை மேல்வரும் பிரதேசங்களை மையமாகக் கொண்டு நோக்க முடியும்.

#### i. யாழ்ப்பாண சாதியக் கட்டமைப்பு

யாழ்ப்பாணப் பிரதேசமானது சாதிய உணர்வு செறிந்ததாகவும் வேளாள மேலாதிக்க சமூகமாகவும் இருந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப் பாணத்தின் சாதியக் கட்டமைப்பு மிகவும் இறுக்கமான வகையில் நிலவியிருந்தமையை இனங்காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உயர் சாதியினருள் இன்று முக்கிய இடம் பெறுவோர் வெள்ளாளரே. ஒல்லாந்தர் காலத்தில் அகம்படியார், மடப்பள்ளியார், வெள்ளாளர் முதலியோர் உயர் சாதியினராகக் கருதப்பட்டு வந்தனர். பிராமணர் மிக உயர் சாதியினரெனினும் யாழ்ப்பாணத்து வாழ்க்கையில் அதிகார மேன்மை உடையவர்கள் வெள்ளாளரே''[15]

எனும் கா.சிவத்தம்பியின் கருத்து சாதியக் கட்டமைப்பில் வேளாளரின் வகிபங்கைச் சுட்டுகிறது. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம்பெற்ற இலக்கியங்கள் பலவற்றில் பிரதேச ரீதியாகச் செல்வாக்குப் பெற்றிருந்த சாதியக்கூறுகள் பற்றிய தரவுகளைக் காணமுடிகிறது. நளவர், மறவர், மடப்பள்ளி, கோவியர், பள்ளர், சிவியார், முக்குகர், பிராமணர், செட்டி யார், வேளாளர், கரையார் என யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிகள் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த பால்டியஸ் வேளாளர், பிராமணர், பறையர், சிவியார், கரையார், நளவர், மேசன், முக்குவர், நகைத் தொழிலாளர், சிகையலங்கரிப்பாளர், சாயவேர் போடுவோர் என பதினேழுக்கு மேற்பட்ட சாதிப் பிரிவுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை வான் றீ தனது குறிப்பில் 41 சாதிகள் பற்றி எடுத்துக் காட்டியுள்ளார். இங்கு குறிப்பிட்டுள்ள சாதிகள் பிறப்பால் அடையாளப் படுத்தப்பட்டுள்ள அதேவேளை தொழில் நிலை சார்ந்தே வேறுபடுத்தப் பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. முற்பட்ட காலத்தில் நிலவிய சாதியப் பிரிவுகளிலும் பார்க்க ஒல்லாந்தர் காலத்தில் சாதிகளின் பிரிவுகள் அதிகமாகியுள்ளமை கவனிக்கத்தக்கது.

வரதபண்டிதர் தனது கிள்ளைவிடு தூதில் யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கு சூழலை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த வேறுபட்ட சாதியினர் குறித்தும் அவர்கள் மேற்கொண்டு வந்த தொழில் குறித்துமான தரவு களைத் தந்துள்ளார். செட்டிகள், ஏராளர், துர்த்தர், களமர், காராளர், மடப்பள்ளி, மலையாளர், அகம்படியார், கரையார், தட்டார், கொல்லர், தச்சர், வண்ணார், நாவிதர், பறையர் ஆகிய சாதிகள் தொழில் சார்ந்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.[16] பொதுவாகத் தொழிலானது சாதியத்தை அடையாளப்படுத்தும் அம்சமாக விளங்கினாலும் குறித்த சில சாதிகளுக்கான பெயர்க் காரணங்கள் குறித்த தனித்த விளக்கங்களும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நம்பிகள் தங்கள் குலத்தை விட்டு நழுவியதால் அவர்கள் பெயர் நளுவரென்றாய் இக்காலம் நளவராயிற்று''[17] எனவும் ''முன்னாட்களாலே சில வறிய குடிகள் தங்களை கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக் கொடுத்துக் கோவிற் பணிவிடை செய்து சீவனம் பண்ணிக் கோவிலார் என்று அழைக்கப்பட்டு இருந்து பின்பு கோவியர் எனப் பெயர் பெற்றார் கள்''[18] என்ற யாழ்ப்பாண வைபவமாலைக் குறிப்புக்கள் சாதியத்திற்கான அடையாளப்படுத்தலில் நிலவிய பெயர்க் காரணங்கள் குறித்த பார்வை யைத் தருகிறது.

**ii. மட்டக்களப்பு**

மட்டக்களப்பின் சாதிய அமைப்பு தனித்துவமான இயல்புகளைக் கொண்டுள்ளது. ''மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்'' மட்டக்களப்பின் சாதி அமைப்புப் பற்றிய விரிவான தகவல்களைத் தந்துள்ளது. இங்கு கலிங்கமாகோன் அரனூழியம் வகுத்த கல்வெட்டு[19] முதல் ஆசாரிகள் கல்வெட்டு[20], சாதிக் கல்வெட்டு[21], பங்கு கூறும் கல்வெட்டு[22] எனப் பல கல்வெட்டுக்களில் அந்தணர், வெள்ளாளர், மாதுவர், கோயிலார், பண்டாரப்பிள்ளை, குசவர், கொல்லர், கோனார், தொழுவர், முதலி, செக்கன், சாணன், ஈரங்கொல்லி, ஈட்டியன், பள்ளர், வாரந்தட்டி, மாவைக் காரர், கடையர், துரும்பர், செட்டி, முக்குவர், கரையார், வேடுவர், நளவர், சேணியர், தட்டார், சீர்பாதக்காரர், வண்ணார், அம்பட்டர் முதலான சாதிப் பிரிவுகள் குறித்த விடயங்கள் முக்கியம் பெற்றுள்ளன.

குலவிருதுகள், குடிப்பிரிவுகள் குறித்த விளக்கங்கள் மட்டக்களப்பு சாதியமைப்பில் பிரதானமாக உள்ளன. ஒவ்வொரு சாதியிலும் குடி என வழங்கும் ஏழு பிரிவுகள் அமைந்திருப்பது பொதுவான வழமை. சில சாதிகளில் ஏழிலும் குறைவான குடிகள் இருப்பதுண்டு. ஏழு குடிகள் உள்ள சாதிக்கு எடுத்துக்காட்டாக வெள்ளாளர் குடிகள் என்பதில் கண்டன்குடி, சடுகுபில்லி குடி, கட்டப்பக்தன் குடி, கவுத்தவாகுகுடி, அத்தியாயன்குடி, பொன்னாச்சிகுடி, வயித்திகுடி ஆகிய ஏழு பிரிவுகளைக் குறிப்பிடலாம்[23].

தாய்க்குடி கருத்தியலும், முக்குவர் என்னும் அரச கோட்பாடும் தான் மட்டக்களப்பு சாதியமைப்பின் ஆதாரத்துவம் என்ற கருத்தை மக்ஜில்வரே முன்வைத்துள்ளார்[24]. முக்குவர், வேளாளர், குருக்கள் ஆகியோர் சாதியமைப்பில் உயர்நிலையில் இருந்துள்ளனர். அதேவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவினைச் சாதிகளும் தொழில் அடிப்படையிலான சாதிகளும் அடுத்த நிலையிலும் குடிமைச் சாதிகள் இறுதிநிலையிலும் இருந்துள்ளமை வெளிப்படுகிறது.

**iii. திருகோணமலை**

திருகோணமலையின் சாதியத்தில் வன்னியரின் செல்வாக்கு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வன்னியரோடு வரிப் பத்தார், முதலியார், பிராமணர், தலைமைக்காரரர் முதல் பறையர் ஈறாக ஏனைய சாதிகளின் பரம்பலையும் இனங்காண முடிகிறது.

வன்னியரின் ஆட்சியின் கீழமைந்த நான்கு குறு நிலப் பகுதிகளாக திருகோணமலை, கட்டுக்குளம், தம்பலகாமம் பற்று, கொட்டியாரற்பற்று என்பன விளங்கியுள்ளன. திருகோணமலையில் வன்னியர்களின் தோற்றமும் பரவலும் கோணேசர் கோவிலை மையப்படுத்தி நிகழ்ந்துள் ளமைக்கு கோணேசர் கல்வெட்டு உள்ளிட்ட முற்கால இலக்கியங்கள் சான்றுகளைத் தந்துள்ளன. சமூக ரீதியாக நிலவிய வழக்கச் செயற்பாடு களை அக்கால சமூகப் பிரிவுகளின் அடியாக நோக்கியுள்ளமையை தேசவழமை உணர்த்துகின்றது.

திருகோணமலையில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்துள்ளனர். இங்கு வன்னியர் குறித்த சில பகுதிகளில் செல்வாக்குப் பெற்று இருந்துள்ள மையைக் குறிப்பிட முடியும். சமூகத்தின் மேல் மட்டத்தில் இருந்தோர் அறிவும் சமூக மதிப்பும் உடையவர்களாகக் காணப்பட்டுள்ளனர். வீரக் கோன் முதலியார் திருகோணமலைச் சூழலை உள்வாங்கி வெருகல் சித்திர வேலாயுதரைப் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**iv. புத்தளம் - கற்பிட்டி சாதியக் கட்டமைப்பு**

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் புத்தளம் - கற்பிட்டி பகுதியில் சாதிய அடுக்கமைவில் செட்டிகள், வெள்ளாளர், முக்குவர், வாகையர், கடையர், சாண்டார், வண்ணார், பரவர் முதலான சாதிகள் முக்கியத்துவம் பெற்று இருந்தன. இப்பகுதியில் இஸ்லாமியர் அதிகளவில் இருந்தமைக்கான சான்றுகள் உண்டு.

சாண்டார் பூர்வ குடிகளின் வழிமுறைச் சந்ததியினர் ஆவர். அதே வேளை யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் வேளாளர் சைவசமயப் பின்னணி உடையவராய் இருந்தனர் ஆனால் இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பெரும்பாலானவர்கள் வேளாளர் சமூகத்தைச் சார்ந்த பின்னணி யுடையவர்களாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சொத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் யாழ்ப்பாணத்து தேச வழமையில் சொத்துரிமை சார்ந்த விதிகள் எல்லாச் சாதியினருக்கும் பொதுவானதாக உள்ளது. ஆனால் இப்பகுதியில் வழங்கிவரும் சாதியினர் சிலருக்கு தனியான வழமைகள் இருந்துள்ளன. முக்குவர், பரதர், சோனகர் ஆகியோரின் வழமைகள் இங்கு வேறானவை.

அக்காலத்தில் செட்டிமாரில் தாலித்தியம் எனும் வழக்கமொன்று தனித்துவமாக இருந்துள்ளது. கணவன் இறந்துபோனால் அவனிடம் பொருள், பண்டம் ஏதேனும் இல்லாதவிடத்து அவனுடைய விதவையை ஆதரிப்பதற்கு அவனுடைய சகோதரர்களும் அவர்களுடைய பிள்ளை களும் பொறுப்புடையோர் ஆவர். அவர்கள் வசதியற்றிருந்தாலோ, அவளுக்கு உதவிபெறுவது விருப்பமின்றியிருந்தாலோ மற்றும் உறவினர் அவளுடைய சீவியத்துக்காக ஒரு தொகைப் பணத்தைப் பற்றுச்சீட்டு எழுதிக் கொடுப்பார்கள். அது தாலித்தியம் எனப்படும்.[25]

## 3. சாதிய மேலாண்மைக்கான பின்னணி

ஈழத்தில் ஒல்லாந்தர் காலச் சமூக கட்டமைப்பில் சாதியமானது தெளிவான வேறுபாடுகளைக் கொண்டு இயங்கியுள்ளது. அடிப்படையில் உடைமை சார்ந்த ஆதிக்கம் சாதிய மேலாண்மைக்கான வெளியை ஏற்படுத்தி இயக்குவித்துள்ளமை புலனாகிறது. ஆதிக்க மனோபாவத்தைக் கொண்ட சாதிகள் அதிகாரத் தரப்பினரோடு தொடர்புகளை வலுப்படுத்தி தமது செயற்பாடுகளை முன்னகர்த்தியுள்ளமை இங்கு கவனத்திற்குரியதாகும்.

சாதிய மேலாதிக்கமானது சுரண்டல் மனோபாவம் கொண்ட ஒல்லாந்தரது ஆட்சியில் பொருளாதாரம், கல்வி, அரசியல், மத அடிப் படையில் வலுப்பெற்றுள்ளமை வெளிப்படை. கூடவே இச் சாதியமானது சமூக மட்டத்தில் ஆதிக்க சக்திகளின் இருப்பைப் பேணவும் ஒடுக்கப்படும் சமூகப் பிரிவினரைத் தொடர்ந்து அதே நிலையில் வைத்திருக்கவும் வழிசெய்துள்ளது.

### i. சாதியமும் பொருளாதாரமும்

சமூக அடுக்கமைவில் பொருளாதார ரீதியாக வலுப்பெற்றிருந்த பிரிவினர் சமூகச் செல்வாக்கு மிக்கவர்களாகவும் விளங்கினர். தமது பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களை முதன்மைப்படுத்தி ஆட்சி அதிகார மையமான ஒல்லாந்த ரோடும் தொடர்புகளைப் பேணியுள்ளனர். வேளாளர், முக்குவர் முதலா னோர் தமிழர் பிரதேசங்களில் பலம் மிக்கவர்களாக விளங்கியதோடு அவர்கள் பண்ணைகளை நிர்வகித்துள்ளனர் என்பதற்கும் சான்றுகள் உண்டு.

சொத்தை முதன்மையாகக் கொண்டோர் மேற்கொண்ட செயற் பாடுகள் புலவரால் போற்றப்பட்டுள்ளமையானது சமூக அடுக்கமைவில் பொருளாதாரத்தின் வகிபங்கைக் காட்டுகிறது.

*''இணரவிழ் சிகழிகை வனிதையர் தினமட*
*லெழுதிய தனுமத னனையனையான்*
*குணதர வரரகு நாயக மகிபதி*
*கொடையென மாரி பொழிந்ததுவே''*[26]

எனத் தொடரும் விபரிப்பு மேற்குறித்த விடயத்தைச் சார்கிறது.

சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பாரியளவான பாதிப்புக் களை ஏற்படுத்தியுள்ளன.

''குலமகிமையாற் சர்வே சுவரனுடைய மகிமையைத் துதிக்க வேண்டி யிருக்கையிலே தன்னைத்தான் பாராட்டி மற்றவர்களை நிந்தித்தாய். துரைத்தனத்தால் குடியானவர்களைக் காக்க வேண்டி இருக்கையிலே யனியாயப் பணமறவாக்கி நெருக்கி இல்லங்களைக் கலைத்தாய். திரவியத்தினாலில்லாதவர்களுடைய பசிதாகத்துக்கும் நிறுமாணத்துக்கு மடைமான மெப்படியென்று பாராமற் தன்வயிறு நிறைந்து நாய்க்கும் பூனைக்கும் குதிரைக்கும் கழுதைக்குங் கொடுத்து வீறுக்கும் வீணுக்குஞ் செலவழித்து மற்றது புதைத்து வைத்தாய்''[27]

எனும் ஞானவுணர்ச்சிப் பகுதியானது பொருளாதாரத்திலே மேன்நிலை பெற்றவர்கள் குடியானவர்களைச் சுரண்டிய தன்மையை விமர்சிக்கிறது.

வேளாளர் பொருளாதாரத்தைத் துணைக்கொண்டு தமது இருப்பைத் தக்கவைக்க முனைந்துள்ளனர். அதேபோல மட்டக்களப்பில் செல்வாக்குப் பெற்ற முக்குவர் அங்கு அரசர்களாகவும் போடிகள் என்ற நிலப் பிரபுக் களாகவும் இருந்துள்ளனர். ஆதிக்க சாதியினர் தமக்குக் கீழ் வாழ்ந்தோரைப் பொருளாதார பலங்கொண்டு அடக்கி அதிகாரம் புரிந்துள்ளனர். அதே வேளை கடலை நம்பி வாழ்ந்த கரையார் முதலான சில சாதியினர் மேற்குறித்த ஆதிக்க சாதியினரின் மேலாண்மைக்கு உட்படாதவர்களாக செயற்பட்டுள்ளமையையும் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*''வரிசைவளர் திரிபதகை மரபினுரி யவர்கிளைகண்*
*மதி செல்வ மேறவே கூவுவாய் குயிலே''[28]*

என அடிநிலை மக்கள் இலக்கியமான பறாளை விநாயகர் பள்ளில் வேளாளர் குலம் போற்றப்பட்டுள்ளது. சமூகத்தில் பிராமணர்களின் மேலாதிக்கம் வலுவற்றதாக விளங்கினாலும் தமது அடையாளத்தை வலுப்படுத்த பிராமணரோடு தம்மை இணைத்து நோக்கும் தன்மையையும் வேளாளர் கொண்டிருந்தனர்.

*''ஆதிவருண ரறுதொழிலார் முன்னூலார்*
*வேதநெறி யொழுகும் விப்பிரர்''[29]*

என்ற கிள்ளை விடுதூதுச் செய்யுள் பகுதியில் பிராமணர் பற்றிய குறிப்பைக் காணலாம்.

பொருளாதார ரீதியாக நலிவுற்றிருந்த சாதியினர் சமூக இருப்பிலும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக விவசாய நிலங் களில் கூலிகளாக விளங்கிய அடிநிலை மக்களுக்கு உடைமையாளனே தலைவனாகவும் தேவையானபோது நீதிபதியாகவும் செயற்பட்டுள்ளான். பண்ணையாளனின் கண்ணோட்டம் என்பது சாதாரண மக்களின் நலன் களைக் காட்டிலும் தனது பொருளாதார ரீதியான நலன்களைக் கருத்திற் கொண்டே பெரிதும் செயற்படுவதாய் இருந்துள்ளது.

*''பண்பு நீதி யறியாத தூக்குணிப்*
*பள்ளன் செய்கருமங்களைக் கேளும்''[30]*

என தலைவி பண்ணையாளனிடம் சென்று முறையிடும் நிலையிலேயே அடிநிலை மக்களின் வாழ்வு இருந்துள்ளது.

### ii. சாதியமும் தொழிலும்

சாதிய அடுக்கமைவில் தொழிலானது முக்கியமான அம்சமாக இனங்காண முடிகிறது. தமது அதிகாரத்தினை மையமாகக் கொண்டு தொழிலை முன்னெடுப்போர் உயர் சாதியினராகவும், குடிமைத் தொழில்களையும் உடைமையாளரிடத்து கூலித் தொழிலையும் மேற்கொண்டோர் தாழ்ந்த சாதியினராயும் இனங்காணப்பட்டுள்ளனர்.

தொழில்கள் சடங்குநிலை அம்சம் ஒன்றையும் கொண்டிருந்ததோடு தூய்மைப்படுத்தல், துடக்கு என்பவற்றோடும் கருத்தியல் மட்டத்தில் இணைந்திருந்தன. ஒருவர் செய்யும் தொழிலை மையமாகக் கொண்டு சாதியானது அடையாளப்படுத்தப்படும் வழக்கம் இருந்துள்ளது. இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL



குறித்த தொழிலை மேற்கொண்டோர் அதனை வழிவழியாகப் புரிந்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

*''வெட்டி முறித்திரும்பை வேறாக்கி முட்டியலாற்*
*கொட்டிப் பணதிசெய்யுங் கொல்லர்களுந்''*[31]

*''ஆளு மரசர்முத லானவர்க்குச் சத்திரத்தா*
*னாளு மயிர்வினைசெய் நாவிதர்''*[32]

என கொல்லர், நாவிதர் முதலான தொழிலை மையப்படுத்திய சாதியப் பாகுபாடுகள் குறித்து கிள்ளைவிடு தூதில் குறிப்புக்கள் உள்ளன.

குறித்த சில சாதியினரை அடையாளப்படுத்துமிடத்து அவர் புரியும் தொழில் ரீதியாகக் குறிப்பிடாது குறிப்பாக வெளிப்படுத்தும் வழக்கமும் இருந்துள்ளது.

*''றிருவள்ளுவர்முன் றிருநாளைப் பாவோர்*
*வருமரபில் வந்த மனுவுந்''*[33]

எனும் செய்யுள் பறையர் சமூகத்தை வள்ளுவரது மரபூடாகக் குறிப் பிடுகிறது. குடிமைத் தொழில் செய்தோரது பணியும் தற்காலத்தோடு ஒப்பிடுகையில் ஏற்றத்தாழ்வு நிலையைப் பிரதிபலிப்பதாக அமைந் திருந்தமை இங்கு கவனிப்பிற்குரிய விடயமாகும். "The babers not only shave, but also crop the hair of the head, cut and pare the nails of both the hands and feet, and clean ones ears too."[34] என நாவிதர் தொடர்பாக போல்டியஸ் தரும் குறிப்பு இதனோடு தொடர்புபட்டதாகும்.

**iii. சாதிகளுக்கிடையிலான இடைவினை**

ஒல்லாந்தர் காலப்பகுதியில் நிலவிய சாதியக் கட்டமைப்பானது இறுக்கமான வகையில் அமைந்திருந்தது. இப்பாகுபாடானது தமிழர்களுக்குள்ளேயான பிரதான அம்சங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. மேலாதிக்கம் பெற்றிருந்த சாதியினர் தமக்கு அடுத்த நிலையில் இருந்த சாதியினரோடு கொண்டிருந்த உறவுநிலையும் குடிமைச் சாதியினரோடு கொண்டிருந்த தொடர்பும் ஒடுக்கப்பட்டோருக்கிடையிலான உறவுநிலையும் பிரதானமானவையாக உள்ளன.

தொழிலானது சாதியத்தை அடையாளப்படுத்துவதில் பிரதான இடத்தைப் பெற்றிருந்ததோடு வாழிடம் சார்ந்து பிரதேசத்தின் குறித்த பகுதிகளில் வேறு தெரியக்கூடிய வகையில் சாதியினரின் இருப்பு அமைந்திருந்தமையை அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களின் ஊடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காண முடிகிறது. குறித்த சில பிரதேசங்களில் பல்வேறான சாதியினர் வாழ்ந்துள்ளனர். எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கைப் பெரிதும் மையப்படுத்தி எழுந்துள்ள கிள்ளைவிடு தூதில் வேளாளர், அகம்படியார், தச்சர், கொல்லர், தட்டார், வண்ணார், நாவிதர் என பல சாதியினரின் இருப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ள குறிப்புக்கள் இவ்வகையில் கவனிப்பிற்குரியன.

ஈழத்தமிழர்களில் ஆதிக்க சாதியினரான வேளாளர், முக்குவர் முதலானோர் தாம் செல்வாக்குச் செலுத்திய பிரதேசங்களில் மேலாண்மை பெற்றிருந்தனர். வர்ண தர்மப் பிரிவில் முக்கியத்துவம் பெற்றிருந்த பிராமணர் ஈழத்தின் வடக்குப் பகுதியில் சமய நிலையில் மட்டும் உயர்ந்த மதிப்பைப் பெற்று விளங்கியிருப்பதைக் காண முடிகிறது.

> ''இருநிலத்து வேதியரும் ஏருழுவே ளாளர்களும்
> பரிவினுடன் கடல்வருண பகவானைக் கண்டிறைஞ்சி''[35]

என பறாளை விநாயகர் பள்ளில் வேதியர், வேளாளர், இறைவனை நோக்கி வேண்டுவதாய் அமைந்த பகுதி சடங்கு நிலையில் சாதிகளுக் கிடையேயான தொடர்பைக் காட்டுகிறது. மட்டக்களப்பில் பிராமணரது செல்வாக்கு முக்கியம் பெறவில்லை. அதேவேளை சமயச் சடங்குகளோடு தொடர்புகொண்ட வீர சைவரும் உரிய நிலையை பெற்றிருக்கவில்லை என்பது வெளிப்படுகிறது.

ஈழத்தமிழர்களது வரலாற்றில் வேளாளர், முக்குவர் முதலானோர் உடைமை ரீதியாக ஆதிக்கம் பெற்றிருந்ததோடு இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கிய குடிப்பெயர்விலும் இச்சாதியினர் அரசியல் ரீதியாக வலுவான வகையில் நிலைபெற்றமையும் முக்கியமாகும். சாதி ரீதியாக துடக்கு, சடங்கு, உணவுப் பரிமாற்றம் முதலான நிலைகள் சாதிகளுக் கிடையிலான இடைவினையில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. வேளாளர், கோவியர் ஆகிய இரு சாதியினரை இங்கு எடுத்து நோக்கின் ஆரம்ப காலத்தில் இரு சாதிகளுக்கிடையிலான ஊடாட்டம் தனித்த அம்சமுடையதாக இருந்துள்ளது.

> ''முன்னாட்களிலே சில வறிய குடிகள் தங்களைக் கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக்கொடுத்து கோவிற் பணிவிடை செய்து சீவனம் பண்ணிக் கோவிலார் என்று அழைக்கப்பட்டு பின்பு கோவியர் எனப் பெயர் பெற்றார்கள்''[36]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என யாழ்ப்பாண வைபவமாலை கோவியர் சமூகம் பற்றிக் குறிப் பிட்டுள்ளது. கோவியர் வேளாளரின் சிறைகளாகக் கணிக்கப்பட்ட அதே வேளை சடங்கு நிலையில் வேளாளருக்குச் சமதையாக மதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நவீனமயமாதலின் விளைவுகள் பெரிதும் பாதிக்காத ஒல்லாந்தரது ஆட்சியில் வர்த்தகத் தொடர்புகள், போக்குவரத்து, அச்சியந்திரப் பயன்பாடு முதலானவை குறிப்பிடத்தக்க அளவில் பயன்பாட்டில் இருந்த போதும் சமூகத்தின் போக்கை மாற்றியமைக்கும் வகையில் அவை சக்தி மிக்கனவாக அமையவில்லை. அதேவேளை ஒல்லாந்தரால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் பெரும்பாலானவை அவர்களது பொருளாதார நலன்களை முதன்மைப்படுத்தியனவாக அமைந்தன வெனினும் அந்நடவடிக்கை களில் சில சமூக வளர்ச்சிக்கும் துணைநின்றன என்பதும் கருத்திற் கொள்ளத் தக்கது.

அக்காலத்தில் சாதி அமைப்பானது நியமமாய் பின்பற்றப்படும் நடைமுறைகளில் பெரியளவான மாற்றங்கள் ஏற்படாத வகையிலேயே நகர்ந்துள்ளது. அன்று குடிமைத்தொழில் செய்தோர் அத்தொழிலைச் செய்வதைக் கடமையாக மட்டுமன்றி அதனைத் தமது உரிமையாகக் கருதத்தக்க வகையில் சமூக மதிப்பீடுகள் நிலவியுள்ளன. புலமையாளர்கள் தமது படைப்புகளிலும் சாதி சார்ந்து தொழிலை அடையாளப்படுத்தி யுள்ளமைக்கு சான்றுகள் உண்டு. ஆதிக்க சக்திகள் தமது இருப்பை நிலைப்படுத்துவதற்கான உத்தியாக தொழிலைச் சாதியத்தோடு இணைத்து நோக்கியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

> *''சிந்துதொடை மன்னவர்க்குச் செய்தமுடி பாவலர்க்குத்*
> *தந்து புகழ்படைத்த தட்டாரும்''*[37]

எனும் கிள்ளைவிடு தூதுச் செய்யுள் குறித்த தொழிலை கௌரவமான உணர்வு வெளிப்படும் வகையில் குறிப்பிட்டுள்ளதன் நுண்அரசியல் நோக்கத்தக்கதாகும்.

சாதிகளுக்கிடையே நிலவிய வேறுபாடுகள் அதிகார நிலையில் ஒல்லாந்தருக்கு வாய்ப்பான விடயமாக அமைந்திருந்தது. தமது நலன் களை முன்னெடுப்பதற்கும், சுதேசிகள் மத்தியில் கூட்டிணைவு நிகழாமல் பேணிக்கொள்வதற்கும் சமூக வேறுபாடுகள் அவசியம்மிக்கதாக இருந் துள்ளன. அதேவேளையில் இச்சாதிப்பாகுபாட்டினால் உள்ளூர் அதிகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகத்திலும் நீதி செயற்பாடுகளிலும் முரண்பாடுகள் சில வெளிப் பட்டுள்ளமைக்கு யாழ்ப்பாண தளபதியாக இருந்த சுவாடிகோனின் அறிக்கையில் ஆதாரங்கள் உண்டு.

## 4. இனம் சார்ந்த அதிகார அடுக்கு

ஈழத்தில் இனம்சார் கட்டமைவில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய பிரிவினர் ஒல்லாந்தர் காலப்பகுதியில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்துள்ளனர். அக்காலத்தில் ஈழத்தீவானது வடக்கு, கிழக்கில் தமிழர்களது மேலாண்மையையும் ஏனைய பிரதேசங்களில் சிங்களவர் களது அதிகார மேலாண்மையையும் பெற்றிருந்த அதேவேளை முஸ்லிம்கள் இவ்விரு பிரதேசங்களிலும் குறிப்பிடத்தக்க அளவில் வாழ்ந்துள்ளனர். இக்காலத்தில் இனங்களுக்கிடையிலான அதிகார அரசியல் குறிப்பிடத்தக்க வகையில் முக்கியம் பெற்றிருந்தது.

### i. தமிழர் - சிங்களவர் அதிகார உறவு

வரலாற்று ரீதியாக சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே பல்வேறு தொடர்புகள் இருந்து வந்துள்ளன. வேறு பிரித்தறியக்கூடிய புவியியல் ரீதியிலான ஆள்புலத்தையும், அதிகார மையங்களையும் கொண்டிருந்த சிங்களவரும் தமிழரும் ஐரோப்பியரின் வருகையின் விளைவால் மாற்றங்களையும், பாதிப்புக்களையும் எதிர்கொண்டனர்.

ஈழத்தின் வடபகுதியானது தனித்துவமான வகையில் தமிழர்களது அதிகாரத்தின் கீழ் போர்த்துக்கேயர் காலம் வரை இருந்துள்ளது. மேலும் இவ்வடபகுதி யாழ்ப்பாண மன்னர் காலம், அதற்கு முற்பட்ட காலம் ஆகிய காலப்பகுதிகளில் அரசியல் பொருளாதார பண்பாட்டு ரீதியாக தனித்த அடையாளத்தைப் பேணியுள்ளது. உக்கிர சிங்கன், வன்னியர், ஆரியச் சக்கரவர்த்திகள் எனப் பலரது வரலாற்றுக் குறிப்புக்களை யாழ்ப்பாண வைபவமாலை ஆதாரமாக எடுத்துரைத்துள்ளமை இங்கு கவனிப்பிற்குரியதாகும். யாழ்ப்பாண மன்னர்காலப் பகுதியில் தமிழ் மன்னரது அதிகாரம் கிழக்கு வரை பரந்திருந்தது. அதேவேளை புவியியல் ரீதியாகச் சிங்களவர்களது தொடர்பு கிழக்குப் பகுதியில் நிலவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஒல்லாந்தரது அதிகாரத்தின் கீழ் வாழ்ந்த தமிழ் மக்கள் வரலாற்றில் சிறப்பு நிலையிலிருந்த தமிழ் மன்னர்கள் குறித்து பெருமித உணர்வைக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நரராசர் புகழிணுவை நகரில் வாழும்
நம்பனடி யவர்நினைந்த வரங்க ணல்...''[38]

என அரசர்களைப் போற்றிய இணுவில் சின்னத்தம்பிப் புலவரது கூற்று இங்கு தொடர்புபடுத்தி நோக்கத்தக்கதாகும்.

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் சிலவற்றில் கண்டியை ஆண்ட சிங்கள மன்னர்கள் தொடர்பான வாழ்த்துக்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் சிங்கள மன்னர்களை வாழ்த்தியுள்ளமைக்கான பின்னணியை நோக்குதல் அவசியமாகும்.

ஈழத்தில் பெரும்பகுதி ஒல்லாந்தரின் அதிகாரப் பிடியில் சிக்குண்டிருந்த வேளை கண்டி இராச்சியமானது ஒல்லாந்தரின் அதிகாரப் பிடிக்குள் சிக்காது சுய ராச்சியமாகத் தொழிற்பட்டுள்ளது. இதனால் கண்டி மீதான மதிப்பு புலவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்க வேண்டும். மேலும் புலவர்களால் போற்றப்பட்டுள்ள கண்டி மன்னர்கள் இந்தியத் தொடர்புள்ளவர்களாகவும், நாயக்க வம்சத்தவர்களாகவும் சைவ சமய அடையாளங்களை மதித்தவர்களாகவும் இருந்துள்ளனர்.

''கயல்வ ரைந்த துவசன் பணிநவ
கண்டி மன்னன் வரராச சிங்க
னியல்பு டன்றிருச் செங்கோ னடாத்திய
வீழ மண்டல நாடெங்க னாடே''[39]

எனப் பறாளை விநாயகர் பள்ளும்

''கண்டிநகராளுங் கனகமுடி ராசசிங்கன்
தெண்டனிடும் போதெனது சேதியை நீ சொல்லாதை''[40]

என வெருகல் சித்திர வேலாயுதர் பாடலும் கண்டி மன்னர்களைப் போற்றியுள்ளமையைக் காணமுடிகிறது. ஈழத்தில் தோன்றிய நரேந்திர சிங்கன் பள்ளு, இராஜசிங்கன் பள்ளு ஆகியனவும் கண்டி மன்னர்களைக் குறித்தே எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

''தஞ்சமென்ற மென்புறவை யஞ்சலென வேவழங்கித்
தன்றொடைச்ச தையரிந்து தானமீந்தவன்
கஞ்சமலர் மாதுவளர் செங்கடக லாதிபதி
கம்பனைக்கொண் டேயடப்பங் கட்டு வித்தவன்''[41]

என தமிழ்நாட்டை ஆண்ட அரசர்களின் பெருமைகளைக் கண்டி மன்னர்கள் மீது ஏற்றிக் கூறும் சிந்தனைப் போக்கு அக்காலப் புலவர்களிடம் இருந்துள்ளது. தமது அடையாளங்களோடு ஏதோ ஒருவகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புபட்ட சிங்கள மன்னர்களையே இங்கு புலவர்கள் வியந்து போற்றியுள்ளனர். தமிழ் அடையாளம் குறித்த சிந்தனை புலவர்களிடம் இருந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஒல்லாந்தர் இறுக்கமான வகையில் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களை நிர்வகித்துள்ளனர். வணிக ரீதியாகவும், அரசியல் சார்ந்தும் தமக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை வெற்றிகொள்ளும் வகையில் நுணுக்கமான கண்காணிப்பினை மேற்கொண்டனர். இச்சூழலில் புவியியல் ரீதியாக சிங்களவர் வாழ் பகுதிகளிலிருந்து தொலைவிலுள்ள வடக்குப் பகுதியும், சிங்களவர்கள் வாழும் பகுதிகளுக்கு அண்மித்த கிழக்குப் பகுதியும் வரையறுக்கப்பட்ட உறவுத் தொடர்புகளையே கொண்டிருந்தன. அதேவேளை தமிழர்கள் கதிர்காமம் உள்ளிட்ட பகுதி களுக்கு வழிபாட்டு நிமித்தம் சென்றுவந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் கத்தோலிக்க சமயம் கண்டியைத் தளமாகக் கொண்டு இயங்கியுள்ளமையால் தமிழர் பகுதிகளில் கத்தோலிக்க பரப்புகையில் கண்டியப் பகுதி குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளமையும் கவனிக்கத் தக்கது. இவ்வகையில் ஒல்லாந்தரின் ஆட்சியில் இனரீதியான அதிகார நோக்கானது குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெற்றுத் திகழ்ந் துள்ளமையை இனங் காணமுடிகிறது.

## 5. ஆண் – பெண் அதிகார அடுக்குநிலை

''சமூகம் ஒன்றினால் ஆண் - பெண் இருபாலாருக்குமெனத் தனித்தனி யாகக் கட்டமைக்கப்பட்ட, கடமைக் கூறுகள், உறவுமுறைகள், ஆளுமைப் பண்புகள், மனப்பாங்குகள், நடத்தைகள், விழுமியங்கள், ஆற்றல்கள், செல்வாக்குகள் என்பன பால்நிலை எனப்படுகிறது.''[42]

இங்கு தமிழர் புலத்தில் பால்நிலையானது சமநிலையற்ற வகை யிலேயே நோக்கப்பட்டுள்ளது. உறவுசார், கட்டமைப்பில் ஆண்களின் அதிகாரமானது குடும்பம் முதல் சமூகம் ஈறாக அனைத்து நிலைகளிலும் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளமையை ஈழத் தமிழர்களின் வாழ்வின் ஊடாக இனங்காண முடியும். ஆணின் மேலாதிக்கமானது காலத்துக்குக் காலம் கூர்மையடைந்து வந்துள்ளது. ஆண், பெண்ணின் சுதந்திரத்தை வரையறுப்பதிலும், தனது மேலாண்மையை அகலிப்பதிலும் பல்வேறு விடயங்களைக் கைக்கொண்டமையைக் காணமுடிகிறது. குறிப்பாக கல்வி, பொருளாதாரம், சமூக விழுமியங்கள், ஆட்சி, அதிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானவற்றைத் துணைக் கொண்டு ஆண் தன்னை நிலைப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் இங்கு கவனிப்பிற்குரியன.

**i. பெண் மீதான அதிகாரம்**

பெண்கள் மீதான ஆணின் அதிகாரமானது நேரடியாகவும் மறைமுகமாகவும் பல வழிகளினூடு பிரயோகிக்கப்பட்டுள்ளமையை ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் வெளிப்படுத்தி உள்ளன. இங்கு அதிகார மேலாண்மையில் அவ்வாறு அதிகாரம் செலுத்தப்பட்டமைக்கான நோக்கம் குறித்த ஆய்வு முக்கியத்துவம் உடையதாக அமைகிறது. பொதுவாக ஆணாதிக்க சூழல் நிலவிய அக்காலத்தில் ஆண்கள் தமது நலன்களைப் பேணிக்கொள்ளும் வகையில் பெண்கள் மீதான வரையறைகளைக் கட்டமைத்துள்ளனர். அதேவேளை பெண்களும் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கு வகித்துள்ளனர் என்பது வெளிப் படுகிறது.

**அ. கல்வி:** ஒல்லாந்தர் காலத்தில் மரபுரீதியான கல்வியில் பெண்களுக்கான கற்றல் சந்தர்ப்பம் குறைந்த நிலையிலேயே இருந்துள்ளது. அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் ஆண்களாக இருந்துள்ளனர். மரபு வழிக் கல்விப் பாரம்பரியத்தில் பெண்கள் குறிப்பிட்ட வயது வரையே கல்வி கற்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். பருவ வயதை அண்மித்த பெண்கள் கல்வி கற்பது என்பது சமூகத்தில் ஏற்புடையதாகக் கொள்ளப்படவில்லை.

*''வயதொரு பத்தாச்சு தினிப்பிறர் வீட்டில்*
*படிக்கை முறையல்லவே''*[43]

எனும் அலங்காரரூபன் நாடகச் செய்யுள் கல்வி கற்றலில் பெண்கள் எதிர்நோக்கிய கட்டுப்பாட்டைச் சுட்டுகிறது. ஒல்லாந்தரால் முன்னெடுக் கப்பட்ட கல்வியிலும் பெண்களின் கற்றல் காலம் குறித்த வயதோடு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பெண்கள் சிறு வயதிலேயே திருமணத் திற்குத் தயாரானவர்களாகக் கருதப்பட்டமையும் கல்வியில் ஆண்களின் அதிகாரம் பெண்களைக் காட்டிலும் மேம்பட்ட நிலையில் விளங்க துணைநின்றுள்ளன.

**ஆ. காமம்:** பெண்களைக் காம நுகர்வுக்கான மையப் பொருளாகச் சித்திரிக்கும் சமூக மனநிலையை ஈழத்துத் தமிழ் இலக்கியங்களிலும் காணமுடிகிறது. ஆண்களால் உருவாக்கப்பட்டு அவர்களை அதிகாரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பதற்காக ஆண்களால் பயன்படுத்தப்பட்டு நியாயப்படுத்தப் படும் மிகைச் சொல்லாடலைத் தாக்குவது, அதற்கு எதிராகத் தனிமனித அதிகார உரிமையைக் கோருவது என்ற பின் நவீனத்துவப் பெண்ணியச் சிந்தனை இத்தகைய ஆண் மனநிலையை எதிர்க்கும் நோக்கிலேயே மேலெழுகிறது எனலாம். ஒல்லாந்தர் காலத்தில் ஆணின் அதிகாரத்தை முன்னிறுத்திய சித்திரிப்புக்கள் பலவற்றை இனங்காண முடியும்.

''நாகபடம் நிகர் கடிதடத்திடை
மூழ்கி மூழ்கித் தேறிக் காமம் ஒழுகிப்பாய்ந்திட
மணம் முடிக்கக் கிடையாதோ...''[44]

எனும் அலங்காரரூபன் நாடகச் செய்யுளும்

''குத்துமுலைக் குவடு குலுங்க...''[45]

என்ற பறாளை விநாயகர் பாடலடியும் பெண்களைக் காம நுகர்வுக்கான பொருளாகவே சித்திரித்துள்ளன. ஆண்கள், பெண்கள் மீதான காம லயிப்பில் மூழ்கிவிடாது இருத்தல் விடுதலைக்கான வழியைத் தரும் என்ற சமய ரீதியிலான கருத்துக்களும் புலவர்களால் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

''பையரைக் கோடிமின் னார்மய லால்வரும் பாவமெல்லா
மையரைக் கோடி யருந்துக ளாவதறிசித்தமே''[46]

என நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் மறைசை அந்தாதியில் வெளிப் படுத்தியுள்ள கருத்தானது பெண் இன்ப நுகர்வு குறித்த எச்சரிக்கையை ஆண்களை நோக்கி அறிவிக்கும் வகையில் வலியுறுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும்.

**இ. சமய நியமங்கள்:** அன்றைய காலத்தில் மத ரீதியான வரையறைகளும் பெண்களின் சமனிலையைப் பெரிதும் பாதித்துள்ளன. சமய விடயங் களை மேற்கொள்ளும் போது பெண்கள் ஆண்களின் கருத்துக்களை அனுசரித்தே நடக்க வேண்டும் என்பது சமயத்தை மையமாகக் கொண்டு வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய வெளிப்பாடுகளை விரதங்களை மையமாகக் கொண்ட இலக்கியங்களில் காணமுடிகிறது.

''மெல்லியலார் கணவரநு மதியில் லாமல் விரதநோற்
றிடிற் கணவ ராயுள் குன்று''[47]

''சொல்லியவக் கணவரின்றேற் றாங்கள் பெற்ற
சுதர்களநு மதியுற்றுத் தொடங்கல் வேண்டும்''[48]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கன்னிகையேற் றந்தையநு மதியாற் செய்யக்*
*கடவளென்று காத்தியா யனருஞ் சொன்னா''*[49]

எனும் குறிப்புக்கள் பெண் கன்னியாக இருக்கும் போது தந்தைக்கும் குடும்பமானபின் கணவனுக்கும் கணவனின்றேல் மகனுக்கும் அடங்கி நடக்க வேண்டிய நிலை இருந்துள்ளமையை வெளிப்படுத்துகின்றன. இங்கு ஆண்களின் விருப்பமே பெண்களை வழிநடத்தியுள்ளது எனலாம்.

**ஈ. சமூக மதிப்பீடுகள்:** பெண்களை மையப்படுத்திய சமூக மதிப்பீடுகளும் பெண்களின் செயற்பாடுகளை வரையறுப்பதாக இருந்துள்ளது. ஆண்கள், பெண்கள் பலரோடு இன்ப நாட்டங்களில் ஈடுபடுபவர்களாக இருந்த அதேவேளை பெண், கற்பு நெறியைப் பேணியவளாக குறிப்பிட்ட வரையறைக்குள் வாழ்வதற்கு உரியவள் என்ற ஆணாதிக்கக் கண்ணோட்டமும் இருந்துள்ளது. அக் காலத்தில் வெளிவந்த இலக்கியங்களில் வரும் பெண் பாத்திரங்கள் சில கற்பு நெறி பற்றிப் பேசுகின்றன.

*''என்தன் கற்பை காப்பாற்றிக் கொள்வேனம்மா''*[50]

என்ற அலங்காரரூபன் நாடகச்செய்யுள் இதனோடு தொடர்புடையதாகும்.

**உ. பெண்களின் செயற்பாடுகள்:** பெண்கள் மீதான ஒடுக்குமுறையில் பெண்களும் குறிப்பிடத்தக்க பங்கு வகித்துள்ளனர் என்பது பிரதான விடயமாகும். இங்கு மரபு ரீதியாக ஆண்கள் வழிவந்த அடக்குமுறைகளைத் தமது பிள்ளைகளுக்குக் கடத்தி விடுதலில் இருந்து பெண்களை மருமகள் என்ற ரீதியில் சுரண்டுவது வரை பெண்களின் பங்கு இருந்துள்ளது.

*''தண்டனை செய்மாமிதனக் கொளித்து ஓடிவந்து*
*திண்டிறல் சேர்வேலவர் சிறப்பையுற்றுப் பார்ப்பார் சிலர்''*[51]

என்ற பாடலில் வெருகல் சித்திர வேலாயுதர் உலாவரும் காட்சியைக் காணவந்த பெண்களில், தண்டனைகள் விதிக்கும் மாமியாருக்கொளித்து வந்து பார்த்த பெண்களும் உள்ளனர் என வீரக்கோன் முதலியார் குறிப்பிட்ட செய்தியானது மாமியார் ஒடுக்குமுறை அன்றும் நிலவியுள்ளமையைக் காட்டுகிறது.

**ஊ. பொருளாதாரம் - அரசியல்:** பொருளாதார ரீதியாகத் தமது தனித்தன்மையைப் பேணக்கூடிய பெண்களை அன்றைய காலப் பகுதியில் காண்பது அரிதாகவே இருந்திருக்கும். பொருளாதாரத்தை ஈட்டுபவனாக இருந்த ஆண் தனது அதிகாரத்தை மையப்படுத்தி போகந்துய்ப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனாகவும் இயங்கியுள்ளான். ஆணை முதன்மையாகக் கொண்ட சமூக மனநிலையில் ஆண் பற்றிய மதிப்பீடு எல்லா வகையிலும் மிகைப் படுத்தியே ஊட்டப்பட்டுள்ளமையைக் காணலாம்.

''வீண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையல்லவோ
வீரியம் போய்விடுமோ''[52]

என்ற வெளிப்பாடும் இதனோடு தொடர்புபட்டதாகும்.

ஆண் தனது சமூக அதிகாரத்தை அரசியல் ரீதியிலும் விஸ்தரித்த வனாய்த் தொழிற்பட்டுள்ளான். அதிகார ரீதியாக ஒல்லாந்தரின் கீழ் செல்வாக்குப் பெற்றிருந்தவர்கள் ஆண்களாகவே இருந்துள்ளமை ஆணின் சமூக மேலாதிக்கத்துக்கு வழிசெய்துள்ளது.

**எ. சமூகப் பாதுகாப்பு:** அக்காலத்தில் பெண்கள் ஆணாதிக்கத்தின் கீழ் முடக்கப்பட்டிருந்த அதேவேளை பெண்களுக்கான சமூகப் பாதுகாப்பும் நெருக்கடியாகவே இருந்துள்ளது.

''ஒருவனுடைய ஸ்திரியையு முடைமையையுங் கழவெடுக்க வேணுமாகி வதற்குக் கள்ளவாசல் வழிகள் தேடவு மிருட்டிலே காட்டிலே திரியவுஞ் சிலர் களடைப்புக்கள் பாயவும் படுகிற மாச்சலங்களெத்தனை''[53]

எனும் ஞானவுணர்ச்சிப் பகுதி பிறன்மனைவியை நுகரத் துடித்த ஆணினது மனநிலையைக் காட்டுகிறது. இங்கு ஆணாதிக்க சமூகப் புலத்தில் தனித்த அடையாளங்களைப் பேணுவதில் பெண்கள் பல்வேறு சவால் களைச் சந்தித்துள்ளனர் என்பது வெளிப்படுகிறது. பெண்களை ஒடுக்கு வதிலும், தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதிலும் ஆண்களால் கட்டமைக்கப்பட்ட அம்சங்கள் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் ரூப, அரூப வடிவங்களில் செறிந்திருந்தமை இங்கு பிரதானமாகும்.

இவ்வகையில் தொகுத்து நோக்கின் ஒல்லாந்தரது ஆளுகைக் காலத்தில் பேரரசியல் ரீதியாக அதிகாரமையங்களுக்கிடையிலான இயங்கியலானது வணிகநலன்களை மையப்படுத்தி ஒல்லாந்தரால் முன்னெடுக்கப்பட்டிருந்தமையை இனங்காணமுடிகிறது. மேலும் சமூக அமைப்பில் தொழில் சார்ந்து உருவாகிய வேறுபாடுகள் தொடர்ந்து அதிகார நிலையைத் தீர்மானிப்பனவாக இருந்துள்ளமையையும் பாலினம் சார்ந்து ஆணாதிக்கப் பின்னணியில் பெண் பல்வேறு ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தமையையும் ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் ஊடாக அறியமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

01. சுரேஷ், எம்.ஜி., 2009, *பின் நவீனத்துவம் என்றால் என்ன?*, அடையாளம் வெளியீடு, ப. 83.
02. பத்மநாதன், சி., 2002, *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்*, குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப. 54.
03. மேலது, ப. 301.
04. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ப. 293.
05. மேலது, ப. 65.
06. சிவலிங்கராஜா, எஸ்., 2001, *ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி*, தனலக்குமி புத்தகசாலை, ப. 103.
07. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், 1932, *தண்டிகைக் கனகராயன் பள்ளு*, சென்னை சாது அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. எ.
08. மேலது, ப. கஎ.
09. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 159.
10. மேலது, ப. 165.
11. மேலது, ப. 205.
12. மேலது, ப. 161.
13. மேலது, ப. 278.
14. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், 1932, *தண்டிகைக் கனகராயன் பள்ளு*, சென்னை சாது அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. கங.
15. சிவத்தம்பி, கா., 2000, *யாழ்ப்பாணம் சமூக பண்பாட்டு கருத்துநிலை*, குமரன் புத்தக இல்லம், ப. 09.
16. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *வரதபண்டிதம்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 233.
17. நகுலசிகாமணி, வல்லை.ந., 2004, *யாழ்ப்பாண வைபவமாலை*, வல்லை ஆவணக் காப்பகம், ப. 61.
18. மேலது, ப. 93.
19. கமலநாதன், சா.இ., கமலாகமலநாதன், பதிப்பாசிரியர், 2005, *மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம்*, குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப. 52.
20. மேலது, ப. 88.
21. மேலது, ப. 78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. மேலது, ப. 63.
23. பத்மநாதன், சி., 2002, *மு.கு.நூ.*, ப. 229.
24. மதுசூதனன், தெ., ஆசிரியர், 2007, *கூடம்*, இதழ்.5, ரெக்னோ பிரின்ட், கொழும்பு - 6, ப. 54.
25. பத்மநாதன், சி., 2002, **இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்**, குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப. 146.
26. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 271.
27. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *ஞானவுணர்ச்சி*, வியாகுலப் பிரசங்கம், சுகிர்தகுறள் ஆகியவற்றின் இணைந்த நூல் புன்னை மாநகர் யக்கோவு றேச்சலேனு முன்னின்று அச்சிற் பதிப்பிக்கப்பட்டது, ப. ௩எ.
28. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, பக் - 263.
29. மேலது, ப. 232.
30. மேலது, ப. 281.
31. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 234.
32. மேலது, ப. 234.
33. மேலது, ப. 234.
34. Phillipus baldaeus, 1972, *True and exat Description of the Great Island of Ceylon,* Published in co-operation with the ceylon Branch of the Royal Asiatic Society, p. 376.
35. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 260.
36. நகுலசிகாமணி, வல்வை.ந., 2004, *மு.கு.நூ.*, ப. 93.
37. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, *மு.கு.நூ.*, ப. 234.
38. தமிழ்வேள், பதிப்பாசிரியர், 1991, இணுவைச் சிவகாமியம்மை தமிழ், குமரன் புத்தக இல்லம், ப. 22.
39. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *மு.கு.நூ.*, ப. 254.
40. வீரக்கோன் முதலியார்.ஸ்ரீ.ஜ., 2000, வெருகல் சித்திர வேலாயுதர் காதல், இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 141.
41. சதாசிவஐயர், தி., 1940, மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு, Batticaloa South Tamil Teachers Association, P. 41.
42. மதுசூதனன், தெ., ஆசிரியர், ஜனவரி - மார்ச், 2009, கூடம், இதழ் 12, Torrington Avenue, Colombo, ப. 32.
43. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, அலங்காரரூபன் நாடகம், இலங்கைக் கலைக் கழக தமிழ் நாடகக்குழு வெளியீடு, ப. 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. மேலது, ப. 79.
45. இரகுபரன், க., **மு.கு.நூ.**, ப. 243.
46. மேலது, ப. 89.
47. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, **மு.கு.நூ.**, ப. 184.
48. மேலது, ப. 184.
49. மேலது, ப. 184.
50. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, **மு.கு.நூ.**, ப. 23.
51. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, **வெருகல் சித்திர வேலாயுதர் காதல்,** இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 132.
52. வித்தியானந்தன், சு., பதிப்பாசிரியர், 1962, **மு.கு.நூ.**, ப. 18.
53. கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், **மு.கு.நூ.**, ப. சஉ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

# VI. ஈழமும் இந்தியத் தொடர்பும்

இந்தியாவும் ஈழமும் புவியியல் ரீதியாக நெருங்கியுள்ளமையால் இரு நாடுகளுக்குமிடையேயான உறவுத் தொடர்பானது பல நூற்றாண்டு களாகத் தொடர்ந்து வந்துள்ளது. இதன் விளைவால் அரசியல் பொருளாதார பண்பாட்டு ரீதியாக நிகழ்ந்த கலப்புக்கள் காலத்திற்குக் காலம் பல்வேறான மாற்றங்களை ஈழம் எதிர்கொள்வதற்கு பிரதான அடிப்படையாக அமைந்த தென்பது வெளிப்படை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்பாட்டு அம்சங்களைக் குறிக்கும் எச்சங்கள் ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் இடை யிலான பொதுவான அம்சங்களைச் சுட்டும் சான்றுகளாக இனங்காணப் பட்டுள்ளன. இதன் தொடர்ச்சி ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியிலும் விரிவு பெற்றுள்ளது. இவை குறித்தான பல்வேறுபட்ட தரவுகளை, குறித்த காலப்பகுதியில் வெளிவந்த இலக்கியங்கள் ஊடாக இனங்காணமுடிகிறது.

## 1. 1658 முன்னரான ஈழம் இந்திய உறவுப் பின்னணி

ஈழத்து சமூக அரசியலில் இந்தியாவின் பாதிப்பானது கி.மு. காலப் பகுதியிலிருந்தே தொடர்ந்து வந்துள்ளது. லெமூரியாக் கண்டம் பற்றிய தரவு தொடக்கம் அதிகார அரசியலில் சேனன், குத்திகன், எல்லாளன், பாண்டியன் முதலானோர் இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கி வந்ததுவரை ஈழத்தின் மைய அரசியலிலும், தமிழர்களின் அரசியலிலும் இந்தியத் தொடர்பு செல்வாக்குச் செலுத்தியுள்ளமை பற்றியதான குறிப்புக்கள் கவனிப்பிற்குரியன. வரலாற்றடிப்படையில் சோழர் ஆட்சியில் மும் முடிச் சோழ மண்டலம் என்பதில் ஈழமும் உள்ளடக்கப்பட்டு விரிவுபெற் றிருந்தமை ஈழத் தமிழர்களின் சமூக அரசியலில் மட்டுமன்றி அனைத்து நிலைகளிலும் புதிய திருப்பங்களை ஏற்படுத்தின.

ஈழத் தமிழர்களின் மொழி, கலாசாரப் பண்பாட்டோடு இந்தியாவின் தமிழகம் ஒருமித்த நிலையிலிருந்தமையாலும், ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் இந்தியாவோடு புவியியல் ரீதியாக நெருக்கமாக அமைந்திருந்தமையாலும் ஈழத் தமிழர்கள் தமது அடையாளத்தை தமிழ்நாட்டோடு பொருத்தியே நோக்கி வந்துள்ளனர். ஈழத்தில் வடக்கு, கிழக்குக்கு அப்பாலான சிங்களவர்களின் அரசியலிலும் இந்தியாவுடனான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பானது அரசர்களது திருமணத் தொடர்புகளையும், பௌத்த சமய நடைமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்ததெனினும் சிங்களவரைக் காட்டிலும் தமிழர்கள் தமிழகத்துடனான தொடர்புகளைப் பேணிக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டியிருந்தனர் என்பது புலனாகிறது.

ஈழத்தில் வாழ்ந்த தமிழர்களது சமூக, அரசியல் சிந்தனையானது தமிழகத்தோடு தம்மை இணைத்தே நோக்கி வந்துள்ளமையால் தேசிய உணர்வு சார்ந்து ஈழநாடு என்ற கருத்து ரீதியிலான முக்கியத்துவம் ஈழத்தமிழர்களால் ஆரம்பத்தில் உணரப்படவில்லை. மாறாகப் புவியியல் எல்லை கடந்ததாக, இனம் சார்ந்த ஒருமித்த நோக்கை ஈழத்தமிழர் தமிழ் நாட்டோடு கொண்டிருந்தனர். தமக்கு அரசியல் ரீதியான நெருக்கடிகள் ஏற்பட்டவிடத்து இந்தியத் தொடர்புகளைச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்தமைக்கு ஆரம்பகால வரலாறுகளில் சான்றுகள் உண்டு. இவ்வாறு இந்தியத் தொடர்புகள் தமிழர்களுக்கு நெருக்கமாக இருந்த வேளையிலேயே ஐரோப்பிய அதிகாரப்பிடிக்குள் இந்தியா சிக்கியது. அதேபோல ஈழமும் ஐரோப்பியரின் ஆளுகைக்கு கீழ்ப்பட்டது. இச்சூழலில் தமிழர்கள் தமது அடையாளங்களைக் குறித்துச் சிந்திக்கவும் கூடவே தமிழ் நாட்டோடு தொடர்புகளைப் பேணும் முயற்சிகளையும் முன்னெடுத்தனர். இவ் வகையில் ஒல்லாந்தரது ஆட்சிக்காலம் ஈழத்திற்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்புகள் முக்கியத்துவம் பெற்ற காலப்பகுதியாகத் திகழ்ந்தது எனலாம்.

## 2. சமயத் தொடர்பு

ஈழத்திற்கும், இந்தியாவிற்கும் இடையேயான சமயம்சார் தொடர்புகள் நீண்ட காலமாக நிலவி வந்துள்ளன. சைவ, வைஷ்ணவ, பௌத்த சமயங்கள் மட்டுமன்றி கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களும் இந்தியத் தொடர்பின் விளைவால் ஈழத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கின. இதற்கு ஒல்லாந்தர் காலப்பகுதியில் தோற்றம்பெற்ற தமிழ் இலக்கியங்கள் பல்வேறான தரவுகளைத் தந்துள்ளன.

### i. யாத்திரை

ஈழத்தவர்கள் இந்தியப் பகுதிகளுக்கு யாத்திரை நிமித்தம் சென்று வந்துள்ளனர். குறிப்பாக சைவ சமயத்தின் மையப் பிரதேசமாக இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்கின்றது என்ற நம்பிக்கையின் பின்னணியில் இந்தியாவில் அமைந் துள்ள சைவத் தலங்கள் பலவற்றிற்கு ஈழத்தவர்கள் சென்றுவருதல் முக்கியத்துவம் உடையதாக உணரப்பட்டுள்ளது.

''ஐரோப்பியர் ஈழத்தினை அடிமை கொண்டு ஆண்ட காலத்திலே இத்தொடர்புகள் மேலும் வலுப்பெற வேண்டிய சூழல் பெருகியது. சிதம்பரமும் திருமறைக்காடும் ஈழத்தவர் தரிசிக்க வேண்டிய மக்காவாக மாறின. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நாவலரவர்கள் சிதம்பரத்தைக் கேந்திர தானமாகக் கொண்டு சைவ உலகத்தை நெறிப்படுத்தக் கனவு கண்டார்''[1] என பொன் பூலோகசிங்கம் குறிப்பிட்டுள்ள கருத்து ஒல்லாந்தர் காலத்திலேயே நிகழத் தொடங்கியமை கவனிப்பிற்குரியது.

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் மறைசையந்தாதியை வேதாரணியத்து சிவனை மையப்படுத்திப் பாடியுள்ளமையும், மயில்வாகனப் புலவர் காசியாத்திரை விளக்கம் எனும் நூலை எழுதியுள்ளமையும் வரதபண்டிதர் இந்தியத் திருத்தலங்களான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், திருத்தணிகை என்பவற்றை போற்றியுள்ளமையும் மயில்வாகனப் புலவரின் புலியூர் அந்தாதி சிதம்பரத்துச் சிவனை மையமாகக் கொண்டு பாடப்பட்டமையும் இந்தியாவுடனான ஈழத்தவர்களின் சமயம்சார்ந்த தொடர்புகளுக்குச் சான்றுகளாகும்.

தமிழகத்தில் பக்தி இலக்கியச் செயற்பாடுகள் வீச்சுப்பெற்று அரசியல் ஆதரவுடன் சமயமானது நிலைபெற்ற புறநிலையில் சைவ சமயம் குறித் தான இலக்கியங்கள் பலவும் எழுச்சி பெற்றன. அதன் பாதிப்பு ஈழத்திலும் வெளிப்பட்டது. போர்த்துக்கேயர் ஆட்சியில் ஈழத்தில் சைவத் தலங்கள் பல இடித்தழிக்கப்பட்டமையால் பிற்காலத்தில் இந்தியாவில் உள்ளன போன்ற வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்கள் ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரிதாகவே காணப்பட்டன. இதன் புறநிலையில் இந்தியத் தலங்கள் மீதான ஈர்ப்பு ஈழத்தவர் மத்தியில் அதிகரித்தது.

இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் விரவியிருந்த தலங்கள் பலவற்றைக் குறிப்பிட்டு அவற்றைத் தரிசிப்பதற்கு சென்றுவருதல் சிறப்பைத் தரும் என்பதை ஒல்லாந்தர் காலப் புலவர்கள் பலர் வலியுறுத்தி யுள்ளனர். ஆலய தரிசனம், தீர்த்தமாடல் முதலானவற்றின் மூலம் வாழ்வில் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் புலவர்களின் நோக்கமாக இருந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காசியிரா மேச்சரம் பொற்கனகசபை யாரூர்க்கா ளத்தி காஞ்சி
மாசில்கழுக் குன்றமுது குன்றமொற்றி யூர்மருதூர் மதுரையையா
றாசின் மறைக்காடு வெண்கா டானைக்கா மாயூர மருணை புள்ளூர்
தேசுதருஞ் சிரபுரநற் றிருப்புகலூர் முதற்றலங்கள் செகத்தில் லுண்டால்
அத்தலங்கடமை யடந்து புனிதநீர் படிந்தாடி யமலமாகிச்
சித்த மகிழ்ந் தியாமுறையுஞ் சிவலிங்கதெரிசனஞ் செய் தோர்கள்''[2]

எனத் தொடரும் சிவராத்திரி புராணச் செய்யுள் இந்தியாவில் யாத்திரை செய்வதற்குரிய இடங்களையும், யாத்திரையால் ஏற்படும் நன்மைகளையும் குறிப்பிடுகிறது. வரதபண்டிதர் இந்தியப் பின்னணியை உடையவர் ஆகையால் இந்தியா குறித்தான அவரது விபரிப்புகள் தனித்த கவனிப் பிற்குரியன.

இந்தியா நோக்கிச் செல்வதற்கான பயண வழியானது வடக்கு கிழக்கைச் சார்ந்தோருக்கு எளிமையாக இருந்தமையால் அதிகார நிலையில் உள்ளோர் முதல் புலவர்கள் ஈறாகப் பல தரப்பினரும் இந்தியாவுடனான தொடர்புகளைக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகர மன்னன் தனது மகனுக்கு முடிசூட்டிய பின்னர் தீர்த்தமாடுவதற்காக பரிவாரங்களுடன் கும்பகோணத்துக்கு யாத்திரை மேற்கொண்டான் என்பதை யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

''இறக்கமுக்தி தருந்தலயாத் திரைநூலை
மண்ம(திக்க) வியம்பி னானே''[3]

எனும் காசி யாத்திரை சிறப்புப்பாயிரச் செய்யுள் யாத்திரையால் ஏற்படும் சிறப்பை உணர்த்துகிறது. முக்தி கிடைப்பதற்கான தலமாக ''காசி'' கொள்ளப்பட்டமையை மேற்குறித்த செய்யுள் விளக்குகிறது.

**ii. கத்தோலிக்க மதம் சார் தொடர்பு**

ஈழத்தில் ஒல்லாந்தரின் ஆளுகைக் காலத்தில் கத்தோலிக்க சமயமானது நெருக்கடிகளை எதிர்கொண்ட வேளையில் இந்தியாவைத் தளமாகக் கொண்டு கத்தோலிக்க சமயத்தவர் மேற்கொண்ட செயற்பாடுகளே கத்தோலிக்க சமயம் ஈழத்தில் புத்துயிர் பெறப் பிரதான காரணமாய் அமைந்தன. கத்தோலிக்க சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கான மைய மாகப் போர்த்துக்கல் இருந்த அதேவேளை இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட யோசேவாஸ், யாக்கோமே கொன்சால்வெஸ், கபிரியேல் பச்சேக்கு முதலானோரின் ஈழம் நோக்கிய வருகையும் ஆபத்துக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் அவர்கள் மேற்கொண்ட முன்னெடுப்புக்களும் ஈழத்தில் கத்தோலிக்க சமய இருப்பிற்கு உறுதுணையாகத் திகழ்ந்தன எனலாம்.

இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கிய குருமாரின் பயணம் நெருக்கடிகள் நிறைந்ததாகவே அமைந்தது. ''ஆவணி 13ம் திகதி தூத்துக்குடியிலிருந்து பாய் விரித்த ஒரு தோணியிலேறி பெரிய பட்டணத்திலும் இராமேஸ் வரத்திலும் தங்கிப்போய் ஈற்றில் 1705ம் ஆண்டு ஆவணி மாதம் 31ம் திகதி தலைமன்னாரைச் சேர்ந்தனர்''[4] என யாக்கோமே கொன்சால்வெஸ் உள்ளிட்ட குருமாரின் ஈழம் வந்தமை பற்றிய செய்தி இங்கு கவனிப் பிற்குரியது.

ஈழத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த விடயங்களை இந்தியா வில் உள்ளவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பிருந்தது. சங்கிலி மன்னனின் ஆட்சியில் மன்னாரில் மதம் மாறிய கத்தோலிக்கர் தண்டிக்கப் பட்டமை தொடர்பான வரலாற்றுக் குறிப்பு, மதத்தைப் பின்பற்ற முடியாத வகையில் ஒல்லாந்தர் ஏற்படுத்திய நெருக்கடிகள் முதலான விடயங்கள் மதகுருமாரின் ஈழம் நோக்கிய பயணத்தைத் தூண்டச் செய்தன.

## 3. குடிப்பெயர்வுகள்

இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கி நிகழ்ந்த குடியேற்றங்கள் சமூக அடுக் கமைவில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாண மன்னர்காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதிகளில் இருந்து வெவ்வேறு காலகட்டங்களில் இத்தகைய குடிப்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. இங்கு பல்வேறுபட்ட சமூக வகுப்பைச் சார்ந்தோர் ஈழத்தின் குறித்த சில பகுதி களில் தமது இருப்பை அடையாளப்படுத்தும் வகையில் குடியேறி தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர் என்பது கவனிப்பிற்குரிய விடயமாகும்.

யாழ்ப்பாண மன்னர் காலப்பகுதியில் இந்தியாவின் பல பகுதி களிலிருந்தும் ஈழம் நோக்கிய குடிப்பெயர்வுகள் நடந்துள்ளன. சிங்கை யாரிய மகாராசன் தமிழ்க் குடிகளை அவ்விடம் அனுப்பிவைக்க வேண்டு மென்று தமிழ் நாட்டரசர்களுக்கு திருமுகங்கள் எழுதியனுப்பினான் என்றும் அவ்வரசர்கள் சில குடிகளை அனுப்பிவைத்தனர் எனவும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது.[5] இங்கு குறிப்பிட்ட விடயம் சார்ந்த தரவுகளில் சில முரண்பாடுகளும், கற்பனையும் கலந் துள்ளன என பிற்கால சரித்திர ஆராய்ச்சிகள் மூலம் அறியக்கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள போதும் இந்தியாவில் இருந்து குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதற்கு சான்றுகள் உண்டு. சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாட்டுப் பகுதிகளில் இருந்து இவ்வாறான குடிப்பெயர்வுகள் நிகழ்ந் துள்ளன என்பதும் இவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் சமூக அடுக்கமைவு சார்நோக்கு முக்கியத்துவமுடையதாக உள்ளது என்பதும் பிரதானமாகும்.

**i. பிராமணர்**

வருண தர்மக் கோட்பாடானது பிராமணர்களை முதன்மையானவர்களாகக் குறிப்பிடுகிறது. இந்தியாவிலிருந்து ஈழத்தின் வடபுலம் நோக்கிய பிரா மணர்களின் வருகை ஆரம்ப காலத்திலேயே நிகழ்ந்துள்ளது. சோமசுந்தர சேதுபதி மகாராசாவினால் எழுதப்பெற்ற பட்டயமானது பிராமணர்களது பிரசன்னத்தை உறுதிப்படுத்துவதாய் உள்ளது. இந்தியாவிலிருந்து வந்த பிராமணர்கள் ஈழத்தில் நிகழ்ந்த குழப்பநிலைகளில் பாதிக்கப்பட்டமையால் மீண்டும் இந்தியாவிற்குத் திரும்பியமை பற்றிய விடயமும், பிராமணர்கள் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சியில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டமை பற்றியும் மங்களேஸ்வரம் உள்ளிட்ட நூல்களில் உள்ள குறிப்புக்கள் கவனிப்பிற்குரியன. பிராமணர்கள் பலர் தாம் பூசை புரிந்த ஆலயங்களில் அதிகாரம் மிக்கவர்களாய் இருந்துள்ளனர் என்பதற்கு முதலிமார் எழுதிக் கொடுத்த பட்டயங்கள் சான்றுகளாகும்.

''ஆராதனைக்காக வரும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் பணத்தை குறித்த ஐயர்மாரே ஏற்று அதை இக்கோவிலின் விருத்திக்காக உபயோகிக்கும் அதிகாரமுடையவர்களாக இருக்கிறார்கள். இவ் அதிகார மானது இவருக்கும் இவர் சந்ததியில் உள்ளவரைவருக்கும் சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் வரராசசிங்க முதலியாராகிய என்னால் தாமோதர ஐயருக்கு கொடுக்கப்பட்டது''[6] என வரராசசிங்க முதலியாரால் வழங்கப் பட்ட பட்டயம் உறுதிப்படுத்துகிறது.

ஈழத்தில் குடியேறிய பிராமணர்கள் சமய வழிபாட்டு முறைகளில் மட்டுமன்றி கல்வியிலும் ஆற்றல் மிக்கவர்களாய் இருந்துள்ளனர். அராலி இராமலிங்க முனிவர், வரத பண்டிதர் ஆகியோரது பரம்பரை யினரின் கல்விசார் பங்களிப்பு முக்கியமானதாகும்.

பிராமணர்களில் பலர் தமிழரசர் காலத்தில் அழைத்துவரப்பட்டுள்ளனர். சிதம்பரம் தில்லைவாழ் அந்தணர்களில் சிலரும் இவர்களில் அடங்குவர். பொன்னம்பல தீஷசிதர்[7], சந்திரசேகரக்குருக்கள்[8], அருணாசலக்குருக்கள்[9],

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானோரின் வருகை தொடர்பான குறிப்புக்கள் கவனிப்பிற்குரியன. ஈழம் நோக்கிய பிராமணர்களின் நகர்வுக்கு சமய வழிபாடு மட்டுமன்றி இந்தியாவில் தோன்றிய கலகங்களும் காரணமாக இருந்துள்ளன.

அந்த நாட்களில் ஒரு பெருங்கலகமுண்டுபட்டதனால் கலகத்துக்குப் பயந்து சில விட்டுணு சமயப் பிராமணக் குடிகளுஞ் சில சிவ சமயப் பிராமணக் குடிகளும் உத்தரகோச மங்கை என்னுமிடத்திலிருந்து ஆணும் பெண்ணுமாக காரைதீவில் வந்திறங்கி அங்கே குடியிருந்தனர்[10] என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது. அதேபோல தொண்டை மண்டலத்தில் நடந்த ஓர் இராச கலகத்திற்கஞ்சி அநேகமான வேளாண்குல குடும்பத்தவர் புறப்பட்டு வந்து வட்டுக்கோட்டை, காரைநகர் முதலிய இடங்களிற் குடியேறினர். இவர்களில் தியாகராசக் குருக்களு மொருவர்[11] என மருதடி விநாயக மான்மியம் குறிப்பிடும் தரவும் கவனிப்பிற்குரியன வாகும்.

**ii. செட்டியார்**

ஒல்லாந்தர் காலத்தில் வணிகச் செயற்பாடுகளில் செட்டிமாரின் பங்கு முக்கியமானது. சமூக ரீதியாகச் செல்வாக்கு மிக்க செட்டிமார் ஒல்லாந்தர் காலத்திலும் தமிழர் பகுதிகளில் குடியேறியுள்ளனர். இவர்களில் கோபாலச்செட்டியார், ஒல்லாந்தர் அரசு செய்யும் காலத்தில் தமது மனைவியரோடு சோழ நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறியவராவார். இவர் ஒல்லாந்த அரசினரின் மொழிபெயர்ப் பாளராக இருந்த கொச்சிக் கணேசையர் என்னும் பிராமணரிடம் உத்தியோகம் பார்த்தார் என்பதை வண்ணார்பண்ணைச் சிவன் தல வரலாறு குறிப்பிடுகிறது.

கிழக்கு மாகாணத்திலும் செட்டிமார் குறித்த பல தரவுகள் உள்ளன.

> *''திட்டமுடன் முன்னாளிற் செய்த நல்ல நாதனெனுஞ்*
> *செட்டி வம்சத்திலுள்ள செய பிரதானிகள் போய்*
> *பன்னரிய பாதம் பணிந்து தொழுதேத்துகையில்....''*[12]

எனத் தொடரும் வெருகல் சித்திர வேலாயுதர் காதல் செய்யுள் ஆலயத் திற்கு நல்லநாதன் செட்டியார் ஆற்றிய பணிகள் பற்றி விளக்கியுள்ளமை இணைத்து நோக்கத்தக்கது.

வடபுலத்தில் கோபாலச் செட்டியாரின் மகனான வைத்திலிங்கச் செட்டியார் முத்து, யானை முதலான வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் "1776 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதியன்று ஒல்லாந்தரால் யாழ்ப்பாண பட்டினத்தின் யானைத்தரகர் (Elephant Broker) ஆக நியமிக் கப்பட்டதோடு தலைப்பாகை அணிந்து பல்லக்கில் செல்வதற்கும் உரித்துடையவராகக் கொள்ளப்பட்டமை இந்திய வழிவந்த செட்டிமார் ஈழத்தில் பெற்றுக்கொண்ட செல்வாக்கை உணர்த்தும் சான்றாக உள்ளது.[13]

வணிக ரீதியாகத் தம்மை நிலைப்படுத்தி சமுதாயப் புலத்தில் தமக்கான இடத்தைப் பெறுவதில் செட்டிமார் முனைப்புக்காட்டி வந்துள்ளனர். இதற்கு ஒல்லாந்தரோடு அவர்கள் கொண்டிருந்த உறவுத் தொடர்பானது வசதியாக அமைந்தது. செட்டிமார் தமது இருப்பைத் தக்கவைக்கவும் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இந்தியத் தொடர்பை வாய்ப்பாகக் கொண்டனர் என்பது பிரதானமாகும்.

**iii. முக்குவர்**

இந்தியாவோடு தொடர்புபட்ட சாதியினரில் முக்குவர் பிரதானமான வராவர். இவர்கள் ஈழத்தின் கிழக்குப் பகுதியில் சமூகச் செல்வாக்குடை யவர்களாகத் திகழ்கின்றனர். முக்குவரின் ஒருபகுதியினர் இந்தியாவின் கேரளாவிலிருந்து இங்கு குடியேறியோராவர். இவர்களில் பெரும் பாலானோர் வைஷ்ணவப் பின்னணியோடு இருந்துள்ளனர்.

முக்குவர் என்னுஞ் சொல் முக்குக என்னும் பழந்திராவிட மொழிச் சொல்லின் வழிபிறந்த ஒன்றாகும். முக்குக என்பது கடலினுள் அமிழ்ந்திச் சங்கு குளித்தல், முத்துக்குளித்தல் ஆகிய தொழில்களைக் குறிக்கும். மலையாளக் கரையோரத்தில் வாழ்ந்த முக்குவர் கடலை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்தனர். ஈழத்திலும் இவர்களுடைய குடியேற்றங்கள் ஆதிகாலத்திலிருந்தே நிகழ்ந்து வந்துள்ளன. வடமேற்கு, வடகிழக்கு பகுதியில் உள்ள முக்குவ கிராமங்கள் கரையோரப் பகுதியைத் தழுவி உள்ளமை கவனிப்பிற்குரியது. புத்தளப் பகுதியில் தென்னிந்தியாவைச் சார்ந்த மக்களினதும் குறிப்பாக மீனவரதுங் குடியேற்றங்கள் ஆதி காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்டமைக்கு அங்கு கண் டெடுக்கப் பெற்றுள்ள ஈமத் தாழிகளும் அவற்றோடு தொடர்புடைய பிற தொல்பொருள் சான்றுகளும் ஆதாரமாயுள்ளன.[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**iv வன்னியர்**

இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கிக் குடியேறியோரில் வன்னியரின் வருகை பற்றிய விடயங்களும் முக்கிய கவனிப்பைப் பெறுகின்றன. இலங்கையில் சோழராட்சி நிலவிய காலத்திலே புனர்நிர்மாணம் பெற்ற கோணேசர் கோவிலைப் பாதுகாப்பதற்கென்று வேளைக்காரருக்கு நியமனம் வழங்கும் ஏற்பாடுகளின் மூலம் திருகோணமலை வன்னிமை உற்பத்தியானது என நம்பப்படுகிறது. குளக்கோட்ட மன்னனுடன் வன்னியர் வருகை இணைத்து நோக்கப்படுகின்ற அதேவேளை அடங்காப் பற்றைக் கைப்பற்றும் நோக்கில் இந்தியாவிலிருந்து வந்த வன்னியர் அப்பகுதியை வெற்றிகொள்ள மதுரை, மருங்கூர், தொண்டை மண்டலம், காரைக்கால், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, துளுவைநாடு, வடகிரிநாடு ஆகிய பகுதிகளிலிருந்து படைகொண்டு வந்தனர்.[15]

அடங்காப்பற்றுக்கு வெளியே புத்தளம், மட்டக்களப்பு, திருகோண மலை பகுதிகளிலும் வன்னியர் இருந்துள்ளனர். வெருகல் சித்திர வேலாயுதர் காதலில் இளஞ்சிங்கம் எனும் கொட்டியாரப்பற்று வன்னிபம் பற்றிய தரவு உள்ளது. இவன் ஆலயத்தின் முதல் மரியாதைக்குரிய வனாகத் திகழ்ந்துள்ளான்.

*''துன்னுமிரு மரபுந் துய்யவிளஞ் சிங்கமெனும்*
*வன்னிமை....''*[16]

என்ற வெருகல் சித்திரவேலாயுதர் காதல் இலக்கியத்தின் செய்யுளானது இளஞ்சிங்கத்தின் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

யாழ்ப்பாண வைபவமாலையில் நாற்பத்தொன்பது வன்னியர்மார் தென்னாட்டிலிருந்து மரக்கலமேறி வருகையில் நெடுந்தீவுக்கடலில் அமிழ்ந்து போனமை பற்றிய செய்தி உள்ளது.[17]

**v. வேளாளர்**

ஈழத்தின் சமூக அமைப்பில் செல்வாக்கு மிக்க சமூகப் பிரிவினராக வேளாளர் கொள்ளப்படுகின்றனர். விவசாயப் பின்னணியை மையப் படுத்தி, உடைமையாளராய்த் திகழ்ந்தமையால் இவர்களின் கீழ் குடிமை நிலையில் பல்வேறு சமூக அமைப்பினர் அடங்கி வாழும் நிலை ஏற்பட்டது. வேளாளரின் மேலாதிக்கத்துக்கு அதிகார ரீதியாக இந்தியா விலிருந்து வந்து ஈழத்தின் பல பகுதிகளிலும் குடியேறிய வேளாள சமூகத்தவர்களும் ஒரு காரணமெனலாம். ஈழம் நோக்கி வந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அதிகாரத்தைப் பரவச்செய்யும் வகையில் குறிப்பிட்ட அளவான மக்கள் கூட்டத்தினரோடு குடியேறியமைக்கு யாழ்ப்பாண வைபவ மாலையில் சான்றுகள் உண்டு.

"வாவிநகர் வேளாளன் செண்பகமாப்பாணனையும் அவன் ஞாதியாகிய சந்திரசேகர மாப்பாணனையும் கனகராயர் என்னுஞ் செட்டியையும் தெல்லிப்பளையில் இருத்தினான். கோவலூரில் இருந்து வந்த பேராயிர முடையான் என்னும் வேளாளனை இணுவிலில் இருத்தினான்"[18]

என்னும் விபரிப்பு இங்கு கவனிப்பிற்குரியது. தண்டிகைக் கனகராயன் பள்ளு குறிப்பிடும் காரைக்காட்டு வேளாளரின் பின்னணியும் இந்தியத் தொடர்பையே காட்டுகிறது. தண்டிகைக் கனகராயன் தெல்லிப்பளையில் குடியேறியவனாவான். அவனது வழித்தோன்றல்களான தண்டிகைக் கனகநாயக முதலியும் கந்தர் சங்கரப்பிள்ளை, கதிர்காமர் என வலிகாமம் வடக்குப் பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்த தண்டிகைக் கனகராயன் வழி உறவுகள் பலரும் பள்ளில் போற்றி உரைக்கப்பட்டுள்ளனர்.

"..... வேளாஞ்
சூரியன்றன் நவப்பிள்ளை நேரியன் சங்கரப்பிள்ளை
தொல்லுலகில் வாழ்கவென்று கூவுவாய் குயிலே"[19]

எனும் வாழ்த்தில் இந்திய வழிவரு வேளாளரே மாவை சின்னக்குட்டிப் புலவரால் ஏற்றிக் கூறப்பட்டுள்ளனர். இந்தியாவில் ஏற்பட்ட கலகங் களுக்கு அஞ்சியும், தொழில் சார்ந்தும், அரசியல் செல்வாக்கையும், உடைமைப் பெருக்கத்தையும் மையமாகக் கொண்டும் வேளாண் சமூகத்தவர் பலர் பல்வேறு காலகட்டங்களில் இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கி வந்துள்ளனர்.

### vi. தொழில்சார் குடியேற்றங்கள்

ஒல்லாந்தர் தமது வருமானத்தைப் பெருக்கும் நோக்குடன் தொழிலாளர்கள் பலரை இந்தியாவிலிருந்து அழைத்துவந்து ஈழத்தின் பல பகுதிகளில் குடியேற்றினர். தமிழரசர் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்றுறை களை தமது நலன்களை மையப்படுத்தி மீண்டும் ஆரம்பிப்பதிலும் ஈடுபாடு காட்டினர். இவ்வகையில் தென்னிந்தியாவிலிருந்து நெசவாளரை அழைத்துவந்து குடியிருத்த முயற்சிகளை மேற்கொண்டதோடு நெசவாளருக்கெனத் தனியான தோம்புகளை எழுதிவைத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் காலத்திலிருந்தே வர்த்தகர்கள், சிறுதொழில் முயற்சி யாளர்கள், தச்சர், கொல்லர், கட்டடவியலாளர், சிற்பிகள், ஓவியர், நட்டுவர், கலைஞர், மீன்பிடியாளர், குயவர், போர்வீரர், பிராமணர், குடிசைக்கைத்தொழிலாளர், நெசவாளர், தொழில் நுட்பவியலாளர் போன்றோர் தென்னிந்தியாவிலிருந்து வந்து, இலங்கையில், குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களில் தொடர்ச்சியாகக் குடியேறி வாழ்ந்து வந்துள்ளனர்.

யாழ்ப்பாண மன்னர் காலத்தில் சிவிகை காவுவதற்கெனவும் பணி யாளர் பலர் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டுள்ளனர். இதேபோல சோழ நாட்டில் இருந்து சில பட்குடிகள் வேளாளரின் கீழ் பயிர்க்கு குடிகளாயிருந்து பிழைக்கலாமென்று வந்துள்ளனர்.[20] பணிக்கர்[21], வன்னிபர்[22], பள்ளர்[23] மறவர்[24] எனப் பல்வேறு சமூகத்தைச் சார்ந்த பலரும் ஈழத்தில் பிரவேசித்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து வந்தோரில் பலர் அடிமைகளாகவும் குடியேறி யுள்ளனர். இவர்கள் அதிகாரமிக்கவர்களோடு இணைந்து அவர்களுக்குத் துணையாகக் கொண்டுவரப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரதேசத்திலும் குடியேறிய பிரபுக்களோடு அடிமைகளும் குடிமைகளும் குடியேறியமை பற்றி யாழ்ப்பாண வைபவமாலை விபரிக்கிறது. 1658, 1659 களில் தென்னிந்தியாவின் தஞ்சாவூர், மதுரை போன்ற இடங்களில் ஏற்பட்ட கடுமையான பஞ்சம் காரணமாக அங்கு ஏராளமான அடிமைகளை விலைக்கு வாங்கக்கூடியதாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திய டச்சுக்காரர் அங்கிருந்து அடிமைகளை விலைக்கு வாங்கி இலங்கைக்கு கொண்டுவந்தனர். டச்சுக்காரர் தவிர தனிப்பட்டவர் களாலும் பெருமளவான அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டனர். 1694 - 1696 காலப்பகுதிகளில் மட்டும் தனிப்பட்டவர்களால் மட்டும் இறக்குமதி செய்யப்பட அடிமைகள் 3589 ஆகக் காணப்படுகிறது.[25]

## 4. புலமைத்துவ தொடர்புகள்

ஈழத்தின் புலமைப்பாரம்பரியமானது தனக்கான தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருந்த அதேநேரம் இந்தியாவுடனான சார்புநிலை யினையும் பேணியிருந்தமையைக் காணமுடிகிறது. இந்தியாவிலிருந்து ஈழத்திற்கும், ஈழத்திலிருந்து இந்தியாவிற்குமான புலமைத்துவ நகர்வுகள் காலத்துக்குக்காலம் நிகழ்ந்துள்ளன. இத்தொடர்புகள் ஒல்லாந்தரது ஆளுகைக் காலத்திலும் வீச்சுடன் தொடர்ந்துள்ளது. தமிழர்கள் செறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த வடக்குகிழக்குப் பகுதிகளை நோக்கிப் புலமையாளரது நகர்வுகள் நிகழ்ந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன.

மரபுவழியான கல்வியின் ஊடாகத் தமது அறிவாற்றலை விருத்தி செய்துகொண்ட ஈழத்துப் புலவர்களில் பலர் இந்தியத் தொடர்புகளைப் பேணியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் வண்ணார்ப்பண்ணை, தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை முதலான பிரதேசங்கள் ஒல்லாந்தர் காலத்தில் புலமைப் பாரம்பரிய மையங்களாக இயங்கியுள்ளன. இவற்றில் வண்ணார் பண்ணையானது பெருமளவில் இந்தியப் பின்னணியோடு தொழிற்பட்ட தெனலாம். இங்கு கொச்சிக்கணேசையர், வைத்திலிங்கச் செட்டியார் முதலானோர் இந்தியப் பூர்வீகப் பின்னணியைக் கொண்டவர்கள். இவர்களின் ஆதரவில் இந்தியாவிலிருந்து வந்த கூழங்கைத்தம்பிரான் குறிப்பிடத்தக்க ஆற்றலுடையவராகச் செயற்பட்டார். வண்ணார் பண்ணையைத் தளமாகக் கொண்டு நிகழ்ந்த புலமைப் பாரம்பரிய மரபின் மையமாகவும், பிற்காலத்தில் புலவர்கள் பலரது தோற்றத்திற்கான அடிப்படையாகவும் கூழங்கைத் தம்பிரானின் செயற்பாடுகள் அமைந்தன. சைவசமயப் பின்னணி கொண்ட கூழங்கைத் தம்பிரான் மெல்லோப் பாதிரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க, யோசெப்பு புராணத்தைப் பாடியமை இங்கு கவனிப்பிற்குரியதாகும். கூழங்கைத்தம்பிரானிடத்தில் கந்தப்பிள்ளை (1766 - 1842) சேனாதிராச முதலியார் (1750 - 1840) முதலான பலர் கல்வி கற்றுள்ளமையானது ஈழத்தின் மரபு வழிக் கல்வியில் இந்தியத் தொடர்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது. அதேவேளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் மரபு ரீதியான கல்வி வளர்ச்சிக்கு ஒல்லாந்தர் காலப் புலமைப் பாரம்பரியத்தின் வகிபங்கையும் குறிப்புணர்த்துகிறது.

வண்ணார்பண்ணையானது புலவர்களது வித்துவ வெளிப்பாட்டின் மையக் களமாக அமைந்தது. நூல்களை அரங்கேற்றுதல், நூல்களின் இயல்புகளைக் கூடி ஆராய்தல், விவாதித்தல் முதலான செயற்பாடுகள் அக்காலத்தில் நிகழ்ந்துள்ளன. இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்த புலவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்திய இடமாகவும் வண்ணார் பண்ணை திகழ்ந்துள்ளது. அவைக்களத்தில் இந்தியப் புலவர்களோடு வாதம் புரிந்து ஈழத்தைச் சார்ந்த புலவர்கள் தமது வித்துவத்தை நிறுவிய நிகழ்வுகள் நடந்துள்ளமைக்குச் சான்றுகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ நாட்டிலிருந்து செந்திக்கவி என்பவர் வைத்திலிங்கச் செட்டியாருடைய புகழ் கேட்டு அவர்மேல் ஒரு பிரபந்தம் பாடிவந்து ஒருநாள் அரங்கேற்றினார். நெல்லைநாதர் முதற் செய்யுள் கேட்டவுடன் இது பழைய பாடலன்றோ நீர் புதிதாகப் பாடிய பிரபந்தத்தை அரங்கேற்றும் என்று செந்திக்கவியை நோக்கிச் சொல்ல, செந்திக்கவி திகைத்து எப்படி என்றார். நெல்லைநாதர் அச்செய்யுளைச் சபையோர் எல்லோர் பிரமிக்க ஒப்பித்தனர்.[26] என்ற குறிப்பு யாழ்ப்பாண வைபவ கௌமுகியில் உள்ளது. நெல்லைநாதர் சேனாதிராச முதலியாரின் தந்தையாராவார். தமிழ்நாட்டுப் புலவர் வியக்கும் வண்ணம் நெல்லைநாதர் தமது வித்துவத்தை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வணிக செயற்பாடுகளை மையமாகக் கொண்ட வைத்திலிங்கச் செட்டியார் புலமைப் பாரம்பரியத்தை ஊக்குவித்தவராகவும் புலவர்களது கருத்துக்களை மதித்தவராகவும் கொள்ள முடிகிறது. கூழங்கைத் தம்பிரானின் வேண்டுகோளின்படி வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலைச் செட்டியார் அமைத்தமை புலவர்களுக்கு இருந்த சமூக மதிப்பைக் காட்டுகிறது. ஒல்லாந்தரிடம் பணிபுரிந்த கொச்சிக்கணேசையரும் ஆற்றல் மிக்கவராய்த் திகழ்ந்துள்ளார். இவர் வண்ணார்பண்ணை சிவன் மீது படைப்புகளை எழுதியுள்ளார் என்பதற்கு வைத்தீஸ்வரர் ஆலயத் தல வரலாற்றில் குறிப்புள்ளது.

> ''யாழ்ப்பாணத்தில் வைதீக சைவகலாசாரம் பறங்கியர், ஒல்லாந்தர் காலத்தில் மறைவில் உயிர் வாழ்ந்து வெள்ளையர் காலத்தில் ஓர் ஆறுமுகநாவலரைத் தந்து, அவர்மூலம் பாதிரிமாரோடு பொருது வாகை சூடுவதற்கு முதல் வித்தாயமைந்தது சித்தி விநாயகர் ஆலயத்தில் கச்சிக் கணேசையர் தொடக்கி வைத்த கந்தபுராணபடனமேயாகும் என்று ஊகிக்கலாம்''[27]

எனப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் கொச்சிக் கணேசையரால் நிகழ்த்தப்பட்ட கந்தபுராண படனம் தொடர்பாக வழங்கிய தரவானது ஈழத்துக் களத்தில் இந்தியப் புலமைத்துவ மரபின் தாக்கத்தினைக் குறிப்புணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. இலக்கிய இலக்கணத் தொடர்பு

சங்ககால இலக்கிய இலக்கண நூல்கள் மீதான பரீட்சயம் ஈழத்தில் குறிப்பிடத்தக்க அளவில் செல்வாக்குச் செலுத்திவந்துள்ளது. தமிழ்நாட்டு படைப்புக்கள் ஈழத்துப் புலவர்களின் மரபுசார் கல்வியில் பிரதான இடத்தை வகித்துள்ளன. இராமாயணம், திருக்குறள் முதலான இலக்கியங்கள் புலவர்களிடத்தில் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன.

*''வாலியும் நீள்சினைச் சாலியுஞ் சாய வயங்குசிலை*
*கோலிய வீரன் கரவையில் வேலன்''*[28]

எனக் கரவை வேலனை சின்னத்தம்பிப் புலவர் இராமனாகச் சித்திரித் துள்ளமை புலவர், இராமாயணத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டிற்குச் சான்றாகும்.

அறக் கருத்துக்களைப் பெரிதும் வலியுறுத்தும் திருக்குறளும் ஒல்லாந்தர் காலப் புலவர்களிடத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

*''ஈன்ற பொழுது தனினுமினிதாயுவக்கு மகவைச்*
*சான்றோரென்னக் கேட்ட தாய் தந்தையரென்பது போற்''*[29]

**''மக்கட் டிருமேனி புல்லினுடற் கேயின்பம் வார்த்தை செவிக்கின்ப மெனும்''**[30] எனத் தொடரும் பூலோகசிங்க முதலியாரது திருச்செல்வர் காவியச் செய்யுள்கள் திருக்குறள் பிரயோகத்திற்கு ஆதாரங்களாகும்.

இந்தியாவில் தோற்றம்பெற்ற இலக்கிய வடிவங்கள் பலவற்றை முன்மாதிரியாகக் கொண்டு காப்பியம் முதல் ஏனைய பிரபந்த இலக்கிய வடிவங்கள் பல ஈழத்தில் தோன்றியுள்ளன. தமிழகத்தில் தோற்றம்பெற்ற கம்பராமாயணம் உள்ளிட்ட காப்பியங்கள் பற்றியும் தண்டியலங்காரம் முதலான இலக்கண நூல்கள் தொடர்பாகவும் ஒல்லாந்தர் காலப் புலவர்கள் தெளிவான புரிதலைக் கொண்டிருந்தனர்.

*''ஏதெனின் முந்து காலத் திருந்தமிழ்க் கலைஞர் சொற்ற*
*காதைகள் பலவுஞ் செய்யுட் காப்பியமாகச் செய்தார்*
*ஆதலி னானுமிந்த வருந்தவச் சிட்டர் காதை*
*தீதில் காப்பியமாய்ச் செய்யச் சிந்தையிற் சிந்தித்தேனே''*[31]

என்ற திருச்செல்வர் காவியச் செய்யுள், பூலோகசிங்க முதலியார் காப்பிய இலக்கணத்திற்கு அமைவாகக் காப்பியம் பாட முனைந்தமையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகிறது. பூலோகசிங்கமுதலியார் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்தவராய் திகழ்ந்துள்ளார்.

*''ஒன்றே செய்திடு மொன்று நன்றே செய்திடு நன்று*
*மின்றே செய்திடுமின்று மின்னே செய்திடு மென்றே*
*யன்றே கலையுணர் கபிலனறைந்தன வாய்மைகளன்றோ''*[32]

எனும் பாடல் சங்ககாலப் புலவரான கபிலன் பற்றிய புலவரது அறிகைக்கு ஆதாரமாக உள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம்பெற்ற இலக்கியங்களில் சில இந்தியாவில் தோன்றிய இலக்கியங்களைத் தழுவி எழுந்துள்ளன. ஏகாதசி புராணமானது,

''வடநூல் சொன்ன வழிகண்டு தண்டமிழால் வகுத்தல் செய்தான்''[33]

என வடநூலை மையப்படுத்தி எழுந்துள்ளது.

அராலியைச் சேர்ந்த இராமலிங்க முனிவர் இயற்றிய சந்தானதீபிகையானது

''நன்னூலாம் வடமொழிச்சந் தானதீ
பிகையதனை நலங் குலாவு
தென்னூலா யெவர்தாமு மாராய்ந்து
கொண்டாடத் தெரித்தல் செய்தான்''[34]

என வடமொழிச் சந்தான தீபிகையை மையப்படுத்தி தோன்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தில் வாழ்ந்த புலவர்களிற் பலர் வடமொழி அறிவு உள்ளவர்களாகவும், வடமொழி இலக்கியங்களில் ஈடுபாடுகொண்டவர்களாகவும் இருந்தமை இலக்கிய ரீதியாகவும் புதிய வெளிப்பாடுகளை ஏற்படுத்தத் துணைநின்றன எனலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் மட்டுமல்லாமல் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் எழுச்சிபெற்ற இலக்கியங்களின் பின்னணியிலும் இந்தியத் தொடர்புகள் இருந்துள்ளன என்பதனை யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது.

யாழ்ப்பாண மன்னர்கால அரசனான பரராசசிங்கனின் மருமகனான அரசகேசரி தான் இயற்றிய இரகுவம்சத்தை திருவாரூரிலே கொண்டு போய் அரங்கேற்றிப் பெருங்கீர்த்தி அடைந்தான்[35] என யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தவர் தமது புலமையை இந்தியாவில் சென்று நிறுவிய நிகழ்ச்சியாக இதனைக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதபண்டிதர் சிவராத்திரி புராணத்தை தில்லை வாழ் அந்தணரின் வேண்டுகோளுக்கு இணங்கவே பாடியுள்ளார் என்பதற்கு நூலின் தற்சிறப்புப்பாயிரம் சான்றாக உள்ளது.

''கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத் தறிஞர்திருக் கடைக்க ணோக்கி
முந்தவுரைத் தனர்பலரு மாயினுநீ யாகமநூன் மொழிவழாமற்
பந்தமறுத் திடுசிவராத் திரிவிரத சரிதைதனைப்பாடு கென்னச்
செந்தமிழி னுயர் விருத்தப் பாவதனாற் றிரட்டி
யொன்றாச் செப்ப லுற்றேன்''[36]

என வரதபண்டிதர் விளக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## 6. ஈழம் இந்தியா அதிகார நிலைப்பட்ட உறவு

ஈழத்து அரசியலில் இந்தியாவின் ஆதிக்கமானது பண்டுதொட்டு நிலவி வந்துள்ளது. ஈழத்தவர்களின் அரசியலிலும், கண்டியை மையமாகக் கொண்ட சிங்களவர்களது அரசியலிலும் நிலவிய இந்தியாவின் அதிகார ரீதியான தொடர்புகளை ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள் ஊடாக நோக்குதல் பிரதானமாகும்.

யாழ்ப்பாண மன்னர் காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கிய குடிப்பெயர்வில் அதிகார நிலைப்பட்டவர்களின் வருகை குறிப்பிடத்தக்க இடத்தை வகித்துள்ளது. ஒல்லாந்தர்கால இலக்கியங்கள் அதிகாரப் பிரிவினரின் வருகையையும், வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் மத்திய மலைநாட்டிலும் தமது இருப்பினைத் தக்கவைக்க மேற்கொண்ட முயற்சிகளையும் பதிவு செய்துள்ளன. வடக்கு, கிழக்கு பகுதிகள் குடிசன அடர்த்தி குறைந்து காணப்பட்டன. இதனால் இந்தியாவிலிருந்து வந்தோர் தாம் குடியேறிய பகுதிகளில் தமது அதிகாரத்தை நிலைப்படுத்தவும், செயற்படவுமான அடிப்படைகளை மேற்கொண்டனர். எடுத்துக்காட்டாக இந்தியப் பின்னணியுடைய யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் வந்து நிலைபெற்ற யாழ்ப்பாண மன்னர்கால அரசர்களில் ஒருவனான கைலாய நாதன் இன்று இளந்தாரி என விளிக்கப்பட்டு இறைவனாக வழிபடப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கைலாய நாதனின் குலம் இந்தியாவின் காரைக்கால் கோவலூரினரோடு உறவு பூண்டிருந்தமையை

''......... கயிலாயநாதன்
கோவலூர்க் காரைக்குடி குலந்தழுவிய
நாவலர் புகழும் நல்மரபுதித்தோன்''[37]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பாடலடிகள் குறிப்புணர்த்துகின்றன. இந்தியாவில் செல்வாக்குப் பெற்றிருந்த பலர் தமக்குரிய அடையாளச் சின்னங்களுடன் ஈழம் நோக்கி வந்தமைக்கு அரசியல், சமூக, பொருளாதார நலன்களே பிரதான அடிப்படைகளாக உள்ளன. ஒத்த பண்பாட்டுச் சூழல் இருபகுதிகளிலும் நிலவியமையால் தமிழ் நாட்டிலிருந்தும், தமிழ் நாட்டுக்கு வெளியி லிருந்தும் தமிழர்கள் பலர் ஈழம் நோக்கி வந்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து வந்து ஈழத்தில் அதிகாரம் பெற்றோர், தமது பரம்பரையினரும் ஈழத்தில் தொடர்ந்து அதிகாரம் செலுத்துவதை விரும்பினர். தண்டிகைக் கனகராயன் பள்ளில் இதற்கான சான்றுகள் உண்டு. இப்பள்ளில் கனகராயனின் பரம்பரைப் பெருமை குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை கவனிப்பிற்குரியது. தண்டிகைக் கனகராயன் பள்ளில் வடகாரை, தென் காரைக்காட்டுப் பகுதிகள் தொடர் பான சித்திரிப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இப்பகுதிகளிலிருந்து தெல்லிப்பளையில் குடியேறிய காரைக்காட்டு வேளாளரின் அடையாள மாகத் தண்டிகைக் கனகராயன் குறிப்பிடுகிறான். இந்தியாவில் செல்வாக் குப் பெற்ற வணிக மையமாக காயல்பட்டினம் திகழ்ந்ததென்பதும் அங்கிருந்து வர்த்தக சமூகத் தொடர்புகள் ஈழத்துடன் நெருக்கமாக இருந்ததென்பதும் கவனிக்கத்தக்கதாகும். தெல்லிப்பளை, இருபாலை, மயிலிட்டி ஆகிய கிராமங்களில் காரைக்கால், மயிலாப்பூர், பாலையூர் பகுதிகளைச் சார்ந்தவர்களும் குடியேறியிருந்தனர் என்பது வெளிப் படுகிறது.

காரைக்காலின் பெருமையூடாக தண்டிகைக் கனகராயனின் பரம்பரைப் பெருமையும், அதிகார இருப்பும் புலவரால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

*"கங்கை யங்குலத் தோரென வுந்திருக்*
*காரை யாரென வும்புகழ் பூண்டே*
*தங்கு மங்கவர் தங்குலத் தினிற்*
*றனுதித்திடும் சம்பிரம தீரன்"*[38]

என தண்டிகைக் கனகநாயக முதலியினுடைய பெருமை காரைக்காட்டி னூடாகவே அழுத்திக் கூறப்பட்டுள்ளது. இங்கு வெறுமனே கனகநாயக முதலியை மட்டும் போற்றிப் பாடாது அவனது சுற்றத்தவர்களான கந்தப்பர்[39], கதிர்காமர்[40], பூதர்[41], நீலயினார்[42], வெற்றிவாகுதேவர்[43] முதலான தண்டிகைக் கனகநாயக முதலியின் பரம்பரையினரது புகழையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் இணைத்துப் போற்றியுள்ளார். இந்தியாவிலிருந்து குடியேறியோர் படிப்படியாக ஈழத்து மக்களோடு தம்மை இணைத்துக் கொண்டு இயங்கிய சூழலில் தாம் பிறந்த பகுதியை நினைவில் கொண்டதோடு குடியேறிய ஈழத்தில் தமது இருப்பைத் தக்கவைக்கவும் முயன்றுள்ளனர்.

இந்தியாவிலிருந்து அரசியல் அதிகாரமிடுக்குடன் ஈழம் நோக்கிச் சென்றவர்கள் தொடர்பான வரலாற்று ரீதியான தரவுகளை யாழ்ப்பாண வைபவமாலை வழங்கியுள்ளது. குளக்கோட்டன், வீரராகன் முதலான பலரது குறிப்புக்கள் யாழ்ப்பாண வைபவ மாலையில் கூறப்பட்டுள்ளன. கோவலூரில் இருந்து வந்த பேராயிரமுடையன் எனும் வேளாளனை இணுவிலில் குடியிருந்தினான். இதேபோல பச்சிலைப்பள்ளி, புலோலி, தொல்புரம், கோயிலாக்கண்டி, இருபாலை, நெடுந்தீவு, பல்லவராயன் கட்டு ஆகிய இடங்களிலும் குடியேற்றங்கள் நிகழ்ந்ததாக யாழ்ப்பாண வைபவமாலை விபரிக்கின்றது.[44] அதேவேளை மேற்குறித்த குறிப்புக் களில் பெருமளவு மயக்கங்கள் உள்ளன என்பது தற்கால வரலாற்றாசிரியர் பலரது கருத்தாகும்.

ஈழத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் பல கிடைக்காமல் போனமை ஈழத் தமிழர்களின் வரலாற்றை அறிவதில் இடர்பாட்டைத் தருவதாக உள்ளது. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தில் முதலியாராகத் திகழ்ந்த திசை வீரரத்தின முதலியார் பெயரில் உள்ள கப்பற் பிரபந்தமானது ''தொண்டி நகருய்யவந்த''[45] என முதலியைப் போற்றியுள்ளது. திசை வீரரத்தின முதலியார் தொண்டை மண்டலத்தில் இருந்து வந்துள்ளார். இவர் ஒல்லாந்தரின் கீழ் பணியாற்றியுள்ளமையையும் உலாந்தரசர் மெச்சும் வகையில் கப்பற் பிரபந்தத்தைப் பாடியுள்ளார் என்ற தரவையும் யாழ்ப்பாண வைபவகௌமுகி ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.[46]

ஈழத்தில் கிழக்குப் பகுதியின் அதிகாரக் கட்டமைப்பிலும் இந்தியச் செல்வாக்கு முக்கிய இடத்தை வகித்துள்ளது. வரலாற்று ரீதியாக கூளங்கை ஆரியன்[47], குணசிங்கன்[48], கலிங்ககுலத்து வங்கநாடன்[49], பாண்டிய குமாரன்[50], தாதன்[51] எனப் பலர் இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கி வந்துள்ளனர் என்பதும், தமது பலத்தால் கிழக்கில் தமது செல்வாக்கை நிறுவ முயன்றனர் என்பதும் மட்டக்களப்பு பூர்வ சரித்திர நூல் மூலம் வெளிப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. வணிகத் தொடர்பு

ஒல்லாந்தர் தமது வணிக நலன்களை முன்னிறுத்தி பல்வேறு செயற்பாடு களை முன்னெடுத்துள்ளனர். வணிகத் தொடர்பில் இந்தியாவுடனான கடல்சார் வணிகச் செயற்பாடுகள் முக்கிய இடத்தை வகித்துள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்து நாகபட்டினம் உள்ளிட்ட இந்தியப் பிரதேசங்களுடன் வர்த்தக செயற் பாடுகள் நிகழ்ந்துள்ளன. யானை வணிகம், பனம் பொருட்கள் சாயவேர் முதலானவை ஈழத்திலிருந்து இந்தியப் பகுதிகளுக்கு வணிக நிமித்தம் கொண்டுசெல்லப்பட்டுள்ளன. கப்பல்களுக்கு உரிய பிரயாண அனுமதி கள் ஒல்லாந்தரால் கண்காணிக்கப்பட்டுள்ளன.

"The trade with the moors from Bengal at Jaffnapatam and Galle has been opened by order of the honourable the supreme Government of India in terms of their letter of August 20.1694"[52] எனும் சுவார்டிகோனின் அறிக்கைக் குறிப்பானது பெங்காலைச் சேர்ந்த மூர் சமூகத்தவர் மேற்கொண்டிருந்த வர்த்தகச் செயற்பாடுகளை இனங்காண உதவுகிறது.

வர்த்தக ரீதியாக ஏற்றுமதி, இறக்குமதி தொடர்புகளின் ஊடாக ஈழத்திற்கும், இந்தியாவிற்கும் ஓரளவு பயனுடைய பரிமாற்றங்கள் நிகழ்ந்து வந்தமையை இனங்காண முடிகிறது. ஒல்லாந்தரது அனுமதி யோடு வைத்திலிங்கச் செட்டியார் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத் தமைக்குச் சான்றுகள் உள்ளன.

> ''காசி வடதேசம் காவிரிசூழ் சோணோடு
> மாசிலிம சேது மதுரைமுதல் - தேசாதி
> தேசமன்னர் செய்யுஞ் சிறப்பும் வெகுமதியும்
> பேசுமுப சாரமும் பெற்றரியோன் - ஓசைசேர்
> சங்கு சலாபந் தனிக்குத் தகையேற்று
> வங்காள மச்சி மலையாளம் - எங்கெங்கும்
> கப்பல் முதலாங் கவினார் மரக்கலமேல்
> இப்பியொடு வெண்சங் கினஞ்சொரியும் - ஒப்பிலா
> முத்துநவ ரத்ன முதலாஞ் சரக்கேற்றி
> வர்த்தகஞ் செய்து வரும்பொருள் கொண்...''[53]

எனத் தொடரும் தையல்நாயகி கலிவெண்பா இலக்கியம் வைத்திலிங்கச் செட்டியார் இந்தியாவோடு கடல் வழியாக மேற்கொண்ட வணிக செயற் பாடுகளை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தரும் தமது பொருளாதார நலன்களை முன்னெடுக்க வர்த்தக அதிகாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தியிருந்தனர் எனலாம்.

"The Dutch concentrated on dying as the chaya root of Jaffna was believed to produce colours superior to those of south India, to be dyed in Jaffna which was rexsported to Europe and Batavia for the South east Asian market"[54] எனும் அரசரட்ணத்தின் கூற்றும் இங்கு கவனிப்பிற்குரியது.

## 8. ஈழமும் இந்தியக் கலைமரபும்

ஈழத்துக் கலைமரபில் இந்தியக் கலைமரபின் செல்வாக்கானது இருந்து வந்துள்ளது. சமய, சமூக செயற்பாடுகளில் பெருமளவான கலைசார் அம்சங்கள் இந்திக் கலைமரபை மாதிரியாகக் கொள்ளும் வழக்கம் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும், நிகழ்ந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

### i. கட்டடக் கலை

இந்திய ஆலய அமைப்பை மாதிரியாகக் கொண்டு ஆலயங்களை அமைக்கும் வழக்கம் ஒல்லாந்தர் காலத்தில் கைக்கொள்ளப்பட்டமைக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் சான்றாக உள்ளது. இந்தியாவில் உள்ள புள்ளிருக்கும் வேளூர்த் தலத்தினை மையமாகக் கொண்டு வைத் தீஸ்வரன் கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

> ''வித்தகனார் புள்ளிருக்கு வேளூராம் - அத்தலத்தின்
> வானாருங்கோபுரமு மாமதிலும் மாமலிங்கம்
> தானாரு மண்டபமும் தைய லெனுந் - தேனாரும்
> கோங்கரும் பென்னக் குவிமுலையாள் கோயின்முத
> லோங்கியசுற் றாலயங்க ளுள்ளவெலாம் - பாங்கமையத்
> தேவி யெனும் வாலாம் பிகைதன் றிருவுருவும்....''[55]

என அனந்த சுப்பையர் வைத்தீஸ்வரன் கோவிலின் அமைப்பை விரிவுபட விளக்கியுள்ளார்.

வெருகல் சித்திர வேலாயுதர் ஆலய அமைப்பிலும் இந்தியத் தல அமைப்பின் செல்வாக்கினைக் காணமுடிகிறது. ஆலய மகா மண்டபம் தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ளது போன்று உட்குவிவாக மூடுசாந்து போடப்பெற்று உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ii. சிற்பம்**

சிற்பக்கலையில் இந்தியக் கலைமரபு ஈழத்தவர்களை ஈர்த்துள்ளது. ஒல்லாந்தர் ஆட்சியில் ஆலயங்களை மையப்படுத்தியதாய் அவற்றின் பாதிப்பு செறிவானதாக இருந்துள்ளது. இந்தியாவிலிருந்து விக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பெற்ற நிகழ்வுகள் பல அக் காலத்தில் நிகழ்ந்துள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் திறைசேரித் தலைவரா யிருந்தவரும் வண்ணை கிழக்கில் வசித்தவருமாகிய பூலோகசிங்க முதலியார் தமது சந்ததியாரினது ஆன்ம லாபத்தைக் கருதித் தங்கள் குலத்தெய்வம் வீரகத்தி விநாயகரை வேதாரணியத்திலிருந்து கொண்டு பிரதிஸ்டை செய்தார்.[56] வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர், அராலி வணப்புரம் சிவன்கோவில் ஆகியவற்றிற்கான மூல லிங்கங்களும் காசியில் இருந்தே கொண்டு வரப்பட்டுள்ளன. வைத்திலிங்கச் செட்டி யாரும், விஸ்வநாத சாஸ்தரிகளும் ஒன்றாகச் சென்றே இரு லிங்கங் களைப் பெற்றுவந்தார்கள் என்பதும் வணப்புரம் சிவன்கோவில் வரலாற்றில் உள்ளது.[57] இவ்வகையில் இந்தியாவின் சிற்பகங்கள் ஈழத்தில் பரவலான செல்வாக்கைப் பெற்றிருந்தமைக்கு மேற்குறிப் பிட்ட நிகழ்வுகள் சான்றுகளாக உள்ளன.

**iii. நாடகம்**

ஒல்லாந்தர் கால நாடக அளிக்கைகளில் இந்தியத் தொடர்புகளைக் காணமுடிகிறது. கூத்துக்களை எழுதியவர்கள் ஈழத்தவர்களாக உள்ள அதேவேளை அவற்றின் கருப்பொருள்களில் புராண இதிகாசச் செல்வாக்கு உள்ளமைக்கு அனுவுருத்திர நாடகம் மகாபாரதகால விடயங் களை மையப்படுத்தி எழுந்துள்ளமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**iv. சோதிட - வைத்தியம்**

சோதிட - வைத்திய கலை வெளிப்பாடுகளிலும் இந்தியத் தொடர்பு இருந்துள்ளது. சந்தான தீபிகையை எழுதிய இராமலிங்க முனிவர் இந்தியப் பின்னணி உடையவரென்பதும், வடமொழிச் சந்தான தீபிகையை மையப்படுத்தியே தமிழில் சந்தான தீபிகையை அவர் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும். மருத்துவ நூலை எழுதிய வரதபண்டிதரும் இந்திய பின்னணி உடையரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமும் இந்தியாவும் அருகருகே இருப்பதனாலும் ஈழமானது தென்னிந்தியாவுடன் பண்பாட்டு ரீதியாக ஒத்திசைவான அம்சங்களைக் கொண்டுள்ளமையாலும் ஈழத்திற்கும் இந்தியாவிற்குமிடையிலான தொடர்பானது அரசியல் ரீதியாக மட்டுமன்றி சமூக, பொருளாதார பண்பாட்டு ரீதியாகவும் நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருந்தமை யைக் காணமுடிகிறது.

### அடிக்குறிப்புகள்

01. பூலோகசிங்கம், பொன்., 1970, *தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சி கள்*, கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம், ப. V
02. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 1998, ***வரதபண்டிதம்***, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, ப. 111.
03. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, ***யாழ்ப்பாண வைபவமாலை***, வல்வை ஆவணக் காப்பகம், ப. xviii.
04. ஞானப்பிரகாசர், சா, 1942, ***யாக்கோமே கொன்சால்வேஸ் எனும் சாங்கோ பாங்க சுவாமிகள்***, அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, ப. 14.
05. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *மு.கு.நூ.*, ப. 27.
06. மங்களேஸ்வரம், 04.01.2002, சிவஸ்ரீ.க.மங்களேஸ்வரக்குருக்கள் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டது.
07. வேலுப்பிள்ளை, க., 1918, ***யாழ்ப்பாண வைபவகௌமுகி***, ஜயசிறீ சாரதா பீடேந்திரசாலை, ப. 228.
08. மேலது, ப. 227.
09. மேலது, ப. 226.
10. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *மு.கு.நூ.*, ப - 92.
11. ***மருதடி விநாயகராலய மான்மியம்*** (கிடைக்கப்பெற்ற நூலின் முன் அட்டைப் பகுதி சிதைந்துள்ளது), ப. 06.
12. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, ***வெருகல் சித்திர வேலாயுதர் காதல்***, இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு, பக். 142, 143.
13. சுபதினி ரமேஸ், தொகுப்பு, 2002, ***வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்***, மஹா கும்பாபிஷேக மலர், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம், பக். 65, 67.
14. பத்மநாதன், சி., 2002, ***இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமை களும்***, குமரன் புத்தக இல்ல வெளியீடு, பக். 249, 250.
15. பத்மநாதன், சி., 1970, ***வன்னியர்***, ஆசிரியர் வெளியீடு, ப. 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வீரக்கோன் முதலியார், ஸ்ரீ.ஜ., 2000, *மு.கு.நூ.*, ப. 143.
17. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *மு.கு.நூ.*, ப. 60.
18. மேலது, ப. 8.
19. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், 1932, *தண்டிகைக்கனகராயன்பள்ளு*, சென்னை சாது அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, ப. கஎ.
20. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *மு.கு.நூ.*, ப. 94.
21. மேலது, ப. 12.
22. மேலது, ப. 12.
23. மேலது, ப. 91
24. மேலது, ப. 60
25. முருகர் குணசிங்கம், 2008, *இலங்கையில் தமிழர்*, ஆ.ஏ. வெளியீடு, ப. 269.
26. வேலுப்பிள்ளை, க., 1918, *மு.கு.நூ.*, ப. 163.
27. *யாழ்ப்பாணம் அரியாலை சித்திவிநாயகர் கோவில் இராஜகோபுர கும்பாபிஷேக மலர்*, 1973.
28. இரகுபரன், க., பதிப்பாசிரியர், 2005, *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ப. 218.
29. சந்திரகாந்தன், ஏ.ஜே., பதிப்பாசிரியர், 1995, *திருச்செல்வர் காவியம்*, திருமறைக் கலாமன்ற வெளியீடு, ப. 63.
30. மேலது, ப. 68.
31. மேலது, ப. 03.
32. மேலது, ப. 202.
33. இரகுபரன், க., 1998, பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. 171.
34. சிவராமலிங்கையர், பதிப்பாசிரியர், *சந்தானதீபிகை*, சோதிடப்பிரகாச யந்திர சாலையில் அச்சிடப்பட்டது, சிறப்புப்பாயிரம்.
35. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *மு.கு.நூ.*, ப. 50.
36. இரகுபரன், க., 1998, பதிப்பாசிரியர், *மு.கு.நூ.*, ப. 62.
37. கந்தசுவாமி, க.இ.க., பதிப்பாசிரியர், 1998, *பஞ்சவன்னத்தூது*, சைவசித்தாந்தக் கழகம், பக். 107, 108.
38. குமாரசுவாமி, வ., பதிப்பாசிரியர், 1932, *மு.கு.நூ.*, ப. கரு.
39. மேலது, ப. கஅ
40. மேலது, ப. கஅ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. மேலது, ப. கஅ
42. மேலது, ப. கஅ
43. மேலது, ப. சகூ
44. நகுலசிகாமணி, வல்வை.ந., பதிப்பாசிரியர், 2004, *மு.கு.நூ.*, ப. 28
45. வேலுப்பிள்ளை, க., 1918, *மு.கு.நூ.*, ப. 164
46. வேலுப்பிள்ளை, க., 1918, *மு.கு.நூ.*, ப. 164.
47. கமலநாதன், சா.இ., கமலா கமலநாதன், பதிப்பாசிரியர், 2005, *மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம்*, குமரன் புத்தக இல்ல வெளியீடு, ப. 25.
48. மேலது, ப. 29.
49. மேலது, ப. 31.
50. மேலது, ப. 32.
51. மேலது, ப. 43.
52. Hendrick Zwaardecroon, 1910, *Memoir Introduction and Notes by the Government Archivist*, p. 15.
53. சுபதினி ரமேஸ், (தொகுப்பு), 2002, *மு.கு.நூ.*, ப. 13.
54. Sinnapah Arasaratnam, 1982, *Historical Foundation of the Economy of the Tamils of North Sri Lanka*, Thanthai Chelva Memorial Trust, Jaffna, p. 09.
55. சுபதினி ரமேஸ் (தொகுப்பு), 2002, *மு.கு.நூ.*, ப. 12.
56. இரகுநாதமுதலியார், 2004, *நீராவியடி வீரகத்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேக மலர்*, ப. 119.
57. சரஸ்வதி தீபம், 2012, *யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்*, ப. 119.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIII. மதிப்பீடு

ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வில் அக்கால சமூக அரசியல் குறித்த விடயங்கள் பெருமளவில் வெளிப்பட்டுள்ளன. இங்கு வரலாற்றுப் பின்னணி, சமயங்களின் சமூக அரசியல், மரபுகளும் வழக்காறுகளும், கலைகள், அதிகார அடுக்குநிலை, ஈழ - இந்தியத் தொடர்புகள் ஆகிய பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு இடம்பெற்றுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் வெளிவந்து இன்று கிடைக்க கூடியதான இலக்கியங்களில் சமயத்தை மையமாகக் கொண்டும், அதிகார வர்க்கத்தின் புகழ் பாடுவனவுமான இலக்கியங்களே பெரும்பான்மையாக உள்ளன. இவ்வாறு பாடுதலே இலக்கிய ஏற்புடமையாகக் கொள்ளப்பட்ட மனோ பாவம் அக்காலப் புலவர்களிடத்தில் இருந்துள்ளது. சாதாரண மனிதர்களை இலக்கியப் பாடுபொருளாகக் கொண்ட படைப்புகள் வெளிவந்துள்ள மைக்கான தரவுகள் உள்ள போதும் அந்த இலக்கியங்கள் பேணப்படாமை யாலும், முற்குறிப்பிட்ட மனப்பாங்கினாலும் விடுபட்டுப் போயுள்ளன. கிடைக்கப்பெற்றுள்ள இலக்கியங்களில் சைவ, கிறிஸ்தவ இலக்கியங்கள் அதிகளவாக உள்ளதோடு அவற்றில் அக்கால சமூக, அரசியல் கூறுகள் இணைந்துள்ளமையினை இனங்காண முடிகிறது.

ஆய்வின் முதலாவது இயலில் வரலாற்றுப் பின்னணி விரிவாக நோக்கப்பட்டுள்ளது. மரபு ரீதியாகத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஏற்பட்டு வந்த மாறுதல்கள், காலனிய ஆதிக்க அரசியலின் வரலாற்றுப் பின்னணி முதலானவை தமிழர்களின் சமூக அரசியல் நிலையில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் இங்கு கவனிப்புப் பெற்றுள்ளன. இலக்கியங் களின் பாடுபொருளுக்கான பின்னணியில் அக்கால அரசியல் வரலாற்றின் தாக்கம் வெளிப்பட்டுள்ளமை இங்கு முக்கியமான விடயமாகும்.

இரண்டாவது இயலானது ஒல்லாந்தர் காலச் சமயநிலையினை மையப்படுத்தி அமைந்துள்ளது. தமிழர் புலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சைவ சமயத்தோடு கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயக் கலப்பானது தமிழர்தம் பண்பாட்டு மரபில் பிரதான மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒல்லாந்தர் காலத்தில் ஓரளவு சமயப்பொறை நிலவியது. ஒல்லாந்தர் தமது பொருளாதார நலன்களுக்கே முன்னுரிமை வழங்கினர். பொருளாதார அரசியலை மையப்படுத்தியே சமயச் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் சைவ, கத்தோலிக்க சமயங்களின் நடவடிக்கைகள் தனித்த கவனிப்பைப் பெற்றுள்ளன. மக்களை சமயத்தின் பால் ஒழுங்குபடுத்தல், தக்க வைத்தல், பிற சமயங்கள் மீதான விமர்சனங்களை முன்னெடுத்தல் எனச் சமயமானது நுண் அரசியல் சார்ந்து இயங்கியுள்ளது. சைவசமயத்தில் பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாடானது சமூக ரீதியான வேறுபாடு களோடு தொடர்புபெற்றதாய் தலங்களையும் மத நியமங்களையும் பெரிதும் முதன்மைப்படுத்த, கத்தோலிக்க மதமானது மத நியமங்களோடு, நெருக்கடியிலிருந்த சமூக வாழ்க்கையினை எதிர்கொள்வதற்கான விடயங்களை வெளிப்படுத்தின. அக்காலத்தில் புரட்டஸ்தாந்து சமயத்தின் பரவலானது கத்தோலிக்க சமயத்தைப் போல உறுதியான இடத்தைப் பெறவில்லை. இலக்கியங்களில் பல சமய இருப்புக்கான நோக்கை மையப்படுத்தி நுணுக்கமான வகையில் படைக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

மரபுகளும் வழக்காறுகளும் எனும் மூன்றாவது இயலில் தமிழர் மத்தியில் சடங்கு, நம்பிக்கைகள், வழக்காறுகள் என்பன பெற்றிருந்த முக்கியத்துவம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. சடங்குகள் வாழ்வின் இயக்கத்தில் பிரதான இடத்தினைப் பெற்றுள்ளன. பிறப்பிலிருந்து இறப்பு வரை சடங்குகள் தொடர்ந்துள்ளன. இச்சடங்குகளில் மத ரீதியான அடையாளமே மேலோங்கி உள்ளமை வெளிப்படுகிறது. தமிழரிடத்தில் காலனியாதிக்கத்துக்கு முன் சைவ சமயமே நிலவியதெனினும் போர்த்துக் கேயரதும் ஒல்லாந்தரதும் வருகையோடு புதிய பண்பாட்டுச் சூழல் தோன்றியது. சைவசமயம் சார்ந்த சடங்குகள் இலக்கியங்களூடாக முன்வைக்கப்பட்டுள்ள அதேவேளை பேணவேண்டிய சடங்குகள் குறித்த புரிதலை மக்களுக்கு ஏற்படுத்த கிறிஸ்தவ சமயம் சார்ந்தவர்களும் மதம்சார் சடங்குகளை எளிமையான வகையில் வெளிப்படுத்தியுள்ளனர். கிறிஸ்தவ சமயத்தவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள சடங்கு முறைகளின் அம்சங்கள் பல தமிழர் பண்பாட்டு மரபுக்குப் புதியவையாக உள்ளதோடு குறித்த சில சடங்கு அம்சங்கள் ஏலவே வழக்கிலிருந்த மரபுகளோடு தொடர்புடையனவாக உள்ளமையை மறுக்க முடியாது.

அக்கால இலக்கியங்கள் வெளிப்படுத்தியுள்ள நம்பிக்கை சார்ந்த கூறுகளில் பல இன்றளவும் தொடர்கின்றமையினைக் காணமுடிகிறது. அச்சம், அறியாமை தொடர்பான விடயங்கள் நம்பிக்கைகளோடு இணைந்திருப்பினும் மக்களின் சமூக உறவைப் பலப்படுத்தவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்தலுக்கான நம்பிக்கையை ஊட்டவும், சமூக ஒழுங்கை பேணச் செய்வதற்குமான அம்சங்களும் அவற்றோடு கலந்துள்ளமை கவனிப் பிற்குரியது. வழிபாட்டு மரபு சார்ந்த நம்பிக்கைகளில் சைவ. கிறிஸ்தவ நடைமுறைகள் பிரதானமானவையாக உள்ளன.

வழிவழியாகப் பேணப்பட்டு வந்த சமூக வழக்காறுகளுக்குச் சட்ட ரீதியான தகுதியை ஏற்படுத்தும் முயற்சி ஒல்லாந்தர் காலத்தில் நிகழ்ந் தமை சமூக வழக்குகள் சட்ட உருவாக்கத்தில் பெற்றுள்ள இடத்தை வெளிப்படுத்துகிறது. தொகுக்கப்பட்ட தேச வழமையானது தமிழரது மரபுசார் வழக்காறுகளைப் பிரதேச, சமூக நிலைப்படுத்தி முன்வைத் துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அக்காலத்தில் பேணப்பட்டு வந்துள்ள வழக்காறுகளும் சமூக வேறுபாடுகள், அதிகாரநிலை முதலான கூறுகளை இனங்காண உதவியுள்ளது. மக்களைக் குறிக்கும் பெயர்சார் அடையாளத் திலிருந்து உண்ணும் உணவு வரை தொழிற்பட்டுள்ள உள்ளார்ந்தமான அரசியலின் தன்மை இங்கு பிரதானமாகும். ஈழத்தமிழர்தம் பண்பாட்டு வரலாற்றின் நுண்மையான அம்சங்கள் பலவற்றை அக்காலத்தில் வெளிவந்த தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கலைவடிவங்கள் மகிழ்நாட்டத்தோடு தொடர்புபட்டுள்ளவையா கவும், சமூகத்தோடு நெருங்கிய பிணைப்புக் கொண்டவையாகவும், பண்பாட்டு வளர்ச்சியை இனங்காட்டும் குறியீடாகவும் இருந்துள்ளமையை ஒல்லாந்தர் காலக் கலைகள் தொடர்பான ஆய்வில் இனங்காணக் கூடியதாக உள்ளது. நுண்கலை வடிவங்கள் போர்த்துக்கேயரின் செயற் பாடுகளால் பேரழிவுக்குள்ளானபோதும், ஒல்லாந்தரின் ஆரம்பகால செயற்பாடுகளால் நெருக்கடிகளை எதிர்கொண்டபோதும் அவர் தம் ஆட்சியின் பிற்பட்ட காலங்களில் அவற்றின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தியக் கலைமரபின் தாக்கமும், காலனித்துவ கலைமரபின் பாதிப்புகளும் புலத்தில் இருந்த கலைகளோடு இணைத்தும், தனித்தும் ஈழத்தமிழர் கலைமரபிற்குப் புதிய அடையாளங் களைத் தந்துள்ளன. அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்த்து கலைகள் சமூக உறவை வளர்ப்பதாகவும், கருத்துருவாக்க வல்லமை கொண்டனவாகவும், பொதுமக்களின் புரிதலுக்கு ஏற்றதாகவும், பண்பாட்டு மரபை வெளிப்படுத்துவனவாகவும் திகழ்ந்துள்ளன. இங்கு நாடகக் கலையின் வகிபங்கைச் சிறப்பாகக் குறிப்பிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் காலத்தில் புலமைத்துவத்தோடு தொடர்புகொண்ட சோதிட, மருத்துவ சார் கலைகளும் சமூக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. பேச்சு முதலான கலை வடிவங்களும் உரிய இடத்தைப் பெற்று வளர்ந்துள்ளமையை இலக்கியங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. இன்றுவரை ஈழத் தமிழர்களின் ஆரம்பகாலக் கலை வரலாறு தெளி வற்றதாகவே உள்ள நிலையில் ஒல்லாந்தர்கால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகள் ஈழத் தமிழரது கலை வரலாற்றில் தனித்த கவனிப்பைப் பெறுவனவாக உள்ளன.

சமூகத்தில் அன்று நிலவிய அதிகார அடுக்கமைவானது தமிழர் களிடத்தே உள்ள உட் கூறுகளையும், அதிகாரம் சார்ந்த மனவேறுபாடு களையும் தெளிவுபடுத்துவதாக உள்ளன.ஒல்லாந்தரது ஆட்சியில் ஒல்லாந்தரது அதிகாரத்துக்கு அடுத்த படிநிலையில் ஆதிக்க சக்தியினராக சுதேசிய அதிகாரத் தலைமைகள் திகழ்ந்தனர். பொருளாதார வலுவுடை யவர்களாகவும், விவசாய நிலங்களை உடைமையாகக் கொண்டவர் களாகவும் இவர்கள் இருந்துள்ளனர். விவசாயத்தைச் சாராது சுயமான வலுக்கொண்டி யங்கிய சாதியினரும் அன்றைய சமூகக் களத்தில் ஓரளவு சுதந்திரத்தோடு வாழ்ந்துள்ளனர்.

ஒல்லாந்த அதிகார வர்க்கத்திற்கு நெருக்கமாகத் தமது நலன்களை மையப்படுத்திச் செயற்பட்ட பிரபுத்துவம் சார்ந்தவர்கள் தொடர்பான விடயங்களும் ஆய்வில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. தமது இருப்பைத் தக்கவைப்பதற்காகப் பிரபுக்கள் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர். புலவர்களைத் தமது நோக்கத்திற்குப் பயன்படுத்தி சமூகத்தில் தம் புகழைப் பரப்ப பிரபுக்கள் மேற்கொண்ட விடயங்கள் இவ்வகையில் கவனிப்பிற்குரியன.

ஒல்லாந்தர் ஆட்சியில் ஒருபுறம் தமிழர்களிடையே சமூக, சமய, அதிகார வேறுபாடுகள் நிலவிய போதும் இலக்கியப் பாடுபொருளில் தமிழ் மொழி சார்ந்தும், தமிழ் இனம் சார்ந்துமான கண்ணோட்டம் வெளிப்பட்டுள்ளமை குறித்து நோக்கத்தக்க விடயமாகும். புலவர்கள் தமிழ் மன்னர்களைப் போற்றியதோடு தமிழர்களோடு தொடர்புகொண்ட, சிங்கள மன்னர்களை மட்டும் சிறப்பித்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

அக்காலத்தில் அதிகார இயக்கமானது சமூக அரசியல் சார்ந்து மட்டு மன்றிக் குடும்ப ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆண் தன்னை அதிகாரத்தின் மையமாகவும், பெண்ணின் சமூக அடையாளத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு அடுத்தபடி நிலையிலும் வைத்து நோக்கியுள்ளமை புலப்படுகிறது. சமயம், தத்துவம் முதற்கொண்டு உற்பத்தி உறவுகள் ஈறாக அனைத்திலும் ஆணை முன்னிறுத்தியதான கருத்துக்களே வெளிப்படுத்தப்பட்டுள்ள தோடு பெண்ணை நுகர்வுப் பொருளாகக் கருதும் மனப்பாங்கும் இலக்கியங்களூடு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஈழமும் இந்தியாவும் அரசியல் சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியாக நெருங்கிய பிணைப்பைப் பேணி வந்துள்ளன. இதன் பின்னணி யில் ஒல்லாந்தர் காலத்தில் இந்த உறவுத் தொடர்பின் பின்னணியும், இதன் நிலையும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமய ரீதியாக இந்தியாவை மையமாகக் கொண்டே ஈழத்தின் மதம் குறித்தான பார்வை முக்கியம் பெற்றுள்ளது. போர்த்துக்கேயரின் அடக்கு முறைக்குப் பின் சைவ சமயத்தின் மீண்டெழுகைக்கான செயற்பாடுகள் ஒல்லாந்தர் காலத்திலேயே நிகழ்ந்தன. இச்செயற்பாடுகளுக்கு இந்தியத் தொடர்பு பிரதான இடத்தை வகித்துள்ளது. இதேபோல ஒல்லாந்தரின் அதிகார நெருக்கடியில் சிதைவடையாமல் கத்தோலிக்க சமயம் நிலைபெற்றமைக்கும் இந்தியாவிலிருந்த கத்தோலிக்கரின் பங்களிப்பு பிரதானமாகும். குருவானவர்களான யோசேவாஸ், கொன்சால்வெஸ் முதலானோரின் ஈழம் நோக்கிய வருகை ஈழத்துக் கத்தோலிக்க கிறிஸ்தவ எழுச்சிக்கு மட்டுமன்றி கலை, இலக்கிய பண்பாட்டு ரீதியில் ஏற்பட்ட புதிய மாற்றங்களுக்கும் அடிப்படையாக அமைந்தது.

அதிகார ரீதியாகவும், தொழில்சார்ந்தும் கூட பெருமளவான குடிப் பெயர்வுகள் இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கி நிகழ்ந்துள்ளன. குறிப்பாக ஒல்லாந்தர் ஆட்சியில் நிகழ்ந்த குடிப்பெயர்வுகள் ஈழத்து சமூகப் புலத்திலும், புலமைப் பாரம்பரியத்திலும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கலை இலக்கிய வெளிப்பாடுகளில் இனங்காணக்கூடியதாக இருந்த தனித்தன்மையான வளர்ச்சி நிலைக்கு ஒல்லாந்தர் காலப் புலமைப் பாரம்பரியத்தின் பங்களிப்புத் துணைநின்றுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மரபுவழிப் புலமையாளர் பலர் ஒல்லாந்தர் காலத்தில் தம்மைக் கல்வி ரீதியாகத் தகவமைத்துக்கொண்டனர் என்பதும், அக்காலத்திலேயே இலக்கியப் பணிகளில் ஈடுபாடுகாட்டத் தொடங்கினர் என்பதும் முக்கியமானவை. இங்கு கூழங்கைத்தம்பிரான் முதலானோரின் செயற்பாடுகள் குறித்து நோக்கத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் தோற்றம்பெற்ற இலக்கிய இலக்கண நூல்கள் தொடர்பான அறிகை ஒல்லாந்தர் கால புலமைப் பாரம்பரியத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இலக்கிய ரீதியாகப் பெருமளவான உரைநடை சார்ந்த நூல்களும் ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்றுள்ளன. பிற் காலத்தில் உரைநடைசார் இலக்கிய வளர்ச்சிக்கு ஒல்லாந்தர் உரைநடை இலக்கியங்களும் பிரதான பங்களிப்பினைச் செய்துள்ளன. உரையாடல், பிரசங்கம், கதை, பேச்சு வழக்கு பிரயோகம் கலந்த தர்க்கம் சார் விடயங்களும் தனித்த ஆய்வுக்குரியனவாக உள்ளன. மக்கள் தொடர்பு வழிகளில் காத்திரமான பங்களிப்பை ஏற்படுத்த வல்லனவாக இவ் உரைநடைசார் இலக்கியங்கள் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியிலும் இந்தியப் புலமைப் பாரம்பரியத்தின் வகிபங்கை இனங்காண முடிகிறது.

தமிழர் பகுதிகளிலிருந்து இந்தியாவுடன் கடல்வழி வர்த்தகச் செயற்பாடுகள் நிகழ்ந்துள்ளன. சமூகச் செல்வாக்குடையவர்கள் இந்தியாவுடனான தமது தொடர்புகளைப் பேணியுள்ளனர். கலைசார் பரிமாற்றங்களும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தன. இவை சார்ந்த விடயங்கள் பற்றிய இலக்கியத் தரவுகள் பன்முக ஆய்வுக்கு துணைசெய்யத் தக்கனவாகும். ஒல்லாந்தர் காலத்தில் எழுச்சி பெற்று இன்று கிடைக்கக்கூடியதாக உள்ள இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் ஒவ்வொரு பகுதியும் வரையறுக்கப்பட்ட அளவிலேயே விபரிக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் காலத்திற்குரியதாய் இதுவரை கிடைக்கப்பெறாத இலக்கி யங்கள் எதிர்காலத்தில் கிடைக்கப்பெறின் ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் குறித்த ஆய்வுகளின் நோக்கு மேலும் விரிவுபெற்றதாய் அமையக்கூடும். அடிப்படையில் ஒல்லாந்தர் காலத்தில் வெளிப்பட்ட இலக்கியங்கள் சமயத்தைப் பிரதானப்படுத்தினாலும் அவற்றில் சமூக, அரசியல் பொருளாதார, கலை, பண்பாடு சார்ந்த விடயங்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் அவை அக்கால சமூகத்தின் பல்வேறு பரிமாணங்களைக் காட்டிநிற்பதோடு பிற்காலத்தில் நிகழ்ந்த துறைசார் வளர்ச்சிக்கான அடித் தளமாகத் திகழ்ந்துள்ளன என்பதும் இங்கு தெளிவாக வெளிப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப்பட்டியல்

## ஆய்வு நூல்கள்

இரகுபரன், க. (பதிப்பாசிரியர்), 2005, *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள்,* இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

இரகுபரன், க. (பதிப்பாசிரியர்), 1998, *வரதபண்டிதம்,* இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கந்தசுவாமி, க.இ.ப. (பதிப்பாசிரியர்), 1998, *பஞ்சவன்னத்தூது,* திருநெல்வேலி தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

கந்தையா.வி.சி. (பதிப்பாசிரியர்), 1969, *அனுவுருத்திர நாடகம்,* மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம்.

கபிரியேல் பச்சேக்கு க.அ.அ.க., *தேவபிரைசையின் திருக்கதை,* அர்ச்ச சூசையப்பர் மடம் அச்சுக்கூடம்.

கமலநாதன். சா.இ., கமலா கமலநாதன் (பதிப்பாசிரியர்கள்), 2005, *மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்,* குமரன் புத்தக இல்லம்.

கயித்தானு அந்தோனி அளதுயிலு, பதிப்பாசிரியர், *ஞானவுணர்ச்சி, வியாகுலப் பிரசங்கம், சுகிர்தகுறள் ஆகியவற்றின் இணைந்த நூல்* புன்னை மாநகர் யக்கோவு றேச்சலேனு முன்னின்று அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

குமாரசுவாமி (பதிப்பாசிரியர்), 1932, *தண்டிகைக் கனகராயன் பள்ளு,* சென்னை சாது அச்சுக்கூடம்.

சதாசிவஐயர், தி. (தொகுப்பு), 1940, *மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு.*

சந்திரகாந்தன், ஏ.ஜே.வி. (பதிப்பாசிரியர்), 1995, *திருச்செல்வர் காவியம்,* திருமறைக் கலாமன்ற வெளியீடு.

சிவத்தம்பி, கா. (பதிப்பாசிரியர்), 1963, *மார்க்கண்டன் வாளபிமன் நாடகம்,* இலங்கைப் பல்கலைக்கழக வைத்திய பகுதி.

சிவராமலிங்கையர், இ. (பதிப்பாசிரியர்), *சார்வரி சந்தானதீபிகை,* சோதிடப்பிரகாச வரு தைமீ யந்திரசாலை

சுபதினி ரமேஸ் (தொகுப்பு), 2002 *மஹா கும்பாபிஷேக மலர்,* வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்.

ஞானப்பிரகாசர், சா. (பதிப்பாசிரியர்), 1910 *யோசேவாஸ் முனிவர் சரித்திரம்,* சென்யோசப் கத்தோலிக்க பதிப்பகம்.

ஞானப்பிரகாசர், சா. (பதிப்பாசிரியர்), 1911, *திருச்செல்வர் அம்மானை,* ஞானப்பிரகாச இயந்திரசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசர், சா. (பதிப்பாசிரியர்), 1949, *சுவிசேஷவிரித்துரை,* அர்ச்சியசிஷ்ட சூசைமாமுனிவரது கத்தோலிக்க அச்சககசாலை.

தமிழவேள் (பதிப்பாசிரியர்), 1991, *இணுவைச் சிவகாமியம்மை தமிழ்,* குமரன் புத்தக இல்லம்.

தாமோதரன், அ. (பதிப்பாசிரியர்), 1998, *நன்னூல் மூலமும் கூழங்கைத்தம்பிரான் உரையும்,* உலகத்தமிழராய்ச்சி நிறுவனம்.

நகுலசிகாமணி, ந. (பதிப்பாசிரியர்), 2004, *யாழ்ப்பாண வைபவமாலை,* வல்லை ஆவணக்காப்பகம்.

மாணிக்கவாசகர், சே. (பதிப்பாசிரியர்), 1970, *புலியூரந்தாதி,* சோதிடப்பிரகாச யந்திரசாலை.

மிக்கேல்சாமி, எஸ்.எ. (பதிப்பாசிரியர்), 1994, *வியாகுலப்பிரசங்கம்,* யாழ்ப்பாண புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்.

முகாமையாளர் (தொகுப்பு) , 1972, *தோத்திரப் பாடல்கள்,* முகாமையாளரால் வெளியிடப்பட்டது.

மெற்றாஸ்மயில், (பதிப்பாசிரியர்), 1980, *வன்னி வள நாட்டார் பாடல்கள்,* முல்லை இலக்கியவட்டம்.

வடிவேல், இ. (பதிப்பாசிரியர்), 2000, *வெருகல் சித்திர வேலாயுதர் காதல்,* இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.

வித்தியானந்தன், சு. (பதிப்பாசிரியர்), 1962, *அலங்காரரூபன் நாடகம்,* இலங்கைக் கலைக்கழக நாடகக்குழு வெளியீடு.

வித்தியானந்தன், (பதிப்பாசிரியர்), 1966, *மூவிராசாக்கள் நாடகம்,* மன்னார் மாவட்ட உள்ராட்சி மன்றங்களின் வெளியீடு.

Phillipus Baldaeus, 1960, *A True and Exact Description of the Great Island of Ceylon,* Ceylon Branch of the Royal Asiatic Society.

## கையெழுத்துப் பிரதிகள்

| | |
|---|---|
| யாக்கோமே கொன்சால்வேஸ் | அற்புத வரலாறு |
| | கிறிஸ்தியானி ஆலயம் |
| | சத்தியவேதாகம சங்ஷேபம் |
| | சுகிர்த தற்பணம் |
| | தர்ம உத்தியானம் |
| | தேவ அருள் வேதபுராணம் |
| | வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக்கொண்ட தர்க்கம் |
| கபிரியேல் பச்சேக்கு | ஞான அப்பம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூல்கள்

அம்பிகைபாகன், ச., 1979, *யாழ்ப்பாணத்தில் கொச்சிக் கணேசையர் பரம்பரை*, மணிமனை.

இந்திரபாலா, கா. (பதிப்பாசிரியர்), 1981, *சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும்*, ஞானப்பிரகாசர் நினைவு விழா அமைப்புக்குழு, ஆயர் இல்லம்.

இயேசுதாஸ், த., 1999, *பெரிதும் அறிமுகமில்லாத கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்கள்*, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில்.

இரகுநாதன், மயில்வாகனம் (பதிப்பாசிரியர்), 2006, *கோவலன் நாடகம்*, S.R.S., Printers.

இரகுநாதமுதலியார், வை. (பதிப்பாசிரியர்), 1979, *நீராவிப் பிள்ளையார் கலிவெண்பா*, நீராவியடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

இரகுபரன், க. (பதிப்பாசிரியர்), 2000, *தேசிகம்*, பாலர் ஞானோதய சங்கம், யாழ்ப் பாணம்.

இரகுபரன், க. (பதிப்பாசிரியர்), 2007, *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்*, கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

இரத்தினம், க.பொ., 1959, *இலங்கையில் இன்பத் தமிழ்*, கலைவாணி புத்தக நிலைய வெளியீடு.

இராசமாணிக்கனார், மா., 1980, *தமிழகக் கலைகள்*, பாரி நிலையம்.

இளவழகன், கோ. (பதிப்பாசிரியர்), 2006, *ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்*, தமிழ் மண் பதிப்பகம்.

ஏகநாயகிவல்லி சிவலிங்கம், 2003, *ஈழ வரலாற்றுப் பதிவுகள்*, Arrow Web Publishers Tronto Canada.

கந்தையா.வி.சி. (பதிப்பாசிரியர்), 1969, *இராமநாடகம்*, மட்டக்களப்புப் பிரதேச கலாமன்றம்.

கந்தையா, வி.சி., 1964, *மட்டக்களப்புத் தமிழகம்*, ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீடு.

கணபதிப்பிள்ளை, க., 2003, *இலங்கை வாழ் தமிழர் வரலாறு*, குமரன் புத்தக இல்லம்.

கணபதிப்பிள்ளை, க., 2001, *ஈழத்து வாழ்வும் வளமும்*, குமரன் புத்தக வெளியீடு

கணபதிப்பிள்ளை, சி., 1993, *இலக்கியவழி*, பண்டிதமணி நூல்வெளியீட்டகம்.

கணபதிப்பிள்ளை, மு. (பதிப்பாசிரியர்), 1970, *சிவராத்திரி புராணம்*, ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு.

கனகசெந்திநாதன், 1964, *ஈழத்து இலக்கிய வளர்ச்சி*, அரசு வெளியீடு.

கனகரத்தினம், த., 1996, *தமிழ் சிங்கள இலக்கிய உறவு*, சாந்தி நிகேதன் கொழும்பு தமிழ்ச்சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேசு சிவத்தம்பி, 1995, *யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு: ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம்*, சுதந்திர இலக்கிய வெளியீடு.

கார்த்திகேசு சிவத்தம்பி, 1993, *யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல்*, தர்சனா பிரசுரம்.

கார்த்திகேசு சிவத்தம்பி (தொகுப்பு), 2007, *தமிழர் கலைகள்*, அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகம்.

கிருஷ்ணராசா, செ., 2005, *இலங்கை வரலாறு*, பாகம் -2, பிறைநிலா வெளியீடு.

குணசிங்கம், முருகர், 2003, *இலங்கைத் தமிழ் தேசியவாதம்: அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வு*, தென் ஆசியவியல் மையம், சிட்னி.

கேசவன், கோ., 1991, *பள்ளு இலக்கியம்: ஓர் சமூகவியல் பார்வை*, அன்னம் பிறைவேட் லிமிட்டட்.

கொட்றிங்ரன், எச்.டபிள்யு., 1937, *இலங்கையின் பண்டைய நிலவாட்சியும் அரசிறையும்*, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

கொடிநின்றன், எச்.டபிள்யு., 1939, *இலங்கையின் சுருக்க வரலாறு*, அரசகரும மொழி வெளியீட்டுத் திணைக்களம்.

கைலாசபதி, க., 1986, *ஈழத்து இலக்கிய முன்னோடிகள்*, மக்கள் வெளியீடு, சென்னை.

கௌமாரீஸ்வரி (பதிப்பாசிரியர்), 2006, *கிறிஸ்தவமும் தமிழும்*, நாம் தமிழர் பதிப்பகம்.

சண்முகதாஸ், அ., 1986, *கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கிறிஸ்தவ நாகரிகத் துறை*, யாழ். பல்கலைக்கழகம்.

மனோன்மணி சண்முகதாஸ் அ. (பதிப்பாசிரியர்கள்), 1984, *தமிழர் திருமண நடைமுறைகள்*, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

சண்முகலிங்கன், என்., 2001, *மரபுகளும் மாற்றங்களும்*, நாகலிங்கம் நூலாலயம்.

சதாசிவம், ஆ., 1966, *ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்*, சாகித்திய மண்டல வெளியீடு.

சதாசிவம்பிள்ளை, அ., 1944, *பாவலர் சரித்திர தீபகம்*, ஏசியன் எடுகேஷனல் சர்விஸ், புதுடில்லி.

சபாபதி குலேந்திரன், 1967, *கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு*.

சிவத்தம்பி, கா., 2002, *இலக்கியமும் கருத்துநிலையும்*, மக்கள் வெளியீடு.

சிவத்தம்பி, கா., 2001, *தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்*, மக்கள் வெளியீடு.

சிவத்தம்பி, கா., 2000, *யாழ்ப்பாணம் சமூக பண்பாட்டு கருத்துநிலை*, குமரன் புத்தக இல்லம்.

சிவத்தம்பி, கா., 2004, *பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்*, குமரன் புத்தக இல்லம்.

சிவசுப்பிரமணியம், ஆ., 2005, *நாட்டார் வழக்காற்றில் அரசியல்*, பரிசில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தம்பி, கா., 1978, *ஈழத்தில் தமிழ் இலக்கியம்*, சென்னை.

சிவலிங்கராஜா, எஸ்., 2001, *ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி*, தனலக்குமி வெளியீடு.

சிவலிங்கராஜா, எஸ்., 2003, *யாழ்ப்பாண வாழ்வியற் கோலங்கள்*, குமரன் புத்தக இல்லம்.

சிவலிங்கராஜா, எஸ்., 2000, *பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துக் கல்வி மரபு*, குமரன் புத்தக இல்லம்.

சிற்றம்பலம், சி.க., 1994, *ஈழத்துத் தமிழ் வரலாறு (கி.பி. 1000 வரை)*, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சிவஸ்வாமி ஐயர், ச., 1927, *சிவராத்திரி புராண வசனம்*, யாழ்ப்பாணம் இளவ் அச்சியந்திரசாலை.

சுகந்தி சுப்பிரமணியம், 2006, *மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும்*, இலண்டன் தமிழ் இந்துமன்றம்.

சுப்பிரமணியம், வே., 2007, *வன்னியின் கதை*, குமரன் புத்தக இல்லம்.

செல்லையா கிறிஸ்ணராஜா (தொகுப்பு), 2008, *இலங்கையில் இந்து வெண்கலப் படிமக்கலை மரபுகள்*, குமரன் புத்தக இல்லம்.

சென்னத்மினோக், 2007, *அரசியல்*, அடையாளம் வெளியீடு.

ஞானப்பிரகாசர், சா. (பதிப்பாசிரியர்), 1942, *யாக்கோமே கொன்சால்வெஸ் எனும் சாங்கோபாங்கர்*, அர்ச்ச சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை.

தர்மகுலசிங்கம், 1999, *வரலாற்றில் தமிழூம் தமிழரும்*, ஆய்வுக் கட்டுரைகள், கொண்கோப், 09. பெர்ணாண்டோ லேன், மட்டக்களப்பு.

தாயம்மாள் அறவாணன், 2002, *தமிழ்ச் சமூகவியல்*, உலகத்தமிழராய்ச்சி நிறுவனம்.

துரை மனோகரன், 1997, *இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி*, கலைவாணி புத்தக

தோதாத்திரி, எஸ்., 2001, *மார்சிசமும் மதமும்*, நியு செஞ்சரி புக்ஹவுஸ்.

நடராசா, கா.செ., 1979, *இணுவை அப்பர்*, இராமலிங்க வைத்தியர்.

நடராசா, F.X.C. (பதிப்பாசிரியர்), 1962, *மட்டக்களப்பு மான்மியம்*, கலா நிலையம், 175, செட்டியார் தெரு, கொழும்பு.

நாகப்பு, க., 2010, *வட்டுக்கோட்டைக் கூத்தும், கிராமியக் கலைகளும்*, வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை.

நாகரத்தினம் கணேசலிங்கராதன், 2005, *வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் வசனம்*, திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வேல்நடை பஜனைக்குழு.

பக்தவத்சல பாரதி, 2003, *பண்பாட்டு மானிடவியல்*, மெய்ப்பன் பதிப்பக வெளியீடு.

பத்மசீலன் (பதிப்பாசிரியர்), 2008, *யாழ்ப்பாணச் சரித்திரம்*, சேமமடு பொத்தகசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன், சி., 2002, *இலங்கைத் தமிழ் தேசவழமைகளும் சமூக வழமைகளும்,* குமரன் புத்தக இல்ல வெளியீடு.

பத்மநாதன், சி., 2003, *இலங்கையில் வன்னியர்,* குமரன் புத்தக இல்லம்.

பத்மநாதன், சி., 2004, *ஈழத்து இலக்கியமும் வரலாறும்,* குமரன் புத்தக இல்லம்.

பரணவிதான, 1964, *இலங்கைத் தூபி,* இலங்கை அரசகரும மொழி வெளியீட்டுத் திணைக்கள வெளியீட்டுப் பிரிவு.

பரமு புஸ்பரட்ணம், 2002, *தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழரின் பண்டைக்கால மதமும் கலையும்,* குமரன் புத்தக இல்லம்.

பரமு புஸ்பரட்ணம், 1993, *வட இலங்கையில் சிங்கைநகர்,* யோசெப் அடிகளார், மணிவிழாச் சபை வெளியீடு.

பரமு புஸ்பரட்ணம், 1993, *பூநகரி தொல்பொருள் ஆய்வு,* யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு.

சண்முகலிங்கன்.என்., 1988, *இதயரஞ்சினி,* காந்தளகம்

பாலசுந்தரம்.இ., 2002 *ஈழத்து இடப்பெயர் ஆய்வு,* தமிழர் செந்தாமரை வெளியீட்டகம்.

பென்சமின் செல்வம், 1978, *மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம்.*

மலல, சேகர ஜயதிலக, 1967, *பௌத்தமும் இனப்பிரச்சினையும்,* இலங்கை அரசாங்கம்.

மார்க்ஸ், அ., 1983, *சிற்றிலக்கியம் சில குறிப்புகள்,* சிவிக்குயில்

முல்லைமணி, 2001, *வன்னியியற் சிந்தனை,* Priya Prasuram, Writers Motivation Centre.

வித்தியானந்தன், சு., 1984, *வித்தியானந்தம்,* ஈழமுரசு அறிவூட்டக வெளியீடு.

வித்தியானந்தன், சு. (தொகுப்பு), 1974, *நான்காவது அனைத்துலகத் தமிழராய்ச்சி மாநாடு,* அனைத்துலகத் தமிழராய்ச்சி மன்ற இலங்கைக்கிளை.

வேலுப்பிள்ளை, க., 2004, *யாழ்ப்பாண வைபவ கௌமுகி,* Asion Educational Services.

வைத்தீஸ்வரக் குருக்கள், க., 1982, *காரைநகரில் சைவசமய வளர்ச்சி,* தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

ஜெபநேசன், எஸ்., 2009, *இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்கமிஷன்,* குமரன் புத்தக இல்லம்.

ஜெயசீலன், J.E., 1997, *யாழ். திருச்சபை வரலாறு,* வளன் ஆச்சிரமம், 6ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

Arasaratnam, S., 1988, *Dutch Power in Ceylon: 1658 – 1687, Navarang,* New Delhi.

Arasaratnam, S., 1982, *Historical Foundation of the Economy of the Tamils of North Sri Lanka*, Thanthai Chelva Memorial Trust, Jaffna.

Arasaratnam, S., 1978, *Christianity Traditional Culture and Nationalism: The South Asian Experience*, Bunker Memorial Lectures, Bastian Press.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Balasundrampillai, Pon., 2002, *Trincomalee Geo – Politics Ethnic Dimension and Development Potential,* Sociological Society, University of Jaffna.

Dominic Saminathan, 1988, *Lay Ministries in the Diocese of Trincomalee, Batticaloa with Specific Reference to Catechists in Pastoral Care,* Romna.

Hendrick Zwaardecroon, 1911, *Memoir of Hendric Zwaadiecroom,* Commendeur of Jaffnapatnam, 1697 for the Guidance of the council of Jaffnapatnam during his absence at the coast of Malabar, trans. Sophia Pieters, H.C.Cottle, Government Printer, Colombo.

Indrapala, K., 1969, 'The Early Tamil Settlements in Ceylon', *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society* (New Series), Vol. xiii, Colombo.

Sivathamby, K., 2007, *Sri Lankan Tamil Society and Politics,* New Century Book House (P) Ltd., Chennai.

Peniola, 2005, *The Catholic Church in Sri Lanka: The Dutch Period,* Volume 1, 1658-1711, Ru-Dutugemunu St., Dehiwala, Sri Lanka.

Silva.K.M.De., 1995, *History of Sri Lanka,* Volume II (c1500 – 1800), University of Peradeniya.

## சஞ்சிகைகள் – மலர்கள்

*இலங்கையிற் கல்வி* I, 1969, நூற்றாண்டு விழா மலர், கல்வி கலாசார அலுவல் அமைச்சின் வெளியீடு.

*இளங்கதிர்,* 1979, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் 23வது வெளியீடு (ஆண்டு மலர்).

*இறையியல் மலர்,* 1979, மலர் 6, இதழ் - 22, தமிழ்நாடு இறையியல் கல்லூரிக் காலாண்டு இதழ்.

*சரஸ்வதிதீபம்,* 2012, யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், நூற்றாண்டு விழாச் சபை.

*சிந்தனை,* 2004, இதழ் - 3 கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

*கூடம்,* 2004, (ஜனவரி - மார்ச்) இதழ் - 4, வெளியீடு 3, Torrington Avenue Colombo.

*கூடம்,* 2009, (ஜனவரி - மார்ச்) இதழ் - 12, வெளியீடு 3, Torrington Avenue Colombo.


*கூடம்,* 2007, (ஏப்ரல் - யூன்) இதழ் - 7, வெளியீடு 3, Torrington Avenue Colombo.

*தேசிகம்,* 2000, இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர், சதாபிஷேகார்ப்பண மலர், பாலர் ஞானோதய சங்கம், கட்டுவன்.

*பண்பாடு,* 1993, மலர் - 3, இதழ் - 2, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பின்னிணைப்பு – 1



யாக்கோமே கொன்சால்வெஸின் *கிறிஸ்தியானி* *ஆலயம்* எனும் இலக்கியத்தின் கையெழுத்துப் பிரதியினது முதற் பக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு – 2



தேவ அருள

வேதபுராணசங்ஷேபம-

அதில-

தேவ அருள வேதபுராண


சங்ஷேபம

யாக்கோமே கொன்சால்வெஸின் *தேவ அருள் வேத புராண சங்ஷேபம்* எனும் இலக்கியத்தின் கையெழுத்துப் பிரதியினது முதற் பக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## பின்னிணைப்பு – 3




யாக்கோமே கொன்சால்வெஸின் *அற்புத வரலாறு* எனும் இலக்கியத்தின் கையெழுத்துப் பிரதியினது முதற் பக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL


## பின்னிணைப்பு – 4



யாக்கோமே கொன்சால்வெஸின் *வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக்கொண்ட தர்க்கம்* எனும் இலக்கியத்தின் கையெழுத்துப் பிரதியினது முதற் பக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு – 5



பச்சேக்குவின் ஞான அப்பம் எனும் இலக்கியத்தின் கையெழுத்துப் பிரதியினது முதற் பக்கம்.

KOHA JPL
258185
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்: சமூக அரசியல் நோக்கு**

நவரட்ணம் குகபரன்

யாழ்ப்பாண மன்னர்கள் காலம் வரை தவழ்ந்துவந்த ஈழத்து இலக்கிய வரலாற்று ஆய்வு முயற்சிகள் ஒல்லாந்தர் காலத்திலேதான் மெல்ல மெல்ல எழுந்து நடக்க முயற்சிக்கிறது. இந்த முயற்சிக்கு 'நடைவண்டி' கொடுத்து உதவுவதாகக் குகபரனின் நூல் அமைகிறது. ஒல்லாந்தர் கால அரசியற் பின்னணியை நன்கு விளங்கிக் கொண்ட இந் நூலாசிரியர், அக்காலத் தமிழ் மக்களின் கல்வி, கலை, பண்பாடு, தொழில் முயற்சிகள், குடியேற்றங்கள், சமூக அடுக்கமைவு, புலமைத்துவத் தொடர்புகள் முதலான பல்வேறு விடயங்ளையும் நுணுக்கமாக ஆய்வுசெய்துள்ளார். ஈழத்து இலக்கிய வரலாற்றைத் துலக்க முயலும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகிறோம்.

- பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா



ந. குகபரன் (1977): யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்விகற்றவர். தனது இளங்கலைமாணிச் சிறப்புப் பட்டத்தினையும், முதுதத்துவமாணிப் பட்டத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கல்விப்பின்படிப்பு டிப்ளோமாவினை இலங்கைத் திறந்தவெளிப் பல்கலைக் கழகத்திலும் பெற்றவர். தற்போது கிளிநொச்சி மகாவித்தி யாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிவருகின்றார்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: ஈழத்து இலக்கிய வரலாறு

ISBN 978-955-659-544-4

9 789556 595444

விலை ரூபா 600.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org